# தமிழ்ப் பேராய்வு
## ஆய்விதழ்

தொகுதி - 4 Volume - 4

டிசம்பர் / December 2016

# JOURNAL OF TAMIL PERAIVU

A Double Blind Peer Review Journal

Published by

Department of Indian Studies
Faculty of Arts and Social Sciences
University of Malaya

Indexed by MyJurnal
Malaysian Citation Centre

UNIVERSITY OF MALAYA
The Leader in Research & Innovation

MCC Malaysia Citation Centre
MyJurnal

ISSN 2289-8379

# Editorial Board

2016-2019

## Editors-in-Chief

**Professor Dr.M.Rajantheran, Malaysia**

Indian civilization, Tamil culture and literature, early cultural relations between India and Southeast Asia & culture and life of the Malaysian Indians

**Kizhambur S.Sankara Subramanian, India**

Tamil journalism, Tamil literature and culture & Tamil civilization

## Chief Executive Editor

**Assistant Professor Dr.Silllalee S. Kandasamy**

Media, Tamil literature and culture, Malaysian Indians & sociology

## Editorial Board Members

**Era.Kamarasu,** Professor Dr - Tamil language, classical literature, modern literature & culture, Department of Tamil Literature. Tamil University, Thanjavur, Tamil Nadu, India.

**G.Singaravelu,** Professor Dr - Primary Education, Teacher Education, English Education. Head, Department of Education, Syndicate member of the university, Bharathiar University Coimbatore, Tamil Nadu, India.

**Ira.Kurinji Venden,** Professor Dr - Tamil literature, culture & diaspora. Post graduate section, Arinyar Anna College, University of Pondicherry.

**Jeevendiren Chemen,** Associate Professor Dr - Ethic identity of Mauritian Tamils, Tamil language and linguistic & sociology. Mahatma Gandhi Institute, University of Mauritius.

**K.Srinivasan,** Associate Professor Dr – English language and literature, literary criticism, philosophy and religion. Department of English, National College, Thiruchy, Tamil Nadu, India.

**Mohanadass Ramasamy,** Senior Lecturer Dr - Language and linguistics, Head Department of Indian Studies. University of Malaya, Malaysia.

**P.Sivakumar,** Professor Dr - Educational Technology, Environmental Education & Biology Education. Dean, Faculty of Education, Alagappa University, Tamil Nadu India.

**Paramasivam Muthusamy,** Associate Professor Dr - Tamil language and literature, socio-lingustics, pedagogy and Tamil culture, Department of Foreign Languages. Faculty of Modern Languages and Communication, University Putra Malaysia.

**Ponsamy Tiroumalechetty,** (Retired) Associate Professor Dr - Socio-linguistics, socio culture of Tamils. Head, School of Indian Studies, Mahatma Gandhi Institute, Mauritius.

**Rakkappan Velmurugan,** Senior Lecturer Dr - Linguistics, Pedagogy, Tamil language, Literature & Grammar. Asian Languages and Cultures Academic group, National Institute of Education, Nanyang Technological University, Singapore.

**Samikkanu Jabamoney Ishak Samuel,** Associate Professor Dr - Malaysian Tamil Literature, Modern Tamil Literature, Tamil language and pedagogy. Tamil unit coordinator, Sultan Idris Educational University.

**Seethalakshmi,** Associate Professor Dr - Tamil lexicography, teaching Tamil as a second language, Tamil pedagogy, Sociolinguistics & Literature through Mass Media. Department of Asian Languages & Cultures (ALC), Nanyang Technological University, Singapore.

**V.Maheswaran,** Professor Dr- Epigraphy, Tamil culture, folklore, literature. Department of Tamil, University of Peradeniya, Peradeniya, Sri Lanka.

**Vasu Aranganathan,** Dr - History of Tamil language, literature, religion, inscriptions & Teaching and learning of Tamil language. South Asia Studies, University of Pennsylvania, USA.

# Journal of Tamil Peraivu Editorial office

## Office of the Editor-in-Chief

No. 132, Department of Indian Studies, Faculty of Arts and Social Sciences,
University of Malaya, 50603 Kuala Lumpur, Malaysia.
Tel: +60379675670
rajanmun@um.edu.my / rajantheran@gmail.com

**Publisher**

Department of Indian Studies,
Faculty of Arts and Social Sciences,
University of Malaya,
50603 Kuala Lumpur, Malaysia.
Tel: +60379675510
rmohana_dass@um.edu.my / ecah82@um.edu.my

**Printed at**

Mass Typograpic, Chennai, Tamil Nadu.
Email : masstypo@gmail.com

**Collection of article (India)**

Thejas Foundation, Chennai-61, Tamil Nadu.
Email : thejasfoundation@gmail.com


---


The publisher of Tamil Peraivu Aivithal (Journal of Tamil Peraivu), will not be responsible for the statement made by the authors in any articles published in the journal. Under no circumstances will the publisher of this publication be a liable for lost or damage cost by your reliance on the advice, opinion or information obtained either explicitly or implied through the contents of this publication.

© Department of Indian Studies, Faculty of Arts and Social Sciences, University of Malaya. All rights reserved. No part of this journal may be reproduced in any forms or by any means without publisher's prior permission.

## Preface

The Department of Indian Studies, University of Malaya brings out the Fourth Volume of Tamil Peraivu which is a bi-annual Journal Academicians around the globe contribute their research articles to this Journal.

The present Volume consists of nine research articles. The leit-motif of a research has to be scientific and this is the sole objective of this Journal. The article 'Muruga and Odin' by Dr. Kingston and Dr. Sillalee compares the two having in mind various features.

The article 'Morality in Kalithogai' by Dr. Manimaran Subramaniam lists down the details regarding chastity in the Sangam Literature. Also the article prescribes norms for an ideal way of life.

Dr. M Rajenthiran contributed an article, 'Moral Teaching in Malaysia' with reference to Valmiki Ramayana. The Article stresses the need for morale in the society. The contributor also is of the view that only people who worship nature can be successful in life.

Dr. Manimaran Subramaniam and K.V. Sivabalan have written on the worship of family deity in Malaysia which shows the conventional way of devotion by Malaysian Tamil people including Agama Shastra. The article also depicts the struggle and challenge by the Tamils worshiping family deities in Malaysia.

Sharmila Sadasivam's, 'The Rude Language of Sundarar' analyses the lingual ability of Sundarar both in praising and pulling up Lord Shiva in his songs.

The Malaysian stagecraft, its origin and development have been dealt with much expertise in the article by Dr. V Sabapathy. It also sums up the encouragement and support by Tamil Nadu to Malaysian Theatre.

M.S. Sri Lakshmi discusses the melieu in which Tamil poetry has been written in Singapore between 1990 and 2015. The role of Literary Forums in Singapore in developing Tamil poetry has been brought out well by the contributor.

The article 'High Thoughts in Naladiyar' by M Sankar appeals to the Tamil community to take up the ideals in Naladiyar which would eradicate negative thoughts and boost the language ability.

S. Narayanee and Dr. Anbalagan through the article Stress and Ramayana gives a solution to the mental stress. They quote numerous instances from the Epic whereby keeping the mind calm and composed and practice of Meditation would not allow stress in the human mind.

This Journal in its sustaining effort records the innovative ideas of many researchers. The Editorial Board feels immense pleasure in bringing out this fourth Volume of Tamil Peraivu expressing heartfelt thanks to all the contributions to this Volume.

**Prof Dr. M. Rajantheran**
**Kizhambur S.Sankarasubramanian**
**Chief Editors**
**25.12.2016**

# முகவுரை

**த**மிழ்ப் பேராய்வு ஆய்விதழின் நான்காம் தொகுதியாக இவ்விதழை மலாயப் பல்கலைக்கழகத்தின் இந்திய ஆய்வியல் துறை வெளியீடு செய்கிறது. ஒரு ஆண்டுக்கு இரண்டு ஆய்விதழ்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. பல நாடுகளில் உள்ள தமிழறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து ஆய்விதழாக வெளியீடு செய்கிறோம்.

இவ்ஆய்விதழில் மொத்தம் ஒன்பது கட்டுரைகள் இடம்பெற்று உள்ளன. ஆய்வு என்பது அறிவியல் ரீதியாக இருக்க வேண்டும் என்பதை மனதில் நிறுத்தி தரமான ஒரு ஆய்வு ஏடாக இதனை வெளிக்கொணர்ந்து உள்ளோம். முருகப்பெருமானும் ஓடினும்: ஓர் ஒப்பாய்வு என்னும் கட்டுரையை முனைவர் கிங்ஸ்டன் - முனைவர் சில்லாழி எழுதி உள்ளார்கள். ஞானத்தின் தலைவனாகக் கருதப்படும் முருகனைப் பற்றிய அரிய செய்திகள் இக்கட்டுரையில் உள்ளன.

கலித்தொகைக் காட்டும் அறநெறி என்னும் கட்டுரையை முனைவர் மணிமாறன் சுப்பிரமணியம் எழுதி உள்ளார். சங்க இலக்கியத்தைச் சார்ந்த கலித்தொகையில் களவு, கற்பு இவைகளைப் பற்றி பேசுவதோடு வாழ்க்கை அறநெறிகளைப் பற்றியும் பேசுவதை விவரித்துள்ள்ளார் கட்டுரை ஆசிரியர். மலேசிய நன்னெறிக் கல்வி போதனையில் வால்மீகி இராமாயணம் என்னும் தலைப்பில் பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன் ஒரு கட்டுரையைப் படைத்துள்ளார். நல்ல பண்புடைய மக்கள் ஒரு நாட்டில் இருக்க வேண்டும் என்பதை இக்கட்டுரை வலியுறுத்துகிறது. இயற்கையை நேசிக்கத் தெரிந்தவர்களால் எல்லா இடங்களிலும் வெற்றி பெறலாம் என்பது இக்கட்டுரையின் மூலம் தெரியவருகிறது.

மலேசியத் தமிழர்களிடையே குலதெய்வ வழிபாடு: தோற்றமும் தொடர்ச்சியும் என்னும் கட்டுரையை முனைவர் மணிமாறன் சுப்பிரமணியம் - முனைவர் கோவி.சிவபாலன் - பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன் ஆகியோர் எழுதி உள்ளனர். மலேசியத் தமிழர்களின் சமய வழிபாடானது மரபு முறையையும் ஆகம முறையையும் பின்பற்றி அமைந்துள்ளதாக இக்கட்டுரைத் தெரிவிக்கிறது. குலதெய்வ வழிபாட்டின் தொடர்பில் மலேசியத் தமிழர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களையும், சவால்களையும் இக்கட்டுரை ஆராய்கிறது. சுந்தரரின் மிஞ்சு மொழியும் அதன் உட்பொருளும் என்னும் கட்டுரையை சர்மிளா சதாசிவம் எழுதி உள்ளார். சுந்தரர் இறைவனை வாழ்த்தியும், வைதும் போற்றினார். இறைவனிடம் கொண்ட தோழமை காரணமாக அவரை சுந்தரர் பழிப்பதுப் போல புகழும் பாடல்கள் பல பாடியுள்ளார். இவைகளை இக்கட்டுரை விளக்குகிறது.

மலேசியத் தமிழ் மேடை நாடகக் கலை வளர்ச்சியில் தமிழகத்தின் பண்பு என்னும் கட்டுரையை இணைப்பேராசிரியர் டாக்டர் வே.சபாபதி எழுதி உள்ளார். மலேசியாவில் இரண்டாம் உலகப்போருக்கு முன் தமிழில் தோன்றி வளர்ந்த நாடகக் கலை வளர்ச்சிக்குத் தமிழகத்தின் பங்களிப்பினை வரலாற்று நோக்கில் விளக்குவதனை முதன்மை நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூரின் தமிழ்க் கவிதைச் சூழல் *1990*

*முதல் **2015** வரை ஓர் ஆய்வு என்னும் கட்டுரையை முனைவர் எம்.எஸ்.ஸ்ரீ லக்ஷ்மி எழுதி உள்ளார். சிங்கப்பூரில் உள்ள இலக்கிய அமைப்புக்களின் பங்களிப்பையும் இக்கட்டுரை விளக்குகிறது. நாலடியாரில் உய்யச் சிந்தனை என்னும் கட்டுரையை மு.சங்கர் எழுதி உள்ளார். நாலடியாரை தமிழினம் முழுமையாக உணர்ந்து கொண்டால் மொழி மேன்மை அடைவதுடன் பிற்போக்கு எண்ணங்களும் அகலும் என்கிறார் கட்டுரை ஆசிரியர்.*

*மன அழுத்தமும் - இராமாயணமும் என்னும் கட்டுரையை சீ.நாராயணி - முனைவர் அன்பழகன் ஆகியோர் எழுதி உள்ளனர். தியானமே மன அழுத்தத்தின் தீர்வாகும் என்கிறது இக்கட்டுரை. உலகம் முழுவதும் உள்ள தமிழ் ஆய்வாளர்கள் முற்கால, நவீன இலக்கியங்களைப் பாங்குடனே ஆராய்ந்து வருகிறார்கள். அவர்களுடைய ஆய்வின் முடிவுகளை தமிழ் கூறும் நல் உலகிற்குத் தெரியும் பொருட்டு இவ்ஆய்விதழை வெளியீடு செய்வதில் மகிழ்ச்சி அடைகிறோம். இவ்ஆய்விதழ் வெளிவர உதவியாக இருந்த அத்தனை நல்உள்ளங்களுக்கும் நன்றியைக் காணிக்கையாக்குகிறோம்.*

**பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன்**
**கீழாம்பூர் எஸ்.சங்கரசுப்பிரமணியன்**
**முதன்மை ஆசிரியர்கள்**
**25.12.2016**

**தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ்** / Journal of Tamil Peraivu
Vol 4, December 2016

பொருளடக்கம் / Contents — பக்கம் / Page

1. முருகப்பெருமானும் ஓடினும்: ஓர் ஒப்பாய்வு.......... 11
Lord Murugan and Odin: A Comparative Study
முனைவர் கிங்ஸ்டன் Dr.Kingston - முனைவர் சில்லாழி Dr Silllalee

2. கலித்தொகை காட்டும் அறநெறி.......... 22
Morality in Kalithogai
முனைவர் மணிமாறன் சுப்பிரமணியம் - Dr.Manimaran Subramaniam

3. மலேசிய நன்னெறிக் கல்வி போதனையில் வால்மீகி இராமாயணம்.......... 29
The Ramayana in the teaching of moral education in Malaysia
பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன் - Professor Dr. M. Rajantheran
ஆறுமுகம் சின்னசாமி - Arumugam Chinasamy

4. மலேசியத் தமிழரிடையே குலதெய்வ வழிபாடு: தோற்றமும் தொடர்ச்சியும்.......... 40
Origin and the Development of Family Deity Worship Among Malaysian Tamils
முனைவர் மணிமாறன் சுப்பிரமணியம் - Dr.Manimaran Subramaniam
கோவி.சிவபாலன் - G.Sivapalan
பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன் - Professor Dr.M.Rajantheran

5. சுந்தரரின் மிஞ்சு மொழியும் அதன் உட்பொருளும்.......... 51
Suntharar's Rude Language and its Inner meanings
சர்மிளா சதாசிவம் - Sharmila Sathasivam

6. மலேசியத் தமிழ் மேடை நாடகக்கலை வளர்ச்சியில் தமிழகத்தின் பங்கு.......... 60
The Role of Tamil Nadu in the Development of Malaysian Tamil Stage Dramas
இணைப்பேராசிரியர் டாக்டர் வே.சபாபதி - Associate Professor Dr.V.Sababathy

7. சிங்கப்பூரின் தமிழ்க் கவிதைச் சூழல் 1990 முதல் 2015 வரை - ஓர் ஆய்வு.......... 74
A Study of Tamil poetry in Singapore from 1990 to 2015
முனைவர் எம்.எஸ். ஸ்ரீ லஷ்மி - Dr M S Shri Lakshmi

8. நாலடியாரில் உய்யச்சிந்தனை.......... 92
Critical thinking in Naladiyar
மு.சங்கர் - Mu.Shankar

9. மன அழுத்தமும் - இராமாயணமும்.......... 97
Stress and Ramayana
சீ.நாராயணி - S.Narayanee
முனைவர் அன்பழகன் - Dr.Anbalagan

# முருகப்பெருமானும் ஓடினும்: ஓர் ஒப்பாய்வு

## Lord Murugan and Odin: A Comparative Study

[1]முனைவர் கிங்ஸ்டன் Dr.Kingston - [2]முனைவர் சில்லாழி Dr Silllalee

***Abstract***

According to Tamils, the worship of Lord Muruga is a dominant one. The ancient Tamil culture put Muruga along with the geographical classification called Kurunji. The worship of Skanda in the Vedas and adoring Muruga by Tamil people later was placed on par in the culture of Tamils. In the same way, much before Christianity, in Germany, the worship of God Odin was in practice. This God was said to be proficient in war, curing diseases and wisdom. A deep probe into the similarities between Lord Muruga and Odin shows that these two share many features in common. Apart from the comparison of the two deities, the Godliness of the two is self evident. This Paper deals with the two Gods in terms of their origin, feature, credentials and the similarities.

**Key Words:** Muruga, Odin, Tamil Tradition, German Gods, Gungnir, Saivism.

### முன்னுரை

உலக மக்கள் பல்வேறு விதமான சமய நம்பிக்கையைக் கொண்டிருக்கிறார்கள். இந்நம்பிக்கையானது, அவரவர் வாழ்விடங்கள், நாகரீக அடைவுகள், வாழ்க்கை முறை, சிந்தனை அடைவுகள் என்பனவற்றின் அடிப்படையில் கண்டத்திற்குக் கண்டம், நாட்டிற்கு நாடு என மாறுபட்ட நிலையில் வளர்ந்துள்ளன. இவ்வாறு உலகில் தோன்றி வளர்ந்துள்ள சமயங்கள், நம்பிக்கைகள் யாவுமே ஒன்றோடு ஒன்று பெரும்பாலும் அடிப்படைக் கருத்தில் ஒற்றுமையைக் கொண்டு இருந்தாலும் அவைகளுக்கிடையே குறிப்பிடத்தக்க மாறுபாடும் இருப்பதை மறுக்க முடியாது.

இந்த அடிப்படையில், இந்துக்களின் வழிபடு இறையாகப் போற்றப்படும் முருகப்பெருமானுக்கும், ஜெர்மானிய மக்களிடையே கிருத்துவ மதம் தோன்றுவதற்கும் முன்னரே இருந்து வந்துள்ள 'ஓடின்' (Odin) எனும் தெய்வத்திற்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அந்த வகையில், இந்த ஆய்வு தொடக்கத்தில் முருகப்பெருமான் குறித்தும் ஜெர்மானியர்களின் ஓடின் தெய்வம்

[1] Dr.Kingston is a Lecturer in the Education University of Sultan Idris, Tanjung Malim, Malaysia. fkingston@gmail.com

[2] Dr Silllalee is a Assistant Professor in the Department of Modern Languages, University Tunku Abdul Rahman, Kajang, Malaysia. silllalee@yahoo.com

குறித்தும் சில அடிப்படைத் தகவல்களை முன்வைக்கின்றது. அதனைத் தொடர்ந்து முருகக் கடவுளுக்கும் ஓடின் தெய்வத்திற்கும் இடையில் நிலவக் கூடிய ஒற்றுமை வேற்றுமைகளை இத்தெய்வங்களின் பின்புல வரலாறு, ஆயுதங்கள், தொழில்கள், தனித்தன்மைகள் போன்ற கருப்பொருளின் அடிப்படையில் ஆய்வு படைக்கப்பட்டுள்ளது.

## முருகப்பெருமான்

*தமிழர்களின் மிகத் தொன்மையான வழிபாடுகளுள் முருகக் கடவுளின் வழிபாடு தனித்துவம் உடையதாக விளங்குகின்றது. முருகப்பெருமான் குறிஞ்சி நிலக் கடவுளாக சங்ககால மக்களால் போற்றப்பட்டிருப்பது "சேயோன் மேய மைவரை உலகமும்" (தொல்காப்பியம், அகத்திணை: 5) எனும் தொல்காப்பியரின் கூற்றின் வாயிலாக அறிய முடிகின்றது. மேலும், தமிழில் எழுந்த முதல் பக்தி இலக்கியமாகத் திருமுருகாற்றுப்படை அமையப்பெற்றுள்ளதுவும் முருகப் பெருமானின் வழிபாட்டுத் தொன்மையை உறுதிபடுத்துகின்றது. வேதத்தில் போர்க்கடவுளாகக் குறிப்பிடப்படுகின்ற ஸ்கந்தனும் (கந்தன்) முருகப்பெருமானும் பிற்காலத்தில் ஒன்றாக்கப்பட்டு முருக வழிபாடு இந்துக்களின் தனிப்பெரும் வழிபாடாக நிலைபெற்றுள்ளது (தேவபூபதி நடராஜா, **2011, 16**).*

*முருகப்பெருமான் தமிழர் மட்டுமன்றி பொதுவில் இந்து சமயத்தினர் வழிபடும் தனிப்பெருங்கடவுளாவார். ஆதிசங்கரர் வகுத்தளித்த அறுவகைச் சமயங்களுள் கௌமார சமயத்தின் முழுமுதற் கடவுளாக விளங்குபவர் முருகப்பெருமான்* (Rajantheran, Silllalee, Viknarasa, 2009, 31). *தமிழும் சமஸ்கிருதமும் முருகன் உலகிற்கீந்த கொடை என்பர் (சுப்பிரமணியர் ஞானம் **500**). முருகப்பெருமானின் பின்புலம் குறித்துக் கச்சியப்ப சிவாச்சாரியார் இயற்றிய கந்தபுராணம் தெளிவுருத்துகின்றது. கந்தபுராணத்தின்படி முருகப் பெருமான் சூரபதுமனால் துயருற்ற தேவர்களைக் காக்கும் பொருட்டு சிவபெருமானின் நெற்றிக்கண்ணிலிருந்து ஆறு தீப் பொறிகளாகத் தோன்றியவர். உமையன்னையிடம் இருந்து சக்திவேல் பெற்று திருச்செந்தூரில் தாரகன், சிங்கமுகன், சூரபதுமன் முதலான அசுரர்களை வதம் செய்து தேவர்களைச் சிறைமீட்டருளியவர் (நாராயணவேலுப் பிள்ளை, **1998, 3638**).*

*இந்திரனின் மகளாகிய தேவயானையையும் நம்பிராஜன் எனும் வேடத்தலைவனின் மகளாகிய வள்ளியையும் மணம்புரிந்தவர். அறுபடை வீடுகள் மட்டுமன்றி குன்றுதோறும் குடிகொண்டு அடியவரைக் காப்பவர். அகத்தியர் முதலான சித்தர்களின் தலைவர் (இராசேந்திரன், சிவபாலன், சில்லாழி, **2009, 89**). முருகப்பெருமான் பன்னிருகரமும், ஆறுமுகமும் கொண்டவர். என்றும் இளமையும் அழகும் மாறாதவர் என்பதுவே முருகன் திருநாமத்தின் பொருளாகும். இவர் சேவற்கொடியோன்; சக்தி வேலாயுத்தைத் தாங்கியவர்; தந்தைக்கு ஓம் எனும் பிரணவ மந்திரத்தை உபதேசித்த தகப்பன் சுவாமி* (Manicka Rao Athinarayanan, 2012, 105). *மயிலை வாகனமாகக் கொண்டவர். தமிழ்க் கடவுள் என தமிழினத்தோரால் பெருமையுடன் கொண்டாடப்படுபவர் (இராசேந்திரன், சிவபாலன், சில்லாழி, **2009, 91**).*

## ஓடின்

*ஓடின் எனும் தெய்வம் ஜெர்மானிய பழங்கால மக்களால் வழிபடப்பட்டு வந்த மதிப்பு மிக்க கடவுளர் ஆவார். இவர் ஆசிர் இன மக்களாலும் வைகின் இன மக்களாலும் தனிப்பெருந் தெய்வமாகப் போற்றப்பட்டவர் (பிரிங், **2008**). கிருத்துவ மதம் தோன்றுவதற்கு முன்னர் வடக்கு ஐரோப்பியக் கண்டத்தின் ஓடின் தெய்வமானவர் தோர்* (Thor), *ஃரே* (Frey) *டிராய்* (Try) *ஆகிய தெய்வங்களுடன் இணைத்து முக்கியமான வழிபடு*

தெய்வமாகத் துதிக்கப்பட்டு வந்துள்ளார் (Kathleen & Marian, 2004, 67).

ஜெர்மானிய நாட்டுப் பழங்கதைகளின்படி தொடக்கத்தில் பிரபஞ்சவெளியெங்கும் நெருப்பும் குளிர்ச்சியும் மட்டும் நிலவியதாகவும், இவ்விரண்டும் ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டதன் விளைவாக யமீர் (Ymir) எனும் பூதமும், ஐசீ கௌ ஔடும்லா (Icy Cow Audhumla) எனும் தெய்வமும் தோன்றினர். இவர்களுள் யமீர் பூதங்களையும் உலகில் முதன் மனிதனாகிய புரி (Buri) என்பவனையும் படைத்தார். புரி, போர்ஸ் (Boor) எனும் தெய்வத்தைப் பெற்றார். போர்ஸ், பெஸ்ட்லா (Bestla) எனும் பெண் தெய்வத்தை மணந்தார். ஓடின் இவர்கள் இருவருக்கும் பிறந்த மகனாவார் (Shannon, 2010, 4). இவ்விருவருக்கும் மகனாகப் பிறந்த ஓடின் உலகின் ஆன்மாவாக அல்லது உலகின் சிறந்த ஆன்மாவாகப் போற்றப்படுகின்றார் (Steven Long, 2015, 25).

ஓடின் நோய்களைக் குணப்படுத்தும் கடவுளாகவும், ஞானத்தின் தலைவனாகவும், கவிபாடும் ஆற்றலுடையவராகவும் குறிப்பிடப்படுகின்றார் (Kathleen & Marian Rengel, 2004, 67). ஓடின் ஈட்டியைப் போன்ற தோற்றமுடைய குங்னீர் (Gungnir) எனும் ஆயுதத்தைத் கொண்டவர் (Charles & Patricia, 2013, 199). ஓடின் தெய்வத்திற்கு விலி (Vili) வி(Ve) என இரண்டு சகோதரர்கள் உள்ளனர். இவரின் மனைவி ஃரிக்கா (Frigga) (Shannon, 2010, 9). ஓடினுக்கு பல்டூர் (Balder), ஹோரர் (Hoor), தோர் (Thor) எனும் பிள்ளைகள் உண்டு (Charles & Patricia, 2013, 357). இவர் தனது தலையில் நீல நிறத்திலான மகுடத்தைச் சூடியவர் (Kathleen & Marian Rengel, 2004, 67).

## பூர்வீகம்

முருகப்பெருமான் சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகளாக வெளிப்பட்டு அக்கினியாலும், வாயு பகவானாலும் கங்கையில் இடப்பட்டு பின்னர் கங்கையால் சரவணப்பொய்கையில் சேர்ப்பிக்கப்பட்டு அங்கு ஆறு திருமேனிகளாகப் பிறப்பெடுத்தவர். உமையம்மை முருகனின் ஆறு திருவுருவங்களையும் அணைத்து ஆறுமுகக் கடவுளாக ஒன்றாக்கினார் (நாராயணவேலுப் பிள்ளை, 1998, 4041). ஆகவே சிவப்பரம்பொருளும் உமையம்மையும் முருகப்பெருமானின் தாய் தந்தையர் ஆவர்.

ஓடின் தெய்வத்தின் பிறப்பு இத்தகையதாகச் சித்தரிக்கப்படாவிட்டாலும் கூட இவரின் தந்தையாகிய போர்க்கும், தாயாகிய பெஸ்ட்லாவிற்கும், முருகக் கடவுளின் தந்தையாகிய சிவபெருமானுக்கும் தாயாகிய உமையம்மைக்கும் இடையில் சில ஒற்றுமைகள் நிலவுவதைக் காண இயலுகின்றது. சிவபெருமான் கைலாயநாதர். அவரின் வசிப்பிடம் மலைச்சிகரம். சிவபெருமானைப் போலவே ஓடினின் தந்தையாகிய போரும் உலகின் முதல் மலைத்தொடர் சார்ந்த இடத்தில் தோன்றியவராகவே அறியப்படுகின்றார். பிற்கால அறிஞர்கள் போரை நிலத்தின் கடவுளாக அடையாளப்படுத்தியுள்ளனர் (Steven Long, 2015, 25).

ஓடினின் தாயாராகிய பெஸ்ட்லா, போல்த்தரான் எனும் மலை அசுரனின் மகளாகக் காட்டப்பட்டுள்ளார். முருகக் கடவுளின் தாயாகிய உமையன்னை, இமயமலையின் அரசனாகிய பர்வதராஜனின் மகளாவாள். அதனால்தான் உமையம்மைக்குப் பர்வதவர்த்தினி எனும் திருநாமம் உள்ளது (Kishore, 2001, 22). பர்வதராஜனின் மகளாகப் பிறந்த பார்வதி கடுந்தவத்தை மேற்கொண்டு அதன் பலனாகச் சிவப்பரம்பொருளை மணந்தாள். அதன் பின்னரே முருகக்கடவுள் சிவபெருமானால் தோற்றுவிக்கப்பட்டார் எனக் கந்தபுராணம் உரைக்கின்றது (நாராயணவேலுப் பிள்ளை, 1998, 2737).

இதன் அடிப்படையில் சிவ பெருமானுக்கும், போர்ஸுக்கும்

வாசத்தலத்தின் அடிப்படையிலும் உமையம்மைக்கும் பெஸ்ட்லாவிற்கும் தங்களின் பிறப்பின் அடிப்படையிலும் ஒற்றுமைகள் நிலவுவதை அறிய முடிகின்றது. ஆயினும் இந்த இரண்டு ஒற்றுமைகளை மட்டுமே கொண்டு ஜெர்மானியத் தெய்வங்களும் சிவனும் பார்வதியும் ஒன்றுதான் எனும் முடிவுக்கு வந்து விட முடியாது.

காரணம், சிவபெருமான் ஆதியும் அந்தமும் அற்றவர். அதனால்தான்,

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்"
(திருவெம்பாவை: 1)

என மாணிக்கவாசகர் பாடுகின்றார். சிவபெருமான் மனித யோனியில் பிறக்காதவர், அனாதிப் பண்புடையவர் (திருமந்திரம்: 115, 2412, 2413). "பிறவா யாக்கைப் பெரியோன் கோவிலும்" (இந்திரவிழவு ஊர் எடுத்த காதை) எனச் சிலப்பதிகாரம் சிவபெருமானைக் குறிப்பிடுவதுவும் இக்கூற்றையே குறிப்பதாக அமைகின்றது. ஆனால் ஓடினின் தந்தையானவர் புரி (Buri) ஜயந்தீஸ் (Giant-ess) ஆகியோருக்கும் மகனாகப் பிறந்தவர் என அறியப்படுகின்றார் (Shannon, 2010, 4). இதன் அடிப்படையில் சிவபெருமானுக்கும் போர்ஸ்சுக்கும் இடையில் வெளிப்படையான வேற்றுமை நிலவுவதை மறுக்க இயலாது. இதுவல்லாது சிவபெருமானை இந்து சமயம் பரம்பொருளாகவே போற்றுகின்றது. இத்தகைய குணங்கள் ஓடினின் தந்தையிடம் இருப்பதாக அறியப்படவில்லை.

உமையை சிவபெருமானின் அருட்சக்தியாகக் காணும் சைவ சித்தாந்தம். எனவே சிவமும் சக்தியும் வேறல்ல என்பதுவும் பெறப்படும். இதுவல்லாது சக்தியாகிய உமையம்மையை சாக்த சமயத்தின் முழுமுதற்பொருளாகக் கொள்ளும் மரபும் இந்துக்களிடையே உண்டு (Rajantheran, Silllalee, Viknarasa, 2009, 29). ஆனால், ஓடினின் தாயாகிய பெஸ்ட்லாவை இத்தகைய பேராற்றல் மிக்கவளாகக் காட்டும் குறிப்புகள் எதுவும் இல்லை. இவ்விடத்தும் வேற்றுமை நிலவுவதை மறுப்பதற்கில்லை.


இதுவல்லாது, முருகப்பெருமான் சிவப்பரம்பொருளின் மற்றொரு வடிவமாகவே கந்த புராணம் சாற்றுகின்றது. ஆனால் ஓடினின் தந்தையும் ஓடினும் வேறுபட்ட தெய்வங்களாக மட்டுமே காட்டப்படுவது இவ்விடம் கவனிக்க வேண்டிய முக்கிய வேறுபாடாகும்.

## ஆயுதம்

முருகப்பெருமானின் ஆயுதமாகவும் அடையாளமாகவும் விளங்குவது வேல் ஆகும். வேலைத் தன் திருக்கரத்தில் கொண்டுள்ளதால் முருகப்பெருமானுக்கு வேலாயுதன் எனும் திருநாமம் உண்டு. தேவர்களைச் சிறை மீட்கச் சூரனுடன் முருகப்பெருமான் போருக்குச் சென்ற போது அன்னை ஆதிபராசக்தி தனது சக்தியை வேலாக்கி முருகனுக்கு அளித்தார் எனக் கந்தபுராணம் கூறுகின்றது. அதனால் இதனைச் சக்தி வேல் என்றும் போற்றுவர். முருகப்பெருமான் தனது வேலைக் கொண்டே கிரவுஞ்ச மலையைப் பிளந்து தாரகன், சிங்கமுகன் போன்ற அசுரர்களை அழித்ததோடு, இறுதியில் மரமாக நின்ற சூரனை இருகூறாகப் பிளந்து மயிலும் சேவலுமாக உருப்பெறச் செய்தார் என்பவை கந்தபுராணச் செய்திகள் (நாராயணவேலுப் பிள்ளை, 1998, 52, 5457, 9499 – 106108).

முருகப்பெருமான் வேலை ஆயுதமாகக் கொண்டது போலவே ஓடினும் ஈட்டி வடிவிலான குங்னீர் எனும் ஆயுதத்தைத் தன் படைக்கலமாகக் கொண்டுள்ளார். இது இரண்டு வகையாகக் காட்டப்பட்டுள்ளது. ஒன்று ஈட்டி வடிவிலும் மற்றது முத்தலைச் சூலமாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது (Charles & Patricia, 2013, 199).

பட்டியல் 1: முருகனின் வேலும் ஓடினின் குங்னீரும்

| முருகனின் ஆயுதங்கள் | | ஓடினின் ஆயுதங்கள் | |
|---|---|---|---|
|  அ |  ஆ |  இ |  ஈ |
| இருவடிவிலான வேல் | | இருவடிவிலான குங்னீர் ஆயுதம் | |

இவை முருகப்பெருமானின் ஆயுதத்திற்கும் ஓடினின் ஆயுதத்திற்கும் உள்ள தோற்ற ஒற்றுமைகளைக் காட்டுகின்றன. இதில் முதலில் (அ) காட்டப்பட்டுள்ள வேலாயுதம் ஓடினின் சூல (இ) வடிவிலான ஆயுதத்துடன் ஒத்துப் போகின்றது. மற்றொரு வடிவத்தில் காணக்கிடக்கும் முருகனின் வேல் (ஆ) ஓடினின் ஈட்டி வடிவிலான ஆயுதத்துடன் (ஈ) ஒத்துப் போகின்றது.

முருகப்பெருமானின் சக்தி வேலாயுதம் எய்தவுடன் தன் பணியை முடித்து மீண்டும் முருகனின் கையில் வந்து சேரும் தன்மையுடையது ((நாராயணவேலுப் பிள்ளை, 1998, 52). அது போலவே ஓடினின் ஆயுதமும் எதனையும் தகர்த்தெறிந்து மீண்டும் ஓடினை வந்தடையும் தன்மையுடையதாகவே சித்தரிக்கப் பட்டுள்ளது (Charles & Patricia, 2013, 199). இதன் அடிப்படையில் முருகனின் ஆயுதமும் ஓடினின் ஆயுதமும் ஒத்திருப்பதை அறிய முடிகின்றது.

ஆயினும் ஓடினின் ஆயுதமானது அத்தெய்வத்தின் படைக்கலனாகவே அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆனால், முருகப்பெருமானின் வேலானது வெறும் போர்க்கருவியாக மட்டுமல்லாமல் ஞானத்தின் அடையாளமாகவும் வழிபடு முத்திரையாகவும் விளங்குகின்றது. வேலின் தத்துவம் குறித்து விளக்கும் போது அதனை ஒருவரின் ஞானத்திற்கு ஒப்புவமை கூறுவர். ஒருவரது ஞானமானது வேலின் படர்ந்த பகுதியைப்போல பரந்து விரிந்தும், வேலின் நுனியைப் போல கூர்மையாகவும், அதன் தண்டு ஆழப்பதிந்திருப்பதைப் போல ஆழ்ந்தும் இருத்தல் வேண்டும் எனப் பொருள் கூறுவர் (சிவபுராணம்: 35). இதுவல்லாது முருகனின் வடிவங்கள் இல்லாத இடங்களில் வேலைப் பிரதிட்டை செய்தால் அது முருகனைப் பிரதிட்டை செய்ததற்கு ஒப்பாகப் போற்றப்படுகின்றது. இவ்வாறு முருகனின் வேலாயுதத்திற்கு வழங்கப்படும் மற்ற தனித்துவங்கள் ஓடினின் குங்னீர் ஆயுதத்திற்கு இல்லை என்பது குறிபிடப்பட வேண்டிய மற்றொரு வேறுபாடாகும்.

## போர்க்கடவுள்

வேதத்தின் அடிப்படையில் காணும் போது ஸ்கந்தன் போர்க்கடவுளாகவே குறிப்பிடப்படுகின்றார் (தேவபூபதி நடராஜா, 2011, 16). முருகப்பெருமானின் படைப்பும் சூரபதுமன் முதலான அவுணர்களை ஒடுக்கித் தேவர்களைக் காப்பதற்காகவே நிகழ்த்தப்பட்டது. அதனால்தான் முருகப்பெருமான் தேவசேனாபதியாகப் போற்றப்படுகின்றார் ((நாராயணவேலுப் பிள்ளை, 1998, 57). முருகப்பெருமானுக்குரிய வைபவங்களுள் கந்த சஷ்டி மிக முக்கியமான பண்டிகையாகும். இதன் ஆறாம் நாள் சஷ்டித் திதியன்று முருகப்பெருமான் சூரனை வதம் செய்த திருச்செந்தூரில் இன்றும் சூரசங்காரப் பெருவிழா நடத்தப்பட்டு வருகின்றது. கந்தசஷ்டி கவசமும்

அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய் (165–166)

எனக் கூறுவதும் முருகப்பெருமான் தேவர்களைக் காத்த பெருமையைப் பறைசாற்றுகின்றது.

ஜெர்மானிய நாட்டுத் தெய்வமாகப் போற்றப்படும் ஓடின் தெய்வமும் போர்க் கடவுளாகவே வணங்கப்படுகின்றார் (Jarich, 2015, 35). தெய்வலோகத்திற்கு எதிராக தொடுக்கப்படும் எந்த ஒரு யுத்தத்தையும் முறியடிப்பதற்கு யாரெல்லாம் பங்கு பெற வேண்டும் என ஓடின்தான் தீர்மானித்து அவர்களுக்கான ஆற்றலையும் வழங்குபவர் எனக் கூறப்படுகின்றது. போரில் ஓடினுக்கு, ஆடம் (Adam), பிரீமென் (Bremen) ஆகிய தெய்வங்கள் தளபதிகளாகப் பங்கேற்கின்றனர். மேலும் மனிதர்கள் கூட தாங்கள் ஈடுபடும் போர்களில் எதிரியை வெற்றி கொள்வதற்கான ஆற்றலை அடையப்பெற வேண்டி ஓடினை வணங்குவதாகக் குறிப்பு உள்ளது (MacCulloch, 2005, 105). ஓடினின் பிள்ளைகளும் போர்க்கலையில் தேர்ந்தவர்களே. இவர்களுள் தோர் எனும் மகன் மிகச் சிறந்த போராளி. இவனது ஆயுதம் சுத்தியல். இதுவே இவனுடைய மாபெரும் பலமாகவும் உள்ளதாகக் குறிப்பறியப்படுகின்றது. தோர் இடியையும் மின்னலையும் தனது ஆயுதத்தின் சக்தியாகப் பயன்படுத்தியிருக்கிறார் (Peter Dunstan, 2005). அந்த வகையில் தோர் இந்திரனோடு ஒப்பிட்டுப் பார்க்கக் கூடிய வாய்ப்பும் உண்டு.

இதன் அடிப்படையில், முருகப்பெருமான் தோன்றியதற்கான முதன்மைக் காரணமும் ஓடின் போர்க்கடவுளாகப் பார்க்கப் படுவதற்கும் இடையில் ஒற்றுமை நிலவுவதை உணர முடிகின்றது. மேலும், முருகப்பெருமான் சூரபதுமன் முதலான அசுரர்களோடு போர் தொடுக்கச் செல்லும் போது அவருடன் வீரவாகு, வீரகேசரி, வீரமகேந்திரர், வீரமகேசுரர், வீரபுரந்தரர், வீரராட்சசர், வீரமார்த்தாண்டர், வீராந்தகர், வீரதீரர் எனும் நவவீரர்களும் துணைக்குச் சென்றதாகக் குறிப்பு வருகின்றது (நாராயணவேலுப் பிள்ளை, *1998, 53*). இந்த நவவீரர்களும் அம்பிகையின் சிலம்புப் பறல்களில் இருந்து சிந்திய மணிகளில் இருந்து தோன்றிய கன்னியர்களின் வயிற்றில் உதித்த வீரர்களாவர். இந்நவவீரர்களின் பிறப்பை:

“மங்கைசிலம்பின் மணியொன் பதிற்றோன்றும்
துங்க மடவார் துயர்தீர்ந்து தங்கள்
விருப்பா லளித்தநவ வீரருக்குள் முன்னோன்
மருப்பாயும் தார் வீரவாகு”

(கந்தர்கலிவெண்பா: 26)

என வர்ணிக்கிறார் குமரகுருபரர். இந்த நவவீரர்களுள் வீரவாகுத்தேவரே முருகப் பெருமானின் தூதுவராகவும் தளபதியாகவும் கூறப்படுகிறார். தளபதிகளின் எண்ணிக்கையில் மாறுபாடு இருந்தாலும் முருகக் கடவுளுக்கு வீரவாகு முதலான நவவீரர்கள் துணை நின்றது போலவே ஓடின் தெய்வத்திற்கும் ஆடம் (Adam), பிரீமென் (Brimen) ஆகிய வீரர்கள் போர்க்களத்தில் துணைநின்ற குறிப்பு, முருகனுக்கும் ஓடினுக்கும் இடையிலான ஒற்றுமையைப் பறைசாற்றுகின்றது. முருகப்பெருமான் தேவர்களின் துயர் தீர்க்கவும் தேவருலகத்தைக் காக்கவும் தேவசேனாபதியாக விளங்கியது போலவே ஓடினும் போர்க்கலைகளில் சிறந்து விளங்கி தெய்வ உலகங்களுக்கு எதிரான போரில் அவ்வுலகங்களைக் காக்கும் பெரும்பணி ஆற்றிய குறிப்புகளும் இவ்விரு தெய்வங்களுக்கும் இடையிலான ஒற்றுமைக்கு மேலும் வலுச் சேர்க்கின்றது.

## ஞானத்தின் கடவுள்

முருகப்பெருமான் ஞானாதிபதியாகப் போற்றப்படுபவர். பிரம்மனிடம் பிரணவத்தின் பொருள் கேட்டு அதற்குப் பொருளுரைக்க இயலாத காரணத்தால் அவரைச் சிறையிட்டவர் (நாராயணவேலுப் பிள்ளை, *1998, 48*). தந்தைக்கு பிரணவத்தின் பொருளுரைத்துத் தகப்பன் சாமியானவர்.

முருகனின் ஆறுபடை வீடுகளுள் திருவேரகம் எனும் சுவாமிமலை முருகப்பெருமான் சிவப்பரம்பொருளுக்குப் பிரணவத்தின் உட்பொருளை உபதேசித்த திருத்தலமாகக் கொண்டாடப்படுகின்றது (Manicka Rao Athinarayanan, 2012, 105). ஸ்ரீமத் சற்குரு சச்சிதானந்த சுவாமிகள் கந்தகுரு கவசத்தில்,

"தகப்பன் ஸ்வாமியே என் இதயத்துள் தங்கிடுவாய்
ஸ்வாமி மலைதனில் சொன்னதனைச் சொல்லிடுவாய்
சிவகுரு நாதா செப்பிடுவாய் ப்ரணவமதை
அகக்கண் திறக்க அருள்வாய் உபதேசம்" (26–29)

எனக் குறிப்பிடுகின்றார். இப்பாடல் வரிகளானது முருகப்பெருமானே சிவபெருமானுக்குக் குருவாக விளங்குவதாகவும், அவரே அடியவர்க்கு ஞானத்தை வழங்கவல்ல குருவாகவும் விளங்குவதாகக் குறிப்பிடுகின்றார். மேலும் அருணகிரிநாதர்,

"நாத விந்து கலாதி நமோ நம
வேத மந்திர சொரூபா நமோ நம
ஞான பண்டித சுவாமி நமோ நம வெகுகோடி"
(திருப்புகழ்: 13)

என முருகப்பெருமானை ஞானபண்டித சுவாமியாகப் போற்றுகின்றார். இவை அனைத்தும் முருகனே ஞானத்தின் கடவுள் என்பதனை உறுதிப்படுத்துகின்றன.

இதுவல்லாது அகத்தியர் முதலான சித்தர்களுக்கும் முருகப்பெருமானே ஞானகுருவானவர். சுப்பிரமணியர் ஞானம் எனும் நூலானது முருகப்பெருமான் அகத்தியருக்கு ஞானத்தை உபதேசித்த நூலாகக் குறிப்பிடப்படுகின்றது. அகத்தியர் முதலான சித்தர் பாரம்பரியம் முருகப்பெருமானிடத்தில் இருந்தே தோன்றியுள்ளது ((இராசேந்திரன், சிவபாலன், சில்லாழி, 2009, 89).

முருகப்பெருமானே தமிழ், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளை உலகினுக்கீந்தார் எனப்படுகின்றது. முருகப்பெருமான் அகத்தியருக்குத் தமிழைப் போதித்து அம்மொழியை உலகில் பரப்பச் செய்யப் பணிக்கப்பட்டதாகக் குறிப்புகள் உள்ளன (Rajantheran, Sillllalee, Viknarasa, 2009, 31). இதன் வழி முருகப்பெருமான் தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இரண்டு மொழிகளின் கர்தாவானார் என்பது சித்தர் பாரம்பரியத்தின் அடிப்படையில் உறுதிபடுகின்றது (சுப்பிரமணியர் ஞானம்).

முருகப்பெருமானைப் போலவே ஓடின் தெய்வமானவர் ஞானத்தின் கடவுளாக ஜெர்மானியர்களால் போற்றப்பட்டவர். இவர் கவி பாடி இலக்கியங்கள் புனையும் ஆற்றலுடைய தெய்வமாகவும் குறிப்பிடப் படுகின்றார் (Kathleen & Marian Rengel, 2004, 67). ஓடின் ஞானம் பெற வேண்டி ஒன்பது நாட்கள் இரவும் பகலும் ஊண் உறக்கமின்றி யக்ட்ரஸி (yggdrasil) எனும் மரத்தில் தொங்கியபடி தன்னை வருத்திக் கடுந்தவம் இயற்றியுள்ளார் (Neil Philip, 1996, 39). மேலும் தனது தவத்தினால் கிடைக்கப்பெற்ற ஞானத்தால் தன்னை வேலால் குத்திக் கொண்டு பழங்கால ஜெர்மானிய எழுத்துக்களையும் உருவாக்கியுள்ளார். ஓடின் மிகுந்த ஞானத் தேடல் உடையவர். ஞானத்தை அடையும் பொருட்டு எத்தகைய தியாகத்தையும் செய்வதற்குத் தயங்காதவர் (Steven Long, 2015, 26-27).

ஒருமுறை ஓடின் உலக ஞானத்தைப் பெறுவதற்காக மீமீர் எனும் காவலனுக்குச் சொந்தமான கிணற்றில் உள்ள தண்ணீரை அருந்துவதற்காகச் செல்கின்றார். ஆனால் அந்தக் கிணற்றைப் பாதுகாக்கும் மீமீர், ஓடினைத் தண்ணீர் அருந்த அனுமதிக்க மறுக்கிறார். மேலும், தெய்வமே ஆனாலும் ஏதேனும் தியாகத்தைச் செய்தால்தான் இக்கிணற்றில் இருக்கும் தண்ணீரைக் குடிக்கத் தாம் அனுமதிக்க முடியும் என மீமீர் கூறுகின்றார். தாம் தண்ணீரைக் குடிக்க என்ன செய்ய வேண்டும் என ஓடின் வினவிய போது மீமீர் உனது ஒரு கண்ணைத் தானமாகக் கொடுக்க வேண்டும் என்கிறார். அது போலவே ஓடினும் தனது ஒரு கண்ணைச் சற்றும் சிந்திக்காது

பறித்துக் கிணற்றில் போட்டதாகவும் கூறப்படுகின்றது (Mary Pope Osborne, 2000, 10).

இக்குறிப்புகளின் அடிப்படையில் காணும் போது முருகப்பெருமானுக்கும் ஓடின் தெய்வத்திற்கும் இடையிலான ஞானத்தின் தெய்வங்கள் எனும் அடிப்படையில் ஒற்றுமைகள் நிலவுவதை மறுப்பதற்கில்லை. முருகப்பெருமான் தமிழையும் சமஸ்கிருதத்தையும் உலகினுக்கு ஈந்தது போலவே ஓடினும் தொடக்க காலத்து ஜெர்மானிய மொழியை உலகிற்குக் கொடுத்துள்ளார். முருகன் ஞானக் கடவுளாக விளங்குவது போலவே ஓடின் தெய்வமும் ஞானத்திற்கு முதன்மை யளிக்கும் தெய்வமாக விளங்குகின்றார்.

இவ்வாறு இவ்விரு தெய்வங்களும் ஞானத்திற்கு முதன்மை அளிக்கக் கூடிய தெய்வங்களாக விளங்கிய போதும் இக்கருத்திலும் சில வேறுபாடுகள் நிலவுவதை மறுக்க இயலாது. முருகப் பெருமானைப் பொருத்த வரையில் அவர் பூரண ஞானமுடையவர், ஞானத்தின் பிறப்பிடம். முருகப்பெருமானுக்கு குருவென யாரும் இருந்ததில்லை. இவரே சித்தர்களுக்கும் ஞானிகளுக்கும் குருவாக இருந்துள்ளார். மேலும், ஆதிப்பரம் பொருளாகப் போற்றப்படும் பூரண ஞானமுடைய சிவபெருமானுக்கே குருவாக விளங்கியவராதலால் இவரின் ஞானம் யாராலும் அல்லது எதனாலும் போதிக்கப்படாத அல்லது சுட்டிகாட்டப்படாத தானே விளைந்த ஞானமாகும். இதனையே தன்வயத்தனாதல் என்பர்.

ஆனால், ஜெர்மனியத் தெய்வமாகிய ஓடினின் நிலை அதுவல்ல. ஓடின் யக்ட்ரஸி மரத்தில் தொங்கியபடி தவமியற்றியும், உலக ஞானத்தைப் பெற வேண்டித் தனது ஒரு கண்ணைத் தியாகம் செய்து தனது ஞானத்தைப் பெருக்கிக் கொண்டுள்ளர். இக்கூற்றுகளாவன இவர் பூரண ஞானம் உடையவர் அல்லர் என்பதனையும் ஞானத்தை அடையும் வேட்கை உடையவர் என்பதையும் சுட்டுகின்றது. இச்சிந்தனையின் அடிப்படையில் ஞானத்தின் பிறப்பிடமாக முருகனும், ஞான வேட்கை உடையவர் எனும் நிலையில் ஓடினும் மாறுபடுகின்றனர்.

## நோய்களைக் குணப்படுத்தும் ஆற்றல்

முருகப்பெருமான் அடியவர்களின் நோய் தீர்க்கும் கடவுளாகவே போற்றப்படுகின்றார். அருணகிரிநாதர் திருத்தணிகைத் திருப்புகழிலும் *(243)*, பாலதேவராய சுவாமிகள் இயற்றிய கந்தசஷ்டி கவசத்திலும் முருகன் தீராத நோய்களைத் தீர்க்கும் இறையாகப் போற்றப்படுகின்றார்.

அதுவல்லாது பிறவி நோயையும் தீர்க்க வல்லவராகவும் முருகப்பெருமான் கொண்டாடப்படுகின்றார் *(திருப்புகழ், திருமாவூர்: 7)*. இது போலவே தேவராய சுவாமிகளும், காலதூதர்கள் முருகனின் அடியார்களைக் கண்டால் அஞ்சி நடுங்குவர் என்றும் கூறுகின்றார் *(கந்தசஷ்டி கவசம்: 130-133)*. இக்கூற்றுகள் அனைத்தும் அடியவர்களுக்கு முருகப்பெருமான் அமரத் தன்மையினை அருள்வார் என்பதனை உறுதிபடுத்துகின்றன.

முருகக் கடவுளைப் போலவே, ஓடின் தெய்வமும் நோய் நீக்கி மக்களின் வாழ்க்கையில் சுபீட்சத்தை அளிக்க வல்லவராகவும் ஜெர்மானியர்களால் போற்றப்படுபவர். இவர் ஒன்பது இரவு பகல் யக்ட்ரஸில் (yggdrasil) எனும் மரத்தில் தொங்கியபடி இயற்றிய தவத்தின் பயனால் யாருடைய நோயையும் நீக்கும் சக்தியைப் பெற்றார் (Steven Long, 2015, 26-27). அது முதல் கொண்டு இவர் நோய்களைக் குணப்படுத்தும் தெய்வமாகவும் அங்கீகரிக்கப்பட்டார்.

இதன் அடிப்படையில் முருகனும் ஓடினும் நோய்தீர்க்கும் கடவுளர்கள் எனும் கருத்தில் ஒத்துப் போவதைக் காணலாம். ஆனால் இவ்விடத்திலும் ஒரு மாறுபாடு இருப்பதை மறுக்க இயலாது. ஆய்வின் கண் கொண்டு பார்க்கும் போது, ஓடின் தெய்வம் மக்களின் உடல் நோயைத் தீர்க்கும்

தெய்வமாகப் போற்றப்பட்டாலும் கூட அவர் சாகாவரமருளும் ஆற்றலைப் பெற்றிருக்கவில்லை. இவ்விடத்தில் முருகனும் ஓடினும் நோய் நீக்கம் அருளும் தெய்வங்கள் எனும் அடிப்படையில் ஒன்றெனத் திகழ்ந்த போதும் முருகக் கடவுள் அதனினும் ஒரு படி மேலே சென்று தன்னை அண்டிய அடியார்களுக்கு மரணமிலாப் பெருவாழ்வு (முக்தி) அருள்வார் என்ற குறிப்பு பெறப்படுகிறது. இக்கருத்தின் அடிப்படையில் முருகனும் ஓடினும் சற்று மாறுபடுவதைக் காணலாம்.

## எல்லா உலகங்களிலும் ஆளுமை

இந்து மதம் முருகப்பெருமானை எல்லா உலகங்களுக்கும் தலைவனாகப் போற்றுகின்றது. இந்து மதத்தில் குறிப்பிடப்படும் ஈரேழு பதிநான்கு லோகங்களிலும் முருகப்பெருமானின் ஆளுமை உண்டு. இதனைத் திருச்செந்தூர் புராணத்தில் ‘தரணிதனில் ஆறுபத்து அறுகோடி தீர்த்தமும் சரவணத்துள் அடக்கம்‘ எனத்தொடங்கும் பாடலில் வருகின்ற,

“ஈரேழு புவனமுதல் அண்டங்கள் பலவும் உன்
இடத்தினில் அடக்கமய்யா”
(சிவனார் மனம் குளிர உருவானவன், 39: 6)

எனும் பாடல் வரி நேரடியாகவே உரைப்பதாக அமைகின்றது. இக்கூற்றை வலுப்படுத்தும் வண்ணம் பாலதேவராய சுவாமிகள், முருகனை வணங்கினால் அவனுடைய அடியர்களுக்கு அனைத்து லோகங்களில் உள்ளவர்களும் உறவாவர் எனும் கருத்தை முன்வைக்கும் விதமாக,

“ஈரேழ் உலகமும் எனக்கு உறவாக”
(கந்தசஷ்டி கவசம்: 158)

எனப் பதிவு செய்கிறார். இக்கூற்றானது முருகனின் ஆளுமைக்கு உட்பட்டே அனைத்து உலகங்களும் உள்ளன என்பதை உறுதிபடுத்துகின்றது.

முருகக் கடவுளைப் போலவே, ஓடின் தெய்வமும் பிற உலகங்களிலும் ஆளுமை உடையவராகவே அறியப்படுகிறார். ஓடின் தவப்பயனாக எல்லா உலகங்களிலும் தொடர்புகொள்ளும் ஆற்றலுடையவரகவும் விளங்கப்பெற்றார் (Neil Philip, 1996, 39). மற்ற உலகங்களிலும் வழிபடும் கடவுளாகவும் விளங்கினார். இதன் அடிப்படையில் காணும் போது ஓடினும் முருகனும் மற்ற எல்லா உலகிலும் ஆளுமை செலுத்துவதில் ஒரே நிலைப்பாட்டில் உள்ளன எனக் கூறலாம்.

## விருட்சங்கள்

“ஆலமும் கடம்பும் நல்யாற்று நடுவும்” *(4.66: 73)* எனப் பரிபாடலும் “துறையும் ஆழமும் தோள்வலி மராஅமும்” என்று கலித்தொகையும் ஆலமரத்தையும் கடம்ப மரத்தையும் முருகக்க்கடவுளுக்குரிய மரங்களாகக் குறிப்பிடுகின்றன. மேலும், கடம்ப மரத்தை முருகனுக்குரிய மரமாகவும் குறிப்பிடுவர். முருகனுக்குரிய கடம்ப மரத்தை வழிபட்டால் கொடிய மனம் படைத்தோரும் எதிரிகளும் வீழ்வர் என்றும் வீரமரணம் அடைந்தாரை அம்மரத்தடியில் புதைத்து நடுகல் வைத்து வழிபட்டால் வெற்றி கிட்டும் என்றும் குறுந்தொகை கூறுகின்றது. முருகன் வள்ளியைத் திருமணம் செய்து கொள்வதற்காக நிகழ்த்திய திருவிளையாடல்களுள் அவர் வேங்கை மரமாக நின்ற திருவிளையாடலும் ஒன்றென்பர் (நாராயணவேலுப் பிள்ளை, *1998, 117)*. வேங்கையாக நின்ற முருகனை வழிபட்டால் பயிர்கள் நன்கு விளையும் எனும் கருத்தை ‘எரிமருள் வேங்கை கடவுள் காக்கும்‘ *(216: 67)* எனும் நற்றிணைப் பாடலின் வழி அறியலாம்.

முருகப்பெருமானை ஒத்தே ஓடின் தெய்வமும் மரங்களுடன் தொடர்புடயவராகவே காட்டப்படுகின்றார். ஓடின் யக்ட்ரஸில் எனும் மரத்தில் தொங்கியபடி தன்னை வருத்திக் கடுந்தவம் இயற்றியுள்ளார் (Neil Philip, 1996, 39). யக்ட்ரஸில் என்பது புனிதமான மரமாகக் கருதப்படுகின்றது. இதனைச் சாம்பல் மரமென்பர். அம்மரத்தில் கடவுளர்கள்

உறைவதாகவும், அம்மரத்திலிருந்தே தமது பணிகளைச் தெய்வங்கள் செய்வதாகவும் நம்பப்படுகின்றது. ஜெர்மானியர்களின் நம்பிக்கையின் படி இம்மரத்தினுடைய கிளைகள் மேலோகம் வரை செல்வதோடு, இதன் மூன்று வேர்கள் ஒவ்வொன்றும் ரொபூருனர் என்ற கிணற்றிலும், எவேர்கிளிமர் என்ற நீரூற்றிலும், மிமிஸ்புருனர் என்ற கிணற்றிலும் வேரூன்றியிருப்பதாகக் கூறப்படுகின்றது. இதில் ஏரம் என்ற பாம்பும் கழுகும் இருப்பதாகக் கூறப்படுகின்றது. இம்மரம் ஒன்பது கோள்களையும் இணைப்பதாகவும் கூறப்படுகின்றது (டேவிட்சன், *1993, 69*).

இக்கூற்றுகள் யாவும் முருகக் கடவுள் எவ்வாறு கடம்பம், ஆலம், வேங்கை ஆகிய மரங்களுடன் தொடர்பு படுத்தப்பட்டிருந்தாரோ அது போலவே ஓடினும் யக்ட்ரஸில் மரத்துடன் தொடர்புடையவராகவே இருந்துள்ளார் என்பதனை உறுதி செய்கின்றன. மேலும் ஓடினுடன் தொடர்புடைய யக்ட்ரஸில் மரம் நவகோள்களையும் இணைப்பதாகக் கூறப்படுவதுவும், முருகப்பெருமானின் பக்தர்களுக்கு "நவகோள் மகிழ்ந்து நன்மையளித்திடும்" எனும் கந்த சஷ்டி கவச வரிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கத்தக்கதாக உள்ளதைக் காண்க.

## முடிவுரை

முருகக்கடவுளையும் ஓடின் தெய்வத்தையும் பின்புல வரலாறு, ஆயுதங்கள், தொழில்கள், தனித்தன்மைகள் ஆகிய கருப்பொருள்களின் அடிப்படையில் ஒப்பிட்டுப் பார்க்கும் போது நிச்சயமாக அவர்களிடத்திலே வெளிப் படையான ஒற்றுமைகள் இருப்பது தெளிவாகத் தெரிகின்றது. ஆயினும் முருகனும் ஓடின் தெய்வமும் ஒரு நிலையில் வைத்துப் பார்க்கக் கூடியவர்கள் என்ற முடிவுக்கு நம்மால் வர இயலவில்லை. முருகன் பரம்பொருளாகிய சிவபெருமானின் மறுவடிவமாக இருக்கிறார். ஆனால் ஓடின் பரம்பொருளின் வடிவமாக அல்லாமல் ஒரு பெரும் தெய்வம் எனும் நிலையில் வைத்து மட்டுமே பார்க்க முடியும் என்பதுவே இவ்வாய்வின் முடிந்த முடிவாக வைக்கப்படுகின்றது.

## Bibliography


Charles Russell Coulter, Patricia Turner. (2013). *Encyclopedia of Ancient Deities*. New York: Routledge.

*Civapuranam*.

*Cuppiramaniyar* ñânam 500.

*Tiruccentûr* puranam.

*Tiruppukazh..*

*Tirumantiram*.

*Tiruvempâvai*.

Devapoopathy Nadarajah. (2011). *The Worship of Murugan.* Kuala Lumpur: Malaysia Ilangkai Saivar Assosiation.

Jarich G. Oosten. 2015. *The War of the Gods (RLE Myth): The Social Code in Indo-European Mythology*. New York: Routledge.

*Kantacacti* kavacam.

*Kantakuru kavacam*.

*kantarkalivenpâ*.

*Kalittokai.*
*Kuruntokai.*
*Cilappatikâram*.
Kathleen, N. Daly, Marian Rengel. (2004). *Norse Mythology A to Z: A Young Reader's Companion*. New York: Infobase Publishing.
Kishore, B.,R. (2001). *Lord Shiva*. Delhi: Diamond Pocket Books (P) Ltd.
Larissa McDermott. (2016). *Runes*. Lulu.com.
MacCulloch, J.a. (2005). *The Celtic and Scandinavian Religions*. New York: Cosimo Classic.
Manicka Rao Athinarayanan. (2012). "Lord Muruga Six Battle Campus-Arupadai Veedugal (Story)" in *Arulmigu Sri Subramaniar Alayam Mahakumbhabishegam*. Rawang: Print Shine.
Mary Pope Osborne. (2000). *Favorite Norse Myths*. New York: Scholastic Inc.
Narayana Velupillai, M. (1998). *Srî kanta purâna câram*. Chennai: Anuragam.
Neil Philip. (1996). *Odin's Family: Myths of the Vikings*. New York: Orchard Books.
Peter Dunstan. (2005). *Dark Powers that Bind*. Florida: Llumina Press.
Rajantheran, M., Sivapalan, G & Silllalee, K. (2009). *Cittarka vâvum vâkkum: Ôr âyvup pârvai*. Chennai: Sithar Literary Centre.
Rajantheran,M., Silllalee,K. & Viknarasa,R (2009) *An Introduction to Hinduism*. Selangor: Malaysia Hindu Sangam.
Shannon Eric Denton. (2010). *Odin*. Minnesota: Magig Vagon.
Steven Long. (2015). *Odin: The Viking Allfather*. New York: Bloomsbury Publishing.
*Tolkâppiyam.*
*Paripâdal.*

# கலித்தொகை காட்டும் அறநெறி

## Morality in Kalithogai

முனைவர் மணிமாறன் சுப்பிரமணியம்
Dr.Manimaran Subramaniam

***Abstract***

Kalithogai, a Sangam Literature, is one of the best Tamil literatures that discusses honour and ethics. Even though Kalithogai discusses external topics like theft and chastity of the ancient Tamilians, it also portrays their ethics and honour. This made the scholars denoting Kalithogai as ''*கற்றறிந்தோர் ஏத்தும் கலி*'' means kalithogai which is praised by great scholars. The purpose of this article is to identify how the ethics were used in Kalithogai. This research also aims to identify the frequency in which ethics are discussed in this literature and the type of ethics that has been described. Hence, this research will have a qualitative nature. This study is entirely based on library research. The primary data was obtained from Kalithogai, and the secondary data were obtained from existing studies, research papers and commentaries. All data were collected for purposes of the study and were used according to the aim of the study. Based on the study, it was found that Kalithogai which discusses ancient Tamilians' external life like theft and chastity features the essence of basic ethics of such life. Some of the ethics in Kalithogai are repeated with different illustrations and explanations. In general, texts containing ethical comments are numerous in Tamil literature, Yet Kalithogai has a unique way of explaining it which makes it interesting. In a nutshell, all aspects of the ethical life of mankind were discussed in Kalithogai.

**Key words:** Ethical values, Kalithogai, Sangam period literature, Ancient Tamilians,Tamilian Life.

### முன்னுரை

தமிழர்தம் வாழ்வியல் மாண்பு அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற்பொருளைப் பற்றுக்கோடாகக் கொண்டது. இவை நான்கும் தனித்தனிப் பொருளாக இருப்பினும், ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையன; சார்புத் தன்மை உடையன. இவற்றுள் அறம் எனப்படுவது மற்றவற்றுக்கெல்லாம் மூலமாகக் கருதப்படுவதோடு, பிறவற்றைக் காட்டிலும் உயர்வாகக் கருதிப் போற்றிப் புகழப்படுகிறது. அதன் பொருட்டே நாற்பொருள்களுள் முதன்மையாக அறம் இடம்பெற்றிருப்பதோடு, தமிழ் இலக்கியங்கள் பெரும்பாலானவை அறம் பேசுபவையாக அமைந்துள்ளன; அவ்வாறு அமைந்திருக்கவும் வலியுறுத்தப்படுகின்றன. அறநெறிகளே அக இலக்கியங்களுக்கும் புற இலக்கியங்களுக்கும் வாழ்க்கை நெறியைத் தருவதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றன. அறத்தின்கண் நின்று பொருள், இன்பம்

Dr.Manimaran Subramaniam is a Senior Lecturer in the Department of Indian Studies, University of Malaya, KualaLumpur, Malaysia. Manimaran_um@yahoo.com

சார்ந்த வாழ்வியல் நெறிகளைத் துய்த்து வாழ்வாங்கு வாழ்பவனே இறுதியில் வானுறையும் தெய்வத்துள் (வீடுபேறு) வைக்கப்படுவதாகவும் சிறப்பித்துக் கூறப்படுகின்றது (திருக்குறள் 50). மேலும், அறநெறி ஒழுகாது முறைமை வழுவி உயிர்களுக்குத் துன்பம் செய்யும் வகையில் ஆட்சி செய்பவன், உயிரை உடலிலிருந்து பிரிக்கும் கொடுஞ்செயலைச் செய்தாலும் காலக்கணக்கை முறையாகக் கொண்டு முறைமை வழுவாது ஒழுகும் காலனைக் காட்டிலும் தாழ்வானவன் எனக் குறிப்பிடுவதன் வழி தமிழர்தம் வாழ்வில் அறம் பெற்றிருக்கும் தனிச்சிறப்பை நன்கு உணரலாம் (திருமந்திரம் 1:16:1).

## ஆய்வின் நோக்கம்

அறம் போற்றும் சிறந்த தமிழ் இலக்கியங்களுள் சங்க இலக்கியத்தைச் சார்ந்த கலித்தொகையும் ஒன்று. அகப்பொருளைப் பாடி நிற்கும் கலித்தொகைப் பாடல்கள் முழுதும் பண்டைத் தமிழரின் களவு, கற்பு வாழ்க்கையைப் பாடுவனவாக இருப்பினும், அறநெறிக் கருத்துரைகளும் குறைவில்லாது பாடல்களினூடே இடம்பெற்றுள்ளதைக் காணலாம். இதன் பொருட்டே கலித்தொகையைக் 'கற்றறிந்தோர் ஏத்தும் கலி', கல்விவலார் கண்ட கலி' என்றெல்லாம் அறிஞர் பகர்வர். இச்சிந்தனையின் அடிப்படையிலே வாழ்வைச் செம்மையுறச் செய்யும் அறநெறிகள் எவ்வாறு கலித்தொகைப் பாடல்களில் அமையப் பெற்றுள்ளன என்பதனை ஆய்வின் அடிப்படையில் எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## ஆய்வின் நெறி

கலித்தொகையில் இடம்பெற்றுள்ள அறநெறிகளின் அளவு நிலையையும் பண்பு நிலையையும் இனங்காணும் நோக்கில் நடத்தப்படும் இவ்வாய்வு முழுதும் பண்புசார் ஆய்வாகவே (qualitative research) அமையப் பெறுகின்றது. இவ்வாய்வுக்கான தரவுகள் முதலாம் நிலைத் தரவுகளாகவும் இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் பெறப்பட்டுள்ளன. முதலாம் நிலைத் தரவுகள் யாவும் கலித்தொகையின் மூலத்தைச் சார்ந்தவற்றிலிருந்தும், இரண்டாம் நிலைத் தரவுகள் அனைத்தும் கலித்தொகை மற்றும் அறநெறி குறித்து இதுவரையில் எழுந்துள்ள ஆய்வுகள், ஆய்வுக்கட்டுரைகள், விளக்கவுரைகள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டன. சேகரிக்கப்பட்ட தரவுகள் யாவும் ஆய்வு நோக்கத்திற்கு ஏற்றவாறு பகுப்பிக்கப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

## கலித்தொகையில் அறநெறி

பண்டைத் தமிழர்தம் களவு, கற்பு எனும் அகவாழ்வைப் பாடும் கலித்தொகையில் அவ்வாழ்க்கைநெறிக்கு அடிப்படையாக விளங்கும் அறநெறிகள் அனைத்தும் சாரமாக இடம்பெற்றுள்ளன. சில அறநெறிகள் மீண்டும் மீண்டும் கலித்தொகையில் வெவ்வேறு உவமைகளுடன் விளக்கங்களுடனும் இடம் பெற்றுள்ள பாங்கினையும் கலித்தொகையில் காண முடிகின்றது. இதன் வழி, அறநெறி வழுவா வாழ்க்கை முறைதனை வலியுறுத்தும் தொகை நூலாகக் கலித்தொகை திகழ்கிறது.

## அறம் செய விரும்பு

வறியார்க்கு ஈவதை ஓர் உயரிய கோட்பாடாகக் கலித்தொகை சுட்டுகின்றது (பாலைக்கலி 10). கொடாதிருத்தல் பெரும் இழிவாகக் கருதப்படுகிறது. இல் வாழ்க்கையில் வாழ்வதென்பதன் உண்மைப் பொருளே வறுமையில் உழல்பவர்களுக்கு இயன்றதைக் கொடுத்து உதவுவது எனப் பொருள்படுத்துகிறது கலித்தொகை (நெய்தற்கலி 16). பிறருக்குக் கொடுத்து மகிழும் மாண்பு அற்றவனின் செல்வத்தால் உரியவனுக்கும் சரி, மற்றவர்க்கும் சரி நன்மையேதும் விளையாது எனவும் கலித்தொகைப் பாடல் ஒன்று

*எடுத்தியம்புகிறது (பாலைக்கலி 9).*

*அவ்வாறு ஒருவர் தம்மிடமுள்ள செல்வத்தையெல்லாம் பிறர்க்குக் கொடுத்துதவுவதால் தமது பொருள் அனைத்தும் அழிந்துபோகுமோ என அச்சமோ, ஐயமோ, வருத்தமோ கொள்ளத் தேவையில்லை. ஆற்றின் இரு கரைகளிலும் உள்ள மரங்கள் செழிப்புற்றுத் தழைப்பது போல, கொடுப்பவரின் செல்வமும் மேன்மேலும் தழைக்கும் ஆற்றல் கொண்டது எனப் பாலைக்கலி 26 சுட்டுகிறது.*

*அறம் செய விரும்பு என்பதற்கு அடுத்த நிலையில் அறம் செய்யாதவனின் நிலையையும் கலித்தொகைப் பாடல்களில் காணலாம். அவ்வகையில், அறம் செய்யாதவனின் நெஞ்சம் கொடிய இருளுக்கு உவமையாகச் சுட்டப்படுவதோடு (நெய்தற்கலி 3) அவர்தம் முதுமைக் காலம் மிகுந்த கொடுமையுடையதாக அமையும் எனவும் அறிய நேருகிறது (குறிஞ்சிக்கலி 2).*

*பண்டைய தமிழர்கள் இவ்வறப் பண்பைப் போற்றிப் பேணினர் என்பதற்குச் சாட்சியாகச் சில காட்சிகளைக் கலித்தொகையில் காண முடிகின்றது. தலைவியின் மேல் காதல் கொண்ட தலைவன் தன் காதலை அவள்கண் சொல்ல இயலாமல் அவளைப் பின் தொடர்ந்தவாறே தவிக்கிறான். இதனை உணர்ந்த தோழி அவன்கண் சென்று எதற்காகப் பின் தொடர்கிறாய் எனக் கேட்டமைக்கு, அதைச் சொன்னால் கிடைப்பது கிடைத்துவிடுமோ எனத் தலைவன் கேட்கிறான். பதிலுரைக்கும் தோழியோ, தலைவியின் தந்தையானவர் யார் வந்து எதை இரந்து கேட்டாலும் இல்லை எனாது கொடுக்கும் பண்புடையவர் எனக் குறிப்பிடும்போது பண்டைய தமிழர்தம் கொடை மாண்பு வெளிப்பட்டு மிளிர்கின்றது (குறிஞ்சிக்கலி 25). பிறிதொரு சூழலில், தாய் தனது சிறுமகனுக்கு அறவுரைகள் கூறும் பாடலில், 'தம்வசம் உள்ள உயர்ந்த பொருள்களைப் பிறருக்கு வழங்கி மகிழ்வதை வாடிக்கையாகக் கொண்டுள்ள உம் தந்தையைப் போன்று நீயும் இருக்க வேண்டும்' எனக் கூறுகையில் அறம் போற்றும் மாண்பு சிறுபிராயத்திலிருந்தே போதனைக்கு உட்படுத்தப்படுவதை அறியலாம்.*

## ஒழுக்கமுடைமை

*திருக்குறளில் ஒழுக்கத்திற்காக ஓர் அதிகாரமே இயற்றப்பட்டுள்ள நிலையில், கலித்தொகையில் அதனைத் தொட்டு ஒரு பாடல் எழுந்துள்ளதைக் காண முடிகின்றது. அவ்வகையில், ஒழுக்கமின்றி தீச்செயல்கள் செய்யும் ஒருவனால் நற்பெயருடன் விளங்க இயலாது எனவும், அவனின் இறுதிக்காலம் துன்பம் மிக நிறைந்ததாக அமையும் எனவும் பாலைக்கலி 9 சுட்டுகிறது.*

## பண்புடைமை

*நற்குணமுடைய மேன்மக்களின் சிறப்பை எடுத்துக் கூறுகின்ற போக்கினிலே பண்புடைமையின் கூறுகளை எடுத்துரைக்கின்றது கலித்தொகை. பண்புடைய மேன்மக்கள் நல்ல சொற்களையே பேசும் தன்மையுடையவர்களாக இருப்பது மட்டுமன்றி, ஒரு கருத்தைப் பேசிக் கொண்டிருக்கும்போதே அதை மறந்தவர்களாக வேறு கருத்துக்குத் தாவிடும் தன்மையற்றவர்கள் என்பதைப் பாலைக்கலி 21 வழி அறியலாம்.*

*அடுத்த நிலையில், மேன்மக்களுக்கு நேரெதிர் பண்புடைய சிறியோர்களைக் குறித்துக் கூறுகையில், ஒருவர் செல்வ வாழ்வில் வாழுங்காலத்தில் அவரோடு சேர்ந்திருந்து அவர் வளத்தை எல்லாம் உண்டு வாழ்ந்து பின் அவர் வறுமையுற்ற காலத்தில் அவருக்கு எவ்வித உதவியும் செய்யாமல் விட்டுச் செல்வர் சிறியோர் எனச் செய்தி பகர்கின்றது (பாலைக்கலி 24). இவ்வகையில் சிறியோரின் இழிகுணத்தைக் கூறுவதன் வழி பண்புடைமையின் சிறப்பை ஏற்றிப் பாடுகிறது கலித்தொகை.*

## நடுநிலைமை

*வேண்டுபவர், வேண்டாதோர் எனும் கண்ணோட்டம் இல்லாமல் நடுநிலையாக*

நிற்கும் பண்பை நுகத்திலுள்ள பகலாணிபோல ஒரு பக்கத்திலும் சாயாது நிற்றல் சிறப்பு எனக் கலித்தொகைப் பாடலொன்று சுட்டுகிறது (மருதக்கலி 21). பிறிதொரு பாடலில், 'எப்பக்கமும் சாயாது நேராக நிற்கும் துலாக்கோலினைப் போல தலைவனும் தன்னால் நுகரப்பட்டவரின் நெஞ்சத்தை நிச்சயம் அழித்திட மாட்டான்; அவன் தன்னை நிச்சயம் காத்தருள்வான்' எனத் தலைவி தோழியிடம் கூறுகையிலும் நடுநிலைமைப் பண்பு கலித்தொகையில் வெளிப்படுகின்றது (குறிஞ்சிக்கலி 6).

## நிலையாமை

நிலையாமை குறித்த அறநெறியினைப் பெருமளவு சுட்டக்கூடிய சங்க இலக்கியப் பெட்டகமாகக் கலித்தொகை திகழ்கிறது. பொருள், வாழ்நாள், அழகு, இளமை, காமம் ஆகிய ஐந்தும் நிலையற்றவை என்பதனை அழகான உவமைகளோடு கலித்தொகைப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

பொருளின் நிலையில்லாத் தன்மையினைக் குறிப்பிடுகையில், அஃது ஒருவர்கண் சேரும்போது இன்பத்தையும், விட்டுச் செல்கையில் பெருந்துன்பத்தையும் தரவல்லது. செல்வத்தின் இத்தகைய பண்புக்கு உவமையாக ஆகூழின் பண்புநிலை சுட்டிக்காட்டப்படுகின்றது. தன்னை விரும்பித் தேடாதிருப்பவரைத் தானே விரும்பி அடையும் பண்புடைய ஆகூழ், அவரை விட்டுப் பிரியும்போது உலகத்தவரெல்லாம் எள்ளி நகைக்குமாறும், தன் வரவுக்கு முன் அவர் பெற்றிருந்த புகழையும் அழித்து, அடைந்த பொழுதைக் காட்டிலும் விரைந்து பிரிந்து போகும். அவ்வியல்புடைய ஆகூழினும் இழிவுடையதாகச் செல்வம் சுட்டப்பெறுகின்றது. மேலும், சினந்து அழிக்க எண்ணியபோது, தமக்கு உயர்வு உண்டாகத் தாம் பெறும் செல்வத்தை எண்ணிப் பாராமல், தன் உயர் வாழ்விற்கே உழைத்த அமைச்சர்களையும், அவர்கள் தம்பொருட்டு உழைத்தவர் ஆயிற்றே என்ற கருணையுள்ளத்தால் அவரை விட்டுவிடாது, கொன்று உயிர் போக்கும் கொடிய அரச வாழ்வைக் காட்டிலும் விரைந்து அழிந்து போவது செல்வம் எனவும் கலித்தொகை பொருளின் நிலையாமையை எடுத்துரைக்கின்றது (பாலைக்கலி 7).

நிலையில்லாச் செல்வத்தைப் பாடும் கலித்தொகை நிலையானது எது எனவும் பாடுகிறது. அவ்வகையில், அவா அறுத்தலே நிலையானது என்பதைச் சுட்டுகிறது. மேலும், அறவழியிலிருந்து விலகிப் பொருள் தேடுவாரின்கண் சேரும் செல்வமானது அவர்தம் இம்மைக் காலத்தில் மட்டுமன்றி, மறுமையிலும் துன்பத்தையே தர வல்லது என்பதனைப் பொருளீட்டுவதற்காக மனைவியைப் பிரிந்து செல்ல எத்தனிக்கும் கணவனிடத்தில் மனைவியானவள் காதல் வாழ்வின் சிறப்பையும் பொருளின் சிறப்பற்ற தன்மையையும் சுட்டிக்காட்டி அவனைத் தடை செய்வதன் மூலம் அறிய நேரிடுகிறது. தன் தலைவனிடத்தில் அவள், ''செல்வமே ஒருவர்க்குச் சிறப்புத் தர வல்லது எனும் அறியாமையில் ஆழ்ந்து கிடக்கும் உன் அறிவு உன்னை மயக்க, அதன் வலையில் அகப்பட்டு நீ அன்பை மறந்து விட்டாயோ? செல்வம் இல்லாது போனபோது காதலர் காதலை மட்டும் வைத்துக் கொண்டு என்ன செய்வர் என்று உறவுபோல் நடிக்கும் உறவிலாத அயலார் கூறும் சொற்களை உண்மை உரை எனக் கருதி விட்டாயோ? செல்வத்தைச் சேர்ப்பவர் அறநெறியில் நின்று சேர்த்தல் வேண்டும். அதை மறந்து அறமில்லா வழியில் சென்று செல்வத்தைச் சேர்த்தால், அவ்வாறு அவர் சேர்த்த செல்வமே அவர்க்கு இம்மை, மறுமை ஆகிய இரு பிறவியிலும் பகையாகிப் பெருந்துன்பம் தரும் என்பதை நீ அறியாயோ? செல்வத்தின் இயல்பு இத்தன்மைத்து ஆதலின், அச்செல்வத்தோடு என்னையும் ஒரு செல்வமாக மதிப்பாயாக! நம்முள் நாம் பிரிவின்றித் தழுவி வாழும் இன்ப வாழ்வைக் கைவிட்டுப் போனால் பெறலாகும் செல்வத்தின்பால் வேட்கை கொள்வதை

*விட்டு விடுவாயாக! அவ்வாறு ஆசை விடுதல் ஒன்றே அழியாச் செல்வமாகும்'' எனக் கூறுவதன் வழி மேற்கூறிய கருத்துகள் புலனாகி நிற்கின்றன (பாலைக்கலி 13).*

அறம் செய்பவரிடத்திலுள்ள செல்வம் ஆற்றின் இரு கரைகளிலும் உள்ள மரங்கள் செழிப்புற்றுத் தழைப்பதுபோல மேன்மேலும் தழைக்கும் ஆற்றல் கொண்டது எனச் சுட்டும் கலித்தொகையே பின்னர் செல்வம் நிலையில்லாதது எனக் குறிப்பிடுகையில் பொருள் மயக்கம் படிப்பவர்கண் ஏற்படுவது இயல்பே. ஆயினும், எத்தகைய பண்புடையவரிடத்தில் உள்ள செல்வம் நிலைக்காது என்பதை அடுத்தடுத்துக் கூறும்போது ஐயம் விலக கலித்தொகையே வழிகாட்டுகிறது. அவ்வகையில், தனக்குக் கற்பித்த ஆசான் வாடும்போது அவருக்குக் கொடுத்து உதவாதவரிடத்திலுள்ள செல்வமும்; கற்றகேட்ட அறநெறிகளை வாழ்வில் ஒழுகாதவரிடத்தில் உள்ள செல்வமும்; தான் துயர்படுகையில் உதவியவர்கள் வறுமையுற்றபோது உதவாது இருப்பவரிடத்தில் உள்ள செல்வமும் தானாகவே அழிந்துபோகும் தன்மையுடையன. இவர்களுடன், உறவினர்கள் வருந்த ஈட்டி வளர்த்த செல்வங்களைப் பெற்ற வினைமுயற்சி இல்லாதவனுடைய குடியினரிடத்திலும் உள்ள செல்வமும் முயற்சியற்ற மன்னனின் குடிகள் அழிவது போல் அழிந்து போகும் தன்மையுடையது (நெய்தற்கலி 32).

பொருளைப் போன்று நம் வாழ்நாளும் நிலையில்லாதது என்பதனைத் தோழி பொருள்வயற் பொருட்டு தலைவியைப் பிரிய எண்ணும் தலைவனிடத்தில் கூறுகிறாள். தோழியுடைய அக்கூற்று, செல்வம் தேடிப் பெற்று வரும் காலம் வரை இளமையும் இன்பம் நுகர் உணர்வும் யாருக்காகவும் காத்திருக்க மாட்டாதவை; நாள்தோறும் குறைந்து கொண்டேயிருப்பவை எனும் கருத்தை வலியுறுத்துகின்றது. மேலும், இவ்வுலகை விட்டு ஒருவர் மறைந்து போகும் இறுதிநாள் இந்நாள்தான் என அறிந்தவர் யாரும் உலகில் இல்லை. அது எந்நாளிலும் நிகழ்ந்துவிடும். இறப்பும் மூப்பும் உண்டு என்பதை மறந்தவர்கள் அறிவிலிகளே எனப் பாலைக்கலி 11 சுட்டுகிறது.

இளமை மட்டுமன்றி அதனுடன் கூடிய அழகும் வலிமையான உடலும்கூட நிலையற்றவை எனப் பகரும் கலித்தொகை (பாலைக்கலி 11,14,16), அவற்றைப் போல ஒருவரிடத்திலுள்ள வளமும் நிலையற்றதாக இருப்பினும், வளத்தைக் காட்டிலும் தாழ்ந்ததாக இளமையைச் சுட்டுகிறது. ஏனெனின், எக்காலத்திலும் வளமையை ஒருவரால் மீட்டுக் கொள்ள இயலும்; அவ்வண்ணம் இளமையை மீட்டுக் கொள்ள இயலாது (பாலைக்கலி 14,17). மேலும், மூப்பும் கூற்றும் ஒருவருக்கு வந்தே தீரும் என்பதால் இவ்வுலக வாழ்க்கையில் எதுவுமே நிலையானது இல்லை, காம உணர்வும் உட்பட (பாலைக்கலி 11).

உலகம் நிலையில்லாதபோது உலக வாழ்க்கை மாத்திரம் எப்படி நிலைத்திருக்கும் என நிலையாமையின் அடிப்படைக் காரணத்தை விளக்குகிறது கலித்தொகை. இதன் பொருட்டே, அகராதிகளில் மாயைக்குப் பொருள் கூறுமிடத்தில் உலகத்தைக் குறிப்பிட்டனர் சான்றோர். உலகத்தில் நிலையாக ஒருவர் பெறக்கூடிய புகழ் கூட நிலையற்ற உலகம் உள்ள வரையில்தான் என்பதன் வழி நிலையாமை குறித்த தெளிந்த தெளிவை ஏற்படுத்துகிறது கலித்தொகை (குறிஞ்சிக்கலி 18).

## இல்லறம் போற்றும் அறநெறி

கணவனும் மனைவியும் எந்நிலையிலும் இணைந்திருத்தலை அறமெனக் கூறுகிறது கலித்தொகை. குறிப்பாக, கொடுமை நிறைந்த காலத்தினிலே ஒருவரையொருவர் பிரியாதிருப்பதே அறமாம் (பாலைக்கலி 19). இல்லறத்தில் பேரின்ப வாழ்க்கையென்பது இணை பிரியாதிருத்தலே என்பதைக் கூறும் தலைவி, பிரியாதிருக்க வேண்டி வாழ்நாள் எல்லாம் தன் உடலின் ஒரு பாதியை ஒரு

கையால் மறைத்து, மறுபாதியை ஒரு கையால் பற்றிய சிற்றாடையால் மறைத்து வாழும் வறுமை நிலையிலும் வாழத் தயாராக இருப்பதாக தோழியின் வழி பொருள்வயற் பொருட்டு பிரிய எண்ணும் தலைவனிடத்தில் உரைக்கிறாள் (பாலைக்கலி 17,5). இவற்றையும் மீறிப் பிரிந்திருக்க நேரும் காலத்தில் ஊண், உறக்கமின்றி கைகளில் அணிந்துள்ள வளையல்கள் தாமாகவே கழன்று விழும் அளவிற்கு உடல் மெலிந்து, முகம் பொலிவிழந்து காணப்படுவாளாம் தலைவி (பாலைக்கலி 2,4). பசலை நோயிற்கும் ஆட்படுவாளாம் (பாலைக்கலி 6,15). இறுதியாக, கணவனின் பிரிவால் மீளாச் சோகத்திற்கு ஆட்படும் தலைவி உயிர் துறக்கவும் கூடும் எனக் கலித்தொகை இல்லற அறத்தைக் கூறி நிற்கிறது (பாலைக்கலி 2,3,4,6).

தலைவியைப் போன்ற பண்புடைய கற்புடைப் பெண்டிரே இல்லற அறம் செழிக்க ஆணிவேராகத் திகழ்கின்றனர். சமூகத்தில் மேன்மை நிறைந்தவர்களாக அத்தகைய பெண்களையே குறிப்பிடுகின்றது பாலைக்கலி 1. இவர்கள் கணவன் ஒருவனையே உயிர்த்துணையாகக் கருதியது மட்டுமன்றி, மாலையிட்டவனைத் தன்னுயிராகவும் கருதிப் போற்றும் பண்புடையவர்கள் (பாலைக்கலி 1,2,3). இவர்கள் பிற தெய்வங்களைத் தொழுவதைக் காட்டிலும் கணவனையே கண்கண்ட தெய்வமெனக் கருதி வணங்கும் குணமுடையவர்கள் (குறிஞ்சிக்கலி 3). மேலும், கிடைத்தற்கரிய பொருள் கிடைக்கப் பெற்றாலும் அறநெறிப்படி வாழ வேண்டும் எனும் எண்ணமுடைய கற்புடைப் பெண்டிர் மனத்தில் கொண்டவனைத் தவிர்த்து மாற்றான் ஒருவனுக்கு மாலையிடும் சூழல் ஒருபோதும் நிகழக்கூடாது என்று நினைப்பவராம் (முல்லைக்கலி 14).

விரும்பியவரையே மணந்து இல்லறத்தில் இணைந்த இணையர் விருந்தோம்பலைப் பேணாவிடில் இல்லற இன்பத்தை முழுமையாகப் பெற்றவராகார் என்பதும் கலித்தொகை சுட்டும் அறமாகத் திகழ்கிறது. செல்வத்தைக் காட்டிலும் போற்றுதலுக்குரியது விருந்தோம்பல் எனப் பாலைக்கலி 7 சுட்டுகிறது. பண்டைய தமிழர்கள் எத்தகைய சூழலிலும் விருந்தோம்பலைத் தவறாது கடைப் பிடித்துள்ளனர் என்பதனைப் பரத்தையருடன் கூடி வீடு திரும்பும் கணவன் தன்னுடன் விருந்தினரையும் அழைத்து வருவதன்கண் காணலாம். இவ்வாறு அழைத்து வருவதால் மனைவியானவள் அவனோடு ஊடல் கொள்ள முடியாது. வரும் விருந்தினர்களை வரவேற்பதிலும் உபசரிப்பதிலும் கவனம் கொண்டு கணவனின் செயலை மறந்து விடுவதாக அறியலாம் (மருதக்கலி 10). மேலும், செல்வம் மிகும் வீடுகளில் பலரும் உண்ணும் பொருட்டுச் சமைத்து வைத்து விருந்தினரை எதிர்பார்க்கும் சூழலும் இருந்துள்ளதை அறிய முடிகிறது (மருதக்கலி 18).

## பிற அறநெறிச் செய்திகள்

அறநெறிகளைப் பற்றுக்கோடாகக் கொண்டுள்ள பிற செய்திகளும் கலித்தொகைப் பாடல்களில் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன. அவ்வகையில், அறநெறிகளுக்கு எதிரான சிந்தை கொண்ட தீயவர்களால் நன்மை செய்பவர்களை ஒருகாலும் வீழ்த்த முடியாது. அங்ஙனமே தீவினையாளர் பரப்புகின்ற பழிச்சொற்கள் யாவும் நல்லோர் நிரம்பிய சபைதனிலே செவிசாய்க்கப்படா என நெய்தற்கலி 27 பாடுகிறது. மேலும், உற்ற காலத்தில் செய்த நன்றியினை மற(று)க்கும் போக்கும், ஒருவருக்கு ஒன்றை முடித்துத் தருவதாக வாக்குறுதியோ சத்தியமோ செய்து, பின் அதனை நிறைவேற்றாத போக்கும் அழிவையே தரும் எனவும் அறியப்படுகிறது (நெய்தற்கலி 32).

கலித்தொகைப் பாடல்களில் சுட்டப்பெறும் அனைத்து அறநெறிகளின் சாரமாகவும் அவற்றுக்கான பொருளுரை

*களையும் ஒரே பாடலில் இடம்பெறச் செய்துள்ளது நெய்தற்கலியின் 16ஆவது பாடல். ஆற்றுதல், போற்றுதல், பண்பு, அன்பு, அறிவு, செறிவு, நிறை, முறை, பொறை ஆகியன யாவை எனப் பொருளுரைக்கும் இப்பாடலே அறநெறிகளைக் குறித்து எழுந்துள்ள பிற கலித்தொகைப் பாடல்களுக்கெல்லாம் தலை.*

"...ஆற்றுதல் என்பதுஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்புஎனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்
அன்புஎனப் படுவது தன்கிளை செறாஅமை
அறிவுஎனப் படுவது பேதையார் சொல் நோன்றல்
செறிவுஎனப் படுவது கூறியது மறாஅமை
நிறைஎனப் படுவது மறைபிறர் அறியாமை
முறைஎனப் படுவது கண்ணோடாது உயிர்வெளவல்
பொறைஎனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்..."

*இப்பாடலின் வழி ஆற்றுதல் எனப்பட்டது வறுமையில் உழல்பவர்களுக்குத் தம்மால் இயன்றதைக் கொடுத்து உதவுவதையும், போற்றுதல் எனப்பட்டது கூடி மகிழ்ந்தவரைப் பிரியாதிருத்தலையும்; பண்பு எனப்பட்டது மக்கள் யாவரும் உலகத்தோடு ஒட்டி ஒழுகுதலையும், அன்பு எனப்பட்டது சுற்றத்தாருடன் இணைந்து வாழ்தலையும், அறிவு எனப்பட்டது அறிவற்றவர்கள் தம்மைப் பார்த்துப் பேசுகின்ற அவச்சொற்களைப் பொருட் படுத்தாமையையும், உறவு எனப்பட்டது கூறியது எதையும் எந்த நிலையிலும் மறவாதிருந்து அறத்தின் வழி நடப்பதையும், நிறை எனப்பட்டது மறைவாகக் காக்கப்பட வேண்டியவை அனைத்தையும் எந்த நிலையிலும் காத்துப் போற்றுதலையும், முறை எனப்பட்டது தவறு செய்தவர்கள் உறவினர்களாகவே இருந்தாலும் அவர்கள் செய்த தவறுகளைக் கண்டிப்பதையும், பொறை எனப்பட்டது தன்னை இழித்துரைப்பவர்களிடமும் சினம் கொள்ளாது பொறுமையுடன் இருத்தலையும் குறிக்கின்றது. அறநெறிக் கொத்தாக உள்ள இப்பாடல் ஒன்றே இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கத்தைப் பூர்த்தி செய்வதாக அமைந்துள்ளது.*

## முடிவுரை

*பொதுவில் அறக்கருத்துகளைத் தாங்கிய நீதிநூல்கள் பல தமிழ் இலக்கியங்களிலே உண்டென்றபோதிலும் அவற்றைச் சுவையுற எடுத்துரைப்பதில் கலித்தொகைக்கு நிகர் அதுவே. கலித்தொகையின் உவமை நயங்கள் தனிச்சிறப்பு வாய்ந்திருத்தலே அதற்குக் காரணமாகவும் அமைகிறது. கருத்துணர் உவமைகள், புலனுணர்வு உவமைகள் என 150 பாடல்களில் 641 உவமைகள் கொண்ட கலித்தொகையின் வழி பெறப்படும் அறநெறிச் சாரம் பிற நூல்களிலிருந்து பெறுபவற்றைக் காட்டிலும் சுவைமிகுந்ததாகவும் கற்பவர்க்குக் களிப்பூட்டுவதாகவும் அமைந்திருப்பதே தனிச்சிறப்பு.*

## Bibliography


Chupramandiyan, C. (1958). *Kalittogai*.

Kalittokai: Mûlamum teliyuraiyum (1987). Chennai: Manimegalai Publication.

Kalittokaic corpolivuka7. 1940 March 9, 10. Chennai: Kalittokai Conference.

Manikanar, A. (1999). Kalittokai: Mûlamum telivuraiyum. Chennai: Vartamanan Publication.

Manikanar. Va., Suba. (2009). Kalittokai: Mûlamum uraiyum. Chennai: Pumbugar Publication.

Murugan, V. (1999). *Kalittokai in English/translation with critical introduction and glossary* by V. Murugan, project director: G. John Samuel.

Partasarathy, N. (2000). Kalittokai, paripâdal kâtcikal. Chennai: Kalainjan Publication.

Pillai, C., D., (Ed.). (1887). *Page of Kalithogai*.

Rasamanikanar, M. (2011). Kalittokai. Chennai: Pumbugar Publication.

# மலேசிய நன்னெறிக் கல்வி போதனையில் வால்மீகி இராமாயணம்

## The Ramayana in the teaching of moral education in Malaysia

[1]பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன்
Professor Dr. M. Rajantheran
[2]ஆறுமுகம் சின்னசாமி
Arumugam Chinasamy

***Abstract***

Moral education can create a good ethical society. Globally; people are of the same opinion that moral education in academic curriculum can inculcate good citizens of respective Nations. Malaysian Government, taking this in mind has introduced a special moral education framework in the syllabus as compulsory to the students. This syllabus proposes seven moral education aspects. But teachers are given freedom to execute and impart moral education to the students based on this structure. Literature has its own role in hinting at morality to its readers. This Paper studies how the Epic Ramayana imparts morality to the society and also the worship of nature. Valmiki Ramayana has been chosen for this purpose. Also the Paper suggests how to carry out this moral education curriculum in teaching the students.

**Key Words:** Malaysian moral education, Valmiki Ramayana, Love for Nature, Forests, Water Resources.

### முன்னுரை

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே. (புறம்: 187)

என்பது பழந்தமிழரின் அரிய கருத்தாக உள்ளது. இதன் வழி நாடு, நகரம், ஊர், வசிப்பிடம் போன்றவை இயற்கையில் எத்தகையை நில அமைப்பைக் கொண்டிருந்தாலும் அந்நிலத்தின் இகழ், புகழ்ச்சிக்கு அவ்விடம் வாழும் மக்களே பொறுப்பாளிகள் ஆவர் எனும் செய்தி முன்வைக்கப்படுகின்றது. அவ்வகையில் நல்ல மனிதர்கள் வாழுமிடம் சிறப்புறும் என்பதாகவும், மாறாக இருப்பின் அது

---

[1] Dr. M. Rajantheran is a Professor in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. rajantheran@gmail.com
[2] Arumugam Chinasamy is a Ph.D research scholar at The Department of Indian Studies, University of Malaya. Aru3236@yahoo.com

*தாழ்வுறும் என்பதுவும் பெறப்படும். எனவே நாட்டுக்கு எது இருக்கிறதோ இல்லையோ, நல்ல பண்புடைய மக்கள் இருக்க வேண்டும். இது இருந்தால் பிறவற்றை எவ்வகையிலும் சீர் செய்து கொள்ளலாம் என்பதுவே பழந்தமிழரின் உயர்தனிச் சிந்தனையாக விளங்குகிறது.*

*இந்த உயர்தனிச் சிந்தனையானது உலக நாடுகளால் பெருவாரியாக ஏற்றுக் கொள்ளபட்டுவிட்ட ஒரு நியதியாகவே உள்ளது. நல்ல மனிதர்களை உருவாக்கும் பணியானது பள்ளிப்பருவம் தொட்டே தொடங்கப்படுவது சாலச் சிறந்ததாகும். மலேசிய நாட்டைப் பொருத்த வரையில் அதன் தேசியப் பாடத்திட்ட வரைவில் நன்னெறிப் பாடத்திட்ட வரைவு என்பது இந்த உயரிய நோக்கத்தை அடையும் வகையிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், இது 'நன்னடத்தையையும் ஒழுக்கத்தையும் பேணுதல்' எனும் மலேசிய நாட்டின் ஐந்தாவது தேசியக் கோட்பாட்டை நடைமுறைப்படுத்தும் வகையிலேயே செயல்படுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவு.*

## ஆய்வுச் சிக்கல்

*மலேசியப் பாடத்திட்டத்தின் நன்நெறிக் கலைத்திட்டமானது ஏழு முதன்மை நன்நெறிக் கூறுகளின் அடைப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த நன்னெறிப் பண்புகளைக் கற்றல் கற்பித்தலில் எந்த அடிப்படையில் எவ்வகைத் தரவுகளைக் கொண்டு விளக்கப்படுத்துவது எனும் குறிப்புகள் வழங்கப்படவில்லை. இதுவே இவ்வாய்வுக்கான அடிப்படைச் சிக்கலாக அமைகின்றது.*

*அடுத்த நிலையில் இந்நன்நெறிப் பண்புகளுக்கான கருத்துருவாக்கமும் கூடப் பாடத்திட்டத்தில் வழங்கப்படவில்லை. இது பிரிதொரு சிக்கலாகவும் கொள்ளப்படுகிறது. எனவே இந்தப் பாடத்தைப் போதிக்கின்ற ஆசிரியர்களுக்கு அடிப்படையில் கருத்துருவாக்கம் செய்வதுவும் தொடர்ந்து அக்கருத்துருவாக்கத்திற்குப் பொருத்தமான உதாரணங்களைக் கொண்டு நன்நெறிப் பண்புகளை மாணவர்களிடம் போதிப்பதிலும் சிக்கல் ஏற்படுகின்றது. இச்சிக்கல்கள் இவ்வாய்வின் சிக்கல்களாகக் கொள்ளப் படுகின்றன.*


## ஆய்வு வரையறை

*மலேசிய நன்நெறிக் கலைத்திட்டத்தில் மனித மேம்பாடு சார்ந்த பண்பு, குடும்பவியல் சார்ந்த பண்பு, இயற்கை சார்ந்த பண்பு, நாட்டுப்பற்று சார்ந்த பண்பு, மனித உரிமை சார்ந்த பண்பு, மக்களாட்சி சார்ந்த பண்பு, அமைதிசுபீட்சம் சார்ந்த பண்பு என ஏழு பண்புகள் முதன்மை நன்நெறிக் கூறுகளாக வகுக்கப்பட்டுள்ளன* (Sukatan Pelajaran Pendidikan Moral-Semakan. PPK, 2000, p.2). *தற்போதைய ஆய்வு, இதில் மூன்றாவதாக விளங்கும் இயற்கை சார்ந்த பண்பை மட்டுமே ஆய்வு செய்வதாக உள்ளது. இப்பண்பானது, மேலும் நான்கு உபபண்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது* (Sukatan Pelajaran Pendidikan Moral-Semakan, PPK, 2000: p.6 & 7).

*விளக்க வரைவுப்படம் 1: இயற்கை சார்ந்த நெறியும் அதன் உபபண்புகளும்*

*இந்நான்கு உபபண்புகளும் பல்வேறு நிலைகளில் இயற்கையைப் பாதுகாத்து நேசிக்கும் பண்பினை மாணவர்களிடம் மேலோங்கச் செய்யும் வண்ணம் பாடத்திட்டமாக வடிவமைக்கப்பட்டுள்ளன. மேலும், இந்த உபபண்புகள் ஒவ்வொன்றும் பரந்து விரிந்த ஆழ்நிலை ஆய்வுக்குரியனவாகும்.*

*எனவே சுருக்கம் கருதியும், ஆழ்நிலை ஆய்வு நிலையை முன்னிருத்தியும் இதன் முதல் உபபண்பாகிய இயற்கையை நேசித்தலும் போற்றுதலும் எனும் பண்பை மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. அதிலும் காடுகளைப் பாதுகாத்தல், இயற்கையைப் பாதுகாத்தல் எனும் இரண்டு கூறுகளின் அடிப்படையிலேயே இக்கட்டுரை வரையப்படுகின்றது.*




## ஆய்வு வடிவமைப்பு

இந்த ஆய்வு வடிவமைப்பானது முதலில் இயற்கை என்பதற்கும் இயற்கையை நேசித்துப் போற்றுதல் எனும் உப நன்நெறிப் பண்பிற்கும் கருத்துருவாக்கம் வழங்குகிறது. இதனைத் தொடர்ந்து இந்த ஆய்வுக்குப் பொருத்தமான தரவுகள் வால்மீகி இராமாயணத்தில் இருந்து அடையாளம் காணப்பட்டு முன்வைக்கப்படுகின்றன. அடுத்த நிலையில் இத்தரவுகள் யாவும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. இதன் நிறைவாகக் கட்டுரையின் ஒட்டுமொத்தக் கண்டுபிடிப்பானது முடிவுரையில் தொகுக்கப்படுகின்றது.

## இயற்கை

இயற்கை என்பது மனிதனால் படைக்கப்படாத அனைத்தையும் ஒருங்கக் குறிப்பதாகும் (Collin, 1998, p.62). இதில் உயிருள்ள (biotic), உயிரற்ற (abiotic) ஆகிய அனைத்தும் அடங்கும் (Allaby, 1979, p.183). மனிதனும் இயற்கையில் ஓர் அங்கம்தான். விண்வெளி மண்டலம், காற்றுவெளி மண்டலம், என இப்பிரபஞ்சம் முழுமையும் இயற்கையில் உள்ளடக்கம்தான் (Satpathy, 2005, p.115).

இயற்கையில் நிறைந்துள்ள நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் (பஞ்சபூதங்கள்), விலங்கினங்கள், பறவைகள், தாவரவர்க்கங்கள், காடு, மலை, கடல், ஏரி, குளம், நதி போன்ற நீர்நிலைகள் ஆகியன யாவும் மனித வாழ்வின் ஆதாரங்களாக விளங்குகின்றன (Withgott & Brennan, 2008, p.3). உயிர்களின் வளர் சிதைவு மாற்றங்களுக்கும், அவற்றின் வாழ்க்கைச் சங்கிலித் தொடர் பூமியில் நிலைபெறுவதற்கும் கூட இயற்கையே அடிப்படையாகின்றது (Anil Kumar De & Arnab Kumar De, 2004, p.4).

எனவே, இயற்கை என்பது, மனிதனால் படைக்கப்படாத, மனிதன் உட்பட அனைத்தையும் உட்படுத்தியதாகப் பொருள் கொள்ளலாம் (Saylan & Blumstein, 2011, p.2). இயற்கையில் உள்ள அனைத்துமே ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டும், ஒன்றினை ஒன்று சார்ந்தும் இயங்குகின்றன (Barboza, 2010:p.134) என்பதும் பெறப்படும்.

## இயற்கையை நேசித்துப் போற்றுதல்

இயற்கையை நேசித்துப் போற்றுதலாகிய பண்பானது இயற்கையைப் பாதுகாப்பதற்கு உரிய மனப்பண்பை மனிதர்களிடையே விதைக்கின்றது (Okorondu, 2008, p.138). ஒருவருக்கு ஒன்றன் மீது நேசம் தோன்றும் போது அதன் மீது அதீத கவனமும் அதனால் அதனைப் பாதுகாக்கும் உத்வேகமும் தோன்றும் (Souljah, 2011, p.412). இவ்வாறு பிறர் நலன் காக்கும் உயரிய பண்பானது இரக்க குணத்தைத் தோற்றுவித்து அனைத்து உயிர்களும் இன்புற்று வாழ வகை செய்யும் (Oord, 2010, p.15).

போற்றுதல் என்பது ஒன்றதன் தன்மையை இன்னதென்று அறிந்து

அதனால் விளையும் நன்மைகளை உணர்வதால் வெளிப்படும் பண்பாகும். போற்றுதல் எனும் பண்பின் மூலம் ஒன்றின் சிறப்பினை அறிதல், மதித்தல், அதற்கு அங்கீகாரம் அளித்தல், அதன் மூலம் சுபீட்சமான வாழ்விற்கு வழிவகுத்தல் போன்றவற்றிற்கு வழிவகை செய்யும் (Peterson & Seligman, 2004, p.537). ஒன்றனைப் போற்ற வேண்டும் எனும் எண்ணம் தோன்ற வேண்டுமாயின் முதலில் போற்றப்பட வேண்டியவற்றைப் பற்றிய அறிவுப் பூர்வமான, உணர்வுப்பூர்வமான தெளிந்த புரிதல் வேண்டும் (Cossart & Fish, 2013, p.242).

இராமாயணம், மகாபாரதம் போன்ற பெரிய இலக்கியங்கள் படைக்கப்பட்டதன் நோக்கங்களுள் இது போன்ற அரிய பண்புகளை நிலைநிறுத்துவதும் ஒன்றாகப் பார்க்கப்படுகின்றது. அந்த வகையில் இயற்கையை நேசித்துப் போற்றுதல் எனும் பண்பை ஒட்டி வால்மீகி இராமாயணம் முன்வைக்கும் செய்திகள் சிலவற்றைத் தொடர்ந்து காண்போம்.

## வால்மீகி இராமாயணம் காட்டும் இயற்கையை நேசித்துப் போற்றுதல் பண்பு

இராம காதையின் பெரும்பகுதியானது காட்டில் காட்டப்பட்டுள்ளதால் (வனவாசம்) காட்டு வளங்கள் எவ்வாறெல்லாம் பாதுகாக்கப்பட்டுள்ளன, அவற்றோடு நதிகள் உள்ளிட்ட நீர்நிலைகள், மலைகள் போன்ற இயற்கை வளங்கள் எவ்வாறெல்லாம் இராமாயண காலத்தில் வாழ்ந்த மக்களால் நேசித்துப் போற்றப்பட்டுள்ளன என்பதற்கான சூழல்கள் நிறைவாகவே வால்மீகி இராமாயணத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளன.

## காடுகளை நேசித்துப் போற்றுதல் (தரவு)

வால்மீகி இராமாயணத்தில் காடுகளை மக்கள் போற்றிப் பாதுகாத்துள்ளனர். மேலும், அவர்களின் வாழ்க்கையானது இயற்கையோடு இயைந்த வாழ்க்கையாக இருந்துள்ளமை அறியப்படுகின்றது. காடு பொதுவில் ஆபத்தான இடமாக இக்கால மக்களால் பார்க்கப்படுகின்ற நிலையில் இராமாயண காலத்தில் காடு என்பது புனிதம் மிக்கதாகவும் தவ வாழ்வுக்கு உகந்ததாகவும் மன ஒருமைக்கு வழி வகுப்பதாகவும் அமைதியின் இருப்பிடமாகவும் காட்டப் பட்டுள்ளது.

இராமன் வனவாசம் மேற்கொண்ட காலத்தில் அவ்விடத்தில் அகத்தியர் (RV-HPS, Vol.II ,p.31), மதங்க முனிவர் (RV-HPS, Vol.II, Pp.192-193), வசிஷ்டர் (RV-HPS, Vol.I ,p.102), விசுவாமித்திரர் (RV-HPS, Vol.I ,p.73), போன்ற மகரிஷிகளும் முனிவர்களும் காட்டையே தங்களின் வாழ்விடமாகக் கொண்டு வாழ்ந்த சூழ்நிலைகள் காட்டப்பட்டுள்ளன. மேலும் இவர்கள் இயற்கை வளங்கள் சிறிதும் பாதிக்காதவாறு அதனோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்திருந்தனர் என்பதுவும் வால்மீகி இராமாயணத்தின் வழி அறியப்படுகின்ற செய்தியாகும்.

அக்காலத்து மக்கள் மரங்கள் மனித வாழ்க்கையின் ஆதாரமாக விளங்குவதை உணர்ந்திருந்த காரணத்தால் அவற்றைப் பாதுக்கத் தலைப்பட்டனர். தவிர்க்கவே இயலாத சூழல்களில் கூட குறைந்தபட்ச பாதிப்பு மட்டுமே இயற்கைக்கு இருக்கின்ற வகையில்தான் செயல்பட்டிருக்கின்றனர். மகரிஷி வசிட்டர் வாழ்ந்த குடியிருப்பில் மர நடவு செய்திருக்கிறார் (RV-HPS, Vol.I, p.102). இவரைப் போலவே மதங்கமுனிவர் தமது குடியிருப்பில் மர நடவு செய்திருக்கின்றார். (RV-HPS, Vol.II ,p.192-193). ஏதாவது ஒரு சூழலில் (நாட்டை உருவாக்குதல், சாலைகளை ஏற்படுத்துதல், குடியிருப்புப் பகுதிகளை அமைத்தல்) மரங்களை அழிக்கும் நிலை ஏற்பட்டாலும் கூட அவர்கள் அதற்கு ஈடாக மீண்டும் மர நடவுகளைச் செய்திருக்கின்றனர். பரதன் வனவாசம் சென்ற தன் தமையன் இராமனைத் தேடித் தனது பரிவாரங்களுடன் கானகம் சென்ற போது தாம் செல்லும்

வழிகளில் பாதை அமைக்கும் பொருட்டு மரங்களை வெட்டிய போதும் அதற்கு ஈடாக மற்ற இடங்களில் மரங்களை நட்டுச் சென்றிருக்கின்றான் என்ற செய்தி இராமாயணத்தின் மூலம் அறியப்படுகின்றது (RV-HPS, Vol.I, p.333).

இதன் மூலம் இராமாயண காலத்தில் வாழ்ந்த மக்கள் காட்டு வளங்களையும் மரங்களையும் பாதுகாப்பதில் முனைப்புக் கொண்டிருந்தனர் என்பது அறியப்படுகின்றது. இது அவர்களின் சுபீட்சமான வாழ்க்கைக்கு ஆதாரமாகவும் இருந்துள்ளது. ஆனால் தற்காலத்தில் காட்டு வளங்கள் பெருமளவில் அழிக்கப்படுகின்றன என்பதையும், காட்டு வளங்களைப் பாதுகாக்க வேண்டும் எனும் உணர்வும் மக்களிடம் குறைந்துள்ளது என்பதனையும் மறுப்பதற்கில்லை.

பிற நாடுகளைப் போலவே மலேசியாவும் மேம்பாட்டு அவசியம் கருதி காடுகளின் ஒரு பகுதியை அழிக்க வேண்டிய நிர்பந்தத்திற்கு உள்ளாகியிருக்கிறது. தொடக்கத்தில் மலேசியாவில் *208,900* கிலோ மீட்டர் பரப்பளவிலான காடுகள் இருந்திருக்கின்றன (Fitzgerald, 2011, p.44). ஆனால் மலேசிய இயற்கை வளம், தண்ணீர் பயனீட்டுக் கழகத்தினர் (WECAM) தற்போது மலேசியாவின் காடுகள் பெருமளவில் அழிக்கப்படுள்ளதாகத் தங்களின் இதழில் குறிப்பிட்டுள்ளனர் (Generasi Pengguna, செப்டம்பர் *2015*, p.*10*).

இந்த இயக்கத்தினரின் கருத்தும் தகவலும் உண்மையே ஆகும். மலேசிய காட்டுவளத் துறை வெளியிட்டுள்ள *2015* ஆண்டிற்கான காட்டு நிலப்பரப்பு அளவையும் இதனையே உறுதி செய்கின்றது.

அட்டவணை *1:* மலேசியக் காடுகளின் நிலப்பரப்பு அளவு *(2011-2014).*

இது மிக மோசமான நிலை என்றால் அது மிகையில்லை. மேலும், மலேசியாவில் காடுகள் விவசாயம், மேம்பாடு போன்றவற்றிற்காக அழிக்கப்படும் போது அதற்கு ஈடாக மற்ற இடங்களில் புதிய காடுகள் உருவாக்கப்பட்டதற்கான தகவல்கள் ஏது இருப்பதாகத் தெரியவில்லை. இவ்வாறு காடுகள் அழிக்கப் படுவதானது மக்களுக்கும் நாட்டிற்கும் பல்வேறு பாதிப்புகளைக் கொண்டு வரும் என்பதை மறுப்பதற்கில்லை (Spradley & McCurdy, 2012, p.106).

மேலும், காடுகள் பெருமளவில் அழிக்கப்படுவதனால் மலேசிய நாட்டில் பல்வேறு இயற்கைச் சீற்றங்களும் அதிகரித்துள்ளதையும் இவ்விடம் சுட்டிக்காட்டுதல் அவசியமாகின்றது. காடுகள் பெருமளவில் அழிக்கப்படுவது நாட்டில் வெள்ளப் பிரச்சனை ஏற்படுவதற்கு வழிகோலியுள்ளது. கடந்த *2014, 2015* ஆகிய ஆண்டுகளில் மலேசியாவில் பல மாநிலங்கள் வெள்ளத்தால் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றன. அவற்றுள் ஜொகூர்,

| ஆண்டு | காடுகளின் நிலப்பரப்பு அளவு (ஹெக்டர் சதுரப்பரப்பளவு) | நிலப்பரப்பில் அழிக்கப்பட்ட காடுகளின் நில அளவு (ஹெக்டர் சதுரப்பரப்பளவு) |
|---|---|---|
| 2011 | 4390000 | - |
| 2012 | 4350000 | -40000 |
| 2013 | 4260000 | -90000 |
| 2014 | 4180000 | -80000 |

**மூலம்**: http://www.forestry.gov.my/jpsm/index.php/my)

| மாநிலம் | விகிதாச்சார அடிப்படையில் காடுகள் அழிக்கப்பட்ட புள்ளி விபரம் |
|---|---|
| கிளந்தான் | -15% |
| பகாங் | -16% |
| பேராக் | -12% |
| திரங்கானு | -12% |
| ஜொகூர் | > -10%* |

**மூலம்**: Global Forest Watch/Matt Hansen 2013.

பகாங், பேராக், திரங்கானு ஆகிய மாநிலங்கள் மிகுந்த வெள்ளப் பாதிப்பைச் சந்தித்தன. மேரிலாண்ட் பல்கலைக் கழகத்தைச் (University of Maryland's) சேர்ந்த ஆய்வாளர் மட் ஹன்சென் (Matt Hansen) என்பார் மேற்கொண்ட ஆய்வின் வழி மலேசியாவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இந்த நான்கு மாநிலங்களிலும் கடந்த **2001** ஆம் ஆண்டு முதல் ***2013***ஆம் ஆண்டு வரை பன்னிரண்டு ஆண்டுகளில் ***10%*** வரையில் காடுகள் அழிக்கப்பட்டுள்ளதாகவும், அவையே இந்த வெள்ளப் பிரச்சனைக்கு மூல காரணம் என்றும் குறிப்பிட்டுள்ளார் (Generasi Pengguna, செப்டம்பர் 2015, p.9 & 10).

*அட்டவணை 2: மலேசியாவில் காடுகள் அழிக்கப்பட்ட விகிதாச்சாரம்*

*மூலம்:* Global Forest Watch/Matt Hansen 2013.

இம்மாநிலங்களில் காடுகள் பெருமளவில் அழிக்கப்பட்டதனால் போதுமான நீர்த்தடங்கள் குறைந்து அதுவே பின்னர் வெள்ளப் பேரிடர் நிகழ்வதற்குக் காரணமாகவும் அமைந்ததாக ஆய்வுகள் காட்டுகின்றன (Generasi Pengguna, செப்டம்பர் ***2015***, p.*10*). இத்தகைய நிலைப்பாடானது மக்களிடையே காடுகளைப் பாதுகாத்தல் குறித்த விழிப்புணர்வு இல்லாமையால் தோன்றியதுவே ஆகும்.

காடுகள் பெருமளவில் அழிக்கப் படுவதனால் ஏற்படும் எதிர்கால எதிர்மறை விளைவுகளைச் சற்றும் எண்ணிப் பாராமல் மேம்பாட்டை மட்டுமே கருத்தில் கொண்டு மனிதன் சுயநலமாக நடந்து கொண்டதனால் விளைந்த விளைவுதான் இவ்வெள்ளப் பேரிடர்கள். மேலும் மேம்பாட்டை முன்னிருத்திக் காடுகளை அழிக்கும் போது அதனை மிகக் குறைந்த அளவில் செயல்படுத்துதல் அல்லது மீண்டும் மர நடவு செய்தல் போன்ற உபாயங்களைக் கையாண்டிருந்தாலும் இத்தகைய விளைவுகளைத் தடுத்திருக்கலாம்.

இராமாயணத்தில் மரங்கள் தவிர்க்க இயலாத நிலையில் வெட்டப்பட்ட போதும் அதற்குப் பரிகாரம் காணும் வகையில் பரதன் புதிய மரங்களை நட்டான் என்பதை முன்னமே கண்டோம் (RV-HPS, Vol.I ,p.333). இவ்விடம், பரதன் அயோத்தியின் ஆட்சியாளன் என்பதை மனதில் கொள்ள வேண்டும். அவன் மீண்டும் மரங்களை நடாவிட்டாலும் அவனை எதிர்த்துக் கேட்க அதிகாரம் உடையவர் யாரும் இல்லை. ஆயினும் கூட இயற்கையை நேசித்துப் போற்றும் பண்பு பரதனிடத்தில் இயற்கையாகவே இருந்ததனால்தான் அவன் மீண்டும் மரங்களை நடவு செய்திருக்கின்றான். மேலும் இயற்கையோடு எதிர்மறையான செயல்களைப் புரிவதுவும் பாதகமான விளைவை உண்டாக்கும் என்பதனையும் அது போன்ற பாதகங்களை மனிதர்களால் தாங்கிக் கொள்ள முடியாது என்பதையும் உணர்ந்திருக்க வேண்டும் என்றும் எண்ணத் தோன்றுகிறது. பரதனின் இப்பண்பையே இப்போதைய மக்கள் தங்கள் வாழ்க்கையில் கடைபிடித்தல் வேண்டும். இயற்கையை எவ்வாறு நேசிக்க வேண்டும் எனும் பாடத்தைத் தற்கால மக்கள்

இராமாயணத்தில் இருந்து கற்றுக் கொண்டால் இத்தகைய பேரிடர்களுக்கு நாமே வழிவகுக்காமல் இருக்கலாம் என்பதை மாணவர்களின் மனதில் ஆழப் பதியச் செய்யலாம்.

காடுகள் அழிக்கப்படுவதனால் வெள்ளப் பெருக்கு போன்ற பேரிடர்கள் ஏற்படுவது மட்டுமன்றி ஆரோக்கியமான தூய காற்று கூடக் குறைந்து போகும். குடி நீரையே தற்காலத்தில் பணம் கொடுத்து வாங்கும் அவல நிலையைப் போல எதிர்காலத்தில் பிராணவாயுவைக் கூட அன்றாடத் தேவைக்கு ஏற்பப் பணம் கொடுத்து வாங்கக் கூடிய நிலையும் உருவாகக் கூடும். மரங்களும் தாவரங்களுமே பிராணவாயு உற்பத்திக்கு மூலமாக விளங்குகின்றன. உயிர்கள் வாழ்வதற்குப் பிராணவாயுவே அடிப்படை. ஆகவே தூய பிராணவாயு கிடைப்பதற்காகக் காடுகளை பாதுகாத்தல் வேண்டும் எனும் விழிப்புணர்வு மக்களிடம் தோன்ற வேண்டும் (Sequin, M, 2012, p.20). அடிப்படையில் காடுகள் அழிக்கப் படுவதனால் (Fitzgerald, 2011: p.38-39):-

i. அரிதான தாவரவகைகளும் (மூலிகைகள் உட்பட) விலங்கினங்களும் அழிவுறுதல்

ii. இயற்கை மூலங்களும் உணவு உற்பத்தியும் சிதைவுறுதல்

iii. உலகம் வெப்பமயமாதல்

போன்ற மூன்று மிகப்பெரிய பிரச்சனைகள் உருவாகின்றன. இத்தகைய பிரச்சனைகள் யாவுமே உலக அழிவிற்கும் மனித சமுதாயத்தின் வீழ்ச்சிக்கும் வழிவகுக்கும் என்பதை மனித சமுதாயம் உள்வாங்க வேண்டும்.

அழகிய காடுகள் அமைதியின் பிறப்பிடம் எனும் செய்தியையும் வால்மீகி இராமாயணம் முன்வைக்கிறது. வால்மீகி இராமாயணத்தில் கங்கை நதிக் கரை (RV-HPS, Vol.I, p.73), சித்திரக் கூடம் (RV-HPS, Vol.I, p.284) போன்ற இடங்களில் காணப்பெற்ற வளமான அடர்ந்த காடுகளைப் பற்றியும், அயோத்தி (RV-HPS, Vol.I ,p.173), இலங்கை (RV-HPS, Vol.II ,p.372) போன்ற நகர்களில் அமையப்பெற்றிருந்த அழகிய தோட்டங்களைப் பற்றியும் சிறப்பான வர்ணனைகள் காணப்படுகின்றன. இவை அனைத்தும் அக்கால மக்கள் எவ்வாறு இயற்கையை நேசித்துப் போற்றினர் என்பதற்குத் தகுந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. மேலும் இராமாயணத்தில் இடம் பெற்றுள்ள ஒரு காட்சியில் இராமன் சித்திரக்கூடக் காடுகளின் அழகானது தம்மை அயோத்தியையே மறக்கச் செய்ததாகக் குறிப்பு வருகின்றது (RV-HPS, Vol.I ,p.359). இராமனை அயோத்தியையே மறக்கச் செய்கிறது எனும் கூற்றில் அவன் மனதில் அவனது தாய், தந்தை, உற்றம், சுற்றம், நண்பர், மக்கள், அரண்மனை அளிக்கும் சுகபோக வாழ்க்கை அனைத்தையும் விட்டுப் பிரிந்து வந்த மனக் காயத்தைக் காடுகள் மறக்கச் செய்துள்ளதாகப் பொருள் கொள்ள இடமுண்டு. இப்பார்வையானது காடுகள் மனிதனுக்கு எத்தகைய பெருங்கொடை என்பதை உணர வைக்கின்றது. இந்த உண்மையை மாணவர்கள் மனதில் இராமாயணக் கதையின் துணையுடன் விளைபயன் மிக்க முறையில் போதித்தால், காடுகளின் மீது அவர்கள் கொண்டுள்ள தவறான கருத்துகள் நீக்கப்பட்டு, காடுகளின் பயன் உணர்ந்து அது மனித குலத்திற்குப் பெரும் சொத்து எனும் எண்ணத்தை அவர்களிடையே மேலோங்கச் செய்து எதிர்காலத்தில் அவற்றைக் காக்க வேண்டிய நடைமுறைப் பணிகளில் அவர்களை முழுமனதோடு ஈடுபடச் செய்ய முடியும்.

## நீர்நிலை போன்ற இயற்கை வளத்தை நேசித்துப் போற்றுதல்

காடுகளைப் போலவே நீர்நிலைகளும் மனித வாழ்க்கைக்கு ஆதாரமாகவே விளங்குகின்றன. வள்ளுவர் “நீரின்று அமையாது உலகு” *(குறள்: 20)* எனப் பாடியிருப்பது இவ்விடம் நீரின்

| நிலை | 1995 | | 1999 | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை (நதி) | விகிதாச்சரம் (%) | எண்ணிக்கை (நதி) | விகிதாச்சாரம் (%) |
| அதிகத் தூய்மைக்கேடு | 14 | 12.2 | 13 | 10.8 |
| சிறிய அளவிளான தூய்மைக்கேடு | 53 | 46.1 | 75 | 62.5 |
| தூய்மை | 48 | 41.7 | 32 | 26.7 |
| ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மொத்த நதிகள் | 115 | 100 | 120 | 100 |

முக்கியத்துவத்தைக் குறிப்பதாகவே அமைகின்றது. இத்தகைய தண்ணீருக்கு ஆதாரமாக விளங்குகின்ற ஆறு, நதி, குளம், ஏரி, அருவி, கடல் போன்ற நீர்நிலைகளையும் பாதுகாக்க மனிதன் கடமைப்பட்டவனாகின்றான். ஆனால் நாகரீகம், தொழில்நுட்பம், அறிவியல், நவீனத்துவம் போன்றவற்றிற்கு அளிக்கும் முக்கியத்துவத்தைத் தற்கால மனிதன் இந்தகைய நீர்நிலைகளைப் பாதுகாபாப்பதற்குப் போதுமான கவனம் செலுத்தவில்லை என்பதுவே வருத்தத்திற்குரிய செய்தியாக இருக்கிறது.

வால்மீகி இராமாயணம் இத்தகைய நீர்நிலைகள் அக்கால மனிதர்களால் எவ்வாறு போற்றிப் பாதுகாக்கப்பட்டன என்பதை மிகத் தெளிவாகவே எடுத்துரைக்கின்றது. வால்மீகி இராமாயணத்தில் கங்கை நதியானது மிகத் தூய்மையாகவும் அழகாகவும் இருந்ததாகக் குறிப்பிடுகின்றது (RV-HPS, Vol.1, p.9). கங்கை நதியில் அன்னப்பட்சிகள் விளையாடி மகிழ்ந்த காட்சிகள் சித்தரிக்கப்பட்டுள்ளன (RV-HPS, Vol.1, p.73). அது போலவே யமுனை நதியும் அழகின் பிறப்பிடமாக விளங்கியதாகக் காட்டுகின்றது வால்மீகி இராமாயணம் (RV-HPS, Vol.1, p.282). இந்நதிகளின் எழில் கொஞ்சும் அழகை இராமனும் சீதையும் பல இடங்களில் வர்ணிப்பதாக வால்மீகி இராமாயணம் சித்தரிக்கின்றது.

ஆனால் தற்கால வாழ்க்கையிலோ நதிகளின் நிலையானது மிகுந்த தூய்மைக் கேட்டினால் அவலமுற்றிருக்கிறது என்பதாகக் கூறப்படுகின்றது (Dipiazza, 2006, p.17). உலக ரீதியில் காடுகள் அழிக்கப் படுவதனாலும், தொழிற்சாலைகள், குடியிருப்புகள் போன்றவற்றின் கழிவுப் பொருள்கள் நீர்நிலைகளில் கலக்கப் படுவதனாலும் உலகின் முக்கிய நதிகள் (சீனாவின் மஞ்சள் ஆறு, இந்தியாவின் கங்கையமுனை ஆறுகள், அர்ஜெண்டினாவின் மதன்சா ரியகுலோ ஆறு, வங்காளதேசத்தின் புரிகங்கா ஆறு, பிலிபினாவின் மரினவோ ஆறு, இத்தாலிய சர்னோ ஆறு, அமெரிக்காவின் மிசிசிப்பி ஆறு, ஜாவாவின் சித்தாரும் ஆறு, பிரேசிலில் டோசேல் ஆறு) (listovative.com/top-15-most-polluted-rivers-in-the-world) பலவும் கடுமையான நீர்த்தூய்மைக் கேட்டுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என்பது கவனத்தில் கொள்ளத் தக்கது.

மலேசியாவிலும் கூட நீர்த்தூய்மைக் கேடு அதிகரித்துக் கொண்டே போகின்றது (Abdul, 2013, p.236). அதன் குறியீட்டினை அட்டவணை 4இல் காண்க.

அட்டவணை 4: மலேசியாவில் உள்ள நதிகளின் நீர்த்தூய்மை குறியீடு *(1995–1999)*

மூலம்: https://sssums.files.wordpress.com/2007/09/suatu-tinjauan-terhadap-isu-pencemaran-sungai-di-msia.pdf

மேற்கண்ட அட்டவணையானது மலேசியாவில் நீர்த்தூய்மைக்கேடானாது *10* விகிதாச்சாரத்திற்கும் மேலாகவே உள்ளதைக் காட்டுகிறது. இது மிகவும் வருந்தத்தக்க நிலையாகும். இந்நிலை மேலும் மோசமாவதாகவே ஆய்வுகளும் காட்டுகின்றன. இதற்கு ஆதாரமாக மலேசிய உள்நாட்டு நாளிதழ் ஒன்றிற்கு மலேசிய இயற்கைவளம் சுற்றுச் சூழல் அமைச்சர் டத்தோ டாக்டர் வான் ஜுனைடி துவான்கு ஜபார் (Datuk Dr. Wan Junaidi Tuanku Jaafar) வழங்கிய செய்தியில் மலேசியாவில் *43* நதிகள் மிக மோசமான தூய்மைக் கேட்டில் இருப்பதாகக் தெரிவித்துள்ளார் (Berita Harian, 9/11/2016).

இராமாயணத்தில் காட்டப்பட்ட கங்கை, யமுனை போன்ற புண்ணிய நதிகளும் கூட இன்று இராமாயணத்தில் காட்டப்பட்டது போல இல்லை. அவையும் மனிதனின் அலட்சியப் போக்கினால் தூய்மையற்றுக் கிடக்கின்றன (Salman & Uprety, 2002, p.182). இந்தியப் பாரம்பரியமானது நதிகளைத் தாயாகவும், தெய்வங்களாகவுமே போற்றுகின்றது. அதனால்தான் பிரம்மபுத்திரா தவிர்த்த மற்ற புண்ணிய நதிகள் யாவும் கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, சிந்து, நர்மதை, காவேரி எனப் பெண் தெய்வங்களாகப் போற்றப்படுகின்றன. பாவம் போக்கும் புண்ணிய நதிகளாகவும் விளங்குகின்றன (Haberman, 2006, Pp.38-39). ஆனால் அவற்றையே மாசுபடுத்தும் மனிதனின் செயலானது எத்தகைய பாவத்தையும் மனித சமுதாயத்தை அவல நிலைக்குக் கொண்டு செல்லும் என்பதையும் உணரவில்லை.

மனிதன் நீரின்றி வாழ இயலாது. குடிப்பதற்கும் குளிப்பதற்கும் மற்ற தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கும் நீரே பிரதானம். அந்த நீர் தூய்மைக் கேடு அடைந்தால் அது மனித சமூகத்தில் மிகக் கொடுமையான நோய்களைக் கொண்டு வந்து சேர்த்து விடும் (Berthold-bond, 2005, p.201). மக்களின் சுகாதார வாழ்க்கையைச் சீரழித்துவிடும். அதுமட்டுமன்றி நீரில் வாழும் மீன்கள் உள்ளிட்ட பல வகையான உயிரினங்களையும் அழித்துவிடும். அதனால் மனிதனின் உணவுப் பண்டங்களில் ஒரு பகுதியாக விளங்கும் நீர்வாழ் உயிரினங்களும் கிடைப்பது அரிதாகிவிடும் (Sell, 1992, p.16). அதோடு மற்ற உயிர் வாழ்வனவாகிய விலங்குகள், பறவைகள் போன்றவற்றின் வாழ்வாதாரத்தையும் சிதைத்து அவற்றினிடையேயும் பேரழிவைத் தோற்றுவித்துவிடும் (Singh, 2008, p.444). இவை அனைத்திற்கும் மூல காரணமாக அமைவது நீர் நிலைகளின் தூய்மையைப் பேணாத மனிதனின் அலட்சிய / சுயநலப் போக்கே ஆகும்.

இதனைக் கருத்தில் கொண்டு இராமாயணம் காட்டும் வழியில் மனிதன் நீர்நிலைகளை நேசித்துப் போற்றக் கற்றுக் கொண்டால் அது உலக உயிர்கள் அனைத்திற்கும் நன்மை பயப்பதாக அமையும் என்பது உறுதி. இதனைப் பிள்ளைப் பருவத்திலேயே மாணவர்கள் மனதில் ஆழப் பதியச் செய்வதுதான் விளைபயன் மிக்க செயலாக இருக்க முடியும்.

## முடிவுரை

காடுகளை நேசித்துப் போற்றுதல், நீர்நிலைகளை நேசித்துப் போற்றுதல் எனும் இரண்டு நன்நெறிப் பண்புகளை விளக்குவதற்கு வால்மீகி இராமாயணத்திலிருந்து பெறப்பட்ட சில செய்திகளைக் கொண்டு மதிப்பீடு செய்யுங்கால், இராமாயண காலத்து மக்களைக் காட்டிலும் தற்கால மக்கள் இயற்கையைப் பாதுகாக்கும் உணர்வு மிகக் குறைந்த நிலையில்தான் இருப்பதாகத் தெரிகிறது. மலேசியாவைப் பொருத்த வரையில் இந்நிலையைச் சீர் செய்வதற்கு மலேசிய அரசாங்கம் வடிவமைத்துள்ள நன்நெறிப்பாடக் கலைத்திட்டத்தில் உள்ள நன்நெறிக் கூறுகளை இராமாயணம் முதலான இந்திய இலக்கிய பாரம்பரியத்தின்

துணை கொண்டு போதிப்பதால் நல்ல விளைபயன் ஏற்படும். இல்லையாகில் மதிப்பெண்கள் பெறுவதற்காக மட்டுமே படித்துப் பின்னர் புறம் தள்ளும் பாடமாக நன்னெறிப் பாடம் ஆகிவிடும். இதனை உணர்ந்து ஆசிரியர்களும், கல்வியாளர்களும் இந்தியப் பாரம்பரிய இலக்கியச் செல்வங்களை கற்றல் கற்பித்தலில் சாத்தியமான இடங்களில் எல்லாம் பொருத்தமான வகையில் சேர்த்துக் கொள்வார்களேயாயின் எதிர்காலப் பிள்ளைகள் இயற்கையை நேசித்துப் போற்றும் நன்மக்களாகத் திகழ்வர்.

## Bibliography


Abdul, R. A. (2013). “Environment policy and governance” dalam Public management and governance in Malaysia: Transformations and trends.(ed). Noore, A. S. pp. 235-253. London: Routledge.

Allaby, M. (1979). Dictionary of Environment. London: Macmillon Press.

Barboza, J. (2010). The environment, risk and liability in international law. Laiden: Martinus Nijhoff.

Barraclough,S.L., & Ghimire, K.B. (2013). *Agricultural Expansion and Tropical Deforestation: International Trade, Poverty and Land Use*. London: Earthscan

Berthhold-Bond, A. (2005). *Home Enlightnment: practicle, earth-friendly advice for creating a nutring, healthly and toxin-free home and lifestyle*. Emaus Pa: Rodale.

Cao, B. (2015). *Environment and citizenship*. London: Routledge Taylor & Francis Group.

Collin, P.H. (1988). *Dictionary of Ecology and the Environment*. Middlesex: Peter Collin

Cossort, L., D., & Fish, D. (2013). *Cultivating a thinking surgeon: New perspectives on clinical teaching, learning and assessment.* Castle Hill Barns, Harley (UK): tfm Publishing Ltd.

De, A.,K., & De, A.K. (2004). *Environment Education*. New Delhi: New Age International (P) Ltd.

Di, Piazza, F. (2006). *Malaysia in pictures. Minneapolis*, MN: Twenty-First Century Books.

Fitzgerald, S. (2011) *Hutan Terpencil*. Kuala Lumpur: Institut Terjemahan Negara Malaysia.

Fleming, M. (2003). *Thinking about God and morality*. Oxford: Heinemann Educational. *Generasi Pengguna.*

Haberman, D., L. (2006). *River of love in an age of pollution: The Yamuna River of Northern India*. Berkeley Calif: University of California Press.

*Huraian Sukatan Pendidikan Moral*, (2003). Putra Jaya, Malaysia: Pusat Perkembangan Kurikulum, Kementerian Pendidikan Malaysia.

Noriah, M., & Darwis, H. (2016). *Mutiara Budi*. Batu Caves: PTS Publications & Distributors Sdn. Bhd.

Okorondu, C.,C. (2008). *Discover the secret of true love*. New York: i Universe, Inc.

Oord, T., J. (2010). *Defining love: A philosophical, scientific, and theological engagement*. Michigan: Brazos Press.

Peterson, C., & Seligman, M. E. P. (2004). *Character strengths and virtues: A handbook and classification*. New York: Oxford University Press & American Psychological Association.

Post, S.,G. (2003). *Unlimited love: Altruism, compassion, and service*. Philadelphia: Templeton Foundation Press.

Raghavan, V. (1975) *The Ramayana in Greater India*. Surat: South Gujarat University.

Rajantheran Muniandy. (1995). *Hikayat Seri Rama Perbandingan Versi Melayu Sanskrit dan Tamil*. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

Roberts, M.,B.,V. (1986). *Biology: A Functional Approach. Cheltenham, UK*. Thomas Nelson & Sons Ltd.

Salman, S.,M,A., &Uprety, K. (2002). *Conflict and cooperation on South Asia's international rivers: A legal perspective*. Washington, D.C: World Bank.

Satpathy,I. (2005). Environment Management. New Delhi: Excel Books.

Saylan,C., & Blumstein, D.,T. (2011). *The failure of environmental education (and how we can fix it).* Berkeley: University of California Press.

Sell,N.,J. (1992). *Industrial Pollution control: Issues and Techniques*. New York: John Wiley & Sons.

Sequin, M. (2012). *Chemistry of plants*. San Francisco: RSC.

Shastri, H.P. (1952). *The Ramayana of Valmiki* (translated). Vol. I & II London: Shanti Sadan.

Singh,A.K (2008). *Science & Technology for Upsc*. New Delhi: Tata McGraw-Hill.

Souljah,S. (2011). *Midnight and the meaning of love*. New York: Atria books.

Spradley,J.,P & McCurdy,D.,W. (2012). *Conformity and conflict: Readings in cultural anthropology*. N.J:Pearson.

*Sukatan Pendidikan Moral-Semakan*. (2000). Putra Jaya: Pusat Perkembangan Kurikulum KPM.

Thiruvalluvar. *Thirukural*.

Uberoi, N.,K. (2003). *Environmental management*. New Delhi: Excel Books.

Withgott, J. & Brennan, S. (2008). *Environment: The science behind the stories*. (3rd ed). San Francisco: Pearson Education, Inc.

http://www.forestry.gov.my/jpsm/index.php/my

https://sssums.files.wordpress.com/2007/09/suatu-tinjauan-terhadap-isu-pencemaran-sungai-di- msia

# மலேசியத் தமிழரிடையே குலதெய்வ வழிபாடு : தோற்றமும் தொடர்ச்சியும்

## Origin and the Development of Family Deity Worship Among Malaysian Tamils


[1]முனைவர் மணிமாறன் சுப்பிரமணியம்
Dr.Manimaran Subramaniam
[2]கோவி.சிவபாலன்
G.Sivapalan
[3]பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன்
Professor Dr.M.Rajantheran



***Abstract***

This Paper explores the family deity worship, convention, religious background of Malaysian Tamils, background of family deity worship in Malaysia, reason for the worship, the method of worship, the problems and challenges faced by Malaysian Tamils in relation with worship, which are common in Malaysian Tamil religious worship. The field work for this Paper was based on Malaysia's Selangor state and Kuala Lumpur Federal Territory. Data for this Paper is also obtained via library research, interview and field research. Qualitative research is used for this article analysis. Based on the above analysis method, this Paper is written in a descriptive mode. Through this article, the study identified some end results. The research identified that the origin of worship of the folk deity of Malaysian Tamil is the convention on the ancient Tamil. Since the day of immigrant Tamils to Malaya, their optimism has associated with their life till to date. The underlying cause of the family deity worship is for the search of protection. The worship of family deity has been essentially unchanged from the conventional method. Nevertheless, as the time passes, the



[1] Dr.Manimaran Subramaniam is a Senior Lecturer in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia.Manimaran_um@yahoo.com

[2] G.Sivapalan is a Senior Lecturer in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia.gsivapalan@hotmail.com

[3] Professor Dr.M.Rajantheran is a Professor in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. rajantheran@gmail.com

change in economic condition and context of life brought in various extensions to family deity worship. Following this, the family structured worship methods started to accept the methods of agamic. The change of residence and the condition to live together with multi-ethnic society led to various problems. These problems require the involvement of the police, Municipal and also legal proceedings. However, because Malaysian Tamils perceived the problems, the worship of folk family is being continued without any flaws.

**Keywords:** Malaysian Tamils, Tamils belief system, Malaysian Hindus, Tamil folk deities, domestic shrine.

## முன்னுரை

மலேசியத் தமிழர்களின் சமய அடையாளமாகத் திகழ்பவை இந்து ஆலயங்கள். இவ்வாலயங்கள் மலேசியத் தமிழர்களின் சமயச் சடங்குகளும் விழாக்களும் சமயம் சார்ந்த பிற நிகழ்வுகளும் நடைபெறும் மையமாகச் செயல்பட்டு வருகின்றன. இந்து சமயத்தின் வழிபாட்டுத் தளமான இவ்வாலயங்கள் யாவும் மலேசியத் தமிழர்களின் வாழ்க்கையில் மிக முக்கியப் பங்காற்றுகின்றன. இம்மலையகத்தில், இந்து சமயம் வேரூன்றிய காலம் தொட்டுப் பல்வேறு ஆட்சி மாற்றங்களின்போதும் ஆங்கிலேய காலனித்துவ ஆட்சியின்போதும் புலம்பெயர்ந்த தமிழர்களின் முயற்சியால் பல்வேறு இடங்களில் ஆலயங்களும் சமய இயக்கங்களும் தோற்றம் கண்டன. நாட்டின் விடுதலைக்குப் பிறகு, பல்வேறு சமய, இன நல்லிணக்கங்களின் வழி இந்து சமயம் இந்நாட்டில் 80% சதவிகிதத்திற்கும் மேற்பட்ட தமிழர்களால் பின்பற்றப்பட்டு வருகிறது. மலேசியத் தமிழர்களின் சமய வழிபாடானது மரபு முறையிலான வழிபாட்டையும் (little tradition/folk religion) ஆகம முறையிலான வழிபாட்டையும் (great tradition/text religion) அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. மேற்கண்ட இவ்வழிபாடுகள் ஆலயங்களிலும் இல்லங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## கட்டுரையின் நோக்கம்

மலேசியத் தமிழர்களிடையே காணப்படும் சமய வழிபாட்டில் பரவலாக இடம்பெற்று வரும் குலதெய்வ வழிபாட்டின் மரபையும், மலேசியத் தமிழர்களின் சமயப் பின்புலத்தையும், மலேசியாவில் குலதெய்வ வழிபாட்டின் பின்புலத்தையும், இவ்வழிபாட்டுக்கான காரணங்களையும், வழிபாடு மேற்கொள்ளப்படும் முறையையும், இவ்வழிபாட்டின் தொடர்பில் மலேசியத் தமிழர்கள் எதிர் நோக்கும் சிக்கல்களையும் சவால்களையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

## ஆய்வு நெறி

இக்கட்டுரைக்கான களப்பணிகள் மலேசியாவின் சிலாங்கூர் மாநிலம், கோலாலும்பூர் கூட்டரசுப் பிரதேசம் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டன. இக்கட்டுரைக்கான ஆய்வு பண்புசார் (qualitative) அணுகுமுறையில் மேற்கொள்ளப் பட்டுள்ளது. கட்டுரைக்கான தரவுகள் நூலக ஆய்வு வழியாகவும், நேர்காணல் மற்றும் கள ஆய்வு வாயிலாகவும் பெறப்பட்டன. மேற்கண்ட ஆய்வு நெறியை அடிப்படையாகக் கொண்டு விளக்கப்படுத்தல் (descriptive) முறையில் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

## தமிழர் மரபில் குலதெய்வ வழிபாடு

தமிழர் மரபில் குலதெய்வ வழிபாடு தொன்று தொட்டு இருந்து வருவதை சங்கப் பாடல்கள் தொடங்கி ஏனைய பழந்தமிழ்

இலக்கியங்களும் சாற்றுகின்றன. இக்குலதெய்வ நம்பிக்கை பழந்தமிழர் வாழ்க்கையில் காவலை மையமாகக் கொண்டு அமைந்திருந்தது. இக்குலதெய்வமானது காவல் தெய்வம், இல்லுறை தெய்வம், நாட்டுப்புற தெய்வம் எனப் பல்வேறு பெயர்களால் குறிப்பிடப் பெறுகின்றது. குலதெய்வம் குறிப்பிட்ட குலத்தவர்களின் வாழ்வியல் நலனில் அக்கறை கொள்வதாகப் பண்டைய தமிழர்கள் நம்பினர்.

இக்குலதெய்வங்களின் தோற்றம் பல்வேறு காரணங்களைக் கொண்டு அமைந்துள்ளது. சங்கத் தமிழரின் வாழ்வில் வழிபடப்பட்ட ஐந்திணைத் தெய்வங்கள் அவ்வத் திணைக்குரியவருக்கு குலதெய்வங்களாகவே அமைந்திருந்தன. இதுவேயன்றி முன்னொரு காலத்தில் மனிதர்களாக வாழ்ந்து ஏதேனும் ஒரு குடும்ப, சமூகக் காரணத்தினால் இறந்தவர்களும் ஊரைக் காக்க உயிர் துறந்தவர்களும் குலதெய்வமாகக் கருதப்பட்டிருக்கின்றார்கள். மேலும் பயணத்தின்போது எதிர்ப்பட்டு உடன்வந்த தெய்வங்களும் சமாதி நிலையடைந்தவர்களும் குலதெய்வமாக வழிபடப்படுகின்ற வழக்கைத் தமிழர் மரபில் காணமுடிகின்றது. இக்குலதெய்வங்கள் பொதுநிலையில் நாட்டுப்புறத் தெய்வங்களெனவும் கிராமத் தெய்வங்களெனவும் காவல் தெய்வங்களெனவும் வழங்கப்பெறுகின்றன.

தொடக்ககாலத் தெய்வ வழிபாட்டிடங்கள் இயற்கைச் சூழலைக் கொண்டும் இயற்கை சார்ந்த பொருட்களைக் கொண்டும் அமைந்திருந்தன. மனித பரிணாம வளர்ச்சிக்குப் பிறகு நடுகல் வழிபாட்டில் ஏற்பட்ட உருவத் தோற்றத் தாக்கம் தெய்வங்களுக்குச் சிலை அமைப்பை ஏற்படுத்தியுள்ளது. மக்களுடைய பொருளாதார நிலைக்கேற்பவும் வாழ்வியல் சூழலுக்கேற்பவும் கல், மரம், சுதை, சுடுமண், பளிங்கு, செம்பு, இரும்பு போன்றவற்றால் தெய்வச் சிலைகளையும் சின்னங்களையும் அமைத்துக் கொண்டனர். இத்தெய்வ வழிபாட்டிடங்கள் மக்களின் விருப்பத்தின் அடிப்படையிலும் அக்குலதெய்வம் விரும்பிய இடத்திலும் அமைக்கப்பெற்றுள்ளன. அக்குல தெய்வங்களுக்கு அமைக்கப் பெற்ற கோயில்கள் அவ்வக்குலத்தவரின் பொருளாதார நிலைக்கும் சுயத் தேவைக்கும் ஏற்ப அமையப் பெற்றன.

குலதெய்வங்களுள் சில பிடிமண் தெய்வங்களாக அமையப்பெற்றுள்ளன. பிடிமண் எடுப்பதற்கு முன்னும் பிடிமண் தெய்வங்கள் அமைக்கப்படுவதற்கு முன்னும் குலதெய்வத்தின் உத்தரவு கேட்கப்பட்டுள்ளது. தமிழர் மரபில் சாதிகளின் ஏற்றத் தாழ்வுகளின் காரணமாகவும் தொழில் போன்ற பல்வேறு காரணங்களாலும் இடம்பெயர்ந்தவர்கள் தங்கள் வாழ்வியல் வசதிக்காக குலதெய்வ வழிபாட்டிடங்களை அமைத்துக் கொண்டுள்ளனர்.

தமிழர் மரபில், மேற்கண்ட விளக்கமுறையில் அமைந்திருந்த குலதெய்வ வழிபாடு பின்னாளில் ஆகம வழிபாட்டின் தாக்கத்தினால் சிற்சில மாற்றங்களுக்கு உட்பட்டது. சில நாட்டுப்புறத் தெய்வங்கள் ஆகம வழிபாட்டு முறைக்கு ஆட்பட்டன. இதனால் ஆகம, நாட்டுப்புறத் தெய்வ வழிபாட்டு முறைகள் தமிழர்களிடையே உருவாகின. தமிழரின் வழிபாட்டு மரபில் ஆகம தெய்வங்கள் பெருந்தெய்வங்களாகவும் நாட்டுப்புறத் தெய்வங்கள் சிறுதெய்வங்களாகவும் கருதப்படும் நிலை இதிலிருந்தே உருவாகத் தொடங்கியது. பின்னாளில், தமிழகத்திலிருந்து பல்வேறு காலக் கட்டங்களில் பல்வேறு காரணங்களுக்காகப் புலம்பெயர்ந்த தமிழர்கள் தாங்கள் குடியேறிய இடங்களில் தங்களின் குலதெய்வ வழிபாட்டினையும் உடன் கொண்டு சென்றனர்.

## மலேசியத் தமிழர்களின் சமயப் பின்புலம்

இந்தியாவிற்கும் மலையகத்திற்கும் இடையிலான பண்பாட்டுறவு கிறித்துவத்துக்கு முன்பே உருவாக்கம் பெற்றதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. தென்கிழக்காசியாவில் தாக்கத்திற்குள்ளான இத்தொடர்பினை ஆய்வாளர்கள் ‘இந்தியமயமாக்குதல்’ (Indianisation) என்று வரையறுத்துள்ளனர். கிறித்துவத்துக்குப் பின்புள்ள தொடக்க நூற்றாண்டுகளில் இந்து சமயமானது கடாரத்திலும் பண்டைய மலாய் அரசுகளுள் ஒன்றான கங்கா நெகராவிலும் விரிவடைந்ததாக அகழ்வராய்ச்சிகள் காட்டுகின்றன. குறிப்பாக, கடாரத்தின் பூஜாங் பள்ளதாக்கில் இந்து, பௌத்த ஆலயங்கள் இருந்ததற்கான சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. தொடர்ந்து, மலாக்கா மலாய் மன்னராட்சியின்கீழ் இந்தியாவிற்கும் மலாக்காவிற்கும் இடையில் நடைபெற்ற வாணிபத் தொடர்பும் இந்து சமயம் மலாக்கா நகரில் பரவுவதற்கு வழிகோலியதாக முன்னைய ஆய்வுகள் காட்டுகின்றன. மேலும், கி.பி. 1510களில் மலாக்காவில் வாணிபம் செய்ய வந்த இந்திய வணிகர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 40,000லிருந்து 50,000 வரை பதிவு செய்யப்பட்டுள்ளதாக வரலாற்று ஆவணங்கள் காட்டுகின்றன. இவர்களுள் பலர், இம்மலை நாட்டுப் பெண்களை மணம்புரிந்து வாழ்ந்துள்ளனர் எனவும் அறியப்படுகிறது. இவர்களையே மலாக்கா செட்டிகள் என்றழைப்பர். இவர்கள் தங்களுடைய சமயமான இந்து சமயத்தில் சைவ மரபினைப் பின்பற்றி வந்ததாக அறியப்படுகிறது. இவர்களின் இந்து சமயப் பின்பற்றுதலானது போர்த்துகீசிய ஆட்சியின்போதும் (கி.பி. 1511 முதல் 1641 வரை) டச்சுக்காரர்களின் ஆட்சியின்போதும் (கி.பி. 1641 முதல் 1824 வரை) மாற்றம் கண்டு மீண்டும் மலாக்கா செட்டிகள் தங்களுடைய சமய பண்பாட்டினைப் பேணிக் காப்பதற்கு வழிவகுத்தது.

தொடர்ந்து, ஆங்கிலேயர்களின் ஆட்சியின்போதும் (கி.பி. 1786 முதல் 1957 வரை) இந்து சமயத் தாக்கம் மேலேங்கியுள்ளதை அறிய முடிகிறது. இதற்குக் காரணம், மலாயாவின் தோட்டத்துறை உட்பட பல்துறை வளர்ச்சிக்காகத் தென்னிந்தியத் தொழிலாளர்கள் அழைத்து வரப்பட்டனர். இவர்களுள் 80 விழுக்காட்டினர் இந்துக்களாவர். இவர்கள் மலாயாவில் எவ்விதத் தயக்கமும் அச்சமும் இன்றி வேலை செய்வதற்காக தென்னிந்திய சூழலுக்கொப்ப வசதிகள் பல செய்து தரப்பட்டன. அவற்றுள், தமிழ்ப்பள்ளிகளும் ஆலயங்களும் உள்ளடங்கின. அவ்வாலயங்களுள் பெரும்பாலானவை தோட்டப்புற ஆலயங்களாகத் திகழ்ந்தன. மற்றவை, பட்டணம்வாழ் தமிழர் பகுதியில் அமையப்பெற்றிருந்தன.

தோட்டப்புற ஆலயங்கள் யாவும் அடிப்படை ஆகம, சிற்ப சாத்திர முறைக்கு உட்பட்டு கட்டப்பட்டவையாகத் திகழ்ந்தன. ஆலய வழிபாடுகள் முழுநேர அல்லது பகுதிநேரப் பூசாரிகளால் மேற்கொள்ளப்பட்டன. ஆலய நிர்வாகப் பொறுப்புகள் யாவும் தோட்ட நிர்வாகத்தினரால் ஏற்று செயல்படுத்தப்பட்டன. தோட்டப்புறப் பிரதானக் கோயிலைத் தவிர்த்து, குலதெய்வங்களாகக் கருதப்படுகின்ற கிராமத் தெய்வங்கள் அல்லது சிறுதெய்வங்கள் வழிபாடும் தோட்டப்புற மக்களால் பின்பற்றப்பட்டு வந்தது. இச்சிறுதெய்வங்களுக்கும் சிறு ஆலயங்கள் எழுப்பப்பட்டன. ஆனால், அவையாவும் ஆகம, சிற்ப சாத்திர முறையைப் பின்பற்றி அமையப்பெறாதவையாகும். இதுபோலவே, சாலை மற்றும் இரயில் தண்டவாளப் பாதைகளை அமைக்கின்ற பணிகளில் ஈடுபட்டோரும் ஆங்காங்கே காவல் தெய்வ வழிபாட்டுத் தளங்களை உருவாக்கினர்.

## மலேசியாவில் குலதெய்வ வழிபாட்டின் பின்புலம்

மலேசியத் தமிழர்கள், 19ஆம் 20ஆம் நூற்றாண்டு காலக் கட்டங்களில் ஆங்கிலேயர்களின் ஆட்சியின்போது மலாயாவிற்கு தொழிலாளர்களாகக் குடியேறிய பொழுது, தங்களின் பரம்பரை வழிவந்த சமய வழிபாட்டினை அவரவர் நிலைக்கேற்ப நம்பிக்கையோடு பின்பற்றி வந்தனர். அதுமட்டுமின்றி, தொடக்க காலக் கட்டத்தில் தமிழகத்தில் தாங்கள் வாழ்ந்து வந்த கிராமப் பகுதியில் உள்ள ஆலயங்களின் பிடிமண்ணை எடுத்துவந்து மலாயாவில் தாங்கள் வாழத் தொடங்கிய இடங்களில் அம்மண்ணை அடித்தளமாகக் கொண்டு ஆலயங்களை நிறுவினர். பிடிமண்ணோடு சிலர் வேல், திரிசூலம், ஆலயம் சார்ந்த வேறு பொருட்களையும் உடன் கொண்டு வந்தனர். இவ்வழியில் அமைந்த இறைவழிப்பாட்டுத் தலங்களே பின்னாளில் தோட்டப்புற மக்களுக்கு அடிப்படை சைவ ஆகம விதிமுறைப்படி அமைந்த ஆலயங்கள் உருவாவதற்கு வித்திட்டன.

மலேசியத் தமிழர்களின் வாழ்க்கை கிராமப் பின்னணியை அடித்தளமாகக் கொண்டு இருந்ததனால், அவர்கள் தங்களுடைய வழிபடு தெய்வங்களான விநாயகர், முருகன் மற்றும் மாரியம்மனுடன் முனீஸ்வரர், முனியாண்டி, காளியம்மன் மற்றும் மதுரை வீரன் போன்ற காவல் தெய்வங்களையும் பரிவார தெய்வங்களையும் அவர்கள் வாழுகின்ற வீட்டுப்புறம், தோட்ட எல்லை, பணியிடம் மற்றும் அவர்களது வாழ்க்கைத் தேவைக்கேற்ப ஆங்காங்கே அமைத்துக்கொண்டு வழிபட்டனர். இக்காவல் பரிவார தெய்வங்கள் அவர்களது குலதெய்வங்களாகக் கருதப்பட்டன. அதே வேளையில் பட்டணங்களிலும் தமிழர்கள் தாங்கள் வசித்து வந்த இருப்பிடத்திற்கு அருகாமையிலேயே தங்களின் குலதெய்வ வழிபாடு செய்து வந்தது வழக்கத்தில் இருந்தது. அவர்கள் குடும்பமாகவோ அல்லது தனி மனிதராகவோ இவ்வாறான சிறு சிறு ஆலயங்களை நிறுவி அதைத் தகுந்த முறையில் பராமரித்தும் வந்தனர்.

அக்காலக்கட்டத்தில் குறிப்பாகத் தோட்டங்களில் வாழ்ந்த தமிழர்கள் தாங்கள் பணிபுரியும் பணியிடங்களில் தங்களது பாதுகாப்பு நலன் கருதி முச்சந்தியிலும், மரங்களிலும், சாலை ஓரங்களிலும், காட்டுப் பகுதிகளிலும் பல்வேறு வழிபாட்டுச் சின்னங்களான திரிசூலம், வேல், வாள், செங்கல் போன்றவற்றை ஊன்றியும் சிகப்பு, மஞ்சள் நிறத்துணிகளை மரங்களில் சார்த்தியும் தம் வழிபாடுகளை மேற்கொண்டுள்ளனர். இன்னும் சிலர் சுதைச்சிலைகளையும், சுண்ணாம்புச் சிலைகளையும், மரக்கட்டையால் செய்யப்பட்ட சிலைகளையும் மற்றும் களிமண்ணால் வடிக்கப்பட்ட சிற்பங்களையும் தங்களது வழிபாட்டுக்குப் பயன்படுத்தி வந்துள்ளனர். இதைக் கருத்தில் கொண்டு அன்றைய தோட்டப்புற உரிமையாளர்களாகவும் மேலாளர்களாகவும் விளங்கிய ஆங்கிலேயர்கள், தோட்டப் புறங்களில் வாழும் தமிழர்கள் தாங்கள் வழிபடுவதற்கான தோட்ட ஆலயங்களையும் குலதெய்வ வழிபாடுகளைச் சுதந்திரமாக மேற்கொள்வதற்குரிய சூழலையும் உருவாக்கித் தந்துள்ளனர். இச்சூழலைப் பயன்படுத்தி தமிழர்கள் தங்களின் பாரம்பரிய வழிபாட்டினை (popular religion) எத்தடைகளும் இல்லாமல் மேற்கொண்டு வந்தனர். இவ்வழிபாடுகளில் காவல் பரிவாரத் தெய்வங்களுக்கு விலங்குகளைப் பலிகொடுக்கும் வழக்கம் இருந்து வந்துள்ளது. அதோடு மது, சுருட்டு, கருவாடு, சமைத்த மாமிச உணவு போன்றவற்றைப் படைத்து பம்பை, உடுக்கை, உறுமி, மேளதாளம் முழங்க வழிபாட்டினை மேற்கொண்டனர். 1960கள் தொடங்கி 1990கள் வரை தோட்டப்புறத் தமிழர்கள் பல்வேறு காரணங்களுக்காக தோட்டப்புறங்களிலிருந்து பட்டணங்

களுக்கும் பட்டணப்புறங்களுக்கும் குடியேறத் தொடங்கினர்.

## மலேசியத் தமிழர்களிடையே குலதெய்வ வழிபாட்டுக்கான தேவைகளும் காரணங்களும்

இவர்கள் இதுகாறும் தாங்கள் வாழ்ந்த தோட்டப்புறங்களில் வழிபட்டு வந்த சிறுதெய்வங்களாகக் கருதப்படும் அவர்களது குலதெய்வங்களை வழிபட்டு வந்தனர். அத்தெய்வங்களுள் ஆண் தெய்வங்களாகிய முனீஸ்வரன், முனியாண்டி, மதுரை வீரன், கருப்பண்ணசாமி போன்றவையும் காளியம்மன், மாரியம்மன், அங்காளம்மன், பேச்சியம்மன், திரௌபதையம்மன் போன்ற பெண் தெய்வங்களையும் தங்களின் புதிய குடியிருப்பில் வைத்து வழிபடத் தொடங்கினர். அப்படி வழிபடத் தொடங்கியவர்கள், மிகுந்த பக்தியின் காரணமாகவோ ஈடுபாட்டின் காரணமாகவோ தங்கள் வீட்டுக்கும் தங்களுக்கும் அத்தெய்வங்கள் எப்போதும் காவல்செய்து துணையிருக்க வேண்டும் என்ற காரணத்தால் தங்கள் வீட்டின் முன் வாயிலிலோ வளாகத்திலோ இருப்பிடத்தின் அருகிலோ சிறு ஆலயம் எழுப்பி வழிபட்டனர். இத்தகைய வழிபாட்டு முறைகளுக்கு அவர்களது சில மரபு சார்ந்த நம்பிக்கைகள் அடிப்படைக் காரணங்களாக விளங்குகின்றன.

பிறரால் ஏவப்படும் ஏவல், வைக்கப்படும் பில்லி சூனியம், துர்தேவதை, தீய சக்தியின் தாக்கங்கள், கண்ணேறு போன்ற பாதிப்புகளிலிருந்து தங்கள் குலதெய்வம் தங்களைப் பாதுகாக்கும் என்ற நம்பிக்கை மரபு வழியாக அவர்களிடம் இருந்து வருகின்றது. தங்களது குலதெய்வத்தை வீட்டின் முன்புறம் இருத்தி முறையாக வழிபட்டால் அத்தெய்வம் தங்களையும் தங்கள் குலத்தையும் எந்நாளும் காக்கும் என்பதே இவ்வழிபாட்டுக்கு அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது.

மலேசியத் தமிழர்கள் தோட்டப்புறப் பின்னணியில் வாழ்ந்தபோது தங்களது குலதெய்வ வழிபாடுகளை மேற்கொள்வதற்குரிய இடங்களாகத் தங்களின் பணியிடங்களையும் தோட்டத்தையொட்டிய காட்டுப்புறங்களையும் தலங்களாகப் பயன்படுத்திக்கொண்டனர். இதற்குக் காரணம் இவர்கள் தங்கள் வீட்டு வளாகங்களில் இத்தகைய வழிபாட்டு இடங்களை அமைத்துக் கொள்ள தோட்ட நிருவாகம் இவர்களை அனுமதிக்கவில்லை. அந்நிலங்கள் தனியாருக்குச் சொந்தம் என்ற காரணத்தால் இந்த அனுமதி மறுக்கப்பட்டது. ஆனால் தோட்டப்புற மக்கள் பட்டணங்களுக்கும் பட்டணப் புறங்களுக்கும் குடியேறிய பிறகு சுயமாக இல்லம் வாங்கத் தொடங்கினர். ஒரு சிலர் சொந்தமாக நிலம் வாங்கி அந்த நிலத்தில் வீடு கட்டிக் கொண்டனர். இத்தகையோர் தங்களின் விருப்பம்போல் தெய்வ, குலதெய்வங்களின் திருவுருவங்களை வடிவமைத்து, அவற்றுக்கு வீட்டு வளாகங்களில் சிறு ஆலயங்களையும் நிறுவி வழிபாடு செய்து வந்தனர். இத்தகைய ஆலயங்களே வீட்டு வளாக ஆலயங்கள் என அழைக்கப்படுகின்றன.

பொதுவாக எல்லாத் தோட்டங்களிலும் மக்களின் குடியிருப்புக்கு அருகிலேயே(5-15 நிமிடங்களுக்குள் நடக்கும் தொலைவு) அவர்கள் வழிபடுவதற்குரிய ஆலயங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இந்த மக்கள் புதிய குடியிருப்புக்களுக்குக் குடியேறிய நிலையில் தங்கள் குலதெய்வ வழிபாட்டில் சில சிக்கல்களை எதிர் நோக்கினர். தாங்கள் வாழ்ந்த தோட்டத்துக்கு அருகிலுள்ள புதிய குடியிருப்புகளுக்குக் குடியேறியவர்களுக்கு அவ்வப்போது தாங்கள் வாழ்ந்த தோட்டத்துக் குலதெய்வங்களைச் சென்று வழிபடும் சூழ்நிலை அமைந்தது. ஆனால் சிலர் தாங்கள் வாழ்ந்த தோட்டத்திலிருந்து வெகுதொலைவில் அமைந்துள்ள புதிய குடியிருப்புகளில் குடியேறினர். இத்தகையவர்கள் தொலைவு காரணமாகத் தாங்கள் வாழ்ந்தத் தோட்டத்துக்குச் சென்று

தங்கள் குலதெய்வத்தை வழிபடுவதில் பெருஞ்சிக்கலை எதிர் நோக்கினர். மேலும் முன்பிருந்த ஒருசில தோட்டங்கள் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஆளானதால் அங்கிருந்த அவர்களின் குலதெய்வ ஆலயங்கள் மேம்பாட்டாளர்களால் அப்புறப்படுத்தப்பட்டன. மேற்கண்ட காரணங்களாலும் தங்களின் புதிய குடியிருப்புப் பகுதியில் குலதெய்வ ஆலயங்கள் இல்லாத காரணத்தாலும் பலர் தங்கள் வீட்டிலும் வீட்டு வளாகத்திலும், வீட்டுக்கு அருகாமையிலும் தங்கள் குலதெய்வங்களுக்குச் சிறு ஆலயங்களை அமைத்துக் கொண்டனர்.

மலேசியாவில் குலதெய்வ வழிபாட்டை மேற்கொள்பவர்களிடம் மருளாடிக் குறிசொல்லும் போக்கும் பரவலாகவே உள்ளது. இவர்களில் ஒரு சிலர் மருளாடிக் குறிசொல்லுவதற்கும் பரிகாரம் செய்வதற்கும் உரிய சூழலை ஏற்படுத்திக்கொள்வதற்கு, தங்கள் வீட்டு வளாகத்திலேயே ஆலயத்தை அமைத்துக் கொள்கின்ற நிலையையும் காண முடிகின்றது. இத்தகைய குறிசொல்வோர் தங்களிடம் குறைகளை முறையிட வரும் பக்தர்களுக்குப் பல்வேறு பரிகாரங்களைச் சொல்வதுண்டு. அவற்றுள் குலதெய்வ வழிபாட்டை விடாமல் மேற்கொண்டு வரவேண்டும் என்பதும் ஒன்றாகும். தங்களுக்குச் சொல்லப்பட்ட இப்பரிகாரத்தை முறையாகச் செய்தொழுக வேண்டும் என்ற காரணத்தால் அப்பக்தர்கள் தங்கள் வீட்டு வளாகத்திலேயே சிறு ஆலயத்தை அமைத்துக் கொள்வதுமுண்டு.

தங்கள் வீட்டின் அமைவிடம் முச்சந்தியையொட்டி அமைந்திருந்தாலோ வீட்டிலே தொடர்ச்சியான பிரச்சினைகள் ஏற்பட்டாலோ மக்கள் வாஸ்து நிபுணர்களிடம் ஆலோசனைக் கேட்பதுண்டு. மலேசியாவில் இந்து வாஸ்து நிபுணர்களிடமும் சீன வாஸ்து (Feng Shui) நிபுணர்களிடமும் மக்கள் ஆலோசனை கேட்டு அவர்களின் வழிகாட்டுதலோடு வீட்டுச் சூழலை மாற்றியமைப்பதற்கும் வீட்டின் சக்தியலைகளைப் பெருக்குவதற்கும் குடும்பப் பொருளாதார நிலையை மேம்படச் செய்வதற்கும் தங்கள் வீட்டு வளாகத்தின் முன்புறத்தில் சிறு ஆலயங்களை எழுப்புவதுண்டு. பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும் தங்கள் வியாபாரத்தை விருத்தியடையச் செய்வதற்கும் பண வசதியுள்ளோர் வாஸ்து பார்த்தோ நம்பிக்கை அடிப்படையிலான ஆலோசனைகளைப் பெற்றோ இதுபோன்ற ஆலயங்களை அமைத்துக் கொள்வதுமுண்டு. இத்தகைய ஆலயங்கள் குலதெய்வ ஆலயங்களாகவே அமைந்துவிடுகின்றன. பொருளாதார வசதியின் காரணமாகச் சொந்த நிலங்களில் வீட்டையமைத்துக் கொண்டவர்களும் சிறுதொழில் நோக்கத்துக்காகச் சொந்த நிலத்திலோ வாடகை நிலத்திலோ கட்டடங்களிலோ தொழில் நிறுவனம் அமைத்துக் கொண்டவர்களும் குலதெய்வ வழிபாட்டை மேற்கொள்வதற்குரிய சூழலை உருவாக்கிக் கொண்டனர்.

## மலேசியாவில் குலதெய்வ வழிபாடு மேற்கொள்ளப்படும் முறைகள்

மலேசியத் தமிழர்களின் குலதெய்வ வழிபாட்டுக்கென சில முறைமைகள் அமைந்துள்ளன. தாங்கள் இருக்கும் இருப்பிடத்திலேயோ தாங்கள் வாழ்கின்ற இல்லங்களிலேயோ சுயதொழில் செய்யும் இடங்களிலேயோ குலதெய்வத்துக்கென வழிபாட்டு மேடை அல்லது கூடத்தை அமைத்து வழிபடுவது வழக்கத்தில் இருந்தது. இவ்வழிபாட்டு மேடையை வீட்டின் வரவேற்பறையிலோ வீட்டின் முகப்புப் பகுதியிலோ சுயத்தொழில் செய்யும் இடங்களிலோ அமைத்துக் கொண்டனர். இன்னும் சிலர் தங்களது வீடுகளில் வழிபாட்டிற்கென்றே தனி அறையை ஒதுக்கி, தங்களின் வசதிக்கேற்ப இவ் வழிபாட்டினைக் கடைப்பிடித்து வந்தனர். சிலர் தங்கள் வீட்டின் நுழைவாயிலுக்கு மேல் குலதெய்வத் திருவுருவப் படங்களை இருத்தியும் வழிபட்டனர். ஒரு சிலர்

தங்களது வீட்டு நுழைவாயிலின் பக்கத்தில் தங்களது குலதெய்வங்களை அமர்த்தி, தங்கள் முன்னோர்கள் வழிபட்ட முறையில் வழிபட்டு வந்தனர்.

இவ்வழிபாடுகளில் குலதெய்வத்தின் சின்னங்களாக திருவுருவப் படத்தையும், குலதெய்வச் சின்னங்களான வேல், சூலம், சாட்டை, வாள், சலங்கை, பிரம்பு, தடி, செங்கல் போன்றவற்றையும், சிறிய வடிவிலான குலதெய்வ உருவச் சிலைகளையும் வைத்து வழிபட்டு வந்தனர். இறைவழிபாட்டின்போது தங்களின் நித்தியக் கடமையாக தங்கள் நெற்றியில் சமயச் சின்னங்கள் அணிந்து தினந்தோறும் திருவிளக்கேற்றி, தூப தீப ஆராதனைச் செய்து வழிபட்டு வந்தனர். பூக்களால் அர்ச்சித்து, படையலிட்டு தமக்குத் தெரிந்த குலதெய்வப் பாடல்களைப் பாடுவதும் இந்த வழிபாட்டு முறையிலே அடங்கியிருந்தன. குலதெய்வங்களுக்கான சிறப்பு வழிபாட்டின்போது உறுமி, மேளம், பறை, பம்பை, உடுக்கை போன்ற கருவிகளை இசைத்தும் வழிபாட்டை மேற் கொண்டுள்ளனர்.

குலதெய்வங்களுக்கான சிறப்பு பூசைகளிலும், செவ்வாய் வெள்ளிகளிலும் தங்கள் இல்லங்களில் குல தெய்வங்களுக்காகச் சிறப்பு வழிபாடுகளை அவர்கள் மேற்கொண்டனர். இத்தகைய சிறப்பு வழிபாடுகளின்போது ஆடு, கோழி போன்ற உயிர்களை பலிகொடுத்தோ அல்லது பூசணி, எலுமிச்சை போன்ற பொருட்களை பலிகொடுத்தோ பூசைகளை மேற்கொள்வர்.

இவ்வாறு நிறுவப்பட்ட குலதெய்வ வழிபாட்டு ஆலயங்கள் குடும்ப உறுப்பினர்களால் மட்டுமே வழிபடும் ஆலயங்களாகவும் பொதுமக்கள் வந்து வழிபடும் ஆலயங்களாகவும் அமைந்தன. குடும்ப உறுப்பினர்களால் வழிபடப்படும் ஆலயங்களில் குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே பங்குபெறுவர். இத்தகைய ஆலயங்கள் அக்குடும்பத்தின் பொருளாதாரச் சூழலுக்கேற்பவும் ஈடுபாட்டிற்கேற்பவும் அதன் அமைப்புத் தோற்றத்தில் மாற்றங்களைப் பெற்று விளங்கின. குடும்பச்சூழலுக்கேற்ப இத்தகைய ஆலயங்களில் நித்திய வழிபாடுகளுக்கு அப்பால் சிறப்பு பூசைகளும் வருடாந்திர வழிபாடுகளும் குடும்ப உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

பொதுமக்கள் வந்து வழிபட்டுச் செல்லும் ஆலயங்களில் பல்வேறு நம்பிக்கை சார்ந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. சாமியாடுதல், குறிகேட்டல், குறைதீர்த்தல், பேயோட்டல் போன்ற நடவடிக்கைகள் மேற்கண்ட நடவடிக்கைகளுள் சிலவாகும். காலவோட்டத்தில் அவ்வாலயத்தில் ஆண்டு விழாவான திருவிழாக்களும் கொண்டாடப்பட்டு வந்துள்ளது. இந்த வளர்ச்சி படிப்படியாக ஆலய நிருவாகம் ஒன்றை அமைக்கும் நிலையையும் அவர்களிடையே உருவாக்கியிருக்கின்ற போக்கினை நம்மால் காணமுடிகின்றது. இப்படி அமைக்கப்பட்ட ஆலய நிருவாகம் குடும்ப நிருவாகமாகவோ பொது நிருவாகமாகவோ இருந்து வந்துள்ளன. இவ்வாலயங்களுக்குப் பூசாரிகளை அமர்த்தி நித்திய பூசைகளையும் சிறப்பு பூசைகளையும் ஆண்டு விழாக்களையும் நடத்தி வந்துள்ளனர். இத்தகைய ஆலயங்களுள் சில, சிறப்பு பூசையின் போதோ ஆண்டு பூசையின்போதோ குடமுழுக்கின்போதோ ஆகம முறையில் வழிபாட்டை மேற்கொண்டுள்ளன.

**குலதெய்வ வழிபாட்டில் மலேசியத் தமிழர்கள் எதிர் நோக்கும் சிக்கல்களும் சவால்களும்**

குலதெய்வ வழிபாடு மலேசியத் தமிழர்களால் இன்று வரை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்தபோதும் பல்வேறு சிக்கல்களையும் சவால்களையும் எதிர்நோக்கி வருகின்றது. தமிழர்களின் குலதெய்வ வழிபாடும் அதற்குரிய ஆலயங்களின் உருவாக்கமும் பல்வேறு

விளைவுகளைக் காலவோட்டத்தில் ஏற்படுத்தியுள்ளன. பரவலாகவே குலதெய்வ ஆலயங்கள் அக்கம் பக்கத்தில் வாழ்பவர்களுக்கும் பல்லின அண்டை அயலார்க்கும் பெரும் இடையூறாக அமைந்து அதுவே பல்வேறு சிக்கல்களுக்கும் வழிவகுத்துள்ளது. அந்த இடையூறுகள் பலநிலைகளில் அமைந்து விடுகின்றன.

குலதெய்வத்துக்காக வீட்டு வளாகத்திலோ தொழில் இடங்களிலோ மேற்கொள்ளப்படும் பூசைகளில் பயன்படுத்தப்படும் ஊதுவர்த்தி, சாம்பிராணி, சுருட்டு போன்ற பொருட்களிலிருந்து வெளிப்படும் மணம் அண்டை வீட்டாருக்கு குறிப்பாக இஸ்லாமிய சமயத்தவருக்குச் சங்கடங்களை ஏற்படுத்துகின்றது. பூசைகளின்போது சொல்லப்படும் மந்திரங்களின் ஒலியும் சிக்கல்களுக்கு வழி விடுகின்றன. குறிப்பாக அண்டை வீட்டார் இஸ்லாமியராகவோ கிருத்துவராகவோ இருக்கும்போது இந்நிலை உணரப் படுகின்றது.

ஒரு சில வீட்டு வளாக ஆலயங்களில் சாமி ஆடுவதனாலும் குறி சொல்வதனாலும் எழுகின்ற ஓசை எல்லை கடந்துவிடுவதனால் அது அண்டை அயலாருக்குத் தொல்லையாகி விடுகின்றது. சிறப்புப் பூசைகளின்போதும் திருவிழாக்களின்போதும் எழுப்பப்படும் உடுக்கை, பம்பை, உறுமி, மேளம் போன்றவற்றின் அதிகப்படியான இரைச்சல் ஒலியும் அண்டை அயலாருக்குத் தொல்லையாக அமைந்து விடுகின்றன. இது பிற சமயத்தவருக்கும் வயோதிகர்களுக்கும் குழந்தைகளுக்கும், படிக்கின்ற மாணவர்களுக்கும் தொல்லையாக அமைந்துவிடுகின்றன. பூசைக்குப் பயன்படுத்தப்படும் பொருட்களான எலுமிச்சை, பூசணிக்காய், மலர்கள் போன்ற பொருட்கள் அண்டை வீட்டு எல்லை வரை சிதறிக் கிடப்பதனால் பொதுவாகவே எல்லா இனத்தவருக்கும் மதத்தவருக்கும் மனச்சங்கடத்தை ஏற்படுத்தி விடுகின்றன.

சிறப்பு பூசை, திருவிழாக் காலங்களில் இவ்வாலயங்களில் கொண்டாட்டங்கள் மேற்கொள்ளப்படும்போது அதில் கலந்துகொள்ள வருபவர்களின் வாகனங்கள் பொறுப்பற்ற நிலையில் பிறர் வீட்டு வாசலை மறித்துக் கொண்டும் போக்குவரத்துக்குத் தடையாகவும் நிறுத்தப்படுவதனால் சாலை நெரிசலை உண்டாக்கி அங்குள்ள குடியிருப்பாளர்களுக்குச் சங்கடங்களை ஏற்படுத்திவிடுகின்றன.

மேற்கண்டவாறு வீட்டு வளாக பூசைகளின்போது மேற்கொள்ளப்படும் சிக்கல் நிறைந்த நடவடிக்கைகளான போக்குவரத்து நெரிசலும் மக்கள் கூட்டமும் பக்கத்துக் குடியிருப்பாளர்களுக்கு தங்கள் வாழ்வியல் சுதந்திரத்தைப் பாதித்துவிட்டது போன்ற உணர்வை ஏற்படுத்தி விடுகின்றன. தமிழர்களின் இத்தகைய வழிபாட்டு நடவடிக்கைகளால் பிற இனத்தினரும் மதத்தினரும் தமிழர்தம் வழிபாட்டு முறையைத் தாழ்வாகப் புரிந்து கொள்ளக்கூடிய சூழல்களும் அமைந்து விடுகின்றன.தொல்லைகள் எல்லை மீறும்போது பிற இனத்தவர்களும், மதத்தினரும் சில நேரங்களில் காவல்துறையிலோ மாநகரக் கழகங்களிலோ புகார் செய்வதுமுண்டு.

மாநகராட்சிக் கழகங்கள் இப்படிச் சிக்கல்களை உண்டாக்குகின்ற வீட்டு வளாக ஆலயங்களுக்கு எதிராக எச்சரிக்கை விடுத்தல், எச்சரிக்கைக் கடிதம் அனுப்புதல் போன்ற நடவடிக்கைகளை மேற் கொள்கின்றன. மேலும் வீட்டு மனை திட்ட வரைவுக்குப் புறம்பாக அமைந்திருக்கின்ற காரணத்தால் அந்த ஆலயங்களை அப்புறப் படுத்தும்படியும் அறிவுறுத்துகின்றனர். மாநகராட்சிக் கழகங்களின் அறிவுறுத்தலை மீறி வீட்டு வளாக ஆலயங்கள் சிக்கல் நிறைந்த நடவடிக்கைகளைத் தொடரும் போதும், அது பற்றிய புகார்களைத் தொடர்ந்து பெறும்போதும் அவ்

வாலயங்களை உடைக்கின்ற நடவடிக்கைகள் சட்டரீதியாக மேற்கொள்ளப்படுகின்றன.

## முடிவுரை

மலேசியத் தமிழர்களின் குலதெய்வ வழிபாட்டின் தோற்றம் பழந்தமிழர்களின் மரபை அடியொட்டி வந்திருப்பது ஆய்வின் வழி அறியப்படுகின்றது. மலாயாவுக்குத் தமிழர்கள் புலம்பெயர்ந்த காலந்தொடங்கி இந்நம்பிக்கை அவர்களின் வாழ்வியலோடு கலந்து இன்றுவரை தொடர்ந்து வருகின்றது. குலதெய்வ வழிபாட்டுக்கான அடிப்படைக் காரணமாகக் காவல் தேடுதல் அமைந்துள்ளது. இவர்களது குலதெய்வ வழிபாட்டு முறைகள் அடிப்படை மரபு முறையிலிருந்து மாறாமல் இருந்து வருகின்றன. இருந்தபோதிலும் காலமாற்றத்தினால் ஏற்பட்ட பொருளாதார நிலை மாற்றமும், வாழ்வியல் சூழல் மாற்றங்களும் குலதெய்வ வழிபாட்டிடங்களில் பல்வேறு விரிவாக்கங்களைக் கொண்டு வந்து சேர்த்தன. இதனைத் தொடர்ந்து நாட்டுப்புற அமைப்பிலான இவ்வழிபாட்டு முறைகளில் ஆகம முறைகளும் மெல்லக் கலந்தன. இருப்பிட இடமாற்றங்களும் பல்லின மக்களுடன் இணைந்து வாழும் சூழலும் வழிபாட்டு முறையைத்தொட்டு பல்வேறு சிக்கல்களுக்கு வழிவிட்டன. இச்சிக்கல்கள் காவல்துறை, மாநகராட்சியின் தலையீட்டுக்கும் சட்ட நடவடிக்கைகளுக்கும் இட்டுச் செல்லும் நிலையையும் ஏற்படுத்தியுள்ளன. எவ்வாறாயினும் சிக்கல்களை மலேசியத் தமிழர்கள் உணர்ந்து கொண்ட காரணத்தால் குலதெய்வ வழிபாடு எவ்விதத் தொய்வுமின்றித் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

## Biblography


Alagesan, S. (2009). Tirunelvçli vammârat teyvaEka7. Chennai: Kavya.

Ampalavanar, Rajeswary (1972), Class, Caste, and Ethnicism among Urban Indians in Malaya, 1920-1941, *Nusantara, 2*, 209-36.

Anangan. (2008). Âlaya va;ipâmu (va;ipâmuka7iI tô__am, camaEkuka7, palaIka7). Chennai: Alagu Publication.

Arasaratnam S., (1966). *Indian festivals in Malaya.* Kuala Lumpur : Dept. of Indian Studies, University of Malaya.

Arasaratnam, S. (1970). *Indians in Malaysia and Singapore*. Kuala Lumpur: Oxford University Press.

Arasaratnam, S. (2006). Malaysian Indians: The Formation Of Incipient Society. In Kernial Singh Sandhu & Mani A. (Eds.). *Indian communities in Southeast Asia*, pp.190 – 210. Singapore : ISEAS.

Balan N, Aiyer. (1999). *Principles and Practice of Hindu Religion*. Mumbai: Bharatiya Vidya Bhavan.

Devapoopathy Nadaraja & Seeta Lechumi. (2005). Hindu Worship and Practice. In Kamal Hassan and Ghazali Bin Basri (Eds). *The Encyclopedia Of Malaysia: Religions And Beliefs*. Vol 10. (pp. 90-92). Kuala Lumpur: Edition Didier Millet.

Jain, Ravindra K. (1970). *South Indians on the plantation frontier in Malaya*. Kula Lumpur: University of Malaya Press.

Kernial Singh Sandhu,. (2010). *Indians in Malaya : some aspects of their immigration and settlement (1786-1957)*. Cambridge: Cambridge University Press. Edisi kedua.

Kernial Singh Sandhu. (2006). The Coming of the Indians to Malaysia. In Kernial Singh Sandhu & Mani, A. (Eds.). *Indian communities in Southeast Asia*, 152-189. Singapore: ISEAS.

Manimaran S. (1995). *Agama dan Kepercayaan di Kalangan Penganut Hindu: Satu Kajian di Daerah Kuala Selangor*. Dissertation (M.A.) Faculty of asrts and Sosial Sciences Sastera dan Sains Sosial, University Malaya.

Manimaran, S. (2006). Sejarah dan perkembangan agama Hindu di India dan Malaysia. Singaravelu, S. (Ed.). *Pengajian India: bicara pelbagai perspektif* (pp. 197-224). Kuala Lumpur: University Malaya Press.

Manimaran, S. (2008). Hindu Temple Architecture and Sculptures. In Rampal, Krishna G. (Ed.). *Sacred structures : artistic renditions of Hindu temples in Malaysia and Singapore*, 15-42. Singapore: Bluetoffee.

Rajakrishnan, R. (1988). *Sojourners to citizens : Sri Lankan Tamils in Malaysia, 1885-1965*. Kuala Lumpur: The Author.

Rajoo, R. (1984). Sanskritization in the Hindu Temples of West Malaysia. *Jurnal Pengajian India, Vol. II.* 154-169.

Rajoo, R. (2006). Indian squatter settlers: Indian rural-urban Migration in West Malaysia. In Kernial Singh Sandhu & Mani A. (Eds). *Indian communities in Southeast Asia* (pp. 484–503). Singapore : ISEAS.

Rajoo, R., (1975). *Patterns of Hindu religious beliefs and practices among the people of Tamil origin in West Malaysia*. Dissertation (M.A.) Faculty of asrts and Sosial Sciences Sastera dan Sains Sosial, University Malaya.

*Raymond* L. M. Lee*, & Rajoo, R.* (1987). *Sanskritization and Indian Ethnicity in Malaysia*. *Modern Asian Studies, 21(2)*, 389-415.

Rukmani, R. (2008). Citamparanâr mâvattac ciru teyvankal. Chennai: Kavya.

Sargunavathi, M. (1992). Tamilaka nâttuppuraviyal. Chennai: Tamilkadal Publication.

Srikumar, S. (2009). Kumari nattuppurat teyvankal. Chennai: Kavya.

Visayaragavan, K. (2014). Pulampeyarnta tamilar varalârum vâviyalum. Chennai: Ulaka Tamilaraichi Niruvaram.

Willford, Andrew C. (2007).*Cage of freedom : Tamil identity and the ethnic fetish in Malaysia*. Singapore: NUS Press.

# சுந்தரரின் மிஞ்சு மொழியும் அதன் உட்பொருளும்

## Suntharar's Rude Language and its Inner meanings

சர்மிளா சதாசிவம்

Sharmila Sathasivam

***Abstract***

Among the Twelve Thirumurais, the author of the Twelfth Thirumurai is Sundarar. The seventh Thirumurai has Thirupattu. Through this Sundarar has brought out many ways to raise the way of life of an individual and also society. His devotion to God is inexplicable. It is his unique relationship with God who is Lord Shiva. Unlike others, he treated God as his friend. In this relationship, most of the times he took things for granted and crossed the limits in friendship and language with Lord Shiva. He uses a kind of rude language. This shows two things. One is his intimacy with God. And the other is his handling of language; in particular; the use of diction. This could be done only by Sundarar, and speaks of his Religious capability. This Paper studies the lingual ability of Sundarar in employing the rude language to Lord Shiva

**Key Words:** Periya Puranam, Panniru Thirumurai, Sundarar, Suntharar Thevaram.

### முன்னுரை

சைவத்தின் மேற்சமயம் வேறில்லையதிற் சார்சிவமாம்
தெய்வத்தின் மேற்தெய்வம் இல்லெனும் நான்மறைச்
செம்பொருள்வாய் மைவைத்த சீர்திருத் தேவாரமுந் திருவாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர் பொற்றா ளெ உயிர்த்துணையே.

(அருணைக்கலம்பகம்)

சிவ பரம்பொருளை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவ சமயம் உலகுக்கு நல்வழி காட்டி மக்களை உய்விக்கும் ஆற்றல் பெற்றதாகும். இச்சமயத்தின் மேன்மையையும் சிறப்பினையும் மேலோங்கச் செய்யும் பொருட்டு சிவனெறி சார்ந்த அருளாளர்கள், சிவ பரம்பொருளை வாழ்த்தியும், சைவ சமயத் தத்துவக் கோட்பாடுகளை விளக்கியும் எண்ணற்ற நூல்களை அருளிச் சென்றுள்ளனர். *(க.இராசமாணிக்கனார், 2002.)*

சிவநெறியின் சைவ சமயத்தின் பிரமாண நூல்களாகப் போற்றப்படுவனவற்றுள் தலைசிறந்து விளங்குவன பன்னிரு திருமுறைகளாகும்.இறைக் காட்சியினைக் கண்ணாரக் கண்டு, அவன் திருவருளை நிறைவுறப் பெற்று, அவ்வருளனுபவத்தில் திளைத்துச் சிவமாந்தன்மை பெற்று, சீவன்

Sharmila Sathasivam is a Masters Degree candidate at The Department of Indian Studies, University of Malaya.
Motchana68@gmail.com

முத்தர்களாகத் திகழ்ந்த சிவனெறி சார்ந்த ஆசாரியர்களால் அருளிச் செய்யப்பட்ட தெய்வீகப் பாடல்களின் தொகுதியே இப்பன்னிரு திருமுறைகள் ஆகும். (புஸ்பநாதன், **2011,ப.145)**

இப்பன்னிரு திருமுறைகளில் தேவாரத் திருமுறைகளாகத் தொகுக்கப்பெற்ற ஏழு திருமுறைகளுள் ஏழாம் திருமுறையாக வகுக்கப்பட்டுள்ளது சுந்தரர் தேவாரமாகும். சுந்தரர் பாடியருளிய திருத்தொண்டர் தொகைத் திருப்பதிகமே பெரிய புராணம் தோன்றுவதற்குக் காரணமாயிருந்தது. தென்தமிழ்ப்பயனாய் வந்த திருத்தொண்டத்தொகை எனச் சேக்கிழாரடிகள் இதனைச் சிறப்பித்துப் போற்றுவார். (க.வெள்ளைவாரணர்,**2011.)** இத்திருப்பதிகமாகிய தொகையின் வகைநூலாக நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதி என்னும் நூலை இயற்றச் சேக்கிழார் பெருமான் சுந்தரரையே பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பெரியபுராணம் தொடக்கம் முதல் முடிவு வரை சுந்தரர் வரலாற்றைத் தொடர்பாக விரித்துரைக்கும் முறையில் அழகுற அமைந்துள்ளது. (கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், **1964,ப77)**

பெரியபுராணம் மட்டுமின்றி சுந்தரர் பாடிய தேவாரத் திருப்பதிகங்களும் சுந்தரருடைய வரலாற்றை ஆங்காங்கு கூறிச் செல்கின்றன. சுந்தரருடைய தேவாரத் திருப்பதிகங்களில் அவருடைய வரலாற்றுக் குறிப்புகள் மட்டுமின்றி அவர் காலத்தில் வாழ்ந்த அவருடன் பழகிய பிற அடியார்களைப் பற்றிய குறிப்புகளும், சோழநாடு, தொண்டை நாடு, நடுநாடு, கொங்கு நாடு முதலியவற்றின் இயற்கை வளங்களும், தலப் பெருமைகளும், புராணச் செய்திகளும், விழா நிகழ்ச்சிகளும், அறநெறிகளும் ஆங்காங்கு காணப்படுகின்றன. (க.சண்முகசுந்தரம், **2005,** ப.**213)**

## ஏழாம் திருமுறை

சாத்திரப் பாடல்களின் தலைசிறந்த பன்னிரு திருமுறையில் ஏழாம் திருமுறையாகக் கொள்ளப்படுவது சுந்தரரின் தேவாரம். இதனைத் திருப்பாட்டு என்றும் அழைப்பர். சைவத்திருமுறைப் பாடல்கள் பெரும்பாலும் தர்ம நெறிகளை உணர்த்துவனவாகவும் துதிப்பாடல்களாகவும் விளங்குகின்றன. சுந்தரரின் ஏழாம் திருமுறை இவற்றினின்றும் சற்று மாறுபட்டு இலக்கிய பக்திச் சுவையை உணர்த்துவது மட்டுமன்றி பல்வேறு நிலை ஆய்வுக்கு உட்படுத்தக்கூடியனவாகவும் விளங்குகிறது.

## சுந்தரரும் மிஞ்சு மொழியும்

திருக்கயிலாயத்தில் சிவபெருமானுக்கு அணுக்கத் தொண்டராய் இருந்தவர் ஆலால சுந்தரர். அவர் மலர்கொய்யும் போது ஒருநாள் கமலினி அநிந்திதை என்பார்மேல் மனம் போக்கியதால் பூவுலகில் பிறக்க நேர்ந்தது. திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் ஆதிசைவ மரபில் கி.பி.**807**ல் சடையனார்க்கும் இசைஞானியார்க்கும் மகனாக ஆலால சுந்தரர் அவதரித்தார்.பெற்றோர்கள் அவருக்கு ஆரூரர் என்று பெயரிட்டனர். திருமணம் நடக்கப் போகும் நேரத்தில் தடுத்தாற் கொள்ளப்பெற்றார். திருவாரூரில் பரவையாரை மணந்தார். தேவாசிரியன் முன் நின்று அடியார்களை வணங்கித் திருத்தொண்டத் தொகை பாடினார். திருவொற்றியூரை அடைந்து புற்றிடங் கொண்டாரை வழிபட்டு அவ்வூரில் தங்கி இருக்கும்போது "ஒற்றியூரினின்றும் அகலேன்" என்று சபதம் செய்துகொடுத்துச் சங்கிலியாரை மணந்து கொண்டார். பல தலங்களுக்குச் சென்று இறைவனைப் பாடித் தொழுது அற்புதங்கள் நிகழ்த்திப் பின்பு அஞ்சைக்களம் சென்று வழிபட்டு வருகிறநாளில் இறைவன் வெள்ளானை அனுப்ப அதன்மீது ஏறிக் கயிலைக்குப் புறப்பட்டார். சேரமானும் குதிரைமேல் ஏறி உடன்வர ஆரூரர் தமது பதினெட்டாம்

*வயதில் (கி.பி.825) ஆடிச்சுவாதி நாளில் கயிலையை அடைந்தார்.சுந்தரரின் பாடல்களில் பல இடங்களில் இந்த மிஞ்சு மொழி கையாளப்பட்டுள்ளதைக் காண இயலும்.*

*'மிஞ்சு' என்றால் மிகுதல் என்று பொருள்படும். இலக்கண அமைப்பில் மிஞ்சு மொழி என்றழைக்கப்படுவது ஒருவரை நெருக்கத்தின் காரணத்தால் வரம்புக்கும் மீறி அதிகமாகப் பேசுவதாகும். சுந்தரர் தமது வழிபாட்டு நெறியில் இறைவனுடன் சக மார்க்கம் எனும் நட்பு முறையைக் கடைப்பிடித்தார். சிவபெருமானுடன் தோழமை பூண்டதால் தம்பிரான் தோழர் எனவும் பாராட்டப்பட்டார். (சங்க நடராஜா. பக். 40) அவருடைய உரிமை பாராட்டும் தன்மையே சுந்தரரின் பக்திச் சிறப்பாகக் கொள்ளப்பட்டுள்ளது.க.வெள்ளைவாரணர் தமது பன்னிரு திருமுறை வரலாற்று நூலில் 'நம்முடன் நீ வன்மொழிகளைப் பேசினமையால் வன்றொண்டன் என்ற பெயர் பெற்றனை' எனச் சிவபெருமானே கூறியதாகக் குறிப்பிடுவதன் மூலம் சுந்தரரின் மிஞ்சு மொழிக்கான பொருள் விளங்கப்பெறுகிறது. சுந்தரரின் மிஞ்சு மொழி சில சமயங்களில் சிவனைக் கடிந்தும், கேலி செய்தும் பாடுவது போன்ற தோரணையைக் காட்டுகிறது. அவற்றின் உட்பொருளை ஆய்ந்து நோக்கும் பொருட்டே சுந்தரரின் மிஞ்சு மொழியும் உட்பொருளும் எனும் தற்போதைய ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.*

## சுந்தரரின் பாடல்களில் மிஞ்சு மொழி

### பித்தா

*இறைவனால் தடுத்தாட் கொள்ளப் படுகையில் ஆவேசமாக அவரைக் கடிந்துரைக்கும் நோக்கில் 'பித்தனோ மறையோன்' என சுந்தரர் வழக்காடியபின் அச்சொல்லையே முதலாகக் கொண்டு தமது முதற்பாடலை ஒலிக்குமாறு சிவபெருமான் ஆணையிட எழுந்ததே 'பித்தா பிறைசூடி' எனும் பாடலாகும். பித்தன்எனில் பைத்தியக்காரன்,சிவன் எனச் செந்தமிழ் அகராதியில் பொருள் காட்டப் பட்டுள்ளது. (ந.சி.கந்தையா பிள்ளை, 1951.ப.507)*

*பித்தன் எனில் பேரருள் உடையவன் எனவே, பேரருள் உடைய சிவபெருமானுக்கே, 'பித்தன்' என்னும் பெயர் உரியதாயிற்று. சிவபெருமான் பிறருக்காகத் தன்னால் இயன்றளவு செய்யும் செயல்களை யாரும் புரிந்து கொள்ள இயலாத அளவுக்குச் செய்வது, ஒருநெறிப்படாத பித்தர் செயலோடு ஒத்திருப்பதால் பித்தன்எனப்படுகிறான். அதாவதுவேண்டுவதைச் செய்தல், செய்யாமல் இருத்தல், வேறொன்றைச் செய்தல் போன்றனவாகும். பித்தன் என்றால் பெரும் கருணையாளன் என்பதே பொருள். "பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு" என்பது பழங்காலப் பழமொழி. இப்பழமொழியின் மூலமும் பெருமானின் பெருங்கருணைத் திறத்தையும் சுந்தரரின் வழக்குப் பேசிய வன்கண்மையையும் உணரலாம்.(ஸ்ரீ லஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், 1997,ப.6)*

*'பித்தா' எனும் இச்சொல்லானது சுந்தரரின் காலத்திற்கு முற்பட்ட திருஞானசம்பந்தரின் தேவாரத்தினின்றே எடுக்கப்பட்ட சொல் என்றும் சான்றுகள் காட்டுகின்றன. அத்தொடர் அமைந்த அவரது திருப்பாடல்:*

விண்ணோர் பெருமானே விகிர்தா விடையூர்தீ
பெண்ணா ணலியாகும் பித்தா பிறைசூடி
எண்ணா ரெருக்கத்தம் புலியூ ருறைகின்ற
அண்ணா எனவல்லார்க் கடையா வினைதானே
(தி.1 ப.89. பா.3)

*டையான் என்று கூறுங்கால் சதா ஒன்றையே நினைத்துருகும் தன்மையினையும் குறிக்க வல்லது. ஒரே செயலிலோ சிந்தனையிலோ ஆட்பட்டிருக்கும் எவரையும் பித்தனெனக் கூறுவது இன்றளவும் வழக்கத்தில் உள்ளது. இறைவனைப் பித்தன் என்று பாடுகையில்*

தமதடியார்களுக்குக் கருணையினை வழங்கும் பொருட்டு அடியார்களின் நலன் குறித்த ஒன்றிய சிந்தனையை மட்டுமே உடையவனே அந்தப் பரம்பொருள் என்ற பொருளையும் குறிக்க வல்லது என்றும் கொள்ளலாம்.

சுந்தரரைப் போலவே புரட்சிக் கவி பாரதியும்

"பித்த குணமுடையான் மிகத்
தன்மைக் குணமுடையான் சிலநேரம்
தழலின் குணமுடையான்"

என இறைக்குணத்தினை இவ்வாறே பாடுகிறார்.

சுந்தரர் கோபமாக 'பித்தனே' என்று எம்பெருமானை ஏசியதை இறைவன் மகிழ்ந்து ஏற்றார். எந்த ஒரு சொல்லும் செயலும் இறைவனுக்கு உகந்ததே எனவேதான் 'பித்தா' என்று இறைவனே அடியெடுத்துக் கொடுக்கிறார். (மு.சகாதேவன், 2005,ப.283) அன்று கைலாயத்தில் பெருமானை விட்டுப் பிரியும்போது 'மையல் மானுடமாய் மயங்கும் வழி, ஐயனே தடுத்தாண்டு அருள்க'என்று வேண்டினார். வேண்டியவர் மறப்பினும் பெரும் கருணையாளனான பெருமான் மறப்பரோ? சொன்னபடியே வந்து தடுத்தாட்கொண்டார். சுந்தரர் 'பித்தனோ மறையோன்' என்றதும் பெருமான் அருளால் வந்த சொல்லே என்பது தடுத்தாட்கொண்டபின் தெளிவாகத் தெரிகின்றது. இக்கருத்தையே ஸ்ரீ குருஞானசம்பந்தரின்

நீஇயற்ற ஓர்பொருளை நிச்சயித்த நாயேனும்
போய்இயற்றல் செய்யப் புரிகுவேன் நீஇயற்றல்
ஆக்காது அணுவும் அசையுமோ அவ்விகற்பம்
தாக்காத சொக்கநாதா (சொக்கநாத வெண்பா)

அருள் வாக்காலும் நன்கு தெளியலாம். (ஸ்ரீ லஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,1997,ப.6)

இறைவனது ஒவ்வொரு செயலும் அவனருளாலேதான் நடக்கின்றன என்பதனை இது புலப்படுத்துகிறது. "அவன் அருளாலே அவன்தாள் வணங்கி" (தி.8, சிவபுரா, வரி18) அருட்டுறைப் பெருமான் சுவாமிகளை நோக்கி, 'முன்பெனைப் பித்தன் என்றே மொழிந்தனை ஆதலாலே என்பெயர் பித்தன் என்றே பாடுவாய்' (தி.12 பெ.புரா. தடுத்.73) என்று அருளினமையின், இத்திருப்பதிகத்தின் முதற்சொல்லாகிய, 'பித்தா' என்பது, இறைவன் அளித்த சொல்லாதல் வெளிப்படை.

ஆக, சுந்தரர் பயன்படுத்திய 'பித்தா' என்ற சொல்லே இங்கு மிஞ்சு மொழியெனக் கொள்ளப்படுகிறது. பித்தனென்று இறைவனை ஏசியதாகவே 'பித்தா பிறைசூடி' எனும் பாடலில் வெளிப்படையாகக் கொள்ளப்பட்டாலும் அது இறைவனாலேயே வருவிக்கப்பட்ட சொல் என்றும் அதனைப் பாடுங்கால் சுந்தரர் வேறு பொருள்களில் குறிப்பிட்டுப் பாடியிருக்கிறார் என்பதும் இதன் வழி புலனாகிறது.

## சில நெல்லுப்பெற்றேன்

திருக்கோளிலியில் மழைவளம் குன்றி வறுமை தோன்ற ஆருரருக்கு நெல் அனுப்ப இயலாமல் வருந்திய குண்டையூர்க் கிழாரின் கனவிலே 'ஆருரனுக்காய் நெல் தந்தோம்' என்றருள: அவ்வாறே குவிந்த நெற்குவியலை திருவாரூர் சேர்ப்பிக்க சுந்தரர் ஏவலாளர்களைத் தந்தருள வேண்டினார். ஆயினும் 'நீள நினைந்தடியேன்' எனும் பாடலில்

'குண்டையூர் சில நெல்லுப்பெற்றேன்'
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப்பணியே'
(தி.7,ப20,பா1)

என ஆருரர் பாடுங்கால் சில நெல்லுப்பெற்றேன் எனும் சொல் குறித்துப் பல வழக்காடல்களும் பொருள்களும் இருக்கலாம். மலைபோன்ற நெற்குவியல்களாக மானுடப் பிறவியால் அள்ள முடியாத அளவுக்கு இறைவனின் கருணையை அதில் காட்டப்பெற்ற போதிலும் சுந்தரர் சில நெல்லுப்பெற்றேன் எனக் குறைத்துக் கூறியதன் காரணம் என்னவாக இருந்திருக்கும்?

குண்டையூர்க் கிழார் பல ஆண்டுகளாக நெல்மணிகளைச் சுமந்து வந்து சுந்தரருக்கு அளித்துக் கொண்டிருந்தார். அவரது இயலாமையின் காரணமாக இன்று இறைவன் குவியல்களாக நெற்குவியல்களை அளித்தபோதும் இதுகாறும் குண்டையூர்க் கிழார் தமக்களித்த நெற்கதிர்களுக்கு இவை ஈடில்லை: அவர் அளித்ததைக் காட்டிலும் இவை சில என்றே கருத வேண்டுமென குண்டையூர்க்கிழாரின் பக்திச் சிரத்தையை மேலோங்கிக் காட்டவே இச்சொல்லின் பயன்பாடு இங்கே நிலவிற்று என்ற கருத்தினைப் பலர் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

மிகப் பெற்ற நெல்லினை, ‘ சில நெல் ‘ என்றது ; குறையிரப்பால் வந்த, இளிவரல் பற்றி. ‘ ஐய சிறிதென்னை ஊக்கி ‘ (கலித்தொகை 37.) என்றாற்போல்வன காண்க.(ஸ்ரீ லஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், 1997, ப.592)இதனை மேலும் கூர்ந்து ஆயுங்கால் எவரையும் இறைவனோடு ஒப்பிட்டோ, அவரைக் காட்டிலும் சிறப்பித்துக் கூறுவதோ சுந்தரரின் வழக்கமாகாது. அவ்வாறான எண்ணத்தில் ‘சில’ என்ற சொல் உதிக்கப்பெற்றிருக்காது. இறைவனது மார்க்கமே உலகுக்குப் படியளத்தல் ஆகும். ஒவ்வொரு உயிர்க்கும் தேவையான அளவுக்கு மட்டுமே படியளத்தல் சிறப்பைத் தரும். தேவைக்கு அதிகமாகப் பெறப்படுவன இறையை மறக்கும் சூழலுக்கும் பிறரை இட்டுச் செல்லுமெனும் அற்புதக் கருத்தினை ‘சில’ எனும் அச்சொல்லிலே முன்வைக்கிறார் சுந்தரர் என உய்த்துணர நிறைய இடம் உண்டு. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே எனினும் வாழ்நாளில் ஊனுண்டு உடல் பெருக்கி உபாதை கூறுவர் என்பதும் நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ்வார். (குறள் 6)

ஐம்பொறி வாயிலாக பிறக்கும் வேட்கைகளை அவித்த இறைவனுடைய பொய்யற்ற ஒழுக்க நெறியில் நின்றவர். நிலைபெற்ற நல்வாழ்க்கை வாழ்வர். அதாவது கண், காது, வாய், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களினின்றும் தோன்றும் தீய அல்லது பேராசைகளை அழித்து இறைவனின் ஒழுக்க வழியில் நிற்பவரே நீடு வாழ்வார் என்பதற்கொப்ப சுந்தரர் தனது ஐம்பொறிகளின் உணர்வுகளுக்கு ஆட்படாமலும் தமது உலக இச்சை அல்லது கர்மாவிலும் உழன்று விட்டிடக்கூடாது என்பதனைக் கருத்தில் கொண்டும் உலக மக்களுக்கு அக்கருத்தினை வலியுறுத்திக் கூறும் பொருட்டுமே அதிகமான நெற்குவியலைச் சில எனக் குறிப்பிட்டிருப்பார். அவரவர் தேவைக்கேற்பப் பெற்றுக்கொள்ளுதலே உலகப் பற்றினின்றும் விடுபட உதவும். அதே சமயம் தாம் அதிகமான பொருளைப் பெறுவதன் வழி உலகப் பொறுப்புகள் தமக்குக் கூடி விடக்கூடாது; இதனால் இறைவனின்றும் தனக்கு நெருக்கம் குறையுமென்ற அச்சத்தை இறைவனிடமே மறைமுகமாக எடுத்துரைக்கும் விதமாகவே இச்சொல்லின் பயன்பாடு இருந்திருக்கும் என்பது கணிக்கப்படுகிறது.

‘ஆளிலை எம்பெருமான் அவை அட்டித்தரப்பணியே’ (தி7.ப.20.பா.1) என்றும் ‘அரவம் அசைத்தவனே அவை அட்டித்தரப்பணியே’ (தி7.ப.20.பா.2) என்றும் பாடி ‘பணியே’ என்று உரிமையுடன் கூறுகிறார் ஆரூரர். ‘பணியே’ என்பது பொதுவாக ஆணையிடு என்பதனை வலியுறுத்துவதாகும். ஏகாரத்தைப் பயன்படுத்தி ஆரூரர் பாடுங்கால் நீ எவர்க்கேனும் கட்டளையிட்டருள் எனும் கருத்தினையே வெளிப்படுத்துகிறது. தமக்கு இருக்கும் நட்பின் உரிமையால் அவர் இவ்வாறு பாடுவது இறைவனை ஏவுவதாகப் பொருளன்று என்பது வெள்ளிடையாகும்.

## எத்துக்கு இங்கிருந்தீர்

சேரமானுடன் தங்கியிருந்துப் பின் திருவாரூர் புறப்படும் வேளை திருமுருகன்பூண்டியிலே சுந்தரருக்கு அன்பின் அடையாளமாகச் சேரமான் பெருமான் தந்தருளிய

*நவமணிகள் கொள்ளையடிக்கப்பட்டன. அது சிவபெருமானின் ஏவலே என்பதும் பொருள்களைத் திரும்பப் பெற சுந்தரர் ‘கொடுகு வெஞ்சிலை’ (தி 7.ப49)எனும் திருப்பதிகம் பாடியருளியது அனைவரும் அறிந்ததே. ஆயினும் அப்பதிகப் பாடல்களில் தோழர் என்ற முறையில் சிவபெருமானை இருபொருள்படுமாறு பாடியுள்ளமை காணலாம்.*

இடுகு நுண்ணிடை மங்கை தன்னொடும்
எத்துக்கு இங்கிருந்தீர் எம்பிரானீரே (தி.7ப.49.பா 1)

எல்லைக் காப்பதொன்றில்லையாகில் நீர்
எத்துக்கிங்கிருந்தீர் எம்பிரானீரே (தி.7ப.49.பா 2)

*உமையம்மை, விடையூர்தி முதலியன இருந்தும் எமக்கு உதவவில்லையே; எல்லை காக்கும் திறன் இல்லையாயின் எதற்காக இங்கிருக்கிறீர் என்று வினவுவதே இப்பாடலில் வரும் மிஞ்சு மொழியாகும்.*

*ஊன்றிப்பார்த்தால் “இக்கொடியவர்கள் வாழும் இக்காட்டுப் பகுதியில் பெருமானே இங்கு ஏன் தங்கியுள்ளீர்? வேறு நல்ல இடத்திற்குப் போகலாகாதா” என்று வேண்டுவதை உணரலாம். இதுவே உண்மைப் பொருளாகவும் கொள்ளப்படும். (ஸ்ரீ லஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்,1997,ப.31)*

‘ஏறுகால் இற்றதில்லை யாய்விடில் எத்துக்கிங்கிருந்தீர்’
(தி.7ப.49.பா4)

*இளஏறு கால் முடமாகாமல் நன்றாய் இருக்கும்போது அதிலேறி நல்ல இடத்தில் போய் இருக்கக்கூடாதா? என வினவுகிறார்.*

‘ஏது காரணமேது காவல் கொண்டெத்துக் கிங்கிருந்தீர் எம்பிரானீரே’ (தி.7ப.49.பா7)

*வேடர்கள் வருவோரைத் தாக்கி அவரது உடையைப் பறித்துக் கொள்ளுகின்ற இம்முருகன் பூண்டி மாநகரிடத்து, யாது காரணத்தால், எதனைக் காத்துக் கொண்டு, எதன் பொருட்டு இங்கு இருக்கின்றீர்?*

முடவரல்லீர் இடரி லீர்முருகன்
பூண்டி மாநகர்வாய்
இடவ மேறியும் போவ தாகில்நீர்
எத்துக் கிங்கிருந் தீர்எம் பிரானீரே (தி.7ப.49.பா8)

*முடமல்லவே தாம். ஆகவே, பெயர்ந்து போதற்கண் இடரொன்றும் இல்லையே அன்றியும், நீர், விரும்பிய இடத்திற்கு இடபத்தின்மேல் ஏறியும் போவீர் என்றால், இம் முருகன் பூண்டி மாநகரிடத்து, இங்கு, எதன்பொருட்டு இருக்கின்றீர்?என்று மிஞ்சியே கேட்கிறார் சுந்தரர்.*

*இவையனைத்தும் சுந்தரர் இறைவன்பால் கொண்டிருந்த தீராக் காதலினைக் காட்டுவதைத் தெளிவாக்குகிறது. தம்பிரான் தோழன் என்ற உரிமையால் அவர் கூறும் கருத்துகள் அவர் போலவே தோழமை அன்புகொண்ட அன்பர்களுக்கும், இலக்கியச் சுவைகாணும் கலைஞர்களுக்கும் இனியவையாகத் திகழும்.*

காமன் பொடியாக் கண்ஒன்று இமைத்த
ஓமக் கடலால் உகந்த இடமாம்
தோழன் குழலாற் சேக்கை புகைத்த
தூமம் விசும்பார் சோற்றுத் துறையே

*என்ற வரிகள் சுந்தரரின் தோழமை அன்பை இறைவன் ஏற்றவர் என்பதைக் காட்டும். (க.ராதா,2005,ப567).*

*‘நீர் எத்துக்கு இங்கிருந்தீர்’ என்பது சுந்தரரின் மிஞ்சு மொழியாகக் கொள்ளப்பட்டாலும் அவர் அதனை அன்பின் மிகுதியால் இறைவனைத் தனியே அவ்விடத்தில் விட்டுச்செல்லலாகுமோ என்ற பாசத்தை விளக்குவதாயுமே பயன்படுத்தியிருக்கிறார் என்பதை உணர வேண்டும். இறைவன் அறக்கருணை, மறக்கருணை என இரு கருணைகளை வழங்கும் தன்மையாளன். அவ்விரு கருணைகளும் அவரவர் பாவ புண்ணியங்களுக்கு ஏற்பவே அமையப்பெறுகின்றன. அறக்கருணை என்பது நற்காரியங்களுக்கும் மறக்கருணை தவறான காரியங்களுக்குத் தண்டனையாகவும் கிடைக்கப்பெறுகிறது. திருடர்களாகியவர்களுக்கு மறக்கருணை*

*வழங்கும் பொருட்டே சிவபெருமான் திருமுருகண்பூண்டியிலே வீற்றிருந்தார். இவ்வுண்மையைச் சுந்தரர் அறிந்திருந்தாலும் ஈசனைக் 'காவலின்றி இங்கிருக்கிறாயே' என வினவுவது அவரது மிஞ்சு மொழியாகவே கருதப்படுகிறது. பெருமான் அருளாகிய பேரின்பத்தையே நாடியவரன்றி உலகியல் இன்பத்தில் நாட்டம் கொண்டவர் அல்லர் என்பதை எடுத்துக்காட்டுவதே திருமுருகன்பூண்டி வரலாறு. (ஸ்ரீ லஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், 1997, ப.30)*

## இவரலாது இல்லையோ பிரானார்

*திருப்பாச்சிலாச்சிராமத்தில் ஆரூரர் பொருள் வேண்டினார்.ஆனால் பெருமானோ பொருள் கொடுக்கவில்லை.தோழர் என்ற முறையில் இருபொருள்பட இங்கும் பாடுகிறார் சுந்தரர்.*

வைத்தனன் தனக்கே தலையும்என் நாவும்

.......................................................

இவரலா தில்லையோ பிரானார் (தி.7ப.14.பா1)

*'இல்லையோ' என்பதில் வரும் ஓகாரத்தை எதிர்மறையாக்கி,'இவர் நமக்கு அருள் செய்யவில்லையாயின் இவரையன்றி நமக்குப் பிரானார் பிறர் இல்லையோ?' எனப் பொருள் கூறுபவர்களும் உள்ளனர்.*

*'இவரலாது இல்லையோ பிரானார்' என்று பாடுகையில் இவரல்லாது வேறு தலைவர் இல்லையோ? இவர் கொடுக்காவிட்டால் வேறு தலைவரிடம் பெறுவேன் என்னும் கருத்துப்படப் பாடினார் என்பது வெளிப்படையாக அறியும் பொருள். ஆனால் உண்மை அதுவன்று. இவரன்றி நமக்குப் பிரானார் வேறு இல்லை என்பதே முடிவு என்று அருள்கிறார். உலக உயிர்களுக்குப் படியளக்கும் மூர்த்தமாகவே மகேஸ்வர மூர்த்தம் அமையப்பெற்றுள்ளது. ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் கேட்டதும் படியளக்கும் அல்லது பொருள் வழங்கும் எம்பிரான் சுந்தரரின் தேன்தமிழ் கேட்பதற்காகப் பொருள் தருவதைத் தாமதப்படுத்தியது வன்தொண்டருக்கு இயற்கையான கோபத்தை வரவழைப்பது இயல்பு என்பதை நாம் உணர்தல் வேண்டும். ஆயினும் இறைவன்பால் கொண்ட கோபம் அன்பின் மிகுதியால் வரப்பெற்றதே. அவ்வன்பின் வெளிப்பாடே இறைவனையன்றி வேறு தலைவனோ நம்மைக் காக்கும் சக்தி படைத்தவனோ வேறு எவரும் இருக்க முடியாது என்று பாடினார். அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்பர். உலக நடப்புகளுக்கு அவனே வித்தாகிறான்.*

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல. (குறள் 4)

*விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளை பொருந்தி நினைக்கின்றவர்க்கு எப்போதும் எவ்விடத்திலும் துன்பம் இல்லை. எதிலும் விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளை மனத்தால் எப்போதும் நினைப்பவருக்கு உலகத் துன்பம் ஒரு போதும் இல்லை எனும் கருத்தினைத் தெளிவாக உணரலாம்.மேலும் இறைவன் ஒருவனேயன்றிப் பலர் அல்லர் என்பதையும் இது உணர்த்துகிறது. 'வைத்தனன் தனக்கே' எனும் பாடலில் இவ்வுண்மை புலப்படுகிறது. சைவ சித்தாந்தமும், முற்றழிப்பைச் செய்யும் கடவுள் ஐந்தொழிலுக்கும் கடவுள் ஆகிறான். ஆதலால், அவனே முழுமுதலும் ஆவான் எனக் கூறுகிறது. (நாகப்பன் ஆறுமுகம்,2008.ப.128)*

*'அற்றவர்க்கு அற்ற சிவன்' எனத் திருஞானசம்பந்தர் "மங்கையர்க்கரசி" (தி.3 ப.120 பா2) எனும் பதிகத்தின் இரண்டாம் பாடலில் குறித்ததுபோல் இங்கு இப்பதிகம் மூன்றாம் பாடலிலும் 'அற்றவர்க்கு அருள் செய் பாச்சிலாச்சிரமத்து அடிகள் தாம் யாது சொன்னாலும் பெற்றபோது உவந்து, பெறாவிடில் இகழில் இவரலாது இல்லையோ பிரானார்' (தி.7ப.14.பா3) எனக் குறிப்பிட்டுள்ளதிலிருந்து கண்டு கொள்ளலாம். மேலும் உலகியல் நிலையில் பெற்றபோது உவத்தலும் பெறாதபோது இகழ்தலும் வழக்கமென்பதையும் இது*

குறிப்பிட்டுக் காட்டுகிறது

அவர் பயன்படுத்திய இவரலாது இல்லையோ பிரானார் எனும் வரிகள் மிஞ்சு மொழியாகப் பார்க்கப்பட்டாலும் அதன் உட்பொருள் வேறு என்பதை உணர்த்தி உலகில் வழக்கமாக நடைபெறும் மேற்குறிப்பிட்ட செயல், அதாவது இறைவன் அளிக்கப் பெறும்போது அவனைப் புகழ்தலும் பெறாதபோது இகழ்தலும் சுந்தரருடைய வழக்கமன்று என்பதனையும் தெளிய வைக்கிறது. “வாயினாற்கூறி மனத்தினால் நினைவான் வளவயல் நாவல் ஆரூரன்” *(தி.7ப.14.பா12)* என்று தமது நிலையையும் குறிப்பிட்டுக் கூறுகிறார் சுந்தரர். *(ஸ்ரீ லஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், 1997, ப.18)*

## நாம் இவர்க்கு ஆட்படோமே

திருஎதிர்கொள்பாடியைத் தொழுது திருவேள்விக்குடப் பெருமானையும் திருத்துருத்திப் பெருமானையும் உடன் வைத்துப் பாடிய திருப்பதிகம் “மூப்பதுமில்லை பிறப்பதுமில்லை” *(தி7.ப18)* என்பது.

மூப்பதும் இல்லை பிறப்பதும்
இல்லை இறப்பதில்லை

................................................

ஆர்ப்பது நாகம் அறிந்தோமேல்
நாம்இவர்க் காட்பேடோமே (தி7.ப18.பா1)

ஆராயுங்கால் எங்கள் தலைவர், பிறத்தலும் இல்லை; பின்பு வளர்ந்து முதுமை அடைதலும் இல்லை; முடிவில் இறந்தொழிதலுமில்லை; உறைவிடம் காட்டிடத்துள்ளது; அதுவன்றி ஊர்களுள் தமக்கு உரித்தாகக் காப்பது திருவேள்விக்குடியும், தண்ணிய திருத்துருத்தியும், அன்றியும் அரைக்கண் இறுகக் கட்டுவது பாம்பு; இவற்றை முன்பே அறிந்தோமாயின், இவர்க்கு நாம் ஆட்படா தேயிருப்பேம். இவற்றை அறிந்தோமாயின், இவர்க்கு நாம் ஆட்படா தொழிவேமோ!

அதாவது பாடலில் குறிப்பிடப்படும் அனைத்தையும் முன்பே அறிந்திருந்தோமானால் இவர்க்கு நாம் ஆட்பட்டிருக்க மாட்டோம் என்பது மேலோட்டமான கருத்தாக அமையும். உண்மைப் பொருள் யாதெனில், காக்கும் தொழிலையும், துயர் தீர்க்கும் பணியையும், பிறப்பை வென்ற நிலையான தன்மையினையும், இப்படிப்பட்ட இறைத்தன்மை கொண்டவனின் சிறப்பினை முன்பே உயிர்கள் யாவும் அறிந்திருப்பின் இவருக்கு நாம் ஆட்படாமல் இருக்க முடியுமோ என்பதுவேயாகும்.

ஆட்படோமே என்பதில் வரும் ஏகாரத்தை அசையாகக் கொண்டால் ஆட்படோம் என்ற பொருள் தரும். ஏகாரத்தை வினாவாகக் கொண்டால் ஆட்படாமல் இருப்போமோ எனும் வினாப்பொருளைத் தரும். இதுவே சுந்தரரின் மொழிச்சிறப்பெனலாம்.*(ஸ்ரீ லஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், 1997, ப.577)*

## முடிவு

சுந்தரர் இறைவனை வாழ்த்தியும் வைதும் போற்றினார். இறைவனிடம் கொண்ட தோழமை காரணமாக அவரைச் சுந்தரர் பழிப்பது போலப் புகழும் பாடல்கள் பல பாடியுள்ளார். இதுகாறும் சுந்தரரின் பாடல் வரிகளில் காட்டப்படும் மிஞ்சு மொழி அவரைப் பழித்துப் பேசுவதாயும் வஞ்சப் புகழ்ச்சியாயும், வேறு பொருள் சுட்டுவதாயும் அமையப் பெற்றிருந்ததாகவே அனைவரும் அறியப்பெற்ற கூற்றாகும். இந்த மிஞ்சு மொழியும் அதன் உட்பொருளும் தவறான கருத்தாக ஏற்றுக்கொள்ளும் அபாயம் இருந்தமையால் அவை ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டியது அவசியமாகிறது. அவரது நட்பின் வெளிப்பாடும் உரிமையுமே இதுபோன்ற சொற்களையும் பாடல்களையும் தருவித்தது எனும் வெளிப்படையான கருத்து மேலோங்கியிருந்தாலும் அச்சொற்களின் உண்மைப் பொருள் சிவனுக்கும்

சுந்தரருக்குமிடையே இருந்த அன்பின் வெளிப்பாடே என்பது பல தருணங்களில் புலனாகிறது. இது ஆரூரர் பெருமானுக்கே உரிய மொழிநடை என்பது பெருமைக்குரியதே. சைவ சித்தாந்தம், இறைவன் நம்மோடு ஒன்றாய், உடனாய், வேறாய் இருக்கிறான் என்று கூறுகிறது. (ப.முத்தையா பிள்ளை, 1989.ப.78). இக்கருத்துகளின் வழி தோழமை அன்புடன் 'இறைவன் எங்கோ தூரத்தில் இல்லை; நம் அருகில் நம் உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் நண்பனாக இருக்கிறான்' என்ற உணர்வோடும் உலக மக்கள் வாழ்வதற்கான அறநெறிகளை மறைமுகமாகச் சில சொற்களின் மூலம் வெளிக்காட்டியதும் அவரது தனிச்சிறப்பே.

## Bibliography


Irasamanikkanar,Ma.(2002). *Periya purâna ârâycci*. Chennai: Alamu Publication.

Kayilai Subramaniya Thesika Gnanasambantha parampachariya Swamigal. (1964). Cuntaramurti cuvâmikal tçvâram. Mayiladuthurai: Gnnasambanthan Publication.

Kumaresamurthy,C.(2004*). Caiva camaya ulakil nâlvari celvâkku*. Chennai: The Parkar Publishers.

Muthukumaraswamigal. (1992). *Cuntaramûrtti cuvâmikal tçvâram*. Thiruppananthal: Atthiccudi Publications.

Nadarasan,P.R.(2005). *Tiruttondar purânam enum periya purânam*. Chennai: Uma publications.

Nagappan Arumugam.(2008). *Cittânta caivam.* Kuala Lumpur Siva Enterprise.

Nallasivam,G.P. (2008). *Tçvâram unarttum valipâtu*. Thanjavur: Professor Tha.Ko.Paramasivanar foundation.

Narayana Veluppillai,Ma.(2004). *Cuntaramûrtti cuvâmikal arulic ceyta tçvâram*. Chennai: Varthamanan Publications.

Paramasivam,Ko.,Nallanayagi,Pa & Nallasivam,Ko.Pa.(2005). *Cuntarar âyvu mâlai*. Varanasi: Suntharar's Literary Research.

Puthuvai Vayi.Narayanasamy. (2010). *Periyapurâna âyvu nûl.* Pondichery: Vijaya Publication.

Puthuvai Vayi.Narayanasamy. (2011). Panniru tirumurai âyvu nûl. Chennai: Manivasagar Publications.

Rajantheran,M.,Silllalee,K & Viknarasah,R. (2012). *An Introduction To Hinduism.* Petaling Jaya: Malaysia Hindu Sangam.

Rattina Sababathy.(1987). *Caiva camayak kuravar nâlvar*. Kuala Lumpur: Saravanan Publications.

Sanga Nadaraja.(1998). *Caiva camaya âccâriyar nâlvar*. Kuala Lumpur: Malaysia Indian Congress.

Sri Lasri Shanmuga Thesiga Gnanasambantha pararachariya Swamigal. (1997). Cuntarar tçvâram çlâm tirumuai. Mayiladuthurai: Gnanasambanthan Publication.

Vellaivaranar, Ka. (2011). *Panniru tirumurai varalâru.* Chennai: Ramaiya Publications.

http://www.tamilvu.org/library.

# மலேசியத் தமிழ் மேடை நாடகக்கலை வளர்ச்சியில் தமிழகத்தின் பங்கு

## The Role of Tamil Nadu in the Development of Malaysian Tamil Stage Dramas

இணைப்பேராசிரியர் டாக்டர் வே.சபாபதி
Associate Professor Dr.V.Sababathy

***Abstract***

Tamil stagecraft has retained its credentials even in the immigrant countries. This Paper deals with how Malaysian Tamil stage has its impact of Tamil Nadu. In the beginning, Malaysian Tamils adopted street drama in the rural Malaysia and stage drama in the urban areas. In the early days of the Twentieth Century so many stage artists with their theatre have visited Malaysia. These theatre artists have also trained the local artists in Malaysia. The Theatre artists in Tamil Nadu who later became Cine Artists also have contributed their part in the development of stagecraft in Malaysia. Therefore, there is a similarity in the stagecraft of Tamil Nadu and Malaysia. Though after the Second World War, Malaysian Tamil stage tried to establish its own base, it has the resemblance of Tamil Nadu stage. Before the Second World War, the themes were Puranas and later social themes after thirties. The plays of many are dramatists like Sankaradas Swamigal, Pammal Sambanda Mudaliar have been staged here and through them Malaysian stage was developed.

**Key Words:** Tamil Nadu, Malaysia, Street Drama, Stage Drama, Actors, Stage, Stage, Stage Craft.

### முன்னுரை

மலேசியாவில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொடங்கிய காலனித்துவ ஆட்சியில் ஐரோப்பிய முதலாளிமார்களால் இந்தியாவிலிருந்து தமிழர்கள் உடலுழைப்புத் தொழிலாளர்களாகப் பெருமளவில் கொண்டு வரப்பட்டுத் தோட்டப்புறங்களில் குடியமர்த்தப்பட்டனர். அதே நேரத்தில் கல்வியறிவு பெற்ற தமிழகத் தமிழர்களும் இலங்கைத் தமிழர்களும் வணிகப் பெருமக்களும் சிறிய அளவில் மலேசியா வந்து நகர்ப்புறங்களில் குடியேறி, தங்களின் பணிகளை மேற்கொண்டனர். மலேசியா வந்த தமிழர்கள் தாயகத்திலிருந்து மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, நாகரிகம்,

Dr.V.Sababathy is a Associate Professor in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. sabavenu@um.edu.my.

சமயம், வாழ்வியல் முறைகள், நம்பிக்கைகள் போன்றவற்றையும் தங்களுடனேயே கொண்டு வந்து தொடக்கத்திலிருந்தே அவற்றை மலேசிய மண்ணில் பின்பற்றியும் தொடர்ந்து மேற்கொண்டும் வருகின்றனர். அவ்வாறு அவர்கள் மேற்கொண்டு வருவனவற்றுள் ஒன்றாகத் தமிழர்களின் கலைகள் திகழ்கின்றன. இம்மலேசிய மண்ணில் அவர்கள் மேற்கொண்டு வளர்த்த கலைகளுள் நாடகமும் ஒன்று. இக்கட்டுரை மலேசியாவில் இரண்டாம் உலகப்போருக்கு முன் தமிழில் தோன்றி வளர்ந்த நாடகக்கலை வளர்ச்சிக்குத் தமிழகத்தின் பங்களிப்பினை வரலாற்று நோக்கில் விளக்குவதனை முதன்மை நோக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

## மலேசியத் தமிழ் நாடகவகைகள் ஓர் அறிமுகம்

மலேசியாவில் தமிழில் நாடகங்கள் நான்கு வகையாகத் தோன்றி வளர்ந்துள்ளன. அவை தெருக்கூத்து, மேடை நாடகங்கள், வானொலி நாடகங்கள், தொலைக்காட்சி நாடகங்கள் ஆகியன. இவற்றுள் தெருக்கூத்தும் மேடை நாடகங்களும் இங்கு மேடைகளிலும் கோயில் மண்டபங்களிலும் அரங்கேற்றப்பட்டன. தமிழகத்தில் தெருக்கூத்துகள் மக்கள் அதிகமாகக் கூடும் தெருக்களில் நடத்தப்பட்டன. ஆனால், இங்குத் தெருக்கூத்துகள் தோட்டப் புறங்களில் நடத்தப்பட்டன. அவை மிகுதியும் கோயில் மண்டபங்களில் நடத்தப்பட்டன. இதற்கு இந்நாட்டின் வானிலை முக்கியக் காரணமாகச் சொல்லப்படுகின்றது. எல்லாக் காலப்பகுதியிலும் எந்த நேரத்திலும் மழை பொழியும் வானிலையைக் கொண்ட நாடு மலேசியா. அதனால் மண்டபம் போன்ற இடங்களில் தெருக்கூத்துகள் நடத்தப் பட்டுள்ளன. தெருக்கூத்தில் மேடை நாடகத்தின் போக்கும் சாயலும் காணப் பட்டாலும் அதனை முழுநாடக வடிவம் என்று சொல்வதற்கில்லை. ஏனெனில், தெருக்கூத்து மேடைநாடகத்தைப் போன்று முறையான கட்டமைப்பு, கட்டுக்கோப்பு ஆகியவற்றைக் கொண்டிராமல், நடிகர்கள் தங்கள் விருப்பம்போல் சொந்த வசனங்களுக்கும் பாடல்களுக்கும் இடம் தந்தும் முறையான நேரக்கட்டுப்பாட்டைப் பின்பற்றாமலும் விடிய விடிய நடத்தப்பட்டுள்ளன. தவிர, தெருக்கூத்து கட்டுக்கோப்பு குறைந்த முரட்டுக்கலை என்றும் வருணிக்கப்படுகின்றது. எனினும், இங்குப் பின்னாளில் மேடை நாடகங்கள் தோன்றி வளர்ந்ததற்கான முன்னோடி முயற்சிகளாகத் தெருக்கூத்துகளைக் கருதுவதில் தவறிருக்க முடியாது. இரண்டாம் உலகப்போருக்குப் பின்னரே அதாவது ஜப்பானியர் ஆட்சிக்குப் பின்னரே இங்குத் தமிழில் வானொலி, தொலைக்காட்சி நாடகங்கள் மின்னூடகங்களின் துணைகொண்டு வளர்க்கப்பட்டன.

## தெருக்கூத்தும் மேடை நாடகங்களும்

தெருக்கூத்தும் மேடை நாடகமும் காலங்காலமாகத் தமிழர்களின் மரபில் இருந்து வருவன. இவற்றுள் மேடை நாடகம் மேனாட்டவரின் வருகைக்குப்பின் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மேனாட்டு மேடை நாடகத்தின் கூறுகளைப்பெற்று மேனாட்டுப் பாணியில் நடத்தப்பட்டன. தொடக்கத்தில் மலேசிய மண்ணில் தமிழர்களால் தெருக்கூத்துகளே பரவலாக நடத்தப்பட்டுள்ளன. தொடக்கத்தில் பாமரமக்களே தமிழகக் கிராமங்களிலிருந்து மிகுதியும் இந்நாட்டின் தோட்டப்புறங்களில் குடியேறியதால், பாமரமக்களின் கலையாகக் கருதப்பட்ட தெருக்கூத்துகளே தோட்டப் புறங்களில் பரவலாக நடத்தப்பட்டன. குறிப்பாக, தோட்டப்புறங்களிலுள்ள கோயில்களின் ஆண்டுத் திருவிழாக்களில் தெருக்கூத்துகள் தவறாது நடைபெற்று வந்தன. தமிழகத்தைப் போலவே இங்கும் தோட்டங்களில் அல்லி அரசாணி மாலை, கட்டபொம்மன் கதை, தேசிங்குராஜன் கதை,

அரிச்சந்திரன் கதை, பவளக்கொடி, வள்ளித் திருமணம் போன்ற மக்கள் மத்தியில் செல்வாக்கும் மதிப்பும் பெற்றிருந்த கதைகளே மிகுதியாகத் தெருக்கூத்துகளாகத் தொடர்ந்து நடத்தப்பட்டன. அதேபோன்று இந்திய நாட்டின் மாபெரும் இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதம் ஆகியனவும் இங்குத் தெருக்கூத்துகளாக நடத்தப்பட்டுள்ளன. இராமாயணக் கதையை ஏழு காண்டங்களாகப் பிரித்தும் மாகாபாரதத்தின் கதையைப் பதினெட்டுக் காண்டங்களாகப் பிரித்தும் நாளொன்றுக்கு ஒரு காண்டமாகத் தெருக்கூத்து தொடர்ந்து தோட்டங்களில் நடத்தப்பட்டன. அவ்வகையில் தெருக்கூத்தே இங்கு மேற்கொள்ளப்பட்ட முதல் நாடக வடிவமாகக் கொள்வதில் தவறிருக்க முடியாது.

ஆனால், இன்று இங்குத் தெருக்கூத்து நடத்தப்படுவது என்பது அறவே இல்லாமல் போய்விட்டது. இதற்குக் கல்வி, பொருளாதார வளர்ச்சியால் விளைந்த சமூக மேம்பாடு, அதனால் மக்கள் பெற்றுள்ள விழிப்புணர்ச்சி போன்றவற்றால் தோட்டப்புற மக்கள் நகர்ப்புறங்களுக்குப் பெருமளவில் இடம் பெயர்ந்ததனால் இன்றைக்குத் தோட்டப்புறங்களில் தமிழ் மக்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து விட்டது. எனவே, தோட்டங்களில் தமிழர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டதாலும், தமிழர்களின் மத்தியில் படித்த மக்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளதாலும் பாமரமக்களின் கலையாகக் கருதப்பட்ட தெருக்கூத்து நடத்தப்படாத நிலை இன்று உள்ளது. அதனால், இன்று மலேசிய மண்ணில் தமிழர்களின் ஆதிகலையான தெருக்கூத்து கவனிப்பாரற்ற நிலையில் உள்ளது.

தமிழகத்தைப்போலவே இங்கும் படித்த மக்கள் நகர்ப்புறங்களில் மேனாட்டுப் பாணியிலான மேடை நாடகங்களைத் திட்டமிட்டு இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் குறிப்பாக முப்பதுகளிலிருந்து அரங்கேற்றி வந்துள்ளனர். தோட்டப்புறங்களில் மக்களின் சுயமுயற்சியிலும் நகர்ப்புறங்களில் தமிழக நாடகக்குழுக்களின் வருகையாலும் நாடகக்கலை இங்குப் படிப்படியாக வளர்ந்தது. இதனால் தொடக்கத்தில் நாடகக்கலை தோட்டப்புறங்களில் கட்டுக்கோப்புக் குறைந்து கரடுமுரடாகவும் நகர்ப்புறங்களில் கட்டுக்கோப்பாகவும் என இருவேறுபட்ட நிலையில் வளர ஆரம்பித்தன.

மேடை நாடகங்கள் இன்றளவிலும் தொடர்ந்து நகர்ப்புறங்களில் தயாரிக்கப்பட்டு, அரங்கேற்றப் படுகின்றன. ஆனால், தோட்டப்புறங்களில் நாடகக்கலை அறவே இல்லாமல் போய்விட்டது. இன்று மேடை நாடகங்களுக்கென்று தனியாக நாடக ஆசிரியர்கள், நடிகர்கள் இங்கு நிறையப்பேர் நகர்ப்புறங்களில் உள்ளனர். எனினும், சினிமாவின் தாக்கமும் தொலைக்காட்சி நாடகங்களின் ஆதிக்கமும் மேடை நாடகக்கலையை அதிகமாகவே பாதிப்படையச் செய்துள்ளன. இன்று பல்வேறு சவால்களுக்கும் போராட்டங் களுக்கும் இடையில் மேடை நாடகக்கலை இங்கு வளர்ந்து கொண்டிருக்கும் நிலை காணப்படுகின்றது.

## இரண்டாம் உலகப்போருக்குமுன் மேடை நாடகங்கள்

நாடகக்கலை இங்கு முதலில் தோட்டப்புறங்களில்தான் காலூன்றத் தொடங்கியது. அன்றைய மலாயாவிற்குத் தமிழகத்தின் தெருக்கூத்துக் கலைஞர்களும் புதுவாழ்வு தேடித் தோட்டத் தொழிலாளர்களாகப் புலம் பெயர்ந்திருந்தனர். அவர்கள் மூலமாகத் தொடக்கத்தில் இங்குத் தெருக்கூத்துக்கலை பரவத் தொடங்கிற்று. பொதுவாக, பொழுதைப் பயனுள்ள வழியிற் கழிப் பதற்கும் வாழ்க்கை நெருக்கடிகளிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்கும் ஆடல், பாடல் உள்ளிட்ட கலைகள்

மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வகையில் தெருக்கூத்துதான் தோட்டத் தொழிலாளர்களின் முதன்மைப் பொழுதுபோக்குச் சாதனமாக அப்போது விளங்கிற்று. முதலில் தெருக்கூத்துக் கலைஞர்களும் ஏற்கெனவே தமிழகத்தில் தெருக்கூத்துகளைப் பார்த்து மகிழ்ந்திருந்த மக்களும் இணைந்து தங்களுக்குத் தெரிந்த வரையில் தாங்கள் குடியேறிய தோட்டப்புறங்களில் தெருக்கூத்துகளை நடத்தி, அதனை வளர்க்கலாயினர். தமிழகத்தில் பார்த்து மகிழ்ந்த தெருக்கூத்துகளையே இங்கும் நடத்தினர். இம்மக்கள் பாமரர்களானதால் செவித்திறம், கலையார்வம், பயிற்சி ஆகியவற்றை மட்டும் மூலதனமாகக்கொண்டு வசனங்களையும் பாடல்களையும் மனனம் செய்து தெருக்கூத்துகளில் ஆடியும் பாடியும் பேசியும் நடித்தனர். உண்ண உணவில்லாத நிலையிலும் அவர்கள் தீப்பந்தங்களைக் கொளுத்தி வைத்தும் கூத்துகளை நடத்தி வந்துள்ளனர். இவர்கள் நடத்திய தெருக்கூத்துகள் யாவும் இந்துப் புராண, இதிகாசங்களை மையமாகக் கொண்டிருந்தன.

நாடகம் நடத்துவதற்கு இன்றைக்கு இருக்கும் வசதிவாய்ப்புகளும் சூழல்களும் அக்காலப்பகுதியில் அறவே இல்லை. தோட்ட மக்களிடம் நாடக ஆர்வம் காணப்பட்டாலும், நாடகங்களை நடத்துவதற்கான அரங்க வசதிகள் அப்போது கிடையாது. அதனால், தொடக்கத்தில் கீற்றுக் கொட்டகைகள், தற்காலிகக் கூடாரங்கள், கோயில் மண்டபங்கள் போன்றவற்றில் தெருக்கூத்துகளையும் நாடகங்களையும் நடத்த வேண்டிய கட்டாய நிலையில் இருந்தனர். தோட்டப்புறங்களில் கோவிலோடு இணைந்திருந்த மண்டபங்களில் மிகுதியும் நடத்தினர்.

நகர்ப்புறத் தமிழர்களோ தொடக்கத்தில் சீனர்களின் நிரந்தர அரங்குகளை வாடகைக்கு அமர்த்தி, நாடகங்களை அரங்கேற்றியுள்ளனர். இங்கு மலேசியச் சீனர்களைப்பற்றியும் அவர்களின் நாடகக்கலையைப் பற்றியும் ஓரளவு தெரிந்து கொள்வது மலேசியாவில் தமிழர்களின் மேடை நாடகக்கலையைப் புரிந்துகொள்ளத் துணை செய்யும். தமிழர்களைப்போன்றே சீனர்களும் தொடக்கத்தில் இந்நாட்டிற்கு ஈயச்சுரங்கங்களிலும் காய்கறித் தோட்டங்களிலும் வேலை செய்வதற்காகவே வந்தனர். ஆனால், அவர்கள் யாருடைய அழைப்பின் பேரிலோ அல்லது கட்டுப்பாட்டின் பேரிலோ இம்மண்ணிற்கு வராத காரணத்தால், மிகச் சுதந்திரமாக இந்நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளிலும் வணிக நடவடிக்கைகளிலும் தொடக்கத்திலிருந்தே ஈடுபட்டுப் பெரும் பணக்காரர்களாயினர். அதன் விளைவாக இந்நாட்டின் தொழில்துறைகளிலும் நில மேம்பாடுகளிலும் பெரிய அளவில் முதலீடுகள் செய்து தங்களின் சொத்துடைமையைப் பெருக்கிக் கொண்டனர். இரண்டாம் உலகப்போருக்கு முன்பும் பின்பும் அதாவது நாடு சுதந்திரம் பெறுவதற்குமுன் (1957) சீனர்களுக்கு நாடு முழுவதும் நிரந்தர அரங்குகள் பல இருந்தன. அதனால் தொடக்கத்திலிருந்தே சீனாவிலிருந்து நாடகக்கலைஞர்களைக் கொண்டுவந்து இங்கு சமயச்சார்புடைய நாடகங்களை நடத்தியுள்ளனர். இந்நாடகங்கள் சீன ஓபராக்கள் என்று அழைக்கப்பட்டது. சீனக்கோயில்களில் திருவிழாக் காலங்களில் வாரக்கணக்கில் இச்சீன நாடகங்கள் நடத்தப்படுவது வழக்கமாயிருந்தது. பகல், இரவு எனத் தொடர்ந்து நடத்தப்பட்ட இந்நாடகங்களை அன்று பெருந்திரளான சீனமக்கள் பார்ப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இஃது இன்றும் சீனர்களால் தொடர்ந்து நடத்தப்படுகின்றது. ஆனால், இன்று இந்நாடகங்களைப் பார்ப்போர் எண்ணிக்கை சீனர்கள் மத்தியில் வெகுவாகக் குறைந்து விட்டது. முதியோர் மட்டுமே அதனை அமர்ந்து பார்க்கும் நிலை இன்று

காணப்படுகின்றது. இந்நாடகங்களைக் காணும் சீன இளைஞர்கள் மிகக் குறைவு. எனினும், இந்நாடகங்களை மக்கள் பார்க்கிறார்களோ இல்லையோ அவை தொடர்ந்து சீனர்களால் இன்றளவிலும் நடத்தப்படுகின்றன. ஏனெனில், இந்நாடகங்கள் தெய்வங்களுக்காகப் படைக்கப்படுவதால் மனிதரசிகர்களைப் பற்றி சீனர்கள் கவலைப்படுவதில்லை. தவிர, சீனக்கோயில்களும் செல்வாக்குமிக்க சீனர்களும் மிகுந்த பொருள்பலம் கொண்டிருப்பதால் கலைஞர்களுக்குப் போதிய பொருள் தந்து சமயச்சார்புடைய இந்நாடகங்களை விடாமல் தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

மலேசியத் தமிழர்களின் நிலையோ சீனர்களைக் காட்டிலும் முற்றிலும் மாறுபட்டது. பல்வேறு சிக்கல்களுக்கும் போராட்டங்களுக்கும் இடையில் இங்கு மேடை நாடகக்கலையை வளர்த்துள்ளனர். மேடை நாடகம் நடத்துவதற்குத் தேவைப்படும், நாடகத்திற்கான தளவாடப் பொருள்கள், நாடகம் நடத்துவதற்குரிய நிரந்தர அரங்குகள் போன்றவை இல்லாமல் தொடக்கத்தில் மலேசியத் தமிழர்கள் சிரம்ப்பட்டுள்ளனர். எனவே, சீனர்களிடமிருந்து அரங்குகளை வாடகைக்குப் பெற்று நாடகங்களை நடத்தியுள்ளனர். தவிர, நாடகத்திற்குத் தேவைப்பட்ட ‘கேஸ் லைட்’ போன்றவற்றைத் தமிழர்கள் சீனர்களிடமிருந்தே வாடகைக்குப் பெற்றுள்ளனர். ஆனால், காலப்போக்கில் சினிமாக்களின் வருகைக்குப் பின்னர், கோலாலும்பூரில் இருந்த தியேட்டர்களுள் குறிப்பாக கொலிஸியம், லிடோ, மெட்ராஸ் தியேட்டர், இந்துஸ்தான் தியேட்டர் போன்றவற்றில் தமிழ் நாடகங்கள் நடத்தப்பட்டன.(மணிசேகரன்., பக். 1617) இன்றும்கூட மலேசியத் தமிழர்களுக்குச் சொந்தமான அரங்குகள் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே இங்கு உள்ளன. அதனால், இன்றளவிலும் நாடக அரங்கிற்காகப் பிறரை நாட வேண்டிய நிலையே உள்ளது.

## தொடக்ககால மேடை நாடகங்கள்

இந்நாட்டில் தமிழில் மேடை நாடகம் 1910 ஆம் ஆண்டு வாக்கில்தான் தோன்றி வளரத் தொடங்கியதாகக் குறிப்புகள் காட்டுகின்றன. இதற்குமுன் மேடை நாடகம் அரங்கேற்றப் பட்டதற்கான சான்றுகள் ஏதும் காணப் படவில்லை. அவ்வகையில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே இங்குத் தமிழில் மேடை நாடகக்கலை வளரத் தொடங்கிற்று எனலாம். இவ்வளர்ச்சியில் தமிழ் நாட்டின் பங்களிப்பு கணிசமாகக் காணப்படுகின்றது. மலேசியத் தமிழ் மக்களின் கலை, பண்பாட்டு வேர்கள் தமிழகத்தில்தான் உள்ளன என்பது அறிந்த ஒன்று. அதனால், எதைத் தொடங்கினாலும் அதற்குத் தமிழகத்தையே மலேசியத் தமிழர்கள் முன்னோடியாகவும் முன்மாதிரியாகவும் கொண்டிருந்ததில் வியப்பேதுமில்லை.

## வடமலேசியாவில் தமிழக மேடை நாடகக்குழுக்கள்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் குறிப்பாக, இருபதாம் நூற்றாண்டின் இருபதுகளிலும் முப்பதுகளிலும் தமிழகத்திலிருந்து புகழ்பெற்ற பல நாடகக்குழுக்கள் நாடகங்களை நடத்துவதற்காக அன்றைய மலாயாவிற்கு வந்து சென்றுள்ளன. இக்குழுக்கள் மலேசியாவின் பிறபகுதிகளைவிட, வடமலேசிய மாநிலங்களான பினாங்கு, கெடா, வட பேராக் ஆகியவற்றில்தான் அதிகமாகத் தங்கியிருந்து புராண, இதிகாச, சமய, வரலாற்றுப் பின்னணி கொண்ட நாடகங்களை மாதக்கணக்கில் நடத்தியுள்ளன. ஏனெனில், பினாங்குத் துறைமுகமே தமிழகத்திலிருந்து கப்பலில் வரும் பயணிகளுக்குத் தரையிறங்கும் துறைமுகமாக இருந்தது. அதனால், பினாங்கில் இறங்கும் நாடகக்குழுக்கள் வடமலேசியாவிலேயே மிகுதியாகத் தங்கியிருந்து நாடகங்களை நடத்தியுள்ளன.

வடமாநிலங்களில் நாடகங்களை நடத்திக் கொண்டு வரும்போதே மாதங்கள் பல ஓடிவிடுவதால், தமிழக நாடகக்குழுக்கள் மீண்டும் தமிழகத்திற்குத் திரும்பும் நிலை அதிகமாகக் காணப்பட்டது. வடமலேசியத் தமிழர்களிடையே நாடகக்கலைமீது மிகுந்த ஆர்வத்தையும் ரசனையையும் இக்குழுக்கள் ஏற்படுத்தின. அதனால், நாட்டின் பிறபகுதிகளைவிட வடமலேசியாவில்தான் நாடகக்கலை ஆழமாக வேர்விட்டு வளரத் தொடங்கியதைக் காணமுடிகின்றது. இதன் விளைவாகப் பின்னாளில் உள்ளூரிலேயே நாடகக்கழுக்கள் தோன்றும் வாய்ப்பும் சூழலும் உருவானது.

## இந்து விநாயக சபா

இந்து விநாயக சபா என்ற தமிழ் நாடகக்குழுவே மலேசியாவில் நாடகம் நடத்தவந்த முதல் நாடகக்குழுவாக அறியப்படுகின்றது. (மணிசேகரன்.அ., ப.13) இக்குழு 1910இல் பினாங்குக்குக் கப்பலில் வந்து பினாங்கு, கெடா ஆகிய வடமாநிலங்களில் புராண, இதிகாச நாடகங்களை நடத்தியுள்ளது எனும் குறிப்புக் கிடைக்கிறது. (சந்திகாந்தம்.ப., ப.202) இந்நாடகக்குழுவில் இடம் பெற்றிருந்த வாத்தியார் கலியபெருமாள் தேவர் பின்னர், வடமலேசியாவில் சுங்குரும்பை (புக்கிட் மெர்த்தாஜம்) எனும் இடத்தில் நிரந்தரமாகத் தங்கி விட்டார். அவர் அங்கிருந்தவாறு சங்கரதாஸ் சுவாமிகளின் புராண நாடகங்களைத் தொடர்ந்து நடத்தி வந்தார். அதனால், இந்தப் பகுதியில் (புக்கிட் மெர்த்தாஜம்) பின்னாளில் நாடகக்குழுக்கள் பல தங்கியிருந்தது தெரிய வருகின்றது. வாத்தியார் கலியபெருமாள் தேவர் இந்து விநாயக சபா எனும் பெயரிலேயே இங்கொரு நாடகக்குழுவை அமைத்து நாடகங்களை நடத்தினார். இவரோடு சேஷாத்திரி வாத்தியார், மங்கள வாத்தியார் ஆகிய இருவரும் உடனிருந்து நாடகங்களை நடத்தியுள்ளனர். நாடகத்துறையில் ஆர்வமுள்ள பலருக்கு இவர் பயிற்சி கொடுத்து நாடகக்கலையில் ஈடுபடுத்தினார். இவர் இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களைப் பல பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு நாடகங்களாக நடத்தியுள்ளார். இராமாயணத்தைச் சீதா கல்யாணம், பாதுகா பட்டாபிஷேகம், லங்கா தகனம், சம்பூர்ண இராமாயணம் எனும் பெயர்களிலும் மகாபாரதத்தைக் கிருஷ்ண லீலா, திரௌபதை வஸ்திராபரணம், கீசக சம்ஹாரம் எனும் பெயர்களிலும் பிரித்துக்கொண்டு தனித்தனி நாடகங்களாக நடத்தியுள்ளார்.

இவர் நடிகர்களைத் தேர்வுசெய்து, அவர்களுக்குப் போதிய பயிற்சிகளை அளித்து நல்ல நடிகர்களாக அவர்களை உருவாக்கினார். முதலில் நகர்ப்புறங்களின் மீதிருந்த இவரது கவனம் பின்னர், தோட்டப்புறங்கள் மீது திரும்பிற்று. தோட்டப்புறங்களிலும் பல நாடகங்களை அரங்கேற்றியுள்ளார். பொதுப்போக்குவரத்து இல்லாத அக்காலப்பகுதியில் நாடகத் தளவாடங்களை மாட்டு வண்டிகளில் அல்லது குதிரை வண்டிகளில் கொண்டு சென்றுள்ளார். அருகிலிருந்த தோட்டங்களுக்குக் கால்நடையாகவே சென்று நாடகங்களை நடத்தி வந்துள்ளார். வாத்தியார் கலியபெருமாள் தேவரின் பாசறையில் உருவானவர்களே பின்னர், தோட்டப்புறங்களில் நாடகங்கள் நடத்துவதில் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கினர். அந்த வகையில் தமிழகத்திலிருந்து இங்கு வந்த இந்து விநாயக சபாவின் வழித் தோன்றிய பரம்பரையினர் இம்மண்ணில் நாடகக்கலை வளர்ச்சிக்கு முன்னோடிகளாய் இருந்துள்ளனர்.

தொடக்ககாலத்தில் இந்து விநாயக சபா நாடகங்களில் நடிப்பதற்குப் பெண்கள் யாரும் முன்வராததால் ஆண்களே பெண் வேடத்தை ஏற்று நடித்தனர். இவர்கள் 'ஸ்திரீ பார்ட்' நடிகர்கள் என அழைக்கப்பட்டனர். சமுதாயத்தில் அன்று பெண்களுக்கிருந்த மிகுதியான

கட்டுப்பாடுகள், அவர்களின் கூச்ச சுபாவம், அச்சம், பாதுகாப்பு உணர்வு போன்றவற்றால் பெண்கள் நடிக்க முன்வராத நிலை காணப்பட்டது. 1928இல் ஆர்.ஜி.சுப்பிரமணிய தேவர் என்பவர் இந்து விநாயக சபாவின் முதலாளியாக இருந்துள்ளார்.

இதே காலப்பகுதியில் வடமலேசியாவில் நிபோங் திபால் எனும் இடத்தில் கோவிந்தசாமி வாத்தியார் என்பவர் சுற்றுப்புறங்களிலுள்ள தோட்டப்புற மக்களுக்கு நாடகக்கலையைப் பயிற்றுவித்துள்ளார். இவர் நாடகம் நடத்த விரும்புவோர்க்கு நாடகத்திற்குத் தேவைப்படும் தளவாடப்பொருள்கள், திரைச்சீலைகள் போன்றவற்றையும் கொடுத்துதவிய செய்திகளும் காணக் கிடைக்கின்றன. (மணிசேகரன்.அ., பக்.14)

## ஆரிய நடன விநோத சபா

நாடகம் நடத்தும் நோக்கில் 1925இல் தமிழகத்திலிருந்து இங்குப் பினாங்கிற்குக் கப்பலில் வந்து சேர்ந்த நாடகக்குழு ஆரிய நடன விநோத சபா. இக்குழுவினர் பினாங்கில் அந்த ஆண்டுத் தைப்பூசத் திருவிழாவிற்குச் சத்தியவான் சாவித்திரி எனும் நாடகத்தை நடத்துவதற்குப் பினாங்கு மாநில இந்துக்கள் ஏற்பாடு செய்து தந்துள்ளனர். அக்கால வழக்கப்படி இக்குழுவினரும் புராணம். இதிகாசம், வரலாறு, மக்களறிந்த கதைகள் போன்றவற்றை நாடகங்களாக நடத்தியுள்ளனர். இராமாயணம், மகாபாரதம், ஸ்ரீ கிருஷ்ண லீலா, சத்தியவான் சாவித்திரி, சதி லீலாவதி, ஞான சௌந்தரி, சகுந்தலை, குலேபகாவலி, பதிபக்தி, பஞ்சாப் மெயில், தேசியக்கொடி, கதரின் வெற்றி, சோல்ஜர் மனைவி போன்ற நாடகங்களைக் குறிப்பாக தோட்டப் புறங்களில் கோயில் திருவிழாக்களின்போது அரங்கேற்றியுள்ளனர். இந்நாடகங்களின் கதைப்போக்கைக் காணும்போது புராண, இதிகாச நாடகங்களோடு மெல்ல நாட்டுநடப்புகளையும் நாடகங்களாக ஆக்கி நடத்தியுள்ளது தெரிய வருகின்றது. இதன்வழி நிகழ்கால சமுதாய, அரசியல் போக்குகள் நாடகங்களின் கதையம்சமாக மெல்ல இடம்பிடிக்கத் தொடங்குவதைக் காணமுடிகின்றது.

இந்நாடகக்குழுவினரின் தலைவராகப் "பொட்டைக்கண்ணு" இராமசாமித் தேவர் என்பவர் இருந்துள்ளார். இக்குழுவில் வந்தவர்களுள் புருஷோத்தமன், பரமேஸ்வர ஆச்சாரி, மதனவேலு, கேசவப்பிள்ளை, பக்கிரிசாமி உடையார், மிருதங்கம் ராமசாமிப் பிள்ளை, பார்த்தசாரதி, குப்புசாமி, தனபால், கள்ளபார்ட் திருவேங்கடம், ஆர்மோனியம் சக்கரவர்த்தி டி.எம்.காதர் பாச்சா, டி.கே.நடராஜன், திருமதி ரத்னாபாய், கல்யாண சுந்தரி அம்மாள் போன்றோரும் அடங்குவர். இவர்களும் நாடக வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றியுள்ளனர். இக்குழுவில் நகைச்சுவைப் பாத்திரங்களில் நடித்த அரங்கசாமி நாயுடு என்பவர் பின்னாளில் அவர் தனியாக மலேசியா வந்து அரங்கசாமி நாடகக்குழு எனும் குழுவைத் தொடங்கியதாகவும் குறிப்புக் கிடைக்கின்றது. (மணிசேகரன்.அ., ப.15)

ஆரிய நடன விநோத சபா நாடகக்குழுவில் வந்தவர்களுள் ஒருவரான ஆர்மோனியம் காதர் பாச்சா மொய்தீன் சாகிப் ஆர்மோனியம் வாசிப்பதில் வல்லவர். இவர் இனிமையான குரலில் பாடும் திறமையையும் பெற்றிருந்தார். இவர் பின்னர் தனியாக நாடகக்குழு ஒன்றைத் தொடங்கி நாடகங்களை நடத்தினார். இவருடைய நாடகங்களுக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்தது. இவர் குழுவில் மலாயா வந்து நாடகம் நடத்தியவர்களுள் ஒருவர் தமிழ் நாட்டின் புகழ்பெற்ற பாடகரும் நடிகருமான எஸ்.ஜி.கிட்டப்பா பாகவதர் ஆவார். இக்குழுவினர் பினாங்கில் பாமா விஜயம் நாடகம் நடத்திக் கொண்டிருக்கும்போது பாமாவாகவும் ருக்குமணியாகவும் நடித்த நடிகைகளுக்குள் மேடையிலேயே

உண்மையாகவே சண்டை மூண்டுவிட, மொய்தீன் சாகிப் அதனால் மனம் வருந்தி, அத்துடன் தம் நாடகக் குழுவினருடன் தமிழகம் திரும்பியதாகவும் தெரிய வருகின்றது. (ஆர்.பி.எஸ்.மணியம்., ப.104) 1932இல் மொய்தீன் சாகிப் நாடகக்குழு மீண்டும் இந்நாட்டிற்கு வந்தபோது பிரபல திரைப்பட நடிகர்கள் எம்.கே.ராதா, டி.ஆர்.மகாலிங்கம் போன்றோரும் உடன் வந்து நாடகங்களில் நடித்துச் சென்றுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. இவர்களுள் நடிகர் எம்.கே.ராதா பின்னாளில் தமிழ்த்திரையுலகில் சதி லீலாவதி, சந்திரலேகா, அபூர்வ சகோதரர்கள் போன்ற திரைப்படங்களில் நடித்துப் பெரும்புகழ் பெற்றார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. அதேபோன்று நடிகர் டி.ஆர் மகாலிங்கமும் பின்னாளில் தமிழ்த்திரையுலகில் தம் நடிப்பாலும் இனிய குரலில் பாடிய பாடல்களாலும் பெரும்புகழ் பெற்றதும் அறிந்ததே. இவர் நடித்த ஞானசௌந்தரி எனும் திரைப்படம் மிகப்பெரிய வெற்றிப்படமாக அமைந்தது.

## தென்மலேசியாவில் இருபதுகளில் இயங்கியுள்ள நாடகக்குழுக்கள்

இருபதாம் நூற்றாண்டின் இருபதுகளில் சரஸ்வதிசாமிராவ் நாடகக்குழு (1927), பரமேஸ்வர ஆச்சாரியார் நவநீதம் நாடகக்குழு (1920), வித்வான் வைத்தியலிங்க செட்டியார் நாடகக்குழு, முத்தையா பிள்ளை நாடகக் கம்பெனி, தனவள்ளி அம்மாள் நாடகக் கம்பெனி ஆகியன மலேசியாவின் தென்கோடி மாநிலமான ஜொகூரில் இயங்கி வந்துள்ளன. (மணிசேகரன்.அ., ப.15) ஆனால், போதிய பொருள்பலம் இல்லாத காரணத்தினால் 1927இல் இக்குழுக்களுள் சரஸ்வதிசாமிராவ் நாடகக்குழு, பரமேஸ்வர ஆச்சாரியார் நவநீதம் நாடகக்குழு ஆகியன இங்குச் சிறப்பாக நாடகங்கள் நடத்தியும் பின்னர்க் கலைக்கப்பட்டன.

முத்தையா பிள்ளை நாடகக் கம்பெனியில் முத்தையா பிள்ளையோடு அவருடைய தமையனார் சின்னசாமி, சிறப்பாக மிருதங்கம் வாசித்த அவருடைய தம்பி குருசாமி உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்களோடு ஹார்மோனியம் வாசித்த கன்னையா, ராஜபார்ட்டாக நடராஜன் என்கிற சீனன் சாமி, ஸ்திரீ பார்ட்டாக சாப் ஜான், நகைச்சுவை வழங்கிய பபூன் தனபால் நாயுடு, திருமதி முத்தையா பிள்ளை, திருமதி ஜான் ஜீவரத்தினம், திருமதி ராமசாமி, திருமதி வேலு போன்றோரும் இக்கம்பெனி வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றியுள்ளனர். இக்குழு அன்றைய மலாயா முழுவதும் பயணம் செய்து நாடகங்களை நடத்தியுள்ளதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

தனவள்ளி அம்மாள் நாடகக் கம்பெனியும் மலேசியா முழுவதும் சென்று நாடகங்களை நடத்தியுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. நாகப்பன் என்பவரை முதலாளியாகக்கொண்ட இக்குழுவில் ராஜபார்ட்டாக ராஜமூர்த்தி ஐயரும் பாலபார்ட்டாக சி.ராமகிருஷ்ணன் என்பவரும் பாகமேற்று நடித்தனர். இக்குழுவில் சின்னத்தம்பி என்பவர் கவாலி எனும் இந்திப்பாடல் வகையையும் கஜல் எனும் வட இந்தியப் பாடலையும் பாடியுள்ளதாகவும் குறிப்புகள் கிடைத்துள்ளன. இவர்களைத் தவிர்த்து, மிருதங்கம் ராமசாமித் தேவர், ஹார்மோனியம் துளசிராம், ஆர்.பி.எஸ்.மணி ஐயர், டப்பா கோவிந்தன், சோட்டா பாய் என்கிற ரத்தினவேலு, ராஜா என்கிற கே.எம்.ஏ.அப்துல் ஹமீது, சோனியப்பன் நடராஜன், சேதுராமன், சக்காரி ராவ், தனவள்ளி அம்மாள், சிவகாமி, ஜெயா போன்றோரும் இக்கம்பெனி வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றியுள்ளனர். இக்குழுவில் வந்தவர்களுள் ஒருவர் ஜீவரத்னம்மாள். இவர் தமிழகத்தில் முக்கிய நடிகையாக இருந்து புகழ்பெற்றவராக இருந்தார். பின்னர், இவர் மலேசிய நாட்டிலேயே நிரந்தரமாகத் தங்கி, இந்நாட்டின் மேடை

நாடகத்துறை வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றினார்.

வித்வான் வைத்தியலிங்க செட்டியார் நாடகக் கம்பெனி முழுக்கவும் குடும்ப உறுப்பினர்களால் நடத்தப்பட்டது. இந்நாடகக் கம்பெனியின் நாடகக் கதாசிரியராகவும் வசனகர்த்தவாகவும் வித்வான் வைத்தியலிங்க செட்டியார் இருந்துள்ளார். நாடகக் கம்பெனியின் பல பொறுப்புகளைத் திறம்பட இவர் மேற்கொண்டு வந்ததால், இவரை மக்கள் நாடகக் கவிராயர் என்றே அழைத்தனர். அவருடைய மூன்று மகள்களும் நாடகத்துறைக்கே தங்களை அர்ப்பணித்து நாடகப்பணி ஆற்றினர். அவர்களுள் இருவர் நாடக நடிகைகளாகவும் ஒருவர் ஹார்மோனியம் வாசிப்பவராகவும் இருந்து சிறப்பாக நாடகப்பணி ஆற்றினர். செட்டியாரின் மனைவி தவமணி என்பவரும் நாடகக்குழுவில் ஒரு நாடகநடிகையாக இருந்துள்ளார். ஆக, வைத்தியலிங்க செட்டியாரின் குடும்பமே நாடகத்துறையில் ஈடுபட்டு இந்நாட்டில் கலைப்பணி வளர்ச்சிக்குப் பாடுபட்டுள்ளது.

தமிழகத்திலிருந்து வந்த இந்நாடகக் குழுக்களிடையே காணப்பட்டுள்ள ஒற்றுமை யாதெனில் இக்குழுக்களுள் மிகுதியானவை குடும்ப உறுப்பினர்களைக் கொண்டு இயங்கியுள்ளதைக் குறிப்பிடலாம். தவிர, அன்றைய காலப்பகுதியில் பொதுப் போக்குவரத்து இல்லாததால், இவர்கள் நாடகக்குழுக்களோடு பயணம் செய்வதற்குக் குதிரை அல்லது மாட்டு வண்டிகளைப் பயன்படுத்தியுள்ளனர். இவர்களிடம் சொந்தமாக நிரந்தர நாடக அரங்கோ கொட்டகையோ கிடையாது. இவர்கள் தமிழகத்திலேயே நாடகங்களைப்பற்றி அறிந்தும் அதற்கான பயிற்சிபெற்றும் இருந்தனர். இவர்களிடம் பெரிய அளவிற்குப் பொருளாதார வசதியோ செல்வாக்கோ கிடையாது. வெறும் நாடக ஆர்வத்தை மட்டுமே மூலதனமாகக் கொண்டிருந்தனர்.

## தலைநகரில் மேடை நாடகங்கள் சங்கீத அபிவிருத்தி சபாவின் நாடகப்பணி

நாட்டின் தலைநகரான கோலாலும்பூரில் இசை வளர்ச்சிக்காகத் தொடங்கப்பட்ட அமைப்பான சங்கீத அபிவிருத்தி சபா, இசையோடு நாடகக்கலையையும் வளர்த்திட முன்வந்தது. இவ்வமைப்பு இருபதுகளில் நாடகங்களை ஏராளமாக நடத்தியுள்ளது. இவ்வமைப்பு 1923ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20 ஆம் தேதி தொடங்கப்பட்டது. இவ்வமைப்பின் முதல் தலைவராக ச.சின்னதுரை என்பவர் இருந்தார். இவ்வமைப்பில் கோலாலும்பூர் வாசிகளாயிருந்த இந்தியத் தமிழர்களும் இலங்கைத் தமிழர்களும் ஏராளமானோர் உறுப்பினர்களாயினர். இவர்களுள் மிகுதியானோர் படிப்பறிவு பெற்றவர்களாயிருந்தனர். இருபதுகளில் சங்கீத அபிவிருத்தி சபா மொத்தம் 12 நாடகங்களை நடத்தியுள்ள குறிப்பு கிடைக்கின்றது. (மணிசேகரன்.அ. ப.27) பாதுகா பட்டாபிஷேகம், லங்கா தகனம், கிருஷ்ணன் தூது, சந்திரகாசன், ராஜாம்பாள், கருங்குயில் குன்றம், அவனாவதி, அரிச்சந்திரா ஆகியன அவற்றுள் சில. அரிச்சந்திரா எனும் நாடகம் பின்னால் அலி சந்திரா எனும் பெயரில் நகைச்சுவை நாடகமாகவும் நடத்தப்பட்டது இங்குக் குறிப்பிடத்தக்கது. இவ்வமைப்பு நடத்திய நாடகங்களுள் கருங்குயில் குன்றம், பாதுகா பட்டாபிஷேகம் ஆகிய இரண்டும் மக்கள் மத்தியில் மிகப்பெரிய வரவேற்பினைப் பெற்றுப் பலமுறை அரங்கேற்றம் கண்டுள்ளன.

சங்கீத அபிவிருத்தி சபா 1927இல் கோலாலும்பூர் நகரமண்டபத்தில் அரங்கேற்றிய பாதுகா பட்டாபிஷேகம் எனும் நாடகம் பின்னர், சிரம்பான், ஈப்போ, சிங்கப்பூர் உள்ளிட்ட நகரங்களிலும் அரங்கேற்றப்பட்டது. பாதுகா பட்டாபிஷேகம் இராமபிரானுடைய பாதுகைக்கான பட்டாபிஷேகத்தை

மையமாகக்கொண்ட கதை. நாடகம் சிறப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக இதில் நடித்த நடிகர்கள் விரதம் இருந்ததாகவும் தெரிய வருகிறது. அதிலும் குறிப்பாக இராமன், பரதன், சத்ருக்கன், சீதை, தசரதன் ஆகிய பாத்திரங்களை ஏற்றிருந்த நடிகர்கள் பல நாள்கள் விரதம் இருந்துள்ளனர் என்கிற குறிப்பும் கிடைக்கின்றது.(மணிசேகரன்.அ., ப.27) இராமனாக மலாயன் இரயில்வேதுறையைச் சேர்ந்த 'டிரபிக்' இன்ஸ்பெக்டர் தம்பி ஐயா, பரதனாக இரயில்வே துறையின் எம்.கந்தையா, கைகேயியாக டி.சி.சின்னசாமி ஆகியோர் நடித்துள்ளனர். இந்நாடகத்தில் பெண் பாத்திரங்களுக்கு ஸ்திரீ பார்ட் நடிகர்கள் நடித்துள்ளதையும் காண முடிகின்றது. இந்நாடகம் பின்னர் இரண்டாம் உலகப்போரின்போது மலேசியாவில் ஜப்பானியர் ஆட்சியில் ஜப்பானிய மொழியில், ஜப்பானிய மேஜர் ஜெனரல் கமடா என்பவர் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டது இங்குக் குறிப்பிடத்தக்கது. அப்போது ஜப்பானிய மொழி அறிந்த சீன, இந்திய, இலங்கைத் தமிழ்க் குழந்தைகள் இந்நாடகத்தில் நடித்துள்ளனர். இன்றைக்கும் கோலாலும்பூரில் சங்கீத அபிவிருத்தி சபா இயங்கி வருகின்றது. ஆனால், இப்பொழுது இவ்வமைப்பு தன் கவனத்தை முழுக்க இசைத்துறையில் மட்டுமே செலுத்தி வருகின்றது.

கோலாலும்பூரை மையமாகக்கொண்டு இயங்கிய குழுக்களுள் சிலாங்கூர் இந்தியர் சங்கம், இஷ்டமித்திரா நடன சபா ஆகியனவும் இரண்டாம் உலகப்போருக்கு முன் மேடை நாடகங்கள் சிலவற்றைக் கோலாலும்பூரில் அரங்கேற்றியுள்ளன. இஷ்டமித்திரா நடன சபா எஸ்.இராஜரத்தினம், கே.செல்லையா ஆகிய இருவரின் பெருமுயற்சியில் தொடங்கப் பட்டது. இஷ்டமித்திரா நடன சபா ஜப்பானியர் ஆட்சிக்குப்பின் இம்பி ரோடு கலா விருத்திச் சங்கம் எனும் புதுப்பெயரில் இயங்கியது.

## முப்பதுகளில் மலேசிய நாடகக்கலை

முப்பதுகளிலும் ஏராளமான நாடகக் குழுக்கள் தமிழகத்திலிருந்து வந்து நாடகங்களை அரங்கேற்றியுள்ளன. எஃப்.ஜி.நடேசய்யர் குழு, ராஜலட்சுமி குழு, வி.ஏ.செல்லப்பா குழு, மெட்ராஸ் சுகுண விலாச சபா (மலாயன் சுகுண விலாசத்தார்), கணேசானந்த டிராமட்டிக் குழு, ரங்கநாயகி நாடகக்குழு, கோவிந்தசாமி வாத்தியார் குழு, அரங்கசாமி நாயுடு டிராமா கம்பெனி ஆகியன அவற்றுள் சில. இக்குழுக்கள் அன்றைய இரசிகர்களின் விருப்பத்திற்கேற்பப் புராண, இதிகாச நாடகங்களையே மிகுதியும் இங்கு அரங்கேற்றின. அவ்வகையில் பவளக்கொடி, அரிச்சந்திரா, வள்ளித் திருமணம். கோவலன், நல்லதங்காள், நந்தனார், சத்தியவான் சாவித்திரி, சதாரம், அல்லி அரசாணிமாலை, குலேபகாவலி, சாரங்கதாரா, ஞானசௌந்தரி, அபிமன்யு, சீமந்தினி, சதி அனுசூயா, கிருஷ்ண லீலா, கண்டி ராஜன், மார்க்கண்டேயன், பட்டினத்தார், இராமாயணம், பக்த பிரகலாதன், மகாபாரதம், தாயுமானவர், திருநீலகண்டன், சந்திரஹாசன், அம்பிகாபதி, சிந்தாமணி, கூனியின் சபதம் போன்றவை இங்கு அரங்கேற்றப்பட்ட நாடகங்களுள் சில.

இக்குழுக்களோடு தமிழகத்தில் முப்பதுகளில் மிகவும் புகழ் பெற்றிருந்த பிரபல நாடகநடிகர் உள்ளிட்ட கலைஞர்களும் இங்கு வந்து நாடகங்களில் நடித்துச் சென்றுள்ளனர். அவ்வாறு இந்நாட்டிற்கு வந்து திரும்பியவர்களுள் கே.பி.சுந்தராம்பாள், பி.எஸ்.கோவிந்தன், எஸ்.ஜி. கிட்டப்பாவின் சகோதரர் காசி ஐயர், காதர் பாட்சா, அப்துல் காதர், கௌஸ்மியான் சாகிப் போன்றோரைக் குறிப்பிடலாம். இவர்களுள் நடிகர் பி.எஸ்.கோவிந்தன் பின்னாளில் தமிழ்த் திரைப்படங்களில் கதாநாயகனாகவும்

நடித்துப் பெரும் புகழ் பெற்றது இங்குக் குறிப்பிடத்தக்கது. அவர் நடித்த ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணி மாபெரும் வெற்றிபெற்ற திரைப்படமாகும். கே.பி.சுந்தராம்பாளும் பின்னர் சில திரைப்படங்களில் நடித்தும் பாடல்கள் பாடியும் உள்ளது அறிந்த ஒன்றே.

## மலாயன் சுகுண விலாச சமாஜ்

தமிழில் நவீன நாடகத் தந்தை எனப் போற்றப்படுபவர் பம்மல் சம்பந்த முதலியார். இவர் ஆங்கிலக் கல்வி பெற்றிருந்தோரையும் இந்தியாவின் அரசுப் பணியில் இருந்தோரையும் ஒருங்கிணைத்து, மெட்ராஸ் சுகுண விலாச சபா எனும் பெயரில் நாடக அமைப்பொன்றை உருவாக்கி, மேனாட்டுப் பாணியில் நாடகங்களைத் தயாரித்து அரங்கேற்றினார். தமிழ் நாடக வரலாற்றில் பம்மல் சம்பந்த முதலியாரின் மேடை நாடகப்பணி மிகவும் மகத்தானது. ஏறத்தாழ நூறு நாடகங்களுக்கு மேல் தயாரித்து அவர் அரங்கேற்றியுள்ளார். இவர் சமூகக்கதையை மையமாகக்கொண்ட நாடகங்களுக்கு முன்னுரிமை தந்து நடத்தியுள்ளார். தமிழகத்தில் இவருடைய நாடகங்களுக்குத் தனி மதிப்பும் மரியாதையும் மக்கள் மத்தியில் இருந்தது. இந்நாடகக்குழுவினர் கோலாலும்பூருக்கும் வந்து நாடகங்களை நடத்திவிட்டுச் சென்றுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. கோலாலும்பூரில் இக்குழு நடத்திய இரண்டு புகழ்பெற்ற நாடகங்கள் சிந்தாமணி, கூனியின் சபதம் ஆகியன. இந்த இரண்டு நாடகங்களும் கோலாலும்பூரில் ஜாலான் பண்டாரில் அன்று செட்டியார்களுக்குச் சொந்தமாயிருந்த மெட்ராஸ் தியேட்டரில் அரங்கேற்றம் கண்டன. தமிழகத்திலிருந்து வந்த மெட்ராஸ் சுகுண விலாச சபா முப்பதுகளில் மலேசிய மக்களுக்கு நாடகக்கலையில் மிகுந்த நாட்டம் ஏற்படவும் சமுதாயத்தை மையமாகக் கொண்ட நாடகங்களில் கவனம் செலுத்தவும் வழிவகுத்துத் தந்தது.

மெட்ராஸ் சுகுண விலாச சபா இங்கு ஏற்படுத்திய நாடகத் தாக்கம் மிகப்பெரியது. அதன் விளைவாக, மலாயாவில் சுயமாக ஓர் நாடக அமைப்பு அதன் பெயரிலேயே தோற்றம் கண்டது. சென்னையின் கிளை நிறுவனமாக உள்நாட்டுக் கலைஞர்கள் மலாயன் சுகுண விலாச சமாஜ் என்ற பெயரில் நாடகக்குழு ஒன்று 1930இல் ஏற்படுத்தப்பட்டது. இதில் படித்தவர்களும் அரசு ஊழியர்களும் ஏராளமானோர் உறுப்பினர்கள் ஆயினர். இக்குழு 1931இல் ரத்னாவளி, இரண்டு நண்பர்கள் ஆகிய தலைப்புகளில் கோலாலும்பூரில் இரு நாடகங்களை அரங்கேற்றினர். இந்நாடகங்களுக்குப் பாபுராவ் என்பவர் ஒப்பனையாளராகவும் ஆர்மோனியம் அப்பாதுரை என்பவர் இசை அமைப்பாளராகவும் இருந்துள்ளனர். (மணிசேகரன்.அ.,ப.37) இவ்விரு நாடகங்களின் வெற்றிக்குப் பின்னர், இக்குழுவினர் சம்பந்த முதலியாரின் மனோகரா, ராஜபக்தி, வசந்தசேனா போன்ற நாடகங்களைய்யும் அருணாசலக் கவிராயரின் நந்தனார் நாடகத்தையும் அரங்கேற்றினர். இதுநாள் வரையில் புராணம், இதிகாசம், வரலாறு, இலக்கியம் சார்ந்த நாடகங்களை மட்டுமே கண்டுகளித்து வந்த மலேசிய மக்களுக்குச் சமூக நாடகங்களைக் காண்பதற்குரிய வாய்ப்பை இக்குழுவினரே ஏற்படுத்தித் தந்த முன்னோடிகளாக உள்ளனர்.

மலாயன் சுகுண விலாச சமாஜ் தொடங்கப்பட்ட தினவிழாவாக மாநாடு ஒன்று 9.4.1933இல் கோலாலும்பூரில் நடத்தப்பட்டது. மலேசியத் தமிழ் மேடை நாடக வரலாற்றில் நாடகத்திற்காக மாநாடு ஒன்று கூட்டப்பட்டது இதுவே முதல்முறை ஆகும். அப்போது கோலாலும்பூரில் இயங்கிவந்த பிற இந்திய அமைப்புகளான சிலாங்கூர் இந்தியர் சங்கம், சிலாங்கூர் இலங்கைத் தமிழர் சங்கம், சங்கீத அபிவிருத்தி சபா, இந்திய அச்சாபீஸ் சங்கம், செந்தூல் இந்தியர் வாலிபர் சங்கம்,

தனவைசிய இளைஞர் சபா, இஷ்டமித்திரர் சங்கம், கத்தோலிக்க சங்கம், செந்தூல் நாடார் பரிபாலன சங்கம் ஆகியன இவ்வமைப்போடு இணைந்து இம்மாநாட்டில் பங்கேற்றன. இம்மாநாட்டின் நோக்கத்தைப் பற்றியும் நாடகத்துறை இந்நாட்டில் வளர வேண்டியதன் அவசியம் குறித்தும் மலாயன் சுகுண விலாச சமாஜத்தின் உபதலைவராயிருந்த தம்பிதுரை என்பவர் விளக்கினார். பின்னர், இம்மாநாட்டில் தமிழ் நேசன் பத்திரிகையைத் தோற்றுவித்தவரும் அதன் ஆசிரியருமாயிருந்த கி.நரசிம்ம ஐயங்கார் பல்வேறு தலைப்புகளில் நாடகத்தைப் பற்றி உரையாற்றியுள்ளார். அவ்வகையில் நாடகமும் நாடகமேடையும், நாடகமேடையும் சங்கீதமும், நாடகமேடையும் நர்த்தனமும், நாடகமேடையும் இலக்கிய வளர்ச்சியும், நாடக மேடையும் காட்சி வனப்பும் போன்ற தலைப்புகளில் உரையாற்றினார். மேலும், தொழில்முறை கலைஞர்களுக்கும் தொண்டுக்காகக் கலைப்பணி ஆற்றுவோர்க்கும் இடையிலான வேறுபாடுகளைப் பற்றியும் அவர் விளக்கினார். இவர் உரைகள் யாவும் இந்நாட்டில் மேடை நாடகக்கலை தொடர்ந்து வளர்வதற்கும் வலுவடைவதற்கும் துணை நின்றன எனில் மிகையில்லை.

*1928*இல் கோலாலும்பூருக்கு வந்து நாடகங்கள் நடத்திப் பெரும் புகழ் பெற்றிருந்த நாடகக்குழு கே.டி.அரங்கசாமி நாயுடு டிராமா கம்பெனி ஆகும். இக்குழு கோலாலும்பூர் நகரமண்டபத்தில் நாற்பது நாள்களுக்குத் தொடர்ச்சியாக நாடகங்களை நடத்திச் சென்றுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. பினாங்கிலும் மூன்று மாதங்கள் தொடர்ச்சியாக நாடகங்கள் நடத்தியுள்ளனர். ஓராண்டிற்குப் பின்னர் அக்குழுவைச் சேர்ந்த கலைஞர்கள் பலர் தமிழகம் திரும்பி விட்டனர். இவர் குழுவில் வந்து தமிழகம் திரும்பிய நடிகர்களுள் நடிகை டி.பி.ராஜலட்சுமியும் ஒருவர். இவர் பின்னர், தமிழ்த்திரையுலகின் முதல் கதாநாயகி எனும் சிறப்பைப் பெற்றதோடு, தொடக்ககாலத் திரைப்படங்களிலும் நடித்துப் பெரும் புகழ் பெற்றார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. அரங்கசாமி நாயுடு பின்னர் இந்நாட்டிலேயே நிரந்தரமாகத் தங்கி விட்டார். அவர் இந்நாட்டில் *25* ஆண்டுகள் தங்கி இந்நாட்டு நாடகக்கலைஞர்களுக்கு நாடகப் பயிற்சி அளித்து நாடகங்களை நடத்தியுள்ளார். இவர் அரங்கேற்றிய நாடகங்களுள் மிகுதியானவை புராணம், இதிகாசம் ஆகியவற்றை மையமாகக் கொண்டவை. அவர் நாடகத்திற்காகப் புதுமையான ‘சீன்’ சாதனங்களையும் கொண்டுவந்து தரமான நாடகங்களைக் கோலாலும்பூர், ஈப்போ, பினாங்கு, சிங்கப்பூர் போன்ற பெருநகரங்களில் நடத்தி, நாடகக்கலை இங்குத் தளர்வின்றி வளர்வதற்கு வித்திட்டுள்ளார். *(மணியம்.ஆர்.பி.எஸ்.ப.107)* இந்நாடகக்குழுவில் அவர் பெருமுயற்சியில் ஆண்டுதோறும் புதுப்புது நடிகர்களும் நடிகைகளும் உருவாக்கப்பட்டுள்ளனர். பல நடிகர்களும் நடிகைகளும் அரங்கசாமி நாயுடு குழுவில் விரும்பி வந்து சேர்ந்துள்ளனர். அவ்வாறு சேர்ந்தவர்களுள் ஒருவர் அம்புசாமி அம்மாள். அம்புசாமி அம்மாள் இந்தியாவில் சென்னை, மதுரை, தஞ்சை, கோயமுத்தூர், பெங்களூர் போன்ற ஊர்களில் நடித்துப் பெரும் புகழ்பெற்றிருந்த நடிகையாவார். பின்னர், அம்புசாமி அம்மாளை அரங்கசாமி நாயுடு மணந்து கொண்டார். இவர் ஆண்டுதோறும் தமிழகத்திலிருந்து ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியிலிருந்தும் பலரைக் கொண்டுவந்து நாடகங்களில் நடிக்க வைத்துள்ளார். அரங்கசாமி நாயுடு கம்பெனியின் வழியாக வந்து இங்கேயே நிரந்தரமாகத் தங்கி விட்ட நடிகர், நடிகையர் பலர். அவ்வாறு இங்கேயே தங்கி விட்டவர்களினாலும் நாடகக்கலை மலேசிய மண்ணில் வேகமாக வளர்ந்தது. பின்னாளில் அரங்கசாமி நாயுடுவிடமிருந்து பிரிந்து சொந்தமாக நாடகக்குழுக்களை

அமைத்தவர்களும் உண்டு. சோல்ஜர் நாடகக்குழு அவ்வாறு பிரிந்து சென்று அமைக்கப்பட்ட குழுவாகும். அரங்கசாமி நாயுடுவின் குழு 1950இல் கலைக்கப்பட்டது. அக்குழுவினர் வடமலேசியாவில் புக்கிட் மெர்த்தாஜம் எனும் இடத்திற்கருகிலுள்ள சுங்குரும்பையில் நிரந்தரமாகத் தங்கி விட்டனர். அதன் பின்னர், அக்குழுவினருள் சிலர் மட்டும் தோட்டப்புறங்களில் திருவிழாக்களின்போது நாடகங்களை அரங்கேற்றி வந்துள்ளனர். இவ்வாறு தோட்டப்புறங்களில் நாடகங்களை நடத்தும்போது தோட்ட மக்களையும் நாடகங்களில் இணைத்துக்கொண்டு நடிக்க வைத்து, தோட்டமக்களுக்கும் நாடகப் பயிற்சி அளித்து வந்துள்ளதையும் காணமுடிகின்றது.

முப்பதுகளில் வந்து நாடகங்கள் நடத்திய குழுக்களுள் ஒன்று ரங்கநாயகி நாடகக்குழு. இங்கு நாடகங்கள் நடத்திய பின்னர், இதன் தலைவி ரங்கநாயகி மட்டும் இங்கேயே தங்கிக்கொண்டு, மற்றவர்களைத் தமிழகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். முப்பதுகளில் நாடகங்கள் நடத்தக் கோலாலும்பூர் வந்த மற்றொரு நாடகக்குழு இந்துஸ்தான் பாய்ஸ் நாடகக் கம்பெனி. இக்குழுவில் சிரம்பானைச் சேர்ந்த சோட்டாபாய் என்கிற சிங்காரவேலு என்பவர் வாய்ப்பாட்டுப்பாடி, நடித்து நாடக ஆக்கமும் செய்துள்ள குறிப்புக் கிடைக்கின்றது. முப்பதுகளின் இறுதியில் கண்ணையா நாயுடு நாடகக்குழு கோலாலும்பூர் வந்து நாடகங்களை நடத்தியுள்ளனர். இக்குழுவில் தமிழகத்தின் சிறந்த நாடகக்கலைஞர்களான ஜீவரத்தினம் அம்மாளும் நவநீதம் அம்மாளும் இடம் பெற்றிருந்ததும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

## முடிவுரை

இவ்வாறாக 1910க்கும் 1940க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் தமிழகத்திலிருந்து ஏறத்தாழ 22 நாடகக்குழுக்கள் மலேசியாவுக்கு வந்து சென்றுள்ள குறிப்புகள் கிடைக்கின்றன. இங்கு வந்தவர்களுள் நாடக நடிகர், நடிகையர், வாய்ப்பாட்டுக் கலைஞர்கள், ஆர்மோனியக் கலைஞர்கள் எனப் பலர் இங்கேயே தங்கி, அவர்கள் மூலமாகப் பல உள்ளூர்க் கலைஞர்கள் உருவாக்கப்பட்டு மேடை நாடகக்கலை வளர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறு இங்குத் தங்கி நாடகக் குழுக்களைத் தொடங்கியவர்களாக வாத்தியார் கலிய பெருமாள் தேவர், ஆர்.ஜி.எஸ்.சுப்ரமண்ய தேவர், அரங்கசாமி நாயுடு, ஜெகநாதன் நாயுடு, செல்லையா, உத்தண்டையா பிள்ளை, டி.என்.வைத்தியநாதன், சீதையம்மாள், மாணிக்கம் பிள்ளை, கோவிந்தசாமி வாத்தியார், ஆதியம்மாள் முத்தையா, சி.வி.வேலப்பா போன்றோரைக் குறிப்பிடலாம். இவர்களுள் பலர் நாடக ஆசிரியர்களாகவும் இருந்து உள்நாட்டுக் கலைஞர்களுக்குப் பயிற்சியளித்துள்ளனர். உலகப்போருக்குமுன் உள்ளூர் நாடகக்கலைஞர்கள் என ஒரு பரம்பரை இங்குத் தோன்றினாலும் அவர்கள் சுயமாக நாடகக்கதை, உரையாடல், அரங்க அமைப்பு போன்றவற்றைச் சொந்தமாகத் தயாரிக்கவில்லை. ஏற்கெனவே தமிழகத்தில் நடத்தப்பட்ட, மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த நாடகங்களையே இங்கும் அரங்கேற்றினர். இந்நிலை ஏறத்தாழ ஜப்பானியர் ஆட்சிவரை (1942 –1945) காணப்பட்டது. தொடக்கத்தில் மலேசியாவில் நாடகங்களை அரங்கேற்ற வந்தோர் குறிப்பிட்ட ஒன்பது நாடகங்களையே தொடர்ந்து அரங்கேற்றியுள்ளனர். அவை பவளக்கொடி, அல்லி அர்ச்சுனா, நல்லதங்காள், கோவலன், சாரங்கதாரா, சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திரா, இராணி லலிதாங்கி, கிருஷ்ண லீலா ஆகியன. இந்த ஒன்பது நாடகங்களையும் உரையாடலோடு தயாரித்துக் கொடுத்தவர் நாடகத்தந்தை என்று அழைக்கபட்ட சங்கரதாஸ் சுவாமிகள் ஆவார். உலகப்போருக்கு முன் மலாயன் சுகுண விலாச சமாஜத்தார் இங்குச் சமூக

நாடகங்களை நடத்தி வந்தாலும், புராண, இதிகாச நாடகங்களுக்கே இங்கு அதிக வரவேற்பு இருந்தது. மலேசிய விடுதலைக்குப் பின்னரே சமூக நாடகங்களின் மீது கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. அவ்வகையில் இரண்டாம் உலகப்போருக்குமுன் மலேசியாவில் தமிழில் மேடை நாடகக்கலை தோன்றவும் வளர்ச்சி பெறவும் தமிழகத்தின் வழிகாட்டலும் பங்களிப்புமே முதன்மையானதாக உள்ளது. நடிகர், நடிகையர், நாடகத் தொழில் நுட்பம், தொழில் நுட்பக் கலைஞர், நாடகக்கதை, உரையாடல், ஜோடனை, ஒப்பனை போன்ற அனைத்திற்கும் தமிழக நாடகக்குழுக்களே முன்னோடியாய் இருந்து இந்நாட்டு நாடகக்கலைக்கு முக்கியப் பங்காற்றியுள்ளது. தமிழகத்தின் இந்த வழிகாட்டுதலினால்தான் விடுதலைக்குப் பின்னர், இங்கு உள்நாட்டு மக்களின் தேவைக்கேற்ப நாடகக்கலை மண்ணின் மணத்தோடு தனித்து வளரத் தொடங்கிற்று.

## Bibliography


Chandrakantham,P. (2010). “Malçciyâvil todakkakâla mçdai nâdakakal”, in Karthikeyan,A & Uthayasuriyan,s (Eds.). *Cinkappûr, malçciyat tami ilakkiyam*. Tanjavur: Tamil University of Tanjavur’s Publication.

Laxmi Meenakshi Suntaram. (1992). *Malçciya nâdakattul ai: Ilakkiya arumpukal*. Kualapur: Jayabakthi Publications.

Maniam,R,P,S. (1994). *Malçciyâvil nâdakakkalaiyum nâmum*. Taiping: Thirimugam Publications.

Manisegaran,A.(1987). *Malçciyâvil mçdai nâdakankal*. Kuala Lumpur: Anban Publications.

Murugan,K.(2012). *Cilânkûr mânil tamilppallikaliI mçdai nâdakankal*. Kuala Lumpur: Ashwin Trading Publications.

# சிங்கப்பூரின் தமிழ்க் கவிதைச் சூழல் 1990 முதல் 2015 வரை - ஓர் ஆய்வு

## A Study of Tamil poetry in Singapore from 1990 to 2015

முனைவர் எம்.எஸ். ஸ்ரீ லஷ்மி, சிங்கப்பூர்
Dr M S Shri Lakshmi, Singapore

***Abstract***

This research paper discusses the development of Tamil poetry in Singapore and the favourable scenario from 1990 until 2015. The arrival of foreign talents to Singapore in the field of poetry develops only quantitatively not qualitatively. Traditional poems are also written here by new immigrants. Poetry Competitions, the organisations like Kavimalai which aims to develop the Tamil poetry and its contributions, individual contributions of poets are also discussed in this Paper. Portrayal of Singapore and the local colour of the poems are excellent in poems of the local poets whereas it is lacking in the poems of new immigrants

The Paper also analyses how poetry flourishes in Singapore by the immigrants and the people who live here. It was a source of inspiration by the immigrants to the local poets who write in Tamil. The Paper also lists down chronologically the history, birth and development of Tamil poetry in Singapore.

**Key Words:** Singapore, Tamil Poetry, Development of Tamil Poetry, Kavimalai, Singapore Tamilians.

### முன்னுரை

சிங்கப்பூரின் கவிதைச் சூழல் என்னும் இக்கட்டுரை சிங்கப்பூரில் நல்ல கவிதைகள் எழுதப்பட வேண்டும்; கவிதைத்துறை ஆரோக்கியமாக வளர வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கிலும், விமர்சன நோக்கிலும் எழுதப்படுகிறது. கவிதையைக் கூட எளிதில் எழுதிவிடலாம். ஆயின், கவிதையைப் பற்றி எழுதுவது மிகவும் அருமையுடைய செயல் என்பது விக்ரமாதித்யனின் கருத்து.

"கவிதை பற்றி எழுதுவது கவிதை எழுதுவதை விடவும் சிரமம். தோன்றி வந்தால் கவிதை எழுதிவிடலாம். கவிதை குறித்து எழுத மிகுந்த உழைப்பு வேண்டியிருக்கிறது. திரும்பத் திரும்பப் படிக்க வேண்டும். விஷயங்களை உள்வாங்கிக் கொள்ள வேண்டும். சரியாக எடுத்துச் சொல்ல வேண்டும். இப்படி நிறைய

Dr M S Shri Lakshmi is a Freelance Writer and researcher reciding in Singapore. Visaka_2004@yahoo.com

வேலைகள் இருக்கின்றன." (கவிதை ரசனை ப15)

சிங்கப்பூர் அரசாங்கம் பொருளியல் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு வெளிநாட்டுத் திறனாளர்களை அதிக அளவில் 1990களிலும் அதன் பின்னரும் வரவழைத்தது. இத்திறனாளர்களின் வருகையால் சிங்கப்பூரின் தமிழிலக்கியப் படைப்புலகச் சூழல் மாறிவருகின்றது. இத்திறனாளர்கள் வாசிப்பில் தீவிரம் கொண்டவர்களாய் இருப்பதோடு, இவர்களின் மனைவிமார்கள் பட்டதாரிகளாகவும், இல்லத்தரசிகளாகவும் இருக்கும் பட்சத்தில் இவர்களின் வாசிப்புப்பசிக்கு அருமையான விருந்து கொடுக்கும் வகையில் தேசிய நூலகம் திகழ்ந்து கொண்டிருப்பதாலும் திறனாளர்களும், அவர்தம் மனைவிமாரும் எழுத்தாளர்களாக அறிமுகமாயினர். இவர்களைத் தவிர உடலுழைப்புத் தொழிலாளர்களாயும், திறன்மிக்க (skilled) ஊழியர்களாயும் வேலைக்கு அழைத்துவரப்பட்டவர்களும் மிகப் பலர். இவர்கள் வேலை அனுமதிச் சீட்டு (work permit holders) உடையவர்களாய்த் தமிழ்ப் புத்தகங்களின் மீது பெருவிருப்பம் கொண்டவர்களாயும் உள்ளனர். ஆகவே, இவர்களும் ஓய்வு நேரத்தில் வாசிப்பை நேசித்தனர். முன்னர்க் குறிப்பிட்ட நிரந்தரவாசிகள் போலவே வேலை அனுமதிச் சீட்டுப் பெற்றோரும் படைப்பிலக்கிய உலகில் காலடி வைத்தனர்.

இவர்களின் எழுத்துலகப் பிரவேசம் ஒரு புறம் நிகழ, சிங்கப்பூர்ப் படைப்பிலக்கியவாதிகளில் வளர்ந்துவரும் இளந்தலைமுறையைச் சேர்ந்த, நல்ல எதிர்காலம் உண்டு என நம்பப்பட்ட பலரின் இலக்கியத்துறவும் அதே வேளையில் நிகழ்ந்தது. ரெ.பாண்டியன், ராஜசேகர், அமீன், முகமது அலி போன்ற இளங்கவிஞர் பலரும் தமிழ்ப்படைப்பிலக்கியச் சூழலை விட்டு விலகிப் போயினர். இந்நிலையில்தான் புதிய குடியேறிகளான (நிரந்தரவாசிகள், வேலை அனுமதிச் சீட்டு உடையோர்) பலரும் படைப்பிலக்கியச் சூழலில் அறிமுகமாயினர். "ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூச் சர்க்கரை" என்பது போலத்தான் சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய உலகம் இவர்களை ஏற்றுக்கொண்டுள்ளது.

சிங்கப்பூரின் மற்ற அதிகாரத்துவ மொழிகளுள் சீனமொழிப் பிரிவினர் புதிய குடியேறிகளையும் அவர்களது எழுத்துப் படைப்புகளையும் தங்களது இலக்கிய உலகில் தனிமைப்படுத்தியே வைத்துள்ளனர். மலாய்மொழிப் பிரிவினருக்கு இத்தகைய சிக்கல் இருப்பதாகத் தெரியவில்லை. ஏனெனில், அவர்களின் மொழியும், மொழிவழிப் பண்பாடும் இயைந்தே செல்கின்றன. பேச்சுமொழியில் இருக்கும் வேறுபாடுகள் (இலக்கியத்தில்) பெரிதும் மாற்றத்தை ஏற்படுத்துவதில்லை. ஆங்கிலம் உலகமொழி என்பதாலும், அம்மொழி கைவரப் பெற்றோரின் பார்வை வித்தியாசமானது என்பதாலும் இத்தகு சிக்கல் இல்லை. சிங்கப்பூர்த் தமிழ் இலக்கிய உலகம் புதிய குடியேறிகளையும் அரவணைத்துக் கொண்டு ஆதரவளிக்கும் சூழலில்தான் இயங்குகிறது.

இவண் நவீனத் தமிழ்ப் படைப்புகளை உருவாக்கி வருவதாகக் கூறும் பலர் தமிழைப் பிழையின்றி எழுதவும், பேசவும் கற்றுக் கொண்டார்களா என்பது சந்தேகமே. பலரும் ஆர்வம் காரணமாகவும், போட்டியில் பரிசு பெறுவதை நோக்கமாகவும் கொண்டு எழுதுகின்றனர் என்பதே உண்மையான நிலவரம். மேலும், இணையப் பெருவெளியும் இவர்களது பிழையான எழுத்துகளைப் பிரசுரிக்கின்றன. 'கடலில் கரைத்த காயம் போல'ப் புதிய குடியேறிகளின் எழுத்துகள் இணையப்பக்கங்களில் விளம்பர நோக்குடனும், புகழ்பெறும் நோக்குடனும் பிழைமலிந்த, தரமில்லாத வெற்றுப் படைப்புக்களாக உலா வருகின்றன. இவ்வெற்றுப்படைப்புக்களில் மயங்கியோர் இவர்கள் தாம் 'சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியத்தைத் தாங்கும் தூண்கள்' எனப்

பிரகடனப்படுத்தும் அவலநிலை காணப்படுகின்றது. இத்தகு சூழலில் ‘கடற்கரைச் சோலைக் கவிமாலை’ (இப்போது கதைக்களம் என்ற பெயரில் இயங்குகிறது. ‘கவிச்சோலை’ ஆகிய அமைப்புகள் இவர்களுக்குத் தமிழ் இலக்கண வகுப்புகள் நடத்துவதோடு யாப்பிலக்கணமும் கற்பித்துவருவது இதயபூர்வமாகப் பாராட்டப்பட வேண்டிய செயலாகும். குறிப்பாகக் கவிமாலையின் பங்கும் பணியும் விசேஷமாகப் பாராட்டுதற்குரியது.

இரண்டாயிரமாம் ஆண்டு கண்ணதாசன் பிறந்த நாளன்று தொடங்கப்பட்ட இவ்வமைப்பு மாதாந்திரக் கவிதைப் போட்டி நடத்தியும், கவிஞர்களை உருவாக்கியும், கவிமாலைக் கவிஞர்களை நூல் வெளியிடும் அளவுக்குத் தயார்ப்படுத்தியும் வருகிறது. அண்மையில் பதினாறாம் ஆண்டு நிறைவு விழாக்கண்ட இவ்வமைப்பு கவிஞர் பிச்சினிக்காடு இளங்கோவால் தொடங்கப்பட்டது. கவிமாலைக் காப்பாளராகப் புதுமைத்தேனீ மா அன்பழகன் செயலாற்றினார்.இந்த ஆண்டு முதல் இறைமதியழகன் கவிமாலையின் புதிய தலைவராகப் பணியாற்றி வருகிறார். ஒவ்வொரு மாதமும் இறுதிச் சனிக்கிழமை அன்று கவிமாலையின் மாதாந்திரக் கூட்டம் நடைபெறும். மாதாந்திரக்கவிதைப்போட்டி, கவிதைகளைப்பற்றிய உரையாடல் எனக் கவிதை இலக்கியம் வளரக் கால்கோள் இட்டுள்ளது கவிமாலை. அனைத்திற்கும் மேலாக இநாள்வரை தொண்ணூற்றைந்து நூல்களை வெளியிட்டுள்ளது.இவற்றுள் சில நூல்கள் தமிழகத்திலிருந்து சிங்கப்பூருக்கு வந்து போனவர்களின் நூல்களாகும். எனவே அந்த நூல்களை “வருவோர்போவோர் இலக்கியம்” என்று வகைப்படுத்துவது பொருந்தும்.மேலும் அவற்றின் இலக்கியத்தகுதி பற்றிப் பேசுவது இக்கட்டுரையின் நோக்கமன்று.

கவிமாலையில் உள்ள உறுப்பினர்களே கவிச்சோலைக்கும் செல்கின்றனர். மேலும் அங்கு நடத்தப்படும் மாதாந்திரக் கவிதைப் போட்டியிலும் பரிசு பெறுகின்றனர். இந்நிலையைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கும்போது கவிதையும் ‘பணம்பண்ண’ ஒரு கருவியாகிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது. இன்றைய நிலையில் அருள்ராஜ் வரை இந்த எண்ணமே தலைதூக்கி நிற்கிறது. அதே வேளையில் புதிய குடியேறிகளுள் ‘கவிஞர்கள்’ பலரும் உருவாகி உள்ளனர்.

ந.வீ.சத்தியமூர்த்தி, ந.வீ.விசயபாரதி, நெப்போலியன், கோட்டை பிரபு, நீதிபாண்டி என்றழைக்கப்படும் பாண்டித்துரை, செல்வா, காளிமுத்து பாரதி, சி.கருணாகரசு, பாலுமணிமாறன், வை.கலைச்செல்வி, மாதங்கி, மலர்விழி, இளங்கோவன், பனசை நடராஜன், வீரையா என கவிஞர்களின் பட்டியல் நீண்டுகொண்டே செல்கிறது.கவிதையின்பால் ஆர்வம் கொண்ட பலரை உருவாக்கியுள்ள செயல் நிச்சயம் பாராட்டுக்குரியதே.

பொதுவாகப் புதிய குடியேறிகளான இக்கவிஞர்களில் மிகப்பெரும்பாலோர் உடலை இந்த நாட்டில் வைத்துக்கொண்டு, உள்ளத்தைத் தாய்நாட்டில் உலவவிட்டிருப்பவர்கள் என்று வருணிப்பதில் தவறிருக்க முடியாது. இவர்களின் கவிதைகளுடைய பாடுபொருள்கள் தாய்நாட்டு ‘மண்மணம்’ கமழுபவையாக அமைவதால் தான் இந்த முடிவுக்கு வரவேண்டியுள்ளது. எடுத்துக்காட்டாகப் ‘பிரம்மா’ என்னும் தொகுப்பில் உள்ள பெரும்பாலான கவிதைகள் (காளிமுத்து பாரத்தின் அனைத்துக் கவிதைகள், கோட்டை பிரபு, நீதிபதி பாண்டித்துரை , செல்வா ஆகியோர் கவிதைகளில் ஒன்றிரண்டு தவிரப் பெரும்பாலானவை) தாய்நாட்டு மண்ணை மறக்க முடியாத நிலையைத் தெளிவாகக் காட்டுகின்றன. ‘கவிச்சோலைக் கவிதைகள்’ என்னும் தொகுப்பில் ‘முத்தமிழ் அறிஞர் கலைஞர்’ என்னும் தலைப்பில் இறைமதியழகன் எழுதியுள்ளமை, ‘பண்பாட்டுப் பேறறிஞர்

அண்ணா' என ந.வீ.விசயபாரதி எழுதியுள்ளமை கி.மகேஷ்குமார் 'அறிஞர் அண்ணா' என்னும் தலைப்பில் எழுதியுள்ளமை; 'கவியரசு கண்ணதாசன்' பற்றிய கவிதைகள், 'தேடலைச் சுவாசி' என்னும் தொகுப்பில் உள்ள பல கவிதைகள் ஆகியவற்றை நோக்கப் புதிய குடியேறிகளான இவர்கள் தாய்நாட்டையும், தாய்நாட்டுப் பிரச்சனைகளையும் பாடுவதனை ஒரு பொதுப்போக்காகக் (common trend) கொண்டுள்ளனர். இவ்வகைப் போக்கு உருவாவது இயல்புதான் என்றாலும் திரு.எட்வின் தம்பு அவர்கள் குறிப்பிட்டதைப் போலப் 'பொருளாதார வளமும் பலமும் குடியேறிகளின் குறிக்கோள்' என்னும் அடிப்படையில்தான் இக்கவிதைகள் பிறந்துள்ளன. புதிய குடியேறிகளான இவர்கள் தமிழில் கவிதை எழுதிப் பழகச் சில தலைப்புகள் கொடுக்கப்படுகின்றன. அவற்றுள் பரிசுக்குரியவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவை (பெரும்பாலும்) தொகுப்புகளில் இடம்பெறுகின்றன. ஆகவே, தமிழ்நாட்டுப் பின்னணி என்பது இவர்களின் கவிதைகளில் இடம் பெறுவதைத் தவிர்க்க இயலாது என்றே கருதவேண்டியுள்ளது.

பாடுபொருள்கள் தலைப்புகளாகக் கொடுக்கப்படும்போது கவிதைகளை எழுதுவோர் அத்தலைப்புகளை அணுகும் முறையில் தாய்நாட்டு நினைவும், அந்த மண் சார்ந்த பிரச்சனைகளும் பாடப்படுவதற்கான சூழல் உருவாக்கித் தரப்படுகின்றது என்றே கூறவேண்டும். எனவே, இக்கவிதைகளில் 'கவித்துவ வறட்சி' தலைகாட்டுவதையும் காண்கிறோம். மேலும், தலைப்புகளை விளக்குவதே கவிதை என்று கணித்திருப்பதையும் நாம் அவதானிக்க முடிகிறது. சான்றாக வெற்றி, வலிமை, தாய், மகளிர் மாண்பு எனக் கவிதைத் தலைப்புகள் விளக்கங்களாய் அமைகின்றன. கவித்துவம் இல்லாக் 'கவிதைகள்' எவ்வாறு நிலைபெறும்? மனங்களிலே தங்காத 'அந்தச் செய்யுள்களைக்' (இலக்கணமின்றி எழுதப்படும் உரைவீச்சுக்கு இந்தச் சொற்பிரயோகம் பொருந்தாது) கால வெள்ளம் கரைத்து விடும். கவிச்சோலை, கவிமாலை ஆகியவை ஒரு வேளை 'தலைப்புகள்' கொடுக்காமல் கவிதை எழுதச் சொன்னால் 'கவித்துவ வறட்சி' மாறுமா? என யோசிக்கவேண்டும்.

மரபுக்கவிதை பாடுவோர் 'நாடு, மொழி, தலைவர்கள், இயற்கை' என்னும் வாய்பாடுகளை மனத்தில் கொண்டு (FORMULAE) பாடுவது போலத்தான் கவிமாலை, கவிச்சோலை போன்றவற்றைச் சேர்ந்தோர் சொல்விளக்கங்களையும், சொல்விளையாட்டுக்களையும் கவிதைகளாக்கிப் பாடுகின்றனர். இதற்குக் காரணம், முன்னர்க் குறிப்பிட்டது போல 'தலைப்புகள்' கொடுத்துக் கவிதை பாடச் சொல்வது என்றும் கூறலாம். கவிதையை வளர்க்க நினைக்கும் இவ்வமைப்புகள் கவிதை எழுதப் பயிற்சியளிக்கின்றன. இப்பயிற்சியில் பரிசுக்குரிய கவிதைகள் எனத் தேர்ந்தெடுக்கப்பட்டவை நூலுருப்பெறும் போது மரபுக்கவிதைகளில் காணப்படும் 'செக்குமாட்டுத்தன்மை' இயல்பாகவே வந்து விடுகின்றது.புதிய கற்பனையோ, கவிதையில் புதுமைப்போக்கோ தென்படுவது இல்லை.

'சிங்கப்பூர்க் கவிஞர்கள்' எனப் பொதுவாகக் கவிமாலை, கவிச்சோலைக் கவிஞர்களைச் சிலர் அடையாளப் படுத்துகின்றனர். இவ்வடையாளம் 'வாழிடம் சிங்கப்பூர்' என்னும் காரணம் பற்றி வந்ததே தவிர வேறு தகுதியாலன்று. 'சிங்கப்பூர்' என்னும் நாடு பாடுபொருளாய் அமைவதால் மட்டும் சிங்கப்பூர்க் கவிதை என்று அடையாளப்படுத்துவது கவிதையைக் கேலிப்பொருளாய் மாற்றிவிடும். சிங்கப்பூரில் வாழ்ந்துவரும் இக்கவிஞர்கள் சிங்கப்பூரின் விசுவாசிகள். தங்களின் வளமான பொருளியல் வாழ்வுக்கு உதவும் சிங்கப்பூரை வாழ்த்துவதும், வருணிப்பதும் புதிய குடியேறிகள் படைத்த கவிதைகளில் காணப்படும் பொதுப்போக்கு.

உதாரணத்துக்கு 1990இல் சிங்கப்பூரில் குடியேறிய பிச்சினிக்காடு இளங்கோ தொடங்கி அண்மையில் குடியேறிய கவிமாலைக் கவிஞர்கள் பலரின் கவிதைகளைக் கூறலாம். பதச்சோறாகக் 'கூடி வாழ்த்தும் குயில்கள்' என்னும் பெயரில் வெளியான தேசிய தினக் கவிதைகளின் தொகுப்பினைச் சொல்லலாம்.

சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகம், சிங்கப்பூரின் 35ஆம் தேசிய தினத்தை ஒட்டி நடத்திய கவியரங்கில் வாசிக்கப்பட்ட கவிதைகளுள் ஓரிருவரைத் தவிர எஞ்சியோர் அனைவருமே சிங்கப்பூரின் நிரந்தரவாசிகள் என்பது கவனிக்கத்தக்கது. ந.வீ.விசயபாரதி 'திரவியதேசம்' எனச் சிங்கப்பூரின் பெருமையை நன்றியுணர்வோடு நூலுக்குத் தலைப்பாக்கி மகிழ்கிறார். ந.வீ.சத்தியமூர்த்தி 'தூரத்து மின்னல்' என்னும் கவிதைத் தொகுப்பில் 'சிங்கப்பூரின் பெருமை' 'சமநீதி பூமி சிங்கப்பூர்', 'சிங்கப்பூரின் வளர்ச்சி' ஆகிய கவிதைகளில் தன் நன்றியுணர்வைப் புலப்படுத்துகிறார். மலர்விழி இளங்கோவன் 'ஒரு பெண்ணாகச்' சிங்கப்பூரை உருவகித்து அதன் வளர்ச்சியைக் கண்டு பிரமிக்கிறார். இன்று இவர் இந்தியாவிற்குத் திரும்பிவிட்டார். இவரைப் போன்று பலரும் இங்கு இருக்கும் வரை சிங்கப்பூரின் துதிபாடுவர். இது குடியேறிகளின் இயல்பே!

'அடையாளம்' என்பதனைக் குடியுரிமை சார்ந்த விஷயமாகவே பலரும் கருதுகிறார்கள். சிங்கப்பூர்க் கவிதையின் தனித்துவ அடையாளம் என்பது குடியுரிமை பற்றியது மட்டுமன்று; அதற்கு அப்பாலும் சிங்கப்பூரியர் என்ற உணர்வோடு, சிங்கப்பூரின் நுணுக்கமான சமூகப் பிரச்சனைகளை உள்வாங்கிக் கொண்டு ஆத்மார்த்தமாகப் பாடுவதாகும். இது கவிதைக்கு மட்டுமின்றி எல்லாப் படைப் பிலக்கியங்களுக்கும் பொருந்துவதாகும். 'சொல்வனம்' என்னும் இணைய இதழில் மலேசியாவில் பிறந்து வளர்ந்த 'அசல்' மலேசியக் குடிமகனான கே.பாலமுருகன் என்னும் இளம் எழுத்தாளர் 'அடையாளச் சிக்கல்' என்னும் பிரச்சனையை 'ஜெயந்தி சங்கர் பற்றிய பேட்டியில் பூதாகரமான பிரச்சனை போன்று சித்திரித்திருந்தார். சிங்கப்பூரின் கவிதைச் சூழல் என்னும் தலைப்பில் இக்கட்டுரையாளர் எழுதிய கட்டுரை (மௌனம் கவிதை இதழ், மலேசியா) வாசித்து விட்டு அக்கட்டுரையில் கட்டுரையாளரின் சொந்தக் கருத்துகளை அப்பேட்டியில் தனது கருத்துகளாகத் திருடி எழுதியிருந்தார். அவர் ஜெயந்திசங்கரைப் புகழ்வதற்காக எடுத்துக் கொண்ட 'அடையாளச் சிக்கல்' என்னும் கருவி, அவருடைய இயல்பைக் கட்டுரையாளருக்கு உணர்த்தியது. மலேசியப் பின்னணியோடு எழுதும் கே.பாலமுருகன் சுயசிந்தனை இல்லாதவர் என்பதும், மற்றவர் கருத்துகளை அப்படியே தனதாக்கிக் கூறும் கருத்துத்திருடர் என்பதும் வெட்டவெளிச்சமாயின. இவருடைய படைப்புகளில் வெளிப்படும் 'மலேசியர்' என்ற உணர்வும், 'மலேசியப் பின்னணியும்' போல இவருடைய நண்பர் குழாத்தைச் சேர்ந்த சிங்கப்பூரில் வாழும் பாண்டித்துரை (நீதிப்பாண்டி), ஜெயந்திசங்கர் முதலியவர்களின் படைப்புகளில் சிங்கப்பூர் பின்னணி இழையோடுகிறதா? என ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். புகழ் பெறுவதற்குரிய கருவியன்று சிங்கப்பூரிய அடையாளம். அது முன்னர்க் குறிப்பிட்டபடி உயிரோடும், உணர்வோடும் (ஏன், ஆத்மார்த்தமானதுங்கூட) ஊடாடும் தேசிய உணர்வு. இதுவே சிங்கப்பூர்ப் படைப்பினைத் தனித்துவம் பெற்றதாகக் காட்டும்.இது சிங்கப்பூரில் பிறந்து வளர்ந்தோருக்கு எளிதில் கைவரப்பெறும் ரசவாத வித்தை ஆகும்.ஆனால் நிரந்தரவாசிகளில் ஒரு சிலர் இந்த வித்தை கைவரப்பெறுவதற்காகப் பிரமப்பிரயத்தனம் செய்து வருகின்றனர். நெப்போலியன், மாதங்கி ஆகியோர் ரசவாத வித்தையைத் தொட்டுப் பார்க்க முயன்றுள்ளனர். கவிஞர் பிச்சினிக்காடு இளங்கோவின், 'வியர்வைத் தாவரங்கள்' என்னும் நூல்வெளியீட்டின் போது சிறப்புரையாற்றிய கவிஞர் வைரமுத்து

பிச்சினிக்காடு இளங்கோவிற்கு விடுத்த வேண்டுகோளை இங்குச் சுட்டுவது பொருந்தும். " தமிழகப் பின்னணியில் கவிதை பாடுவதை விட்டுவிட்டுச் சிங்கப்பூர்ப் பின்னணியில் கவிதைகள் படைக்குமாறு கேட்டுக் கொண்டார்." இதனைக் கவிமாலை, கவிச்சோலைக் கவிஞர்கள் நினைவில் நிறுத்த வேண்டும். ஆயின், இஃது அவ்வளவு எளிதானதன்று. இது முன்னர்க்குறிப்பிட்டபடி இரசவாதம் போன்றது.

'தூரத்து மின்னல்' என்னும் கவிதைத் தொகுப்புக்கு அணிந்துரை வழங்கியுள்ள புதுமைத்தேனீ மா.அன்பழகன், "வார்த்தைப் பின்னலில் சிலந்தி வலையாக நம்மைச் சிக்க வைத்து விடுகிறார்"

எனப் பாராட்டுமுகமாக எழுதியுள்ளார். ஆயின், இவ்வரிகள் இக்கட்டுரை யாளருக்குள் மாற்றுச் சிந்தனையைத் தோற்றுவித்தன. சொற்களை வலிந்து தேடிக் கவிதை செய்வது, பாடுபொருள் விவரிப்பு, உணர்ச்சியற்ற வெறும் சொல்விளையாட்டுகள் கொண்டு அமைவது எனச் செயற்கையாகச் சிலந்தி வலையாகப் பின்னப்பட்டவைதான் ந.வீ.சத்தியமூர்த்தியின் கவிதைகள். இவருடைய யாப்புப்புலமையில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. இவர் ந.வீ.விசயபாரதி, பிச்சினிக்காடு இளங்கோ போலப் பழுதில்லாத யாப்பிலக்கணப் புலமை உடையவர். அதனாலோ என்னவோ செய்நேர்த்தி இல்லாமல் கவிதைகள் செய்திருக்கிறார். இவர் 'தூசுப் பிரச்சனை' பற்றி 'ஐம்பது ஆண்டுகள் ஐம்பது கவிதைகள்' என்னும் தொகுப்பில் கவிதை எழுதியிருந்தார். அத்தொகுப்பில் உள்ள, 50 ஆண்டுகால வாழ்க்கையினைப் பிரதிபலிக்கும் வகையில் பிற மொழிக் கவிதைகள் அமைய, தமிழில் ஓரிரு கவிதைகள் தவிர எஞ்சியவை சிங்கப்பூர் வாழ்வை 'அச்சு அசலாகக்' காட்டியுள்ளனவா என்பது சந்தேகமே! தூசுப் பிரச்சனை சிங்கப்பூருக்கு மட்டும் உரியதன்று. அண்டை நாடுகளான மலேசியா, இந்தோனேசியா போன்ற வற்றுக்கும் உரிய பிரச்சனைதானே? மேலும், 'தூசு' என்னும் சொல்லின் இரு வேறு பொருள்படப் பாடியுள்ளார் ந.வீ.சத்தியமூர்த்தி.

ந.வீ.விசயபாரதி, பிச்சினிக்காடு இளங்கோ ஆகியோரும் சொற்களைக் கொண்டே விளையாடுகிறார்கள். எடுத்துக் காட்டாகக் கீழே உள்ள கவிதைகளைக் காண்க:

"கணினி எனும் காரிகை ஒரு மேனகை"

(இரவின் நரை, 2130)

"புண்படுத்தியதைப் பயன்படுத்தியதாய்ப் பக்குவப்பட்டேன் பண்பாடு கற்றேன் (மேலது,413)கவி 'தை' வாழ்த்து (முதல் ஓசை, ப108) எனப் பல கவிதைகளை ஓசைக்கு முக்கியத்துவம் தந்து சொற்களைக் கொண்டு கவிதை செய்திருக்கிறார். இவரது மொழிப்பற்றுப் பாராட்டுக்குரியது. இவருடைய கற்பனையின் சாட்சியாய்,

"என் குறுகிய, நீண்டகாலக் கடனுக்கெல்லாம் வட்டி கேட்காத வள்ளல் நீ"

"எனக்குக் கடவுச்சீட்டும் பயணச்சீட்டும் நீதான்" (இரவின் நரை ப11) "மொழி" என்னும் கவிதை திகழ்கிறது. இவர் பல கவிதை நூல்களை எழுதியிருந்தாலும் இவர் 'கவிஞன்' என்னும் அந்தஸ்தை எட்டியது "நானும் நானும்" என்னும் நூல் வழியே என்பது இக்கட்டுரையாளரின் கருத்து. இயற்கையின்பால் ஈடில்லாக் காதலும் தாவரங்கள்பால் தணியாத காதலும் கொண்ட இவர் மரபுக்கவிதை, புதுக்கவிதை, நவீனக்கவிதை எனும் தளங்களில் இயங்குகிறார். கவிதை பற்றி எழுதும் இவர், 'எது கவிதை' என்னும் தலைப்பில்

"கவிதையெனில் – அது
கவிதையெனில் – புதுக்
கருத்தைத்தாங்கி வரவேண்டும்

கவிதையெனில் – வெல்லக்
கவிதையெனில் – வெல்லும்

சிந்தனை அழகைத் தரவேண்டும்"
(முதல்ஓசை,ப25)

என ஊருக்கு உபதேசம் செய்யும் இவரது கவிதைத் தொகுப்புகளில் 'நானும் நானும்' என்னும் தொகுப்பு இவரது சிந்தனை வீச்சும், அனுபவப் பரப்பும் வெளிப்படும் வித்தியாசமான தொகுப்பாக அமைகிறது. இவரது பரிணாம வளர்ச்சியைக் காட்டுவதோடு இவரது கவிதைப்பரப்பின் பரிமாணங்களையும் வெளிக்கொணர்கிறது. 'நவீனம்' என்னும் தலைப்பில் எழுதப்பட்ட இவரது கவிதை வளரத் துடிக்கும் கவிஞர்களுக்கு ஏற்ற ஆலோசனையாகும்.

சிங்கப்பூர் வாழ்க்கையின் புறத்தோற்றங்களைப் பாடுவதே புதிய குடியேறிகளாக உள்ள கவிஞர்களின் பொருண்மையாய் அமைகிறது. இதுவும் இவர்களிடையே நிலவும் பொதுப்போக்கு. இந்நிலைக்குக் காரணம் என்ன என ஆராய்ந்தால் நமக்கு விடையாகக் கிடைப்பது இவர்களின் மனோபாவமே என்பதுதான். பிச்சினிக்காடு இளங்கோ சிங்கப்பூரை வருணிக்கையில் 'விமானங்களின் வேடந்தாங்கல்' (இரவின் நரை, ப*104*) எனப் பாடுகிறார். ஆனால், இக்கவிஞர்களோ சிங்கப்பூரில் சில காலம் வாழும் வேடந்தாங்கல் பறவைகள் என்றே இக்கட்டுரையாளருக்குத் தோன்றுகிறது. வளமான வாழ்வுக்காக வந்தவர்கள் தேவையான பணத்தைச் சேர்த்துக் கொண்டு மீண்டும் தாயகம் திரும்புவர். (சான்றாகச் சுப்ரமணியம் ரமேஷ், ஓ.கே.மகேஸ்வரி முதலானோரைக் கூறலாம். இவர்கள் கவிமாலையைச் சேர்ந்தவர்கள் அல்லர். இவர்களைப் போன்றோர் கவிமாலையிலும் உள்ளனர்.) இவர்கள் முனைவர் அரசு குறிப்பிடுவது போலத் "தப்பிக்கும் மனநிலையோர் என்பதால் நமக்கேன் இந்த வம்பு என ஒதுங்கிக் கொள்வர்" (முன்னுரை, சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம் ஆழமும் அகலமும்).

கருணாகரசுவின் கவிதைகளில் ஓரளவு கவித்துவக் கூறுகள் இடம்பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக மழையை வருணிக்கும் அவர்,

"உழுதவன்கண்ணீரை
அழுதேதுடைக்கிறது
வானம்" (தேடலைச்சுவாசிப73)

எனவும், பாரதி என்னும் மாபெருங்கவிஞனை,

"அன்றுஇருண்டுகிடந்த
பெண்ணியத்திற்காக
எண்ணெயேஇல்லாமல்
எரிந்தவிளக்கு"

என உருவகப்படுத்தியும் பாடியுள்ளார். இவருடைய கவிதைகளில் உணர்வுப் பெருக்கின் எதிரொலியைச் செவிமடுக்கலாம். 'ஊருவிட்டு ஊருவந்து' என்னும் கவிதையில் நாடு விட்டு நாடு வந்து நலம் சிறிதும் அடையாமல் உழைக்கும் ஊழியர்களின் ஏக்கப் பெருமூச்சும், அவலக்குரலும் ஒலிக்கின்றன. "என் மடியில் பொறந்ததுக்கு" என்னும் கவிதை கிராமியப் பின்னணியில் (ஒப்பாரிப் பாடல் போல்) முதியோர் கொடுமையைப் பாடுகிறது. இவர் குறுங்கவிதைகளில் பெருவிருப்புடையவர் என்பதைப் பல 'ஹைக்கூ' கவிதைகள் வாயிலாக உணரலாம். இன்னும் நிறைய கவிதைகள் படிக்கப் படிக்க இவரது கவிமனம் செழுமைப்படவாய்ப்புள்ளது.

பாண்டித்துரை உரைநடையில் தெளிவாக எழுதுவதில்லை. இவரது குழப்பம் படிப்பவர்களையும் குழப்பும். தொடக்கத்தில் அளவுக்கதிகமான பிழைகளோடு இணையப் பக்கங்களில் எழுதி வந்துள்ளார். கவிமாலை இலக்கண வகுப்பு இவருக்குத் தமிழை ஓரளவு பிழையின்றி எழுத உதவியுள்ளது. ஆனாலும், இவரிடம் சிந்தனைத் தெளிவு இல்லாத காரணத்தால் கவிதைகளில் இருண்மை நிலவுகிறது. இதற்குச் சான்றாகத் தலைப்பில்லாக் கவிதைகளைக் கூறலாம்.

"தலைப்பினைத் தேடுங்கள்
கிடைக்கக்கூடும்

உங்களிடமிருந்தும்" (பிரம்மா,ப30)

இவரது கவிதைகளில் முரண்பாடுகள் உள்ளன. ஒரு கவிதை,

"மனிதர்களை
எனக்குப்பிடிப்பதில்லை
அப்பன்னாநீயாரு
நானா
ஆறுஅறிவுமிருகம்
தேடிக்கொண்டிருக்கிறேன்" (பிரம்மா,ப32)

என மனிதனை வெறுக்கிறது. ஆனால், இவரின் மற்றொரு கவிதையோ,

"நான்
உறவுகளை
மனிதமாகவேபார்க்கிறேன்
அவர்களுக்குக்கிடைத்த
கௌரவமேஉறவு" (பிரம்மா,ப33)

என உறவுகளை மதிக்கிறது. ஏன் இந்த முரண்பாடு? விக்ரமாதித்யன் கூறுவது போலத் (கவிதை இரசனை, ப25) தனிமனிதனின் மன உளைச்சல்களே கவிதை என்னும் பெயரில் வெளியாகின்றனவோ?

பாலு மணிமாறன் 'அலையில் பார்த்த முகம்' என்னும் கவிதைத் தொகுப்பினை வெளியிட்டுள்ளார். அவரது கவிதைகளில் பெரும்பாலானவை உரைநடையை உடைத்துப் போட்டு எழுதப்பட்டவை. வறட்டுக் கவிதைகளாகவே உள்ளன. 'பார்ப்பதற்கு மட்டுமான டைரிகள்' (அலையில் பார்த்த முகம், ப34) என்னும் கவிதை எழுதமுடியவில்லையே; ஒரு நாள் முழுவதும் ஓயாத வேலையாக உள்ளதே என்னும் ஏக்கத்தைப் புலப்படுத்துகிறது. இவர் எழுத்துத்துறையில் ஆர்வம் மிக்கவர் என்பதாலே இக்கவிதை இவரது உணர்வுப்பூர்வமான வெளியீடு எனலாம். 'அலையில் பார்த்த முகத்தில்' முரண் அமைந்திருக்கிறது.

"துவைத்துமிளிர்கிறதுதுணி
துவைத்தராணியோ
தோப்பில்அழுக்காகிறாள்"

'இடைவெளி என்பதே இனிய விஷயம்' (ப 3031) என்னும் இவரது எழுத்தில் கற்பனையும் அவ்வப்போது தலை காட்டுகிறது. சான்றாகக் 'கதவின் சில ஜன்னல்கள்' என்னும் கவிதையில் காதலியின் நினைவு அடிக்கடி வருவதை (ஒரு பெண் பயணியின் நினைவு)

"சிலநிமிடங்களுக்குஒருமுறை
வந்துபோகும்
எம்.ஆர்.டி.ரயிலென
வந்துபோகும் உன்நினைவுகள்" (ப39)

எனக் கற்பனையாக சாதாரண நிகழ்வைக் காட்டும் இயல்புக் கற்பனையாக எழுதுகிறார்.

இவரது கவிதைகளும் சிங்கப்பூரின் புறக்காட்சிகளை வருணிக்கத் தவறுவதில்லை. இதற்குச் சான்றாக 'மதியப் பறவைகள்' என்னும் கவிதை திகழ்கிறது. 'நடை பழகும் காலை' என்னும் இக்கவிதையிலும் சிங்கப்பூர்ப் பதிவு இடம்பெறுகிறது. இவற்றின் ஊடாகப் பாலு மணிமாறனின் மனிதநேய உணர்வும் வெளிப்படுகிறது. பரிசுச்சீட்டுகளை நம்புபவர்கள், பதவி ஆசை கொண்ட மனிதர்கள் எனப் பலருக்கும் (பக்48,49) மத்தியில் வாழ்க்கையை நகர்த்த வேண்டியுள்ளதை 'நகர்வுகள்' கவிதையில் காட்டுகிறார்.

சுருங்கச் சொன்னால் பாலுமணிமாறனின் "அவனது கவிதைகள்" என்னும் தலைப்பில் அவர் எழுதியிருப்பது போன்று எப்படியோ தொடங்கி எப்படியோ முடிகின்றன. 'குழந்தை மாதிரி நிர்வாணமாய்ச் சிரிக்கும்' வெள்ளைக் கவிதைகளாக உள்ளன. சில கவிதைகள் 'சோம்பேறிக் கவிதைகளாய்', பெண்பற்றிய காதலி பற்றிய 'காமுகிக் கவிதைகளாய்' அமைகின்றன. நவீன கவிதை எழுதும் பாலு மணிமாறன் போன்றோர் கையாளும் சொற்பிரயோகங்களைக் கவனித்தால் இவர்கள் தமிழிலக்கணம் தெரியாதவர்கள் என்பதும், நவீனக்கர்த்தாக்கள் என்னும்

'ஹோதாவில்' புதிய, மயக்கந்தரும் சொல்லாட்சிகளை உருவாக்கும் சிருஷ்டிகர்த்தாக்களாகவும் உள்ளனர். எடுத்துக்காட்டாகக் 'காமுகன்' என்னும் ஆண்பாற்சொல்லுக்கு இணையாகக் 'காமுகி' என்னும் சொல்லைப் பெண்பாற்சொல்லாக உருவாக்குகிறார். இது போன்று 'கவிதாயினி' எனக் கவிதை எழுதும் பெண்ணையும், 'எழுத்தாளினி' என்று பெண் எழுத்தாளரையும் 'நவீனகவிஞர்கள்' அழைக்கின்றனர்.இதுவும் நவீன பாணி என எண்ணுகின்றனர் போலும்!

சிங்கப்பூரின் நிரந்தரவாசிகள் அல்லது புதிய குடியேறிகள் அனைவருமே சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியம் பற்றிய அக்கறையோ அல்லது அதைப்பற்றிய உயர்ந்த எண்ணங்களோ இல்லாதவர்கள். இவர்கள் தமிழகத்திலிருந்து வந்திருப்பதால் தமிழக இலக்கியம் பற்றிய சிந்தனையால் ஆக்கிரமிக்கப்பட்டவர்கள். தமிழக இலக்கியச் சூழலில் கடைநிலை எழுத்தாளர் என்ற தகுதிகூட இவர்களுக்குக் கிடைப்பது கடினமே. இவர்களின் இலக்கிய உணர்வு எப்படிப்பட்டது? 'நுணலும் தன் வாயால் கெடுவது போல' பாலுமணிமாறனின் "இங்கு இப்படியாக இலக்கியம்" என்னும் கவிதை இவர்களின் இலக்கிய உணர்வைக் கேலி செய்கிறது.

"எங்கேபோய்விடும்இலக்கியம்
பேசலாமேபின்னொருநாள்"

பாலுமணிமாறனும் இவ்விலக்கியக் குடும்பத்தில் ஒருவர்தான்!

சுருங்கக்கூறின், பாலுமணிமாறனும் கவிதை எழுதிப் பார்க்கிறார். கவித்துவம் என்றாவது ஒரு நாள் கைகூடும் என நம்புவோம்.

ரமேஷ் சுப்பிரமணியன் 'சித்திரம் கரையும் வெளி' என்னும் கவிதைத் தொகுப்பை வெளியிட்டவர். தமிழகத்திலிருந்து வந்து சிங்கையில் சில ஆண்டுகள் வாழ்ந்து மீண்டும் தமிழகம் சென்றுவிட்டார். தீவிர வாசகரான இவர் ஓவியம், சிறுகதை, நிழற்படம் எனப் பல வழிகளிலும் தன் ஆர்வத்தை வெளிப்படுத்துபவர். இப்போது அவர் தமிழகத்தில் இருக்கிறார். இவர் இணையத் தளங்களிலும் பல படைப்புகளை வெளியிட்டுள்ளார். காலச்சுவடு இதழில் இவர் லதாவின் 'பாம்புக்காட்டில் ஒரு தாழை' என்னும் நூல் பற்றி எழுதும்போது சிங்கைத் தமிழ்ச் சமுதாயத்தின் ஆன்மசாரம் பற்றி சிலாகிக்கிறார்.அவர்

"பல இன சமூகங்கள் வாழும் சிங்கையில் தன் இடம்
என்பதற்கான தேடலும்,
அதில் தன் பலங்களாக எவற்றைக் கொள்ள வேண்டும்,
எவற்றைத் தள்ள
வேண்டும் என்பதில், தன் முரண்பாடுகள் இயைய
தன்னை இணக்கமாகப்
பொருத்திக் கொள்ள முயலும் முயற்சியிலுமாக அதன்
ஆன்மா இருக்கிறது"

என எழுதுகிறார். சிங்கப்பூர்த் தமிழ்ச் சமூகத்தின் ஆன்மா சிங்கைப் படைப்புகளில் வெளிப்பட வேண்டும் என்னும் கருத்து அவருடைய கட்டுரையில் தொனிக்கிறது. மற்றவர்களின் கவிதை பற்றிக் கருத்துரைக்கும் இவர் சிங்கப்பூரில் வாழ்ந்த காலத்தில்தான் தனது முதல் கவிதைத் தொகுப்பை வெளியிட்டார். அந்நூலில் சிங்கப்பூர்ப் பின்னணி அமையவில்லை. இவரது கவிதைத் தொகுப்பின் ஆன்மசாரமும் வேறாக அமைந்துள்ளது. இவர் இருமுறை தங்கமுனை விருதுப்போட்டியில் கவிதைக்கெனப் பரிசுகள் பெற்றிருந்தாலும் (**2003** ஆறுதல் பரிசு; **2005** மூன்றாம் பரிசு) சிங்கப்பூர்ப் பின்னணியில் கவிதைகள் படைத்ததற்குச் சான்றுகள் இல.தமிழகத்தில் புகழ்பெற்ற எழுத்தாளர்களைப் புத்தகச் சந்தையில் (புத்தகக் கண்காட்சியில்) சந்தித்து அவர்களோடு நிழற்படம் எடுத்துக் கொண்டு அதனை u tube-இல் வெளியிட்டு உலக அளவில் பிரபலமாகும் முயற்சியில் ரமேஷ் சுப்ரமணியம் ஈடுபட்டுள்ளார் எனத் தெரிகிறது. மேலும், ஜெயந்தி சங்கரும் ஒரே பேட்டியை, ஒரே கட்டுரையைப் பல

இணையத் தளங்களிலும் வெளியிட்டு உலக அளவில் பிரபலமாவதற்காகப் பல தளங்களிலும் புகைப்படங்களைப் பிரசுரிக்கச் செய்து 'பிரமப் பிரயத்தனம்' செய்து கொண்டிருக்கிறார். இவற்றையெல்லாம் நோக்கச் சிங்கப்பூரில் வாழ்ந்தவர்கள் அல்லது வாழ்ந்து வருபவர்கள் என்ற அடையாளம் இவர்கள் புகழடைவதற்கு ஒரு சாதனம். இவர்களைப் போன்று பல புதிய குடியேறிகளுக்கும் சிங்கப்பூர் புகழடைய ஒரு கருவியாக உள்ளது. இது புதிய குடியேறிகளிடம் காணப்படும் பொது இயல்பு என்பதனால் இவர்களின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளக் கவிதை எழுதுவது, கதை எழுதுவது என்பன கருவியாக அமைகின்றன.

தமிழகத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தமிழ் ஆசிரியர்களும் கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளனர். கோவி.மாசிலாமணியின் 'மௌன முழக்கம், 'மனித நிறங்கள்' ஆகியவை மரபுக்கவிதை நூல்கள். தமிழகப் பின்னணியில் பாடப்பட்டவை. கவிஞர் அனுபமா என்னும் புனைபெயரில் கவிதை எழுதும் தி.சேதுராமலிங்கம் 'கருணை வள்ளல் கலைஞர்' என்னும் நூலை வெளியிட்டுள்ளார். இதுவும் தமிழக அரசியல் தலைவரைப் பாடுவதாகும். 'வட்ட நிலா' என்னும் சிறுவர் கவிதைத் தொகுப்பு இரா. சுப்பிரமணியன் என்னும் ஆசிரியரால் வெளியிடப்பட்டது.

நவீனகவிதை எழுதும் புதிய குடியேறிகளுள் ஒரு சிலர் மரபுக்கவிதை எழுதுவதிலும் வல்லவர்கள். முன்னர்க் குறிப்பிட்டப்படி ந.வீ.சத்தியமூர்த்தி, ந.வீ.விசயபாரதி, கருணாகரசு, பிச்சினிக்காடு இளங்கோ,கோவிந்தராசு போன்றோரைக் கூறலாம். சிங்கைத் தமிழ்க்கிறுக்கன் என்பவர் 'செந்தில்வேல் சதகம்' என்னும் நூலைப் பாடியுள்ளார். இது தமிழகப் பின்னணி கொண்டது. இந்நூலின் ஆசிரியர் தமிழகத்திலிருந்து வந்தவர். ஆயின், அவர் பெயருக்கு முன் 'சிங்கை' என்னும் அடைமொழி சேர்க்கப்பட்டிருப்பது முரணாக உள்ளது. சதகம் என்பது சிற்றிலக்கிய வகை. அறம் வலியுறுத்தும் நோக்கில் பாடப்படுவது. நவீனயுகத்திலும், நவீன கவிதை எழுதுவோர் மிகுதியாகும் சூழலிலும் பழமையின்பால் தமிழ்க்கிறுக்கனின் கவனம் திரும்பியிருப்பதும் ஒரு முரண்தான்.

'அகக்கண் திறப்போம்' என்னும் நூலை எழுதிய சித.அருணாசலம் உரைநடையை உடைத்துப் போட்டுக் கவிதை என்ற பெயரில் எழுதியுள்ளார். இவர் கவிதை என்றால் என்ன? கவித்துவக் கூறுகள் யாவை? உரைநடைக்கும் கவிதைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? என்பது பற்றி நிறையவே தெரிந்துகொள்ள வேண்டும். புத்தகம் / நூல் வெளியிட அவருக்கு உரிமை இருக்கிறது என்றாலும் தன்னுடைய எழுத்துகளைக் 'கவிதை' என இவர் மயங்கி நூல் வெளியிட்டிருப்பது கவிதையை அவமதிப்பது போல உள்ளது. பிறதுறை சார்ந்த இவர் தமிழை நேசிப்பதோடு கவிதையைச் சுவாசிக்கக் கற்றுக் கொள்ளவும் வேண்டும்.

சிங்கை, மலேசிய நாளிதழ்களின் வாயிலாகவும் இணையப் பக்கங்கள் வாயிலாகவும் கவிஞரான திரு.ரஜீத் 'பன்னீர்த்துளிகள்' என்னும் கவிதை நூலை வெளியிட்டுள்ளார். இவர் தங்கமுனை விருதுப்போட்டியில் **(2007)** பரிசு பெற்றவர். இவருடைய கவிதைகள் கவிச்சோலை, கவிமாலை போன்ற அமைப்புகள் நடத்திய நிகழ்ச்சிகளில் வாசிக்கப்பட்டவை; பரிசும் பெற்றவை. இவருடைய கவிதைகள் செய்தித்தாளில் வெளிவந்த செய்திகள், சிங்கப்பூரில் நடைபெறும் நிகழ்வுகள் என்பன போன்றவற்றைக் கருப்பொருளாகக் கொண்டவை; தமிழகப் பின்னணி கொண்டவை. மனிதநேய உணர்வு இவரிடம் காணப்பட்டாலும் இவரது கவிதைகள் உரைநடையின் செல்வாக்கு மிக்கவை; இவற்றை வெறும் உரைவீச்சு என்று வருணிப்பதிலும் தவறில்லை. ஆகவே, இவருடைய கவிதைகளை வாசிக்கும்போது

உரைநடையை வாசிக்கும் உணர்வே ஏற்படுகிறது. கவித்துவக் கூறுகள் காணாமற் போனமையால் கவிதை ஒன்று கூட நெஞ்சில் நிற்கவில்லை. அறிவியில் துறையில் கல்வி கற்ற இவர் தமிழ் மீது கொண்டுள்ள பற்றுப் பாராட்டுக்குரியது. எனவே, இவர் புகழ் அடைவதற்கும், தமிழ்ச்சமூகத்தில் அந்தஸ்து பெறுவதற்கும் தமிழும், தமிழ்க்கவிதையும் கைகொடுக்கும் கருவிகள் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமே இல்லை.

## பெண்கவிஞர்கள்

மாதங்கி, மலர்விழி இளங்கோவன், இன்பா என்றழைக்கப்படும் பேரின்பம்,லலிதாசுந்தர் எனப் பலர் கவிதைத் துறையில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் கவிமாலை என்னும் அமைப்பால் கவிஞர்களாக உருவாக்கப்பட்டவர்கள். இயற்கையில் தோன்றும் கவிதை உணர்வுக்கும், செயற்கையாக உருவாக்கப்படும் கவிதை உணர்வுக்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. புதிய குடியேறிகளுள் பலரும் உருவாக்கப்பட்ட கவிஞர்களே. ஆகவே கவிதையைச் செய்ய முடிந்திருக்கிறதே தவிர கவிதையை வடிக்க இயலவில்லை. மலர்விழி, மாதங்கி, இன்பா போன்றோரும் இவ்வகைப்பாட்டினுள் அடங்குவர். இவர்கள் பல வகையான போட்டிகளில் பங்கேற்றுப் பரிசுகளை வெல்வது வழக்கம்.

சிங்கப்பூரில் வாழ்ந்துவரும் பெண்கவிஞர்களின் கவிதைத்தொகுப்பு ஒன்றினை "நதிமிசை நகரும் கூழாங்கற்கள்" எம் கே குமார் வாசகர்வட்டம் என்னும் இலக்கிய அமைப்பின் வழி தொகுத்துச் சென்ற ஆண்டு( 2015) வெளியிட்டுள்ளார். முனைவர் எம் எஸ் ஸ்ரீலக்ஷ்மி இந்நூலில் எழுதியுள்ள "சிங்கப்பூர்ப் பெண்களின் கவிதையுலகம் - ஒரு பருந்துப்பார்வை" என்னும் கட்டுரையில் கவிதைத்துறையில் இவர்கள் செல்லவேண்டிய தூரம் அதிகம் எனக் குறிப்பிட்டுள்ளார்.அதேவேளையில் இத்தொகுப்பு முயற்சி கவிஞர்களை அடையாளம் காணவும். மேன்மேலும் பெண்கள் கவிதைத்துறையில் ஈடுபாடு காட்டவும் கைகொடுத்துள்ளது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

'கருவறைப் பூக்கள்' என்னும் கவிதைத் தொகுப்பை மலர்விழி இளங்கோவன் 2008 இல் வெளியிட்டார். சிங்கப்பூரில் சில ஆண்டுகள் வாழ்ந்த பின்னர், தமிழகத்திற்குத் திரும்பிவிட்டார் மலர்விழி. தனது அனுபவப் பரப்புக்கு எட்டியவற்றை எளிமையான மொழியில் கவிதைகளாக்கியுள்ளார் மலர்விழி. புதுமைத்தேனீ, உதுமான்கனி எனத் தனக்கு வேண்டப்பட்டவர்களையும் கவிதையில் வாழவைத்துள்ளார். தமிழகத்தை விட்டு வந்து இந்நாட்டில் வாழ்வதன் மூலம் தங்களை அன்னியமானவர்களாக எண்ணி வருந்தும் வருத்தம், புலம்பெயர் வாழ்வின் வேதனைகள் புதிய குடியேறிகளின் கவிதைகளில் காணப்படுவது ஒரு பொதுத்தன்மை என்றே கூறவேண்டும். பலர் அன்னியமாதலை, அதன் இரணங்களைக் கவிதைகளில் புலம்பித் தீர்ப்பர். சிலர் ஓரிரு கவிதைகளில் சொல்லி முடிப்பர். ஆக, எல்லாருடைய கவிதைகளின் பொருண்மையும் நாடுவிட்டு நாடு வந்து வாழ்தலைத் தவறாமல் பேசும். மலர்விழியின் கவிதை ஒன்று,

"நாற்றுமுதிர்ந்து
நாளாகி
நாடுமாற்றிநடவுசெய்தாலும்
வேற்றுமண்பதிந்து
விருப்புடனேவேர்பிடித்து
வியத்தகுமகசூல்தரும்
அவசியவாழ்வில்
ஆணிவேர்தொலைத்த
அதிசயரகம்நாங்கள்"

எனப் பேசுகிறது. உண்மையில் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்த மக்களின் அவலக்குரல் அவர்களின் கவிதைகளில் உரக்க ஒலிப்பது போல் புதிய குடியேறிகளின் வாழ்விலோ, பொருளியல்

நிலையிலோ (வேலை அனுமதிச்சீட்டுப் பெற்றோர் தவிர) துன்பம் இல்லாததாலும், ஓரளவு வளமான வாழ்க்கை இவர்களுக்கு வாய்த்திருப்பதாலும் புலம்பெயர்தலின் வேதனைகளை உணர்ந்து பாடமுடிவதில்லை. மேலும், மலர்விழி பாடியுள்ள புலம்பெயர்தல் பெண்களின் புகுந்த வீட்டு வாழ்க்கையோடு பொருத்திப் பார்க்கவும் இடந்தருகிறது. பிறந்த வீடு விட்டுப் புகுந்த வீடு செல்லும் பெண்களின் வாழ்க்கை 'சுயம்' (ஆணிவேர்) இழப்பதாகவும் அமைகிறது அல்லவா?

மாதங்கியின் கவிதைத்தொகுப்பு "நாளை பிறந்து இன்று வந்தவள்". தலைப்புப் புதுமையானது; அதே வேளையில் இலக்கணநோக்கில் பார்க்கும்போது 'காலவழு' என்று மரபிலக்கியவாதிகள் குறைகூற இடந்தருவது. நவீனகவிதை எழுதுபவர்கள் இலக்கணவேர்களை உதறியவர்கள்; இலக்கணம் என்னும் வேரும் விழுதும் வேண்டாம் எனக் கருதுபவர்கள். ஆகவே புதுமை, நவீனம் என்னும் பெயரால் இப்படித் தலைப்பிடுவதோடு கவிதையும் எழுதுவர். மாதங்கி தன் கவிதைத்தொகுப்புக்கு 'மரபுடைத்தல்' என்னும் பின்நவீனத்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் 'நாளை பிறந்து இன்று வந்தவள்' எனப் பெயர் சூட்டியுள்ளார். இவர் 'மலைகளின் பறத்தல்' என்னும் இரண்டாவது கவிதைத் தொகுப்பு நூலையும் வெளியிட்டுள்ளார். புராணங்களில் இடம்பெறும் மலைகள் பறப்பதான மிகைக்கற்பனையை மனத்தில் நிறுத்தி இன்றைய உலகில் பெருகிவரும் தீவிரவாதத்தின் விளைவுகளைப் பாடுகிறார்.ஓரளவு சிங்கப்பூர்ச்சூழலில் ஐக்கியமாக முயலும் மாதங்கியின் கவிதைகள் பிறந்த மண்ணின் பண்பாட்டு மாறுதல்களையும் பாடுகின்றன.மனிதநேயம் மிக்க கவிதைகளும் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன. கவிதைகளில் இடம்பெறும் சொற்பிரயோகங்கள் பல அகராதியிலிருந்து தேடி எடுத்துப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று நினைக்கத் தோன்றுகின்றது.சான்றாக தொக்கணம், அரணிக்கட்டை போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவை கவிதையில் வலிந்து புகுத்தப்பட்டவை என்ற எண்ணத்தை ஊட்டுகின்றன.

கவிதை எழுதுவோர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நோக்கம் உண்டு. சிலர் புகழுக்கும், வேறுசிலர் பணத்துக்கும், இன்னும் சிலர் விளம்பரப்படுத்திக் கொள்ளவும் எனப் பல நோக்கங் களுக்காகவும் காரணங்களுக்காகவும் கவிதை எழுதுவர். புதிய குடியேறிகளில், தான் பார்த்த வாழ்க்கையைக் கவிதையின் கருப்பொருளாக்குபவர் மாதங்கி. புரியவில்லை; நமக்குச் சாத்தியமாவது, நீ பெரியவனானால்? வேறுபாடு, சஞ்சாரிபாவம், கரைந்ததும் கரையாததும், திகட்டவில்லை, பத்து மணியும் ஆறு மணியும், அவர்கள் விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருக்கிறார்கள்" எனப் பல கவிதைகளில் மாதங்கியின் தாய்மை அனுபவமே விரிகிறது. புதுக்கவிதையில் வடிவச் சோதனை செய்ய 'விழுந்து விழுந்து' என்னும் சொற்களை ஒவ்வோர் எழுத்தாகக் கீழே விழுவது போல எழுதும் வழக்கத்தை இவரும் பின்பற்றுகிறார் (பக் 44).

குழந்தைமைப் பருவத்தை நேசிக்கும் மாதங்கி 'சொல்வனம்' என்னும் இணைய இதழில் (பிப்ரவரி 14, 2010) 'கதை சொல்ல வரும் குழந்தை' என்ற தலைப்பில் கவிதை எழுதியிருந்தார். மேலோட்டமாகப் பார்க்கும்போது குழந்தை கதை சொல்ல வரும்போது அதனிடம் குறுக்கே எதுவும் பேசாமல் கதையைக் கேள்; அதனை அதன் போக்கில் விட்டுவிடு என்னும் அர்த்தத்தைத் தந்தாலும் அதனை விமர்சனம் செய்யாதே என்னும் தொனியில் எழுதியிருப்பதாகவே இக்கட்டுரையாளருக்குத்தோன்றுகிறது.

"நீஇப்போதுகதைகேட்பவன்
பத்திரிகைமெய்ப்புப்பார்ப்பவரோ
விடைத்தாள்திருத்தும்ஆசிரியரோ
முதலாளியோ
இல்லை

தவறுகள்உன்கண்ணில்
படப்போவதில்லை
அவைகதைகளின்ஒளியைக்
களவாடுபவை”

இக்கவிதை விமர்சனத்தை விரும்பாதவரின் மனநிலையை எதிரொலிப்பதாக ஆழ்நிலையில் அர்த்தம் தருகிறது. புதிய குடியேறிகள் மட்டுமல்ல; எழுத்தாளர்கள் பலரும் தங்கள் படைப்புகளைப் பற்றிய விமர்சனங்களைத் திறந்த மனத்துடன் ஏற்கும்மனப் பான்மைஇல்லாதவர்கள் என்பதை இக்கவிதை உணர்த்துகிறது.

சிங்கப்பூரின் புறவாழ்வைக் காட்டும் கவிதைகளாகத் “தேக்கா வெட்ட வெளியில், தீவு விரைவுச் சாலையில், சிராங்கூன் சாலை வீரமாகாளியம்மன் கோயில், மாதாமகள், தீபாராயா” போன்றவற்றைக் கூறலாம். மாதங்கி இந்தியாவில் வாழ்ந்தபோது தனக்கு ஏற்பட்ட அனுபவங்களையும் எழுதியுள்ளார். அறிவியல் செய்திகளைக் கவிதையாக்கும் போக்கும் மாதங்கியிடம் காணப்படுகிறது. இவருடைய கவிதைகள் ஒரு சிலவற்றில் இருண்மையும் தலைகாட்டும் (வேறொரு வெயில் நாளில் என்னும் கவிதையின் முடிவுப் பகுதி). மாதங்கியின் கவிதைகளில் செய்நேர்த்தித்திறன் இல்லை (craft). இவருடைய கவிதைகள் அனுபவங்களின் விவரிப்பே எனத் தயங்காமல் கூறலாம்.

## அமைப்புமனிதரும்கவிதைத்துறையும்:

புதுமைத்தேனீ மா. அன்பழகன் திரைப்படத்துறை, கவிதைத்துறை, வியாபாரத்துறை எனப் பல துறைகளில் இயங்குபவர். இவர் 90களின் பிற்பகுதியில் சிங்கை வந்தாலும் இவர் வியாபாரத்துறையின் மூலம் சமூக அந்தஸ்தும், செல்வாக்கும் பெற்றவராக மாறினார். கவிமாலைக் காப்பாளர் என்ற பொறுப்பு இவருக்கு அமைப்பு ரீதியாகப் புகழ்பெற ஒரு சாதனமாகி உள்ளது. இயல்பாகவே தமிழ்மொழிப்பற்று மிக்கவர். இவருடைய இளமைப் பருவத்தில் தொடங்கிய திராவிட முன்னேற்றக் கழகத் தொடர்பு இவருடைய நாவன்மைக்கும் நல்ல களமாக அமைந்தது. தமிழ்மொழிப்பற்று மிக்கப் பின்னணி தமிழகத்தில் இவரை நூலாசிரியராக அடையாளப்படுத்தியது. சிங்கை வந்த பின்னும் தமிழ் தந்த அடையாளம் இவரைப் ‘புதுமைத்தேனீ’ என வித்தியாசப்படுத்திக் கொள்ள உதவுகிறது. இவர் தன் வாழ்க்கையோடு தொடர்புடைய அனைத்தையும் குறிப்பாகச் சொற்பொழிவுகள், கவியரங்கக் கவிதைகள், வாழ்த்து மற்றும் இரங்கற் கவிதைகள், நிழற்படங்கள், தன் கிராமத்து வாழ்க்கை எனப் பலவற்றையும் நூல்வடிவில் பதிவு செய்துள்ளார். இவர் மரபுக்கவிதை எழுதுவதோடு உரைவீச்சும் எழுதுகிறார். நாவல், சிறுகதை, கவிதை எனப் பல தளங்களில் இயங்குகிறார். இவர் கவிமாலையின் காப்பாளர். இவரது கவிதைகளின் தரம் குறிப்பிட்டுச் சொல்லும்படியாக இல்லை. இவர் “அமைப்பு மனிதர்” என்ற முறையில் வெற்றி பெற்றுள்ளார் என்பதால் இலக்கியத் துறையில் வெற்றி பெற்றுள்ளார் என்பது பொருளன்று.

## கவிதையும்இணையப்பெருவெளியும்

புதிய குடியேறிகள் இணையப் பெருவெளியில் கவிதைகள் எழுதுகின்றனர். இவர்களைப் புகழ்ந்து பேசுபவர்கள் சிங்கப்பூரில் கிடைக்கும் பண்டம் அல்லது பொருள்களுக்காகவும், வேறு ஏதேனும் வாய்ப்புகள் சிங்கப்பூரில் கிடைக்குமா என்னும் எதிர்ப்பார்ப்புடனும் புகழ்வதுண்டு. இன்னும் சிலருக்குத் தமிழக அமைப்புகளோடும் தொடர்பு உள்ளது. இத்தொடர்பைப் பயன்படுத்திப் புகழ் பெறுவதோடு விருதும் பெறுகின்றனர். இணையப் புகழில் மயங்கியுள்ள இவர்கள் தம்மை மிக உயர்வாக எண்ணிப் பெருமிதம் அடைவதோடு ஒரு வித மாயையில் மிதக்கின்றனர் என்று கூறுவது தவறாகாது. மேலும், இவர்களில் சிலர் தமிழ்நாட்டு

அங்கீகாரத்தைப் பெறுவதை மட்டும் நோக்கமாகக் கொள்ளாமல் தங்கள் சொந்த பந்தங்களையும், உற்றார் உறவினர்களையும் கூட்டி நூல் வெளியிட்டுப் பணம் குவிக்கின்றனர். இன்னும் சிலர் தங்கள் நூல்கள் தேசிய நூலகத்தில் இடம்பெறவேண்டும் என்னும் நோக்குடன் மட்டும் நூல்களை விற்கின்றனர். நூல் வெளியீடு நடத்தப்படாததால் இவர்களின் நூல்களைப் பற்றிய விவரம் தெரிவதில்லை.

## தமிழாசிரியர்களும்கவிதையும்

புதிய குடியேறிகளில் தமிழாசிரியர்களாகப் பணிபுரிவோர் வெளியிடும் நூல்கள் கல்வியமைச்சுப்பணியின் ஒரு கூறாக (Performance bonus) எனப்படும் பணி ஊக்குவிப்புத் தொகை பெறுவதற்காக வெளியிடப்படுகின்றன. இவர்களின் நோக்கம் பணம் பெறுவதாக மட்டுமே இருப்பதால் நூல்களின் தரம் பற்றியோ, பொருண்மை பற்றியோ கவலைப்படாத போக்கும் நிலவுகிறது.

## தேசப்பற்றும்கவிதையும்

சிங்கப்பூர் எல்லாருக்கும் சமவாய்ப்பு அளிக்கும் நாடு என்பதால் 'திரவிய தேசத்தை' நன்றாகவே பயன்படுத்திக் கொள்கின்றனர் புதிய குடியேறிகள். இவர்களின் நாட்டுப்பற்று இவர்கள் பிறந்த இந்தியமண்ணின் மீதுதான்! மேலும், கட்டுமானத்துறையில் வேலை பார்ப்பவர்களும் தமிழ் மீது கொண்டுள்ள ஆர்வத்தால் தமிழ் இலக்கணம் கற்றுக்கொண்டு கவிதை எழுதுவதில் நாட்டம் காட்டி வருகின்றனர்.சிங்கப்பூரில் பணிப்பெண்ணாக வேலை பார்த்தவர்களும் வேலை பார்ப்பவர்களும் கூடக் கவிஞர்களாகியுள்ளனர். ஞானப்பிரகாசம் மோனிக்கா என்பவர் 'நிஜத்தின் நிழல்கள்' என்னும் நூலையும், ச.மீனாட்சி என்பவருடன் இணைந்து 'நிசப்த ராகங்கள்' என்னும் நூலையும் வெளியிட்டுள்ளார். இவற்றிலும் இந்நாட்டுப் பின்னணி இடம்பெறவில்லை. தற்போது கவிமாலை என்னும் அமைப்பிலுள்ள 'பிஷான் கலா' என்பவரும் கவிதை என்ற பெயரில் ஏதோ எழுதுகிறார்.பரிசுகளையும் வெல்கிறார்.

## பரிசுகளும் கவிஞர்களும்

புதிய குடியேறிகளின் கவிதைகளில் சில தங்கமுனை விருதுப் போட்டியில் பரிசுகளைப் பெற்றிருக்கின்றன. பிச்சினிக்காடு இளங்கோ, நெப்போலியன் - **2001**

இந்திரஜித், சுப்ரமணியன் ரமேஷ் - **2003**

சுப்ரமணியன் ரமேஷ் - **2005**

ந.வீ.சத்தியமூர்த்தி, மலர்விழி இளங்கோவன் - **2007**

ரஜீத் - **2009**

எனப் பரிசுப் பட்டியல் இன்றும் தொடர்கிறது.

பரிசு பெற்றிருக்கும் இக்கவிதைகளை நோக்கப் போட்டிக்கு அனுப்பப்பட்ட கவிதைகளில் இவை பரிசு பெறுவதற்குத் தகுதி உடையவை என நடுவர்களால் தீர்மானிக்கப்பட்டவை எனக் கொள்ளவேண்டுமே தவிர இக்கவிதைகள் படைப்பின் உச்சங்கள் என்றெல்லாம் நினைத்துவிடக் கூடாது.இவை இவர்களுக்குக் கிடைத்த அங்கீகாரங்கள் என்று கொள்ளத்தக்கனவும் அல்ல. இவர்கள் கவிதை எழுதவேண்டும் என்று கொண்டிருக்கும் ஆர்வத்தைப் பாராட்டலாம். **2009**இல் நடைபெற்ற தங்கமுனை விருதுப் போட்டி பற்றிக் கருத்துரைத்தார் அப்போட்டியின் நடுவர்களுள் ஒருவராகப் பணியாற்றிய க.து.மு.இக்பால்.அவர் கூறியபடி, "இவர்கள் செல்ல வேண்டிய தூரம் நிரம்ப இருக்கிறது" என்னும் கருத்தை இவண் நினைவுகூர்வது மிகப் பொருத்தமானது.

தங்கமுனை விருதுப்போட்டிகளில் சமீப காலமாகப் போட்டியில் பங்கேற்போர் பற்றிய விதிமுறைகள் மாற்றப்பட்டுள்ளன. அதாவது எவர் ஒருவர் எத்துறையில் நூல்

வெளியிட்டிருப்பினும், அவர்கள் போட்டியில் பங்கேற்க இயலாது. இதனால், புதிய திறமைகளை இனங்காண முடியும் எனப் போட்டியின் ஏற்பாட்டாளர்கள் கருதினர். மற்ற மொழிகளில் திறமையுடையவர்கள் அடையாளம் காணப்பட தமிழ்மொழியில் ஆர்வலர்கள் மட்டுமே அடையாளம் காணப்படுகின்றனர். தமிழ்மொழியைப் பொறுத்தவரை நூல்கள் வெளியிட்டோர் பரிசுத்தொகை பெருந்தொகை எனக் கருதுவதால் தங்கள் உறவினர் பெயரால் கவிதைகளை எழுதிப் பரிசுகளை வெல்லும் இழிநிலையும் காணப்படுகிறது.இலக்கியப் போட்டிகள் இழிதகைப் போட்டிகளாக மாறிவருவது வேதனைக்குரியது.

புதிய குடியேறிகளில் சிலர் பரிசுகளைப் பெறும் நோக்குடன் பதவியிலிருப்பவர் களையும், பரிசு பெறுவதற்குத் துணைபுரியப் பாலமாகி நிற்பவர்களையும் காக்கை பிடித்துக் கொண்டும், அவர்களை வால் பிடித்துக் கொண்டும் கேவலமாக நடந்து கொள்வதையும் சிங்கப்பூர்ச் சூழலில் புதிதாகக் காணமுடிகின்றது . இந்திய மண்ணில் இவை சகஜம். சிங்கப்பூருக்கு இது புதுவரவா? என்ற ஐயமே எழுகிறது. விருந்து சாப்பிட்டால் விருது பெறலாம் என்ற நம்பிக்கையும் சிலரிடம் முளைவிட்டுள்ளது. விருது, பரிசு, பாராட்டு என்பன எல்லாம் தகுதி அடிப்படையில் தானாகவே வரும் என்ற எண்ணம் இப்படிப்பட்ட சுயநலக்காரர்கள் சிந்தனையில் ஏன் உதிக்கவில்லை? ‘எங்குப் பார்த்தாலும் எனது படைப்புகளே’ இடம்பெற வேண்டும் என்ற சுயநலந்தானே இழிநிலைக்குத் தள்ளுகிறது? இந்தச் சூழலில் தமிழ்க்கவிதை வளரவேண்டிய பரிதாப நிலையே இங்கு உள்ளது. உண்மையில் தமிழ்க்கவிதை மீது காதலுடையார் “காக்க! காக்க! கவிதையைக் காக்க!” என்று கடவுளிடம் மன்றாட வேண்டியதுதான்!

## கனகலதா கவிதைகள்

வெளிநாட்டுத்திறனாளர்கள் என்று கருதப்படும் புதிய குடியேறிகள் மத்தியில் கவிதை பரிதாபநிலை அடைந்துள்ளது ஒரு புறம் இருக்க மற்றொரு புறம் நல்ல கவிதைகள் சிங்கப்பூரியத் தன்மையுடன் எழுதப்பட்டுள்ளதை யாரும் மறுக்க முடியாது. எண்பதுகளில் சிங்கப்பூரில் குடியேறிய கனகலதா என்றழைக்கப்படும் லதாவின் கவிதைகள் பல சிறந்த கவிதைகளாக அடையாளம் காணப் பட்டுள்ளன. இவரது மாணவப்பருவ வாழ்க்கை சிங்கப்பூரில் தொடங்கியதால் சிங்கப்பூர் வாழ்க்கை முறையைக் கூர்ந்து அவதானிக்கவும், சிங்கப்பூர்ச் சூழல் பற்றி அறியவும் இவருக்குக் கிடைத்த வாய்ப்பு புதிய குடியேறிகளிடமிருந்து வித்தியாசப் பட்டது. அதனால் சிங்கப்பூரியத் தன்மையுடன் கவிதை படைப்பது இவருக்குச்சாத்தியமானது. ஆயின் தீவெளி, பாம்புக்காட்டில் ஒரு தாழை என்னும் இரு தொகுப்புக்களுக்குப் பிறகு இவரிடமிருந்து எவ்விதமான ஆக்கங்களும் வெளிவரவில்லை. தனது அலுவலகப் பணிச்சுமையைக் காரணம் காட்டிப் படைப்பிலக்கியத்துறையில் சற்று ஓய்ந்திருக்கிறார் என எண்ண வேண்டியுள்ளது.

## தனிநபர் முயற்சிகளும் தொடரும் கவிதைகளும்

தனிநபர் முயற்சியாகச் சில கவிதை நூல்கள் 90 களுக்குப் பின்னர் வெளிவந்துள்ளன. அவற்றுள் ஒரு சிலவற்றைப் பற்றிய கருத்துக்கள் இனிவரும் பத்திகளில் இடம்பெறுகின்றன.

எம்.கே குமார் “சூரியன் ஒளிந்தணையும் பெண்” என்னும் கவிதைத்தொகுப்பினை 2013 ஆம் ஆண்டு உயிர்மை பதிப்பகத்தின் மூலம் வெளியிட்டுள்ளார். நாட்டுப்புறக் கவிதைகளையும், நவீனக் கவிதைகளையும் கொண்டுள்ள இத்தொகுப்பில் சிங்கப்பூர்ப் பின்னணி இல்லை. மேலும் “காமம் மிக்க கழிபடர் கிளவிகளாக” இவரது கவிதைகள் பெரும்பாலானவை உள்ளன.

மரபுக்கவிஞராக அறியப்பட்ட கடையநல்லூர் ஜமீலா என்னும் புனைபெயர் கொண்ட சம்சுதீன் நீண்ட இடைவெளிக்குப் பின்னர்" மௌனம் பேசுகிறது" என்னும் கவிதைத்தொகுப்பினை **2014** இல் வெளியிட்டிருக்கிறார். தங்கமுனை விருதுப்போட்டியில் பெற்ற பரிசு தந்த ஊக்கம்தான் இந்தக் கவிதைத்தொகுப்பை வெளியிடத்தூண்டியதோ என எண்ண வேண்டியுள்ளது. இந்நூலில் தொகுத்திருக்கிற கவிதைகள் புதுக் கவிதைகளா? நவீன கவிதைகளா? உரைவீச்சா?என வாசகர் மயங்கும் நிலையும் உண்டு. மொத்தத்தில் இத்தொகுப்பில் கவிதையே இல்லை என்று இக்கட்டுரையாளர் கருதுகிறார்.

தனிநபர் முயற்சியில் வெளிவந்த "கலாசார மரபணுக்கள்" என்னும் கவிதைத்தொகுப்பு சா.துரைராஜ் என்பவரால் சென்ற ஆண்டு **(2015)**வெளியி டப்பட்டது. சிங்கப்பூரில் பிறந்து வளர்ந்த இவர் முன்னரே "காதல் சந்தங்கள்" என்னும் நூலினை வெளியிட்டுள்ளார். இவரின் பாடுபொருள்கள் சிங்கப்பூர் சார்ந்தவையாக இருப்பது பாராட்டுக்குரியது.வரலாறு, பண்பாடு, சமகால நிகழ்வுகள் முதலியவற்றைப் பதிவு செய்யும் வகையில் இவரது கவிதைகள் அமைகின்றன.ஆயின் கவித்துவம் இவரது கவிதைகளில் காணாமற்போய்விட்டது என்பதும் இங்கே குறிப்பிட வேண்டிய செய்தியாகும்.

சிங்கப்பூரில் பிறந்து வளர்ந்த சுபாஷினி கமலக்கண்ணன் "அனல்" என்னும் கவிதைத்தொகுப்பினை **2015** ஆம் ஆண்டு தங்கமீன் பதிப்பகம் மூலமாக வெளியிட்டுள்ளார். தன்னுடைய உணர்வுகள்,சமகால நிகழ்வுகள் முதலியவற்றைக் கவிதைகளாக வடித்துள்ளார். காதல் தோல்வி,ஏமாற்றம் பற்றிய கவிதைகள் கணிசமான எண்ணிக்கையில் இத்தொகுப்பில் உள்ளன. திரைப்படப்பாடலின் சாயலும் இவருடைய கவிதையில் ( பக்கபலம் என்னும் தலைப்பில் அமைந்த கவிதை, ப 25) உள்ளது.

## சிங்கப்பூர்க் கவிதைச்சூழலில் ஒரு விடிவெள்ளி

சிங்கப்பூரில் பிறந்து வளர்ந்த சித்துராஜ் பொன்ராஜ் சிங்கப்பூர்க் கவிதைச்சூழலில் ஒரு விடிவெள்ளி என வருணிக்கத்தக்க சிறப்பிடம் பெற்றவர். இவர் தமிழ்,ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இளமை முதற்கொண்டே கவிதைகள் எழுதிவருபவர். மொழிபெயர்ப்புத்துறையிலும் பங்களித்து வருபவர். இவரது கவிதைத்தொகுப்பு "காற்றாய்க் கடந்தாய்" அகநாழிகை பதிப்பக வெளியீடாய்ச் சென்ற ஆண்டு வெளிவந்துள்ளது. இவரது பாடுபொருள்கள் நேரடியாக அர்த்தத்தை வெளிப்படுத்துவதில்லை. ஆழ்ந்த சிந்தனைக்குப் பின்னரே இவரது பாடுபொருள்கள் அறிவுக்குப்புலனாகும். சுருங்கச்சொன்னால் சூட்சுமமாகப் பொருள் உணர்த்தவல்லன. அழகிய வருணனைகள் இடம்பெறுகின்றன.சான்றாக உதிர்ந்த பொழுதுகள் என்னும் என்னும் கவிதையில்,

"முகூர்த்தங்களை முனைபிரித்து
காகிதக்கப்பல்கள் விட்டுக்கொண்டிருந்தோம்"

என்றும்

"செல்பேசி சாத்திப்படுக்க
ஜன்னலில் தேய்ந்திருக்கும்
சந்தனக்கட்டையாய் நிலவு "

என்றும் வருணிக்கிறார்.

இவருக்கு செப்டெம்பர் மாதம் மிகுந்த விருப்பம் தருவது போலும்! இந்த மாதத்தில் வரும் பௌர்ணமியை வித்தியாசமாகக் கற்பனைக்கண்களால் காண்கிறார். அதிர்வலை என்னும் கவிதையில் "சதுர வடிவில் சாத்திவைக்கப்பட்டிருக்கும் பௌர்ணமி நிலவு" என வருணிக்கிறார். வரிக்குதிரையாக நேரம் அலையும் அடுத்த தெரு என்னும் கவிதையில் "செப்டெம்பராய்ச் சுட்டன சினேகிதங்கள்" என உவமை வந்து விழுகிறது. தனக்குள் நிகழும் துவந்தயுத்தத்தைப் பதிவுசெய்யும்

சித்துராஜ் இயற்கையை வித்தியாசமான முறையில் பாடுகிறார். பொருள்களை நாம் விற்கலாம். ஆனால் அவரோ வெயிலை விற்காதே என்று அறிவுரை கூறுகிறார். 'ஒரு பகல் பொழுது' என்னும் கவிதை நயமிக்க கவிதையாகும்."சிக்கலின்றிப்போகிறது சிங்கப்பூரில் மத்தியானம்" என்று பாடும் கவிஞருக்கு நிழல்களை மறைக்கும் வெயிலின் காட்சி சதுரங்க விளையாட்டினை நினைவுபடுத்திப் பகலை " வெள்ளைப்பகல்" என வருணிக்கவைக்கிறது. "தெருக்கோடி அங்சானா " மரம் பாடுபொருளாகும்போது அதன் மூலமும் வரலாறும் கவிஞரின் நினைவுக்கு வருவதுடன் அதனை நகைச்சுவைதோன்ற

"இவளும்
புதுக்குடியேறிதான்
பத்தொன்பதாம் நூற்றாண்டில்
ஊர் பார்க்க வந்தவள்
எங்கள் வீதிகளையே
புகுந்தவீடாக்கிக் கொண்டாள்"

எனப் பாடுகிறார்.

வித்தியாசமான பாடுபொருள்கள், அவற்றை வித்தியாசமாக அணுகும் கூரிய நோக்கு, அங்கதப்பார்வை, அழகிய மொழிவளம், புதிய உவமைகள், பரந்த ஆழமான வாசிப்பு அனுபவம் என அனைத்தையும் வெளிக்காட்டும் கவிமனம் சித்துராஜ்பொன்ராஜ் என்னும் இளம் கவிஞனுக்குச் சொந்தமானவை. புதிய குடியேறிகள் மத்தியில் போலியாகக் காட்டப்படும் சிங்கப்பூர்ச்சூழல் என்னும் மாயத்திரை விலக்க வந்த அழகுநிலா என வருணிக்கத்தக்கவை சித்துராஜ் பொன்ராஜின் கவிதைகள். சிங்கப்பூர்க் கவிதை ஆறு தமிழில் செழிப்புடன் பாயும் என நம்பிக்கை ஒளி ஊட்டுபவை இவரின் கவிதைகள்.

### ஊக்கமும் உற்சாகமான சூழலும் உருவாக

தங்கமுனை விருது தமிழ்ச்சூழலில் புதிய கவிஞர்களை அடையாளம் காண இன்றுவரை உதவவில்லை. இதற்குக் காரணம் முன்னர்க்குறிப்பிட்டபடி கவிஞர்களின் பண ஆசையே.

தேசியப் புத்தக மேம்பாட்டு நிறுவனம் பதவியில் இருப்பவர்களைப் போட்டிக்கு நடுவர்களாகத் தெரிவு செய்வதைக் கைவிட்டுத் தமிழ் இலக்கியம் பற்றிய அறிவு உள்ளவர்களை விஷயம் தெரிந்தவர்களை உள்நாட்டு நீதிபதிகளாக நடுவர்களாக நியமித்தால் நல்ல நூல்கள் அடையாளம் காணப்படும் வாய்ப்பு பிரகாசமாக அமையும். சிங்கப்பூர் இலக்கிய வளர்ச்சியைக் கருத்தில் கொண்டால் கம்பராமாயணம் பற்றிய நூல்கள் பரிசு பெறுவதைத் தடுக்கலாம்.

கவிதைநூல்களுக்கு அறிவிக்கப்படும் பரிசுத்திட்டங்களும் கணிசமான தொகையைப் பரிசாக வழங்குகின்றன. சான்றாக இராமச்சந்திரா பரிசு,கவிஞர் இக்குவனம் நினைவுப்பரிசு போன்றவற்றைக் கூறலாம்.

அனைத்திற்கும் மேலாகப் போட்டிக்கு நடுவர்களாக இருப்பவர்கள் அரசாங்கப் பணம் தானே ; மக்களின் வரிப்பணம் தானே என்று எல்லோருக்கும் பர்சினை அளிக்காமல் தரமான படைப்புக்களுக்கே பரிசினை அளிக்கவேண்டும். நேர்மையும் கறார்த் தன்மையும் நிலவுமானால் தரமான கவிதைகளும் நூல்களும் பெருகுமே?

### முடிவுரை

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் பதினாறு ஆண்டுகளாகக் கவிமாலை என்னும் அமைப்பு கவிஞர்களை உருவாக்கி வந்துள்ளது. நூறு நூல்களுக்குச் சற்றே குறைந்த எண்ணிக்கையில் ( 95) நூல்கள் வெளிவந்துள்ளன. தங்கமீன் பதிப்பகம் போன்ற பதிப்பகங்களும் நூல்களை வெளியிட்டுள்ளன. தனிநபர் முயற்சியினாலும் கவிதை நூல்கள் வெளிவந்துள்ளன. புதிய குடியேறிகளின் வரவினால் எண்ணிக்கையில் கவிதை

நூல்கள் பெருகின. எண்ணிக்கை பெருகுவது மட்டும் வளர்ச்சியாகிவிடாது. ஆகவே கவிதைகளின் தரம் கேள்விக்கு உரியதானது. அதே சமயத்தில் பரிசுபெறுவதே நோக்கமாவும் அமைந்தது. நல்ல வளர்ச்சி ஏற்படவேண்டுமானால் முன்னர்க்குறிப்பிட்டபடி பரிசளிப்பதில் கறார்த்தன்மையும், கறாரானவிமர்சனமும் தேவை என்பதைத் தமிழ் இலக்கியச்சூழலில் இயங்குவோர் மனங்கொள்ளவேண்டும்.

## Bibliography


Andiappan,N. (2014). *Mîcai mu7aikkâta kâtal*. Singapore: Paraniya Publications.

Balu Manimaran.(2005). *Alaiyil pârtta mukam*. Chennai: Balu Publishers.

Balu Manimaran.(2015). *Caka payaGika7ômu cila uraiyâmalka7*. Chennai: : Thangamin Publications.

Inthirajith.(1997). *CuIai vimum mûccu.* Chennai: Tamilpputhuvai Publications.

Inthirajith.(2010). *Rayilukkâkak kâttiruppavarka7.* Chennai: Uyimai Publications.

Karunagarasu,C.(2004). *Tçmalaic cuvâci*. U.N.Kudikkadu:Tamil Publications.

Kottai Pirabu, Panditthurai,Selva &Kalimuthu Barath. (2008). *Piram'mâ*. Puthukkottai: Nirveli Publications.

Kumar,M.K.(2013). *CûriyaI o7intaGaiyum peG*. Chennai: Uyimai Publications.

Kumar,M.K.(2015). *Natimicai nakarum kû;âEka_ka7*. Singapore: M.K.Kumar Publications.

Latha. (2004). *Pâmpukkâmmil oru tâ;ai*. Chennai: Kalaccuvadu Publications.

Latha. (2013). *Tîve7i*. Singapore.

Latha. (2016). *Yârukkum illâta pâlai*. Chennai: Kriya Publications.

Malarvili Ilanggovan. (2008). *Karuva_aippûkka7*. Tamil Nadu: Mathu Publications.

*Malçciya- CiEkai Malar, ValliIam*. (2010). Kuala Lumpur.

Piccinikkadu Ilanggo. (2004). *IraviI narai.* Chennai: Tholamai Publications.

Piccinikkadu Ilanggo. (2006). *Mutal ôcai*. Thanjavur: Kalaiccelvi Ilanggo Publications.

Sathyamurthy, N.V. (2008). *Tûrattu miIIal*. Singapore: Sathyamoli Publications.

Segar,M.(2014). *Kaivi7akkuk kamavu7*. Singapore: Thangamin Publications.

Shri Lakshmi. (2005). *CiEkappûrt tami; ilakkiyam-â;amum akalamum*. Chennai: Marutha Publishers.

Sinthuraj Ponraj. (2016). *Kâ__âyk kamantây*. Chennai: Aganaligai Publications.

Subramaniyan Ramesh. *Kâlaccuvamu ita;*.

Vayiravan,Irama. (2010). *Kavitaikku;antaika7*. Cinatharapuram: Manimegalai Publications.

Vayiravan,Irama. (2013). *KaviyaraEkak kavitaika7*. Singapore.

Vikkiramathithyan. (2001). *Kavitai racaIai*. Chennai: Marutha Publishers.

# நாலடியாரில் உய்யச்சிந்தனை

## Critical thinking in Naladiyar

மு.சங்கர்
Mu.Shankar

***Abstract***

Critical Thinking is one of the important portions of Higher Order Thinking Skills (HOTS) which is widely discussed and used nowadays in almost in all fields. As we know, the field of Critical Thinking is introduced by Western philosophers and educationists by the name Critical Thinking. The Eastern thinkers, especially the Tamil philosophers who belong to a long time history and culture and thoughts immemorial have applied these Critical Thinking skills very long ago. But they did not name it as it is called now, Critical Thinking. This Paper attempts to prove that, Tamil language as the oldest language in the world has been using Critical Thinking around 2000 years back through its vast and rich literature especially Naladiyar.

The ancient Tamil culture was rich with many ideas and innovative applications of mind. In fact, nothing has been left by the ancients in almost all the fields of knowledge and wisdom. The advanced inventions and theories of today have their roots in the past Modesty prevented the ancient Tamil and oriental philosophers to come to the limelight.

**Key Words:** Naladiyar, Critical Thinking, FRISCO Approach, Higher Order Thinking Skills.

### முன்னுரை

பெருவெளி சிறுவெளியாகிவரும் இன்றைய உலகில், உயர் நிலைச் சிந்தனைத் திறன், HOTS (Higher Order Thinking Skills) எல்லாத் துறைகளிலும் பேசப்படுகிறது; பயன்படுத்தப் படுகிறது. இந்த உயர் நிலைச் சிந்தனைத் திறன்,உய்யச் சிந்தனை (Critical Thinking), ஆக்கச் சிந்தனை (Creative Thinking), சிந்தனைத் தலையணி (Thinking Hats) எனப் பல்வகைப் பெயர்களில் வலம் வருகின்றது.குறிப்பிட்ட இந்தப் பெயர்களில் இவை நமக்கு மேற்குலகால் அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழர்கள் இவற்றைக் கைவரப்பெற்று, முன்னரே பயன்படுத்தியுள்ளனர் என்பதை நற்றமிழ் இலக்கியங்கள் தெள்ளத் தெளிவாக எடுத்துணர்த்துகின்றன. நாலடியார் எனும் பதினெண் கீழ்க்கணக்கு நூல் இந்த உயர் நிலைச் சிந்தனை ஆற்றலை வெளிப் படுத்தும் மிகச் சிறந்த நூலாக அமைந்துள்ளது.

### ஆய்வுநோக்கம்

உலக மொழி என்றழைக்கப்படும்

Mu.Shankar is a Ph.D research scholra at The Department of Indian Studies, University of Malaya.
m_sangar@hotmail.com

ஆங்கிலத்துக்கு நிகராக வேறெந்த மொழியிலும் சிந்தனை வளம் ஊற்றெடுக்கவில்லை எனச் சில தரப்பினர் கருதியும் வாழ்ந்தும் வருகின்றனர். உலகின் மூத்த மொழியான தமிழ்மொழியில் சிந்தனைவடிவங்கள் (சிந்தனைமூலங்கள்) மிகக்குறைவாகவே உள்ளன என்று வாதிடுவோர் பலர். அதுவும் கற்றவர் மத்தியில்; தமிழைத் தாய்மொழியாகப் பெற்றவர் மத்தியில் இதுபோன்ற எண்ணங்கள் மேலோங்கியுள்ளன. இந்த எண்ணத்தை தகர்த்தெறியும் வண்ணம், தமிழ்மொழி சிந்தனையின் பிறப்பிடமாகத் திகழ்கிறது; சிந்தனையின் மூலமாக உள்ளது என்பதை தற்போதைய நவீன சிந்தனைக் கருவிகளைப் பயன்படுத்தி மெய்ப்பிப்பதே இந்த ஆய்வின் நோக்கம்.

## நாலடியார்

திருக்குறளுக்கு அடுத்த நிலையில் சிறப்பாகக் கருதப்படும் நூல் இதுவே (குருசாமி, 2002). வாழ்க்கை நெறிகளை வையத்துக்கு உரைக்க வந்ததே நாலடியார். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள்ஒன்று. நான்கடி வெண்பாக்களால் ஆக்கப்பட்டு நாலடியார் எனப் பெயர் பெற்றது. நூலாசிரியர் ஒருவர் அல்லர். சமண முனிவர்கள் பாடிய பாடல் தொகுப்பே நாலடியார்.பதுமனார் என்பாரால் தொகுக்கப்பெற்று 'நாலடி' எனப் பெயர் சூட்டப்பட்டது. காலம், கடைச்சங்க காலம். கி.பி இரண்டாம் நூற்றாண்டு முதல் கி.பி ஒன்பதாம் நூற்றாண்டு வரை எழுதப்பட்ட பாடல்கள் இதில் தொகுக்கப்பட்டுள்ளன. (பழனிவேல் பிள்ளை, 1947)இதில் கூறப்படுகின்ற நீதிக் கருத்துகள் இன்றைக்கும் ஏற்புடையனவாய் இருப்பதே இதன் நிகரில்லாச் சிறப்பு.

## உயர் நிலைச் சிந்தனைத் திறன்

சிந்தனைத் திறன் என்பது மனுக்குலத் தகவல் பரிமாற்றத்துக்கு முக்கிய ஊடகமாகத் திகழ்கிறது.ஆய்வு, பரிணாமம், புத்தாக்கம் ஆகிய திறன்களுடன் கூடிய சிந்தனை ஆற்றல் உயர் நிலைச் சிந்தனை எனக் குறிப்பிடப்படுகிறது. சிக்கலுக்குத் தீர்வு காணல், உய்யச் சிந்தனைப் பயன்பாடு ஆகியவற்றை உட்படுத்தியதே உயர் நிலைச் சிந்தனைத் திறன் என வழங்கப்படுகிறது. சிந்தனை என்பது நம் வாழ்க்கைக்கான ஒரு முறைமையாக அமைந்திருப்பதுடன், நம்மைச் சுற்றி நடப்பதையும் நம் வாழ்க்கையையும் உணரச் செய்கிறது. வெற்றிகரமான சிந்தனை நம் வாழ்க்கைச் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் அணுகுமுறைகளை ஏற்படுத்தி; நம் இலக்கை அடைய உதவும். வாழ்க்கையைப் பொருள் பொதிந்தாக உருமாற்றும் (Chaffee, 2012).

## உய்யச் சிந்தனை (Critical Thinking)

உய்யச் சிந்தனை என்பது இடது மூளையைப் பயன்படுத்தத் தூண்டக்கூடிய சிந்தனைக் களமாகும். புரிதல், தெளிவு, ஒரு செய்தியைத் தக்க முறையில் பயன்படுத்தும் ஆற்றல் ஆகியவற்றை மேம்படுத்தும் வல்லமை உய்யச் சிந்தனைக்கு உள்ளது என்பதுடன் பகுத்தறிவுச் சிந்தனையை இது மேம்படுத்துகிறது (Stella,2005).

ஒரு பொருள் அல்லது செயல் குறித்துப் பல்வேறு கோணங்களில் சிந்தித்து; பிறகு அதன் நம்பகத்தன்மையை ஆராய்ந்து; அதற்குப் பின்னர் தொடர் நடவடிக்கையில் இறங்குவது உய்யச் சிந்தனையின் வடிவம் எனப்படுகிறது. காரணங்களைக் கொண்டு சிந்தனை செய்து முடிவெடுத்தல் என இதனைக் கூறுகிறார் வின்செண்ட் (Vincent, 2008).

சிந்தனை குறித்த சிந்தனையை மேம்படுத்துவது உய்யச் சிந்தனை. சிந்தனையைப் பகுப்பாய்வு செய்வது, சிந்தனையை மதிப்பீடு செய்வது, சிந்தனைத் திறனை மேம்படுத்துவது ஆகியவை உய்யச் சிந்தனையின் அம்சங்கள் (Paul, 2012).

## உய்யச் சிந்தனை அணுகுமுறை:

### அ) FRISCO அணுகுமுறை

Robert H.Ennis என்பார் இந்த அணுகுமுறைக்குச் சொந்தக்காரர்.உய்யச் சிந்தனைக் கருவியாக இது உலகில் மிகப் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது (Robert, 1995). இது ஆறு படிநிலைகளைக் கொண்டது:

*1.* Focus - குவியம்

முக்கிய கேள்வி, விவரம், புள்ளி அல்லது எதற்காக ஒன்று செய்யப்படுகிறது என்ற நோக்கு

*2.* Reasons - காரணம்

ஒரு முடிவைக் காண்பதற்கு முன்னதாக அல்லது முடிவெடுப்பதற்கான காரணங்கள்

*3.* Inference - அனுமானம்

நாம் கண்டறியும் காரணங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டால், நம் முடிவுக்கு அவை துணைபுரியுமா?

*4.* Situation - சூழல்

எத்தகைய நிலை, யார்ஈடுபட்டுள்ளனர், வரலாறு?

*5.* Clarity - தெளிவு

சொல்வதைத் தெளிவாக; அடுத்தவருக்கு புரியும்படிச் சொல்லுதல்

*6.* Overview - பார்வை

மீள்பார்வை - கண்ணோட்டமிடுதல். முடிவு, அனுமானம், ஏற்றுக்கொண்டவற்றை மீண்டும் சரிபார்த்தல்.

### நாலடியார் பாக்களில் உய்யச் சிந்தனை

நாலடியார் பாடல்கள் மக்களுக்கு நீதியுரைக்கும் பாக்களாக அமைந்துள்ளன. நன்னெறிகளை எடுத்தியம்புகின்றன. இப்பாக்களை மிக உன்னிப்பாக நாம் கவனிக்கும் வேளையில், உய்யச் சிந்தனைத் திறன் விரவிக்கிடப்பது தெளிவாகிறது.

மலேசியத் திருநாட்டில்,‘நட்பு’ என்பது பல குடும்பங்களில் இளைய தலைமுறையைத் தனித்துக் கொண்டு சென்றுவிட்டது (Shahbuddin, 2014). அவர்களின் பல்வேறு நடவடிக்கைகளுக்குக் குறிப்பாக ‘தீய’ நடவடிக்கைகளுக்கு நட்பு முக்கியக் காரணியாகிவிட்டது.

நட்பு என்பதன் மெய்ப்பொருளை அறியாததன் காரணத்தினாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது என்பதை உணரலாம். இந்த நட்பைப் பற்றி நாலடியார் நயம்பட எடுத்துரைக்கிறது. இதனை நான் உய்யச் சிந்தனை வழியாக அணுகுவதன் பயன் நனி சிறந்ததாக அமையுமென்பதில் ஐயமில்லை.

நுண்ணுறர்வி னாரோடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே யொக்கும் விழைவிற்றால் - நுண்ணூல்
உணர்வில ராகிய ஊதிய மில்லார்ப்
புணர்தல் நிரயத்துள்ஒன்று (233)

பொருட்பால், நட்பியலில் கூடா நட்பு என்ற அதிகாரத்தின் மூன்றாவது பாடல் இது. நுட்பமான அறிவினை உடையவர்களுடன் நட்பு செய்து அதன் பயனை அனுபவித்தல், விண்ணுலக இன்பத்தினைப் போல் மேன்மையுடையதாகும். நுட்பமான நூலறிவு அற்ற பயனில்லாதவருடன் நட்பு கொள்ளுதல் நரகங்கள் ஒன்றினுள் சேர்ந்திருத்தல் போல் துன்பம் தருவதாகும் என ஜெ.ஸ்ரீசந்திரன் இப்பாடலுக்குப் பொருள் தருகிறார்.

இப்பாடல், சேராத இடம் சேர்ந்தால் நாம் சேருமிடம் நரகம், அதாவது துன்பத்தில் உழல்பவராவோம் என உணர்த்த வருகிறது. பாடலின் நோக்கம் தெள்ளத் தெளிவாக குறிப்பிடப் பட்டுள்ளது. உய்யச் சிந்தனைக் கருவியான FRISCO அணுகுமுறை மூலம் இப்பாடல் அணுகப்படின், இப்பாடலின் குவியம் நமக்குக் குன்றின் மேலிட்ட விளக்காய்த் தெரிகிறது.

அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவர் ஐயடிகள் காடவர்கோன். ஒரு சிற்றரசரான இவர், நல்வினைப் பயனால் நல்லாட்சி செய்து வந்தார். நுண்ணிய அறிவுகொண்ட

புலவர்களுடன் பொருந்தி நூலாராய்தலைப் பேரின்பமாகக் கண்டு அப்படிப்பட்ட இன்பத்திலேயே காலம் செலவிட்டு வந்தார். அறிவுமிக்காருடன் அன்பாகப் பழகி அதனையே பெரும் பேறாகக் கருதி அவ்வழியே செல்லவியன்ற காலத்தே, அரசாட்சி இவருக்கு ஒரு துன்பமாகப் பட்டது. அரசியலையும் அரசியலாளர்களையும் வெறுக்கத் தொடங்கி, அரசியல் துறவு மேற்கொண்டார். இறைவனைப் புகழ்ந்து பாடியும், சிவனடியார்களுக்குத் தொண்டு செய்தலையுமே உலகின் உச்சப் பேரின்மாக ஏற்று அவ்வழியே நடந்தார். நுண்ணறிவாளர்களுடன் பழகுதல் பேரின்பம் என்பதை இந்த நாயன்மாரின் வரலாறு நமக்குணர்த்துகிறது (துர்க்கதாஸ், 2011).

இன்றைய சூழலில் நம் நாட்டில், கூடா நட்புக்கு ஆட்பட்டு, தீய வழிகளில் நேரத்தைச் செலவழிக்கும் நண்பர்களை நாம் கண்கூடாகக் காண்கிறோம். போதைப்பொருளுக்கு அடிமையானவர் பலர், மதுவுக்குள் தங்களை மறந்தவர் மேலும் பலர், வழிப்பறி போன்ற சிறு திருட்டுகள் தொடங்கி வீடு புகுந்து கொள்ளையிட்டு உழைப்பின்றிப் பணக்காரராகலாம் எனக் கருதிச் செயல்படுவோர் குறித்து நாளேடுகளிலும் இணையச் செய்தி ஏடுகளிலும் நாம் காண்கிறோம் (Shahbuddin, 2014). காவல் துறையினரால் கைது செய்யப்படும் பலர், நீதிமன்றத்தில் நிறுத்தப்படும்போது ‘நட்பைக்’ காரணம் காட்டுகின்றனர். நண்பர்களின் தூண்டுதலால்தான் இதனைச் செய்தேன் எனக் கூறுகின்றனர். ஆக, கூடாநட்பு நரகத்துக்கு இணையான சிறையில் நம்மைத் தள்ளுமென்பதை மேற்கண்ட நாலடியார் பாடல் கூறியதற்கு ஒப்ப அமைந்திருக்கிறது. ஆக, கூடா நட்புக்கான காரணங்கள் நமக்குப் புலப்படுகின்றன. கூடா நட்பினால் ஏற்படும் விளைவுகளையும் அறிந்து கொள்ள முடிகிறது. அதற்கான சூழல் என்ன என்பதையும் நாம் தெரிந்து கொள்ள இயல்கிறது. Fisher கூறுவதைப்போல, சூழல், காரணம், அனுமானம், விவாதம் ஆகியவை எழுந்து, அவற்றிலிருந்து தெளிவு பெறுவதே, உய்யச் சிந்தனை என்பதை இப்பாடல் மூலம் நாம் அறிய முடிகிறது (Fisher, 2001) .FRISCO அணுகுமுறையிலும் இவை கூறப் பட்டிருப்பதை நாம் காண முடிகிறது.

பள்ளியில் நமக்குப் படித்துத் தந்த ஔவையார் பாடல் நினைவுக்கு வருகிறது.

தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதேஎதீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே அவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது (மூதுரை 9)

தீயாரோடு இணங்கி இருப்பதுவும், அதாவது தீயாரோடு நட்பு கொள்வதுவும் தீது எனும் நாலடியார் கருத்துக்கு இணக்கமாக மூதுரையும் சான்று பகர்கிறது.

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும் (திருக்குறள் 792)

ஆராய்ந்து ஆராய்ந்து நட்புக் கொள்ளாதவனுடைய நட்பு, இறுதியில் தான் சாவதற்குக் காரணமான துயரத்தை உண்டாக்கிவிடும் எனத் திருவள்ளுவர் கூறுகிறார் (வரதராசன், 2000).

நட்பு என்பது எவ்வாறு அமையவேண்டும்; எவ்வாறு அமையக்கூடாது என நாலடியார் கருத்துக்கு மிகத் தெளிவான சான்று பகர்வனவாகத் திருக்குறள், மூதுரை போன்றவை அமைகின்றன. பிறப்பைப் பயனுடையதாக்குவது நல்லாருடன் சேர்ந்திருத்தல் என்பது நாலடியார் துணிந்து கூறும் கருத்தாகும்.

## முடிவுரை:

உயர் நிலை சிந்தனைத் திறன் HOTS (Higher Order Thinking Skills), குறிப்பாக உய்யச்சிந்தனை (Critical Thinking), உலகின் மூத்த மொழியான தமிழ்மொழியில்

தோன்றி விரவிக்கிடக்கிறது. ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட இலக்கியங்களில், குறிப்பாக இந்த ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நாலடியார் மூலம் இது நமக்குத் தெளிவாகிறது. உய்யச் சிந்தனைக் கருவியாக பரவலாகப் பயன்படுத்தப்படும் FRISCO அணுகுமுறை, அது கண்டுபிடிக்கப் படுவதற்கு பல்லாண்டுகளுக்கு முன்னதாகவே நாலடியாரில் மிகப் பரவலாக வேரூன்றியிருப்பதைக் காண முடிகிறது. ஆனால், இவற்றை இன்று வரையறுத்திருப்பதைப்போல, ஓர் அறிவியல் அணுகுமுறையில் (scientific method or approach) பண்டைத் தமிழர்கள் குறிப்பிடவில்லை. அதாவது, Critical Thinking என்ற பெயரில் குறிப்பிடாமல் நீதி பகரும் வாழ்க்கை வளப்பத்துக்கான இலக்கியமாகவே அதனை அவர்கள் பொதுவாகக் குறிப்பிட்டுள்ளனர். இதனைத் தமிழினம் உணர்ந்து செயல்பட முற்பட்டால், மொழி மேன்மையடைவதுடன் நம்மிடமுள்ள பிற்போக்கு எண்ணங்கள் இடந்தெரியாமற்போகும்.

## Bibliography


Chaffee John. (2012). *Thinking Critically*. Boston: Wadsworth Language Learning.

Fisher Alec. (2001). *Critical Thinking An Introduction*. Cambridge: Cambridge University Press.

Gurusamy.A.S.(2002*). Nâladiyâr mûlamum eliya uraiyum*. Chennai: Sura Books.

Kanthasamippillai,M.R.(1990). *Nâladiyâr uraivalam.* Tanjavur: Saraswathy Mahal Library.

Palanivel Pillai,P.(1947). *Nâladi inpam*. Chennai: Saiva Siddhantha Books Publications.

Paul Richard. (2012). *Critical Thinking, Tools for Taking Charge of Your Learning and Your Life.* Boston: Pearson Publications.

Robert H Ennis. (1995). *Crirtical Thinking.* New Jersey: Prentice Hall Publications.

Robert L Shurter & John R Pierce. (1966). *Critical Thinking its Expression in Argument*. NewYork: McGraw Hill.

Seenivasan,R.(2000). *Nâladiyâr ceyyulum ceytikalum*. Chennai: Aniyagam Publications.

Shri Chantiran,J.(1999). *Nâladiyâr mûlamum telivuraiyum*. Chennai: Varthamanan Publications.

Stella Cottrell. (2005). *Critical Thinking Skills, Developing Effective Analysis and Argument.* Hampshire: Palgrave Macmillan.

Thevnath,C.S.(1997). *Makilvôdu vâla nâladiyâr kâttum valikal*. Chennai: Narmada Publications.

Vincent E Barry & Joel Rudinow. (2008). *Invitation to Critical Thinking*. Belmont: Thomson Wadsworth.

# மன அழுத்தமும் - இராமாயணமும்

## Stress and Ramayana

[1]சீ.நாராயணி
S.Narayanee
[2]முனைவர் அன்பழகன்
Dr.Anbalagan

***Abstract***

The modern world is facing so many dangers like Science, Warfare, Technology and so on. These are external forces which worry human beings. But a more dangerous menace to man is his mind. It causes much stress out of individual problems, family, job, social, political, religious and so on. There may be some solutions which are available for the external stress. But on the other hand, the internal stress eats away the human kind. But apart from science, ancient epics and Puranas paved the way for a peaceful mind without any stress. This Paper deals with how the Epic Ramayana proposes an antidote to stress. Sita when abducted by Purana, alone was facing much stress. But the focused mind of her on Rama alone could get her out of that stress. Meditation, in simple terms, is the only way to overcome stress. That is the sole objective of this Paper which took the help of Ramayana to bring out that phenomena.

**Key Words :** Stress, Mental Agony, Ramayana, Sita, One focused mind, Meditation, Solution.

### முன்னுரை

வெள்ளம் வரும் முன் அணை போட்டுத் தடுக்க வேண்டும். நோய் வருமுன் காக்க வேண்டும் என்பது முதுமொழி. இது மன அழுத்தத்திற்கும் பொருந்தும். காற்றைப் போன்று கண்ணுக்குத் தெரியாமல் இருக்கும் இந்த மன அழுத்தம் அனைவரிடமும் உள்ளது. மன அழுத்தத்தின் வெளிப்பாடு கெடுதலாக மட்டுமே இருக்காது. ஒரு குறிப்பிட்ட அளவிற்கான மன அழுத்தம் ஊக்கப்படுத்தும் ஊக்கியாகவும் உள்ளது. அந்தக் குறிப்பிட்ட அளவைத் தாண்டினால் மட்டுமே, அதன் விளைவு உடல் நலத்தை பாதிக்கும்.

### மன அழுத்தமும், தியானமும்

இந்நாட்களில் மன அழுத்த மேலாண்மை வழிகளைப் பெரும்பாலும் பலவகையாகப் பின்பற்றி வருகிறோம். பல புதிய முறைகளை நாம் பின்பற்றினாலும், சில பழைமையான முறைகளை இதிகாசங்களில், நம் முன்னோர்கள் பின்பற்றி வந்தனர். அதில் பெரும் பான்மையான ஒன்றே தியானப்பயிற்சி. நம்முடைய முன்னோர்கள்

[1] S Narayanee is a Ph.D. Research Scholar, Department of Life Long Learning, Bharathidasan University, Trichy, Tamil Nadu
[2] Dr. Anbalagam is a Professor, Department of Life Long Learning, Bharathidasan University, Trichy, Tamil Nadu.

தியானத்தைப் பயிற்சியாக இல்லாமல் வாழ்க்கையோடு ஒன்றிணைத்து வாழ்ந்து வந்தார்கள். நம் முன்னோர்களுக்கு தியானம் ஆன்மிகத்திற்கான முதற்படியாக விளங்கியது. ஆனால், தற்போது நாம் தியானத்தை மன அழுத்தத்தை வெளியேற்றும் ஒரு கருவியாக மட்டுமே பார்க்கிறோம். பல இடங்களில் தியானத்தை சுய உணர்தலுக்காகவும் பின்பற்றுகிறோம். இதற்கு உதாரணமாக இதிகாசங்களில் ஒன்றான இராமாயணத்திலிருந்து ஒரு சில உதாரணங்களை விவரிக்கலாம்.

## மன அழுத்தமும் இராமாயணமும்

இராமாயணத்தில் சீதை இராவணனால் கடத்தப்பட்டபோது, அவள் உச்சக்கட்ட மன அழுத்தத்தில் இருந்தாள். எந்தவொரு பெண்ணும் தன்னுடைய கணவனைப் பிரிந்த சமயத்தில், ஒரு அழுத்தமான எதிர்மறைக் கதாபாத்திரத்தை எதிர்கொள்வதில் இதை, “பெண் மான் ஒன்று தன் இடத்தை விட்டுப் பிரிந்து வேட்டை நாய்களால் சூழப்பட்டதைப் போன்று நடுங்கிக்கொண்டு இருந்தாள்” சீதை. (சீதையின் சீற்றம் ஆரண்ய காண்டம்) அச்சமயத்தில் சீதை தன்னுடைய கணவனையே தியானித்து அந்தச் சிரமத்தில் இருந்து தன்னை வெளிக்கொண்டு வந்தாள். இராவணன் எவ்வளவு அச்சுறுத்தினாலும், அவள் தன்னுடைய கணவனையும், அவருடைய கோட்பாடுகளையுமே தியானித்துக் கொண்டு, அச்சூழ்நிலையை எதிர்கொண்டாள். இதை “குனிந்த தலை நிமிராமல், ஒற்றைப் பின்னலுடன், ஒற்றை ஆடையுடன், புழுதி படிந்த மேனியுடன், தாரை தாரையாகக் கண்ணீர் சிந்தியபடி அமர்ந்திருந்தாள். எப்பொழுதுமே இராமரையே எண்ணி ஏங்கி அவரையே தியானித்தபடி அமர்ந்திருந்தாள். ஏக்கம், பயம் இவற்றால் பீடிக்கப்பட்டவளாய் அச்சம் கொண்ட பார்வையை உடையவளாய் இருந்தாள். இராமரைத் தேடி அங்குமிங்கும் கண்ணைச் செலுத்திக்கொண்டு இருந்தாள். “(சீதையின் சீற்றம் ஆரண்ய காண்டம்).

அத்தியானமே அவளுக்கு நம்பிக்கையையும், பொறுமையையும் அளித்தது. இதேபோல், அங்கு சீதையைத் தேடி தெற்கு நோக்கிப் புறப்பட்ட இராமர் சீதையை அடைய வேண்டும் என்ற எண்ணத்தையே தியானித்தபடி, முயற்சித்து இருந்தார். இதை ஆரண்ய காண்டத்தில், ஜடாயு மோட்சம் அடைந்த பகுதியில் - சீதையைத் தேடினார், ஜடாயு மோட்சம், அயோமுகி என்னும் அரக்கி மற்றும் கிஷ்கிந்தா காண்டத்தில், நட்பு கொண்டார் பகுதியில் வசந்த காலம் என்னும் கூற்றுகளில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இராமருடைய கோட்பாடுகளும், சீதை நமக்காகக் காத்திருப்பாள் என்ற எண்ணமுமே சீதைக்கும் இராமருக்கும் நம்பிக்கையை அளித்தது.

இதுவே தியானத்தின் முதல்படி. எந்தவொரு விஷயத்தையும் நம் மனதில் நிறுத்தி தியானித்துக் கொண்டிருந்தால், அது நமக்கு நம்பிக்கையை அளிக்கும். நம் மனதில் நம்பிக்கையை அளிப்பதோடு, நம்மை அந்த நம்பிக்கையின் வெளிப்பாட்டை உணரச் செய்யும். அப்படிப்பட்ட நம்பிக்கையின் வெளிப்பாடே அனுமன். இராமர் அனுமனை தூதுவனாக இலங்கைக்குச் சீதையைத் தேடி அனுப்பினார்;. சீதையைத் தேடி இலங்கைக்கு வந்த அனுமான், தன் கணவனையே அனுஷணமும் தியானித்துக் கொண்டிருக்கும் சீதையை அசோக வனத்தில் கண்டார். இராமர் தன்னை வந்து மீட்டுச் செல்வார் என்ற நம்பிக்கையுடன் சீதை இருப்பதை அனுமன் கண்டார். இதை, “நான் இங்கிருப்பது அவருக்குத் தெரிய வாய்ப்பில்லாமல் போய் இருக்கும். அவர் அதனைத் தெரிந்து கொண்டிருந்தால், இலங்கையில் உள்ள அரக்கர்களை எல்லாம் இந்நேரம் கொன்றிருப்பார். என்னை துன்பப்படுத்தும் இந்த அரக்கியர் தத்தம் கணவரை இழந்து வாடப்போவது உறுதி” என்று சீதை கூறியதாக (சுந்தர காண்டத்தில்

சீதையின் துன்ப நிலைப் பகுதியில்) குறிப்பிட்டுள்ளது.

## மன அழுத்தமானது எப்பொழுது ஏற்படும்?

ஒரு மனிதன் தன்னுடைய நெறிமுறைகளை மீறினால் ஏற்படும் தவறுகளையும், தண்டனைகளையும் ஏற்கும்பொழுது, வரம்புக்கு மீறிய ஆசையைத் தொடும்பொழுதும் மன அழுத்தம் ஏற்படும்.

உதாரணமாக, சீதை தன் கணவருடனும், மைத்துனனுடனும் வனவாசத்திற்கு அனைவரின் உத்தரவை ஏற்றுப் புறப்பட்டாள். ஒரு நாள் காலையில் மூவரும் கோதாவரி ஆற்றங்கரையில் நீராடச் சென்றனர். நீராடி முடித்து பித்ருக்களுக்கும், தேவதைகளுக்கும் ஜல தர்ப்பணம் செய்து தம் பர்ணசாலைக்குத் திரும்பி வந்தனர். அங்கு சூர்ப்பனகை வந்தாள். அவள் அங்கு இராமரைக் கண்டு அவரின் பேரழகில் மயங்கினாள். மோகம் கொண்டாள். காம உணர்ச்சிக்கு ஆட்பட்டு, மதி கெட்டு இராமனிடம் சென்று தன்னை இராவணினின் தங்கை என்று அறிமுகப்படுத்திக் கொண்டாள். மேலும் அவள் இராமரிடம் தன்னை மணந்துகொள்ள வேண்டினாள். இதை "நான் தங்களைக் கண்டவுடன் தங்கள் அழகில் சொக்கிப் போய் விட்டேன். அது முதல் தங்களைக் கணவனாக அடைய வேண்டும் என்பதிலேயே நான் அதிக நாட்டம் உடையவளாய் இருக்கிறேன்" என்று சூர்ப்பனகை கூறியதாக (ஆரண்ய காண்டத்தில், விளையாட்டு வினையானது பகுதியில் சூர்ப்பனகை வந்தாள்) குறிப்பிட்டுள்ளது. ஆனால், ஏகபத்தினி விரதனான இராமனோ சூர்ப்பனகையின் வேண்டுகோளை நிராகரிக்க, சீதையின் மேல் சினம் கொண்ட அவள் சீதையைக் கொல்ல முற்பட்டாள். இதைக் கண்டு சினம் கொண்ட இலட்சுமணன் தன்னுடைய வாளைக் கொண்டு சூர்ப்பனைகயின் மூக்கையும், காதையும் வெட்டினான். கோபம் கொண்ட சூர்ப்பனகை இலங்கைக்குத் திரும்பினாள். அங்கு இராவணனிடம், அவள் சீதையின் அழகை வர்ணித்து, "இப்படிப்பட்ட ஒப்பற்ற அழகுடைய பெண், உனக்கு மனைவியாக அமைந்தால், உன் பெருமை கூடும், உனக்கு அவள் மனைவியாகக் கிடைத்தால் நீ மகிழ்ச்சி அடைவாய் என்று நான் கருதினேன், உனக்காக அவளைத் தூக்கிக் கொண்டு வர முயன்றேன்: ஆனால் கோபம் கொண்ட இலட்சுமணன், என்னை இப்படி மானபங்கப் படுத்திவிட்டான். (ஆரண்ய காண்டம் இராவணனிடம் கதறினாள்). இராம இலட்சுமணர்களைக் கொன்று சீதையை அடைந்து இன்பமாய் நீ வாழலாம், என்று கூறிய சூர்ப்பனகையின் வார்த்தைகளைக் கேட்ட இராவணன் திட்டமிட்டுச் சீதையைக் கடத்த முடிவு செய்தான். அதனால், இராம இலட்சுமணரை மாயையால் விலகச் செய்து சீதையைக் கடத்த யுத்திசெய்து, தனது மாமனான மாரீசன் என்னும் அரக்கனை மானின் வடிவில் அவ்விருவரையும் திசைத்திருப்பி அனுப்பினான். தங்கமானைக் கண்டதும் சீதை ஆசை கொண்டு அதைப் பிடித்துவர இராமனிடம் வேண்டினாள். சீதையின் பாதுகாப்பை எண்ணி இலட்சுமணனைக் காவலாக வைத்துச் சென்றார் இராமன். மான் வடிவில் இருந்த மாரீசன் வெகுதூரம் இராமனை அழைத்துச்செல்ல, அது மாயை என்று அறிந்து பாணம் எய்தான் இராமன். இறக்கும் தருவாயில் இராமன் உதவிக்கு அழைப்பது போல் குரலெழுப்பினான் மாரீசன். அதைக் கேட்டு, தன் கணவர் ஆபத்தில் இருப்பதாகக் கருதி, சீதை இலட்சுமணனைக் கட்டாயப்படுத்தி இராமனின் உதவிக்கு அனுப்பினாள். அண்ணனின் கட்டளையை மீற மனமில்லாத இலட்சுமணன் அண்ணியாரின் கட்டாயத்திற்கு இணங்கி, புறப்பட முடிவு செய்தான். ஆயினும், சீதையின் பாதுகாப்பை எண்ணி, தன் சக்தியைக் கொண்டு, ஒரு ரேகாவை உண்டு செய்தான்,

அது லக்ஷ்மண் ரேகா என்று அழைக்கப்பட்டது".

இதில், சூர்ப்பனகை மற்றவர் கணவரின் மீது கொண்ட ஆசையின் தண்டனையும், இராவணன் சுய அறிவை இழந்து, சூர்ப்பனகையின் தவறை அறிய முற்படாமல் அவளின் பொய்க்கூற்றை நம்பி இழைத்த தவறாலும், அதன் விளைவால் நெறிமுறைகளை மீறிச் சீதையை கடத்தியதின் தண்டனையாக அசுரகுலம் அழிந்தது. அதுபோல் லக்ஷ்மணன் சீதையை விட்டுச் சென்ற தவறும், சீதை லக்ஷ்மணனின் வார்த்தையை மீறியதற்காக தண்டனையும், சீதை மாயமானைக் கண்டு கொண்ட ஆசையினாலும், ஏற்பட்ட விளைவே இந்த மன அழுத்தம்.

வினா எழும் இடத்திலே தான் விடை இருக்கும் என்பார் கூற்றின்படி, மன அழுத்தத்தின் காரணிகளை விளக்கிய இராமாயணத்திலேயே அதைப் போக்கும் வழிமுறைகளையும் குறிப்பிட்டுள்ளனர். இதையே "கூட்டு உணர்வு" (Collective Consciousness) என்று உரைப்பர். கூட்டு உணர்வு என்பது ஒரே சிந்தனையுடன் இருப்பதாகும். கூட்டு உணர்வானது மனதில் நம்பிக்கையும், வாழ்வில் நேர் மறையாக்கத்தையும் அளிக்கும். இராமனும், சீதையும் கூட்டு உணர்வுடன் இருந்ததாலே, அவர்கள் நம்பிக்கையுடனும், நேர்மறை எண்ணங்களை கொண்டும் இருந்தார்கள்.

**முடிவுரை**

தியானமே மன அழுத்தத்தின் முடிவாகும். இராமன் மற்றும் சீதையின் தியானத்தின் விளைவே அனுமனின் வரவு. அனுமன் சீதையைக் கண்ட இந்த பகுதியை இராமாயணத்தில் சுந்தர காண்டம் என்று அழைக்கப்பட்டது. இக்காலத்தில், மன அழுத்தமும், வாழ்க்கையில் போராட்டங்களும் கொண்ட மக்கள், இராமாயணத்தின் இப்பகுதியை தெளிவும் நம்பிக்கையும் பெற பாராயணம் செய்வார்கள். இதுபோன்ற, எண்ணற்ற கூற்றுகள் நம் இதிகாசங்களில் அடங்கியுள்ளன. மன அழுத்தத்தின் முதலையும் முடிவையும் நமக்கு உணர்த்திய இராமாயணத்தில், மன அழுத்தத்தைப் போக்க நிறைய வழிமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளது, அதில் சிலவற்றையே சுட்டிக்காட்ட இந்தக் கட்டுரை உதவியது.

## Bibliography

V.Jothi (M.A.) Vaalmeeki Ramayanam (Vol II) - Varthamanan Publications.

V.Jothi (M.A.) - Vaalmeeki Ramayanam (Vol III) - Varthamanan Publications Adhyathma Ramayan Gita Press, Gorakhpur.